டெரிக்பிரின்ஸ்

ஜெயங்கொள்ள அழைக்கப்பட்டவர்கள்

Derek Prince Ministries - India

Originally published in English under the title
"CALLED TO CONQUER"

Printed by Derek Prince Ministries

3000/0216/LOP
ISBN 978-93-82910-35-0

"CALLED TO CONQUER" (Tamil)
"JEYAMKOLLA AZHAIKKAPATTAVARGAL"

Published by permission in the Tamil language.

Cover Design: DPM-Asia/Pacific

For orders & other enquiries please contact :
DEREK PRINCE MINISTRIES - INDIA
C/o DPM IMPEX
1C, EVR Road, Puthur,
Trichy - 620 017, Tamil Nadu, India.
E-mail: admin@derekprince.in
Phone : 00-91-98430 55414 / 95855 38201
Website : www.derekprince.in

Derek
Prince
MINISTRIES INDIA

www.derekprince.in

பொருளடக்கம்

1
மேல்நோக்கிய அழைப்பு

“இயேசு கலிலேயாக் கடலோரமாய் நடந்து போகையில் மீன் பிடிக்கிறவர்களாயிருந்த இரண்டு சகோதரராகிய பேதுரு என்னப்பட்ட சீமோனும், அவன் சகோதரன் அந்திரேயாவும், கடலில் வலை போட்டுக் கொண்டிருக்கிற போது அவர்களைக் கண்டு, என் பின்னே வாருங்கள், உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன் என்றார், உடனே அவர்கள் வலைகளை விட்டு, அவருக்குப் பின் சென்றார்கள், அவர் அவ்விடம் விட்டுப் போகையில், வேறே இரண்டு சகோதரராகிய செபதேயுவின் மகன் யாக்கோபும், அவன் சகோதரன் யோவானும் தங்கள் தகப்பன் செபதேயுவுடனே படவிலிருந்து, தங்கள் வலைகளைப் பழுது பார்த்துக்கொண்டிருந்த போது, அவர்களைக் கண்டு,அவர்களையும் அழைத்தார். உடனே, அவர்கள், படவையும், தங்கள் தகப்பனையும் விட்டு அவருக்குப் பின்சென்றார்கள்” (மத்தேயு 4:18-22)

இயேசுவால் முதன்முதலில் அழைக்கப்பட்ட நான்கு மனிதர்களுமே மீனவர்கள்தான் என்பது எனக்கு வியப்பூட்டுகிறது. அவருடைய தெரிந்துகொள்ளுதலிலுள்ள தேவனுடைய ஞானத்தை நான் புரிந்து கொண்டதாகத்தான் நான் எண்ணுகிறேன். மீனவர்கள் தங்களுடைய பிறப்பால் தனி இனத்தவராய் இருக்கிறார்கள். இதை வாசிக்கிற நீங்களும்

ஒரு மீனவராக இருக்கிறீர்கள் என்றால், மீனவர்கள் தங்கள் தொழிலில் மிகவும் தீவிரம் காட்டுபவர்கள் என்பதை நீங்கள் அறிந்திருப்பீர்கள்.

சில சமயங்களில், நான் நடைப்பயிற்சி போவதுண்டு. அப்போது நான் மீன் பிடித்துக் கொண்டிருப்பவர்களை கடந்து சென்றிருக்கிறேன். அவர்களுக்கு மீன்கள் அகப்படாமலிருந்ததை நான் கவனித்திருக்கிறேன். ஆனால் அது ஒரு பொருட்டல்ல - அவர்கள் மீனவர்கள்தான் என்று பிறகு நான் யோசித்திருக்கிறேன். சூழ்நிலைகள் அவர்களை கலங்கச் செய்வதில்லை. அவர்கள் மனச்சோர்வினால் பாதிக்கப்படுவதில்லை. சாதகமற்ற காலசூழ்நிலை அவர்களுக்கு ஒரு பிரச்சனையாகத் தெரிவதில்லை. எப்படியும் மீன் பிடிக்க வேண்டும் என்பதே அவர்களுடைய தரிசனமாக இருக்கின்றது.

மீனவர்களோடு தமது ஊழியத்தைத் தொடங்கிய நம் கர்த்தர், நமக்கு ஒரு ஆச்சர்யமான செய்தியைத் தந்திருக்கிறார்: கிறிஸ்தவர்கள் அவர்களைப் போல இருக்க வேண்டும் என்பதுதான் அந்த செய்தி. வேறு எதையும் ஒரு பொருட்டாக நினைக்காமல், அவருடைய அழைப்பை ஏற்றுக்கொள்வதில் நாம் தீவிரம் காட்ட வேண்டும்.

இயேசு தம்முடைய சீஷர்களை அழைத்தபோது, அவர் நிறைய வார்த்தைகளை வீணடிக்கவில்லை என்பதையும் நாம் இங்கு கவனிக்க வேண்டும்: "என் பின்னே வாருங்கள்," என்று மட்டுமே அவர் சொன்னார். பதிவு செய்யப்பட்ட பிரசங்கங்களிலேயே, இது மிகச்சுருக்கமான ஒரு பிரசங்கமாக இருக்கலாம்! நாம் காணப்போவதைப் போல, அவர் விரிவான விளக்கமளிக்கவில்லை - அளிக்கிறதுமில்லை. இயேசுவிடம் நமக்கிருக்க வேண்டிய இந்த அர்ப்பணிப்பில், சமரசம் செய்து கொள்வது என்ற ஒரு நிலைக்கு இடமேயில்லை என்பதை இது நமக்குக் காண்பிக்கிறது. இதில் எந்த ஒரு நடுநிலையும் கிடையாது.

> *அப்பொழுது இயேசு தம்முடைய சீஷர்களைப் பார்த்து ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்*

கொண்டு என்னைப் பின்பற்றி வரக்கடவன். தன் ஜீவனை இரட்சிக்க விரும்புகிறவன், அதை இழந்து போவான். என்னிமித்தமாகத் தன் ஜீவனை இழந்து போகிறவன், அதைக் கண்டடைவான்.''

மத். 16:24-25

இயேசு தம்முடைய ஊழியத்தின் பின் நாட்களில், வேறொருவனுக்கும் இதே அழைப்பை விடுத்தார்: ''என் பின்னே வா.'' அந்த மனிதன் தயங்கினான். ''ஆண்டவரே, முன்பு நான் போய் என் தகப்பனை அடக்கம் பண்ண எனக்கு உத்தரவு கொடுக்க வேண்டும்,'' என்று அவன் சொன்னான். அதற்கு இயேசு, ''மரித்தோர் தங்கள் மரித்தோரை அடக்கம் பண்ணட்டும். நீ போய், தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்துப் பிரசங்கி,'' என்று சொன்னார் (லூக்கா 9:59,60-ஐ பார்க்கவும்). ''இப்பொழுது'' என்று என்று இயேசு சொல்லும்போது, ''நாளை'' என்று நாம் சொன்னால் அது நன்றாக இருக்காது. அவர் நேரடியாகவே நமக்கு சவால் விடுகிறார். அவருடைய சவாலுக்கு நாம் எவ்வாறு பதில் கொடுப்போம் என்பதை நாமே தீர்மானிப்போம்.

பிரிட்டனிலுள்ள ஒரு ஆங்க்லிக்கன் சபையில்தான் நான் வளர்ந்தேன். என்னுடைய வாழ்க்கையின் முதற்பகுதியில், நான் அதில் ஒரு உறுப்பினராக இருந்தேன். (மற்ற பல சபைகள் செய்வதுபோல) ''நீ அதிகமாய் எதையும் செய்ய வேண்டியதில்லை. இந்த ஒரு சில காரியங்களை மாத்திரம் நீ செய்தால் போதும்,'' என்று சொல்லி, அந்த சபையின் உறுப்பினராக இருப்பதையே அவர்கள் மிகவும் எளிதாக்கி விட்டனர். நான் செய்ய வேண்டிய எல்லாக் காரியங்களையும் நான் செய்தேன். ஆனால் என்னுடைய வாழ்க்கையில் ஒரு நிறைவை நான் கண்டடையவில்லை.

அந்த நேரத்தில், நான் என்னுடைய இருதயத்தின் நிலையையே அறிந்திருக்கவில்லை. ஆனால் நான் எதை எதிர்நோக்கியிருந்தேன் என்றால், அது ஒரு சவாலுக்காகத்தான். முதல்முறையாக, நான் இயேசுவினுடைய சவாலால் எதிர்கொள்ளப்பட்டேன். நான் அதற்கு என்னை முற்றிலுமாக அர்ப்பணித்தேன். வழக்கமாக பின்பற்றப்படும்

மதச்சடங்குகளால் மிகவும் உற்சாகமடைந்தவர்களாய் மற்ற பலர் வளர்ந்திருக்கவில்லை என்றுதான் நான் சந்தேகிக்கிறேன். அவர்கள் முழுமையாய் திருப்திபடுத்தப்படவில்லை. தங்களை எது திருப்திப்படுத்தும் என்பதையும் அவர்கள் அறிந்திருக்கவில்லை. நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். அவர்கள் எதிர்பார்ப்பதெல்லாம், திட்டமும் தெளிவுமான, எதற்கும் சமரசம் செய்து கொள்ளாத தேவனுடைய அழைப்பின் சவாலைத்தான். நீங்கள் அந்த அழைப்பைப் பெறுகிறீர்கள் என்றால், அதை ஏற்றுக்கொள்வதிலுள்ள உற்சாகத்திலிருந்து உங்களை எதுவும் தடை செய்யாதபடி பார்த்துக் கொள்ளுங்கள்.

தேவனுடைய அழைப்பு பரிசுத்தமானது, அது பரம அழைப்பு. அது ஒரு மேல் நோக்கிய அழைப்பு. அது நாம் ஒரு கிடைமட்டதளத்தில் நகர்ந்து கொண்டிருக்கும்போது, பரலோகத்திலிருந்து இறங்கி வரும் தேவனுடைய செங்குத்தான அழைப்பு, நம்முடைய வாழ்க்கையை இரண்டாக பிரிப்பது போல் உள்ளது. அவருடைய அழைப்பை நாம் ஏற்றுக் கொண்டால், அந்த அழைப்பிற்கு முன் நம்முடைய வாழ்க்கை எப்படியிருந்ததோ அதிலிருந்து முற்றிலும் வித்தியாசமானதாய் அந்த அழைப்பிற்கு பின் நம்முடைய வாழ்க்கை மாறும்.

நீங்கள் உங்களுடைய வாழ்க்கையை இறுக பற்றி பிடித்துக் கொண்டால், உங்களால் அதை காப்பாற்றிக் கொள்ள முடியும். நீங்கள் அதை உங்களுக்கென்று தக்க வைத்துக் கொள்ளலாம், நீங்கள் உங்களையே திருப்திப்படுத்திக் கொள்ளலாம், உங்களுடைய சொந்த திட்டங்களை நீங்கள் போட்டுக் கொள்ளலாம், நீங்கள் என்ன விரும்புகிறீர்களோ அதை நீங்கள் செய்யலாம், ஆனால் நீங்கள் உங்களுடைய வாழ்க்கையை இழந்து விடுவீர்கள். அல்லது, நீங்கள் அதை கீழே வைக்கும் போது - இன்னொன்றை நீங்கள் கண்டடைவீர்கள். அவர் தம்முடைய அதிகாரத்திலும், இறையாண்மையிலும் எளிமையாக இவ்வாறு சொல்கிறார், “என் பின்னே வா.” அவ்வளவு தான்.

‘இறையாண்மை’ என்பது ஒரு இறையியல் வார்த்தை. நான் அதை இப்படியாக விளக்குவது உண்டு: தேவன் தாம் விரும்புவதை, தாம் விரும்பும்

நேரத்தில், தாம் விரும்பும் வழியில் செய்கிறார். அதற்காக அவர் *ஒருவருடைய அனுமதியையும் கேட்பதில்லை.* அவருடைய இறையாண்மை என்பதற்கான இந்த விளக்கம், இன்றைய தலைமுறையினரால் பெரிதும் புறக்கணிக்கப்படுகிறது. இது வேதாகமத்தின் மகத்தான ஒரு சத்தியம். தேவனுடைய இறையாண்மையின் மதிப்பை புரிந்து கொண்டு, அதை நாம் கனம் பண்ணவில்லை என்றால், நம்முடைய வாழ்க்கைக்கான தேவனுடைய அழைப்பை புரிந்து கொள்ள இயலாதவர்களாய் நாம் இருப்போம். ஆனால் நாம் அந்தப் புரிந்துகொள்ளுதலோடு முன்னேறிச் செல்வதில் விருப்பமுள்ளவர்களாய் இருப்போம் என்றால், நாம் அதற்குரிய எல்லா நன்மைகளோடும் ஒரு புது வாழ்க்கைக்குள் பிரவேசிப்போம். இப்பொழுது நாம் அதற்குரிய நான்கு அம்சங்களை காண்போம்.

"என்றென்றைக்குமாய்" உட்பிரவேசிக்க விரும்புகிறீர்களா?

புதிய வாழ்க்கையை அகப்படுத்தும்படி அதைத் தொடர்வதில் நம்முடைய நோக்கம் என்ன என்பதை எளிமையாகச் சொன்னால், அது தேவனுடைய சித்தத்தை செய்வதற்கான தீவிரமான விருப்பமாகத்தான் இருக்கும். அதுதான் இயேசுவினுடைய நோக்கமாகவும் இருந்தது. அவர் சொன்னார், "நான் என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்து, அவருடைய கிரியையை முடிப்பதே என்னுடைய போஜனமாயிருக்கிறது" (யோவான் 4:34).

யோவான் தனது முதல் நிருபத்தில், தேவனுடைய சித்தத்தைச் செய்கிற ஒரு நபரைப் பற்றி கூறுகிறார். அவர் உலகம் தருகிற சகலத்தையும் அதிலிருந்து வித்தியாசப்படுத்தி உணர்த்திக் காண்பிக்கிறார். யோவான் தெளிவாகச் சொல்கிறார், "உலகமும் அதன் இச்சையும் ஒழிந்துபோம்" (1 யோவான் 2: 17). இந்த உலகத்தின் எல்லா இச்சைகளும், அதன் எல்லா குறிக்கோள்களும், அது இறுகப் பற்றிப் பிடித்துக் கொள்கிற எல்லாக் காரியங்களும், அது பெருமுயற்சி எடுத்து நாடி தேடி பின்னால் ஓடுகிற எல்லா விஷயங்களும் தற்காலிகமானவைகள். அவைகளெல்லாம் கடந்து ஒழிந்து போகும்.

இந்த வசனத்தில் முதலில் இதைச் சொல்லி விட்டு, பிறகு ஆங்கிலத்தில் but என்று வருகின்றது. ''(ஆனால்) தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான்'' (1 யோவான் 2: 17). இதுதான் வித்தியாசம். உங்களுடைய சொந்த விருப்பத்திற்கு நீங்கள் மறுப்பு தெரிவிக்கும்போது, உங்கள் சுயத்திற்கு நீங்கள் 'இல்லை' என்று சொல்லும்போது, உங்களுடைய விருப்பத்தை தேவனுடைய விருப்பத்தோடு ஒன்றாய் இணைக்கும்போது, நீங்கள் இதற்குரிய நிபந்தனைகளை நிறைவேற்றுகிறீர்கள்.

மற்ற அனைத்தும் தோல்வியாக முடியப்போகும் நிலையில், இறுதியாக, தேவனுடைய சித்தம்தான் செய்யப்படப்போகிறது. நீங்கள் அவருடைய சித்தத்துடன் இணைந்து அடையாளம் காணப்படுவீர்கள் என்றால், நீங்கள் மூழ்கிப் போக மாட்டீர்கள், எதினாலும் தோற்கடிக்கப்பட முடியாதவர்களாய் இருப்பீர்கள். நீங்கள் என்றென்றும் நிலைத்திருப்பீர்கள். இது உற்சாகமூட்டுகிறதல்லவா? நீங்கள் இன்னும் தனிப்பட்ட விதத்தில் இந்த அறிக்கையைச் செய்யும்படி, நான் உங்களை அழைக்கிறேன்: "நான் தேவனுடைய சித்தத்தை செய்தால், நான் என்றென்றைக்கும் நிலைத்திருப்பேன்."

இதுதான் புதிய வாழ்க்கையின் முதல் அடையாளமாக இருக்கிறது. இது தேவனுடைய சித்தத்தோடு ஒன்றிணைந்த ஒரு வாழ்க்கையாய் இருக்கிறது. இதில் தேவனுடைய சித்தத்தின் எல்லா பெலனும், வல்லமையும், நம்பிக்கையும் இருக்கிறது.

நீங்கள் பிழையற்ற வழிநடத்துதலைப் பெற விரும்புகிறீர்களா?

புதிய வாழ்க்கை என்பது, பரிசுத்த ஆவியானவரால் வழி நடத்தப்படுகிற ஒரு வாழ்க்கையாகவும் இருக்கிறது. வேதத்தின் ஒரு வசனத்தை நாம் பார்க்கலாம்: ''மேலும் எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள்." (ரோமர் 8:14)

இந்த வசனத்தில் எல்லாம் நிகழ்காலத் தொடர்ச்சி வினையாக எழுதப்பட்டிருக்கிறது. இதை இன்னொரு விதமாக இவ்வாறு சொல்லலாம்: எவர்களெல்லாம் தொடர்ந்து தேவனுடைய ஆவியானவரால் நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள். நீங்கள் இயேசுவை உங்களுடைய சொந்த இரட்சகராக விசுவாசித்து ஏற்றுக் கொண்டபோது, நீங்கள் தேவனுடைய ஆவியினால் பிறக்கின்றீர்கள். நீங்கள் தேவனுடைய குடும்பத்தில் ஒரு பச்சிளங்குழந்தையாக மாறி விடுகிறீர்கள். ஆனால் அவருடைய ராஜ்யத்தில் ஒரு முதிர்ச்சியடைந்த குமாரனாகவோ, குமாரத்தியாகவோ நீங்கள் வளர வேண்டுமானால், அங்கே அடுத்து மேலே செல்ல வேண்டிய ஒரு வழிமுறை இருக்கின்றது: நீங்கள் தேவனுடைய ஆவியானவரால் வழிநடத்தப்பட வேண்டும். மறுபடியும் பிறந்து இரட்சிக்கப்பட்ட பல கிறிஸ்தவர்கள், தேவனுடைய ஆவியானவரால் நடத்தப்படுவதை ஒருபோதும் கற்றுக் கொண்டிருக்கவில்லை. ஆனால் தேவனுடைய ஆவியானவரால் தொடர்ந்து வழிநடத்தப்படுகிறவர்கள் தேவனுடைய புத்திரர்களாக மாறுகிறார்கள். அவர்கள் முதிர்ச்சியடைகிறார்கள். அவர்கள் வளர்ந்து தேறுகிறார்கள். அவர்கள் தங்களுடைய வாழ்க்கையில் தேவனுடைய நோக்கத்தையும், இலக்கையும் கண்டடைகிறார்கள். ("உங்களை வழி நடத்துகிறவர்" என்ற தலைப்பில் எழுதப்பட்ட 8-ம் அத்தியாயத்தில், தேவனுடைய ஆவியானவரால் நடத்தப்படுவதைக் குறித்து நாம் இன்னும் அதிகமாய் கற்றுக் கொள்வோம்.)

தேவன் உங்கள் தேவைகளையெல்லாம் சந்திப்பார் என்று நீங்கள் அறிய விரும்புகிறீர்களா?

இந்தப் புதிய வாழ்க்கையின் மூன்றாவது அம்சம், இந்த வாழ்க்கைக்கான தேவைகள் எல்லாம் தேவனால் சந்திக்கப்படுகிறது என்பதாகும். நீங்கள் தேவனுடைய அழைப்புக்குக் கீழ்ப்படிந்து, நீங்கள் உங்களையே தேவனுக்கு அர்ப்பணித்து விடுகிறீர்கள் என்றால், அப்பொழுதே உங்களுக்கான முழுப் பொறுப்பையும் தேவன் ஏற்றுக்கொள்கிறார். பல விதங்களில், பிரிட்டிஷ் ராணுவம் தேவனுடைய மாதிரியிலிருந்து அதிகமாய் வேறுபட்டிருந்தாலும், பிரிட்டிஷ் ராணுவத்தில் எனக்குக் கிடைத்த அனுபவத்தின் மூலம் நான்

இதை விவரித்து காண்பிக்கிறேன்.

நானாக ராணுவத்தில் சேர்ந்து விடவில்லை. நான் கட்டாயமாக ராணுவத்தில் சேர்க்கப்பட்டேன். செப்டம்பர் 1940-ம் வருடம், நான் ராணுவத்திற்குள் நுழைந்தேன். அடுத்த ஐந்தரை வருடங்களுக்கு நான் என்ன உடுத்த வேண்டும், நான் எங்கு செல்ல வேண்டும் அல்லது நான் என்ன சாப்பிட வேண்டும் என்பதைக் குறித்து நான் ஒருபோதும் கவலைப்பட்டதே இல்லை. அந்த நாட்களில் (நீங்கள் நம்புவீர்களோ மாட்டீர்களோ), என்னுடைய சம்பளம், ஒரு நாளைக்கு இரண்டு ஆங்கில ஷில்லிங்ஸ் மட்டுமே! அது எவ்வளவு குறைவான தொகை என்பதைப் புரிந்து கொள்வதற்கே கடினமாக இருக்கும். ஆனால் நாங்கள் ஒருபோதும் பட்டினி கிடந்ததில்லை. எங்களுடைய உணவுக்காகவோ, எங்களுடைய உடைகளை வாங்குவதற்காகவோ, தூங்கும்படி ஒரு இடத்துக்காகவோ நாங்கள் பணம் ஒன்றும் செலுத்தத் தேவையில்லை. சுமார் இரண்டு வருடங்களுக்கு, நான் வடக்கு ஆப்பிரிக்காவின் பாலைவனத்தில்தான் தூங்கினேன். ஆனால் அங்கே இரவில் தங்குவதற்கு குறைந்தபட்சம் ஏதோ ஒரு வகையான கூடாரமாவது இருந்தது. அது ஒரு உல்லாசப் பயணம் அல்ல. ஆனாலும் ஒவ்வொரு போர் வீரனுக்கான பொறுப்பையும் ராணுவம் ஏற்றுக்கொண்டது.

நீங்கள் எந்தத் தயக்கமுமில்லாமல், தேவனுடைய சித்தத்துக்கு உங்களையே ஒப்புக் கொடுக்கும்போது, உங்கள் தேவைகளை சந்திப்பது தேவனுடைய பொறுப்பாக மாறி விடுகிறது. இதற்கு பலர் சாட்சியாக இருக்கிறார்கள். நான் பிரிட்டிஷ் ராணுவத்தை விட்டு வெளியே வந்து, இயேசு கிறிஸ்துவினுடைய ஒரு முழுமையான சீஷனாக மாறியபோது, நான் எருசலேமுக்கு வடக்கே கொஞ்சம் தள்ளி ஒரு சிறுவர் இல்லம் நடத்திக் கொண்டிருந்த ஒரு பெண்ணை மணந்தேன். நான் அவரை திருமணம் செய்த அதே நாளில், அவருடைய இல்லத்திலிருந்த எட்டு சிறுமிகளுக்கு நான் வளர்ப்பு தந்தையானேன். அது ஒரு பெரிய குடும்பம். இஸ்ரவேல் தேசம் பிறக்கக் காரணமாயிருந்த போரின் ஊடாக நாங்கள் கடந்து சென்றோம். உண்மையில், நாங்கள் அதன் நடுவில் இருந்தோம்.

போரின் முன் வரிசையிலிருந்து எங்களுடைய வீடு சுமார் ஒரு மைலின் கால் பங்கு தூரத்தில்தான் இருந்தது. அதன் பிறகு நாங்கள் ஒரு நாடு விட்டு இன்னொரு நாட்டிற்கு, ஒரு இடம் விட்டு இன்னொரு இடத்திற்கு சென்றோம். நாங்கள் பல ஆபத்துக்களை, உபத்திரவங்களை, எதிர்ப்புகளை சந்தித்தோம் - ஆனால் இவைகளின் மத்தியில் தேவன் எங்களுடைய தேவைகளை தொடர்ச்சியாக சந்தித்துக் கொண்டே இருந்தார்!

மத்தேயு 6:33-ம் வசனத்தில் இயேசு சொன்னார், "முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள். அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்கு கூடக் கொடுக்கப்படும்." வெளியே சென்று தன் கண்ணில் தென்படுகிறவைகளையெல்லாம் பறித்துக் கொள்வதுதான் இந்த உலகத்தின் வழிமுறையாக இருக்கின்றது. இந்த உலகம் உணவு, உடை, பணம், வீடுகள், கார்கள் என பொருட்களை தன்னுடைய உடைமைகளாக ஆக்கிக் கொள்கிறது. இதுதான் இந்த உலகத்தினுடைய இலக்காக இருக்கிறது. ஆனால் இந்தப் புதிய வாழ்க்கையில், தேவனுடைய சித்தத்தை உங்களுடைய குறிக்கோளாக நீங்கள் ஆக்கிக் கொண்டீர்கள் என்றால், தேவன் இவற்றையெல்லாம் உங்களுக்குச் சேர்த்துக் கொடுப்பார். தேவனே எல்லாவற்றையும் சேர்த்து கொடுப்பவர் என்பதை நீங்கள் அறிந்து கொண்டால், உங்களுக்கு நிறைய கவலைகள் குறையும்.

இது நம்புவதற்கே ஆச்சரியமான ஒரு விஷயம் போலத் தெரிகிறதே என்று ஒரு சிலர் கேட்கலாம். இது இயேசுகிறிஸ்துவே கொடுத்த ஒரு வாக்குத்தத்தம், அவர் ஒருபோதும் ஒருவரையும் ஏமாற்றினதில்லை என்பதை தயவுசெய்து புரிந்து கொள்ளுங்கள். இது உண்மை என்பதை தங்களுடைய தனிப்பட்ட அனுபவத்திலிருந்து சாட்சியாக எடுத்துக் காண்பிக்கக்கூடிய கர்த்தருடைய ஊழியக்காரர்கள் ஆயிரக்கணக்கில் இன்றைக்கும் இந்த உலகம் முழுவதிலும் இருக்கிறார்கள். இது வேலை செய்கிறது! தேவன் தன்னுடைய வார்த்தையைப் போலவே நல்லவராய், உண்மையுள்ளவராய் இருக்கிறார்.

மாற்கு எழுதின சுவிசேஷத்தில் இன்னொரு அழகான வசனத்தைப் பார்ப்போம். பேதுரு தன் ஆர்வமிகுதியில் ஒளிவுமறைவில்லாமல் கேட்ட

ஒரு கேள்வி, இயேசுவிடமிருந்து இந்த பதிலை வெளிக்கொண்டு வந்தது.

> *"அப்பொழுது பேதுரு அவரை நோக்கி இதோ, நாங்கள் எல்லாவற்றையும் விட்டு உம்மை பின்பற்றினோமே என்று சொல்லத் தொடங்கினான். அதற்கு இயேசு பிரதியுத்தரமாக என்னிமித்தமாகவும், சுவிசேஷத்தினிமித்தமாகவும், வீட்டையாவது சகோதரரையாவது, சகோதரிகளையாவது, தகப்பனையாவது, தாயையாவது, பிள்ளைகளையாவது, நிலங்களையாவது விட்டவன் எவனும் இப்பொழுது இம்மையிலே துன்பங்களோடு கூட நூறத்தனையாக வீடுகளையும், சகோதரரையும், சகோதரிகளையும், தாய்களையும், பிள்ளைகளையும், நிலங்களையும், மறுமையிலே நித்திய ஜீவனையும் அடைவான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்கிறேன்."*
>
> *மாற்கு 10:28 - 30*

இந்த வேதப்பகுதியில் இயேசு சொல்கிறார், "நீங்கள் எதையெல்லாம் விட்டுக் கொடுத்தீர்களோ அவை எல்லாம் ஏற்ற காலத்தில் பலப் பல மடங்காக மிகுதியாக உங்களுக்குத் திரும்பக் கொடுக்கப்படும்." இனி வரும் உலகத்தில் மட்டும் அல்ல, *இந்த* உலகத்தில் பெறுவீர்கள்.

உங்களுக்கென்று வடிவமைக்கப்பட்ட வாழ்வை நீங்கள் கண்டுபிடிக்க விரும்புகிறீர்களா?

இப்புதிய வாழ்க்கையின் நான்காவது அம்சம் இதுதான்: உங்கள் வாழ்க்கைக்கான தேவனுடைய அழைப்பை நீங்கள் எந்த தயக்கமுமின்றி ஏற்றுக் கொண்டால், உங்களுக்காகவே நேர்த்தியாக அவர் வடிவமைத்த ஒரு வாழ்க்கையை உங்களுக்குக் கிடைக்கச் செய்வதில் அவர் உறுதியாய் இருப்பார்.

ஒரு குறிப்பிட்ட வாழ்க்கை வாழும்படியாக தேவன் உங்களைப் படைத்தார். "உங்களுடைய இடத்தைக் கண்டுபிடிக்க ஏழு படிகள்", என்ற தலைப்பிலான **3**-வது அத்தியாயத்தில், நீங்கள் இரட்சிக்கப்படும்போது, ஒரு குறிப்பிட்ட அழைப்பிற்காகவே இரட்சிக்கப்படுகிறீர்கள் என்பதை நாம் பார்ப்போம். அடுத்து என்ன, அந்த அழைப்பிற்குள் நீங்கள்

பிரவேசிக்காதவரை, நீங்கள் விரக்தியடைந்தவர்களாய், மனநிறைவற்றவர்களாய் வாழ்ந்து கொண்டிருப்பீர்கள். நிச்சயமாக, நீங்கள் அதை கண்டுபிடிக்காமலே, இவ்வுலக வாழ்க்கையைக் கடந்து, பரலோகத்தையும் சென்றடைந்து விட முடியும். ஆனால் நீங்கள் இந்த பூமியில் மிக முக்கியமான பல அனுபவங்களை தவற விட்டிருப்பீர்கள்.

1940 முதல் 1949 வரை, நான் கேம்ப்ரிஜ் பல்கலைகழகத்தின் கிங்'ஸ் கல்லூரியில் நிர்வாகம் மற்றும் கற்பிக்கும் அமைப்பின் உறுப்பினராக இருந்தேன். இரண்டாம் உலக மகாப்போரின் இறுதியில், கல்லூரியின் அதிகாரத்திலிருந்தவர்கள் எனக்கு பல்கலைகழகத்தின் பேராசிரியர் பதவியை அளிப்பதாக கடிதம் அனுப்பினார்கள். நான் எழுதிய பதில் கடிதத்தில், "நான் ஒரு கிறிஸ்தவனாகி விட்டேன். நான் வரவில்லை," என்று எழுதி அனுப்பினேன். நான் அதை இன்னும் நல்லவிதமாக சொல்லியிருக்கலாம். ஆனால் எப்படியோ நான் அவர்களுடைய அழைப்பை ஏற்றுக் கொள்ள மறுத்து விட்டேன். ஏனென்றால் தேவன் என்னுடைய வாழ்க்கைக்கென்று முற்றிலும் வேறுபட்ட ஒரு அழைப்பை வைத்திருந்தார்.

ஒருவேளை நான் அவர்களுடைய அழைப்பை ஏற்றிருந்தாலும், 65-வது வயதில் நான் ஓய்வு பெற்றிருப்பேன். ஏதோவொரு சிறிய ஓய்வூதியத் தொகையைப் பெற்றுக் கொண்டு, எங்கோ ஒரு சிறிய வீட்டில் நான் முடங்கிக் கிடந்திருப்பேன். ஆனால் இப்பொழுதோ அந்த வயதையும் கடந்தவனாய், உலகம் முழுவதும் பிரயாணம் செய்து, பெலத்தோடும், சுறுசுறுப்போடும் ஒரு சவாலான, உற்சாகமூட்டுகிற வாழ்க்கையை நான் நடத்திக் கொண்டிருக்கிறேன்!

இந்த வாழ்க்கை எனக்காக நேர்த்தியாக வடிவமைக்கப்பட்டிருக்கிறது. வேறெதுவும் எனக்கு தகுதியாய் இருந்திருக்காது. ஆனால் நான் முதலாவதானதும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததுமான இந்த புது வாழ்க்கையை கண்டுபிடிக்கும்படி, வேறொரு வாழ்க்கையை இழக்க வேண்டியிருந்தது. தேவன் என்னை முதலாவது இஸ்ரவேல் தேசத்திற்கும், யூதமக்களிடத்திற்கும், பின்பு உலக நாடுகளுக்கும் அழைத்தபோது, நான் உண்மையில் எல்லாவற்றையும் துறந்து விட்டேன். இது ஏதோ திடீரென்று

பரபரப்பாக நடந்து விடவில்லை. தேவன் என்னை ஒரு சூழ்நிலையில் வைத்தார். அங்கே நான் அவருக்குக் கீழ்படிய வேண்டுமானால், எனக்கு நெருக்கமான சகலத்தையும் நான் விட்டுவிட வேண்டியதாயிருந்தது. என்னுடைய நாடான பிரிட்டனை விட்டு விட்டு, ஒரு அந்நிய நாட்டில் நான் குடியேறினேன். என் குடும்பத்தை விட்டு நான் பிரிந்தேன். அதற்காக நான் அவர்களுக்கு அந்நியனாகி விட்டேன் என்ற அர்த்தத்தில் நான் இதைச் சொல்லவில்லை. ஆனால் அவர்களுக்கு என் மேல் இருந்த உரிமை, இயேசுவுக்கு என்னுடைய வாழ்க்கையின் மேல் இருந்த உரிமைக்கு அடுத்த இரண்டாம் நிலையில்தான் இருந்தது.

ஆனால், தேவன் உண்மையுள்ளவர். நான் என்னுடைய வாழ்க்கையை வேறு யாருடனோ, ராஜ குடும்பத்தோடோ, பிரதம மந்திரியோடோ, வேறு யாருடனோ பரிமாறிக் கொள்ள மாட்டேன். இந்த வாழ்க்கையைத்தான் தேவன் எனக்கென்று நியமித்திருக்கிறார்.

உங்கள் தீர்மானத்தை தீர சிந்தித்துப் பாருங்கள்

தேவன் உங்களுக்கென்று நியமித்த வேலை, இடம், உறவுகள், ஊழியம் இவற்றை நீங்கள் அறிய விரும்புகிறீர்களா? இந்த வாழ்க்கையிலும், இனி வரும் நித்தியத்திலும், உங்களுக்கென்றே விசேஷமாய் வடிவமைக்கப்பட்டு முன்னேற்பாடாய் செய்யப்பட்ட ஒரு இடத்திற்குள், அந்தப் பொறுப்பிற்குள், அதற்கான விசேஷமான சிலாக்கியத்திற்குள் நீங்கள் நுழைய விரும்புகிறீர்களா? நீங்கள் அவருடைய அழைப்பிற்கு பதில் அளிக்க விரும்புகிறீர்களா?

பரிசுத்த ஆவியானவர் தனிப்பட்ட விதத்தில் இடைபடுகிறவராய் இருக்கிறார். இப்பொழுதே, அவர் உங்களுடன் பேசிக் கொண்டிருக்கலாம். *என் பின்னே வா. உன் வாழ்க்கையை, என் சேவைக்காக என்னிடம் ஒப்புக்கொடு* என்று சொல்லிக் கொண்டிருக்கலாம். இதை சில விநாடிகள் தீர சிந்தித்துப் பாருங்கள். தேவனோடு தனிமையில் உங்களை அடைத்துக் கொள்ளுங்கள். அவர் உங்களிடம் ஏதோ ஒன்றை சொல்ல விரும்பினால், அதை கேட்கும்படி ஆயத்தமாயிருங்கள்.

கடலுக்குள் தங்களுடைய வலைகளை போட்டுக் கொண்டிருந்த அந்திரேயா, பேதுரு என்ற அன்றைய மீனவர்களை இயேசு கடந்து சென்றபோது, அவர் அவர்களிடம், "என் பின்னே வாருங்கள்," என்று சொன்னார். யாக்கோபும், யோவானும் தங்கள் தகப்பனாரோடு படகில் இருந்தபோது, இயேசு அவர்களை அழைத்தார். வேதவசனம் இவ்வாறு பதிவு செய்கிறது, அவர்கள் உடனடியாக தங்கள் வாழ்வாதாரமான வலைகளையும், தங்கள் குடும்ப உறவுகளையும் விட்டு விட்டு அவர் பின்னே சென்றார்கள்.

நீங்களும் உங்களுடைய அழைப்பை கண்டுபிடிக்க முடியும். அது சிக்கலானது அல்ல. உண்மையில் நாம் பார்க்கப் போகிறபடி, அது நடைமுறைக்கு மிகவும் ஏற்றதாய் இருக்கிறது. உங்களுடைய "இடத்தையும்", உங்களுடைய வரங்களையும் இனங்கண்டறிந்து பகுத்தறிவதைக் குறித்து இந்தப் புத்தகத்தில் நீங்கள் கற்றுக் கொள்வீர்கள். பரிசுத்த ஆவியானவரின் குரலைக் கேட்கும் திறனில் நீங்கள் வளருவீர்கள். மேலும், உங்கள் அழைப்பை நிறைவேற்றுவதில் வரும் மிக பெரிய தடையையும் நீங்கள் கண்டுபிடிப்பீர்கள். தேவன் உங்களுக்கென்று நியமித்திருக்கிற அந்தக் குறிப்பிட்ட அழைப்போடு நீங்கள் உங்களையே இணைத்துக் கொள்ளும்போது, இந்த கடைசி நாட்களில் உங்களுக்கு நியமிக்கப்பட்ட பொறுப்பை தைரியத்தோடும், திடமான நம்பிக்கையோடும் நீங்கள் சந்திப்பீர்கள்.

இயேசு உங்களை தம்முடைய ராஜ்யத்திற்குள், உன்னதமான, உயர் ரகமான பொறுப்பும், விசேஷமான சிலாக்கியமும் உள்ள ஒரு ராஜாவாகவும், ஆசாரியனாகவும் கொண்டுவர விரும்புகிறார். (1 பேதுரு 2:5,9; வெளி.1:6-ஐ பார்க்கவும்.) பாதாளத்தின் வல்லமைகள் உங்களைத் தடுக்கும்படி முழு மூச்சாய் வேலை செய்கின்றன. இப்பொழுது உங்களுடைய தீர்மானம் என்ன ? உங்களுடைய அழைப்பை அறிந்து கொள்வது என்றால் என்ன என்பதை நாம் தொடர்ந்து கற்றுக் கொள்ளுவோம்.

2

அழைப்பு என்பதற்கு சரியான விளக்கம் என்ன?

“ஆகையால், சகோதரரே, உங்கள் அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதியாக்கும்படிஜாக்கிரதையாயிருங்கள்.”

2 பேதுரு 1:10

மேலேயுள்ள வசனம், அதனுடைய முக்கியத்துவத்தைக் குறித்த உணர்வோடு என்னுடைய கவனத்தை தன்வசப்படுத்துகிறது. கர்த்தரை அறிந்த கிறிஸ்தவர்கள் மத்தியில், வெகு சிலரே, தங்களுடைய அழைப்பை உறுதிப்படுத்துகிறவர்கள் போலத் தெரிகிறார்கள் என்பதை நான் கண்டுபிடித்திருக்கிறேன். திரள்கூட்டமான கிறிஸ்தவர்கள் தங்களுடைய அழைப்பு என்ன என்பதைக் கூட இன்னும் அறிந்துணராமலிருக்கிறார்கள். தேவனுடைய அழைப்பைக் குறித்த இந்த அடிப்படை சத்தியங்களை நீங்கள் முழுமையாகப் புரிந்துகொள்ளும்படி என்னால் தெளிவாக விளக்கிச் சொல்ல முடியும் என்று நான் நம்புகிறேன். அப்பொழுது நீங்கள் அவைகளை உங்களுடைய வாழ்க்கையிலும் செயல்படுத்திப் பார்க்க முடியும்.

வேதாகமத்தின் பெரும்பாலான மொழிபெயர்ப்புகளில், இந்த ‘அழைப்பு’ என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. இதே அர்த்தத்தை வெளிப்படுத்தும் வேறு இரண்டு வார்த்தைகளாவன, *அழைப்பிதழ் (Invitation)* அல்லது *அழைப்பாணை (Summons)*. தேவன் தமது அழைப்பினால் உங்களை சந்திக்கும் அந்தக் கணம்தான், உங்களுடைய வாழ்க்கையின் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு கணமாக இருக்கின்றது. நீங்கள்

அதற்கு எவ்வாறு பதிலளிக்கிறீர்கள் என்பதில்தான், உங்களுடைய இவ்வுலக வாழ்க்கை மற்றும் நித்தியத்திற்குமான இலக்கு தீர்மானிக்கப்படுகிறது.

இது என்னுடைய தனிப்பட்ட அனுபவமாய் இருக்கிறது. நான் சர்ச் ஆஃப் இங்கிலாந்து என்ற சபையில் வளர்ந்தேன். அதன் பல்வேறு சடங்குகளிலும், வழிபாடுகளிலும் நான் பங்கெடுத்திருக்கிறேன். அந்த மதத்தில் நான் செய்ய வேண்டிய கடமைகளை நான் நிறைவேற்றியிருக்கிறேன். ஆனால் எனக்கு 24 வயது ஆன நிலையிலும், நான் முன் ஒருபோதும் தேவனை தனிப்பட்ட விதத்தில் அறியாதவனாய்தான் வாழ்ந்து வந்தேன். உண்மையில், தேவனை தனிப்பட்ட விதத்தில் அறிந்து கொள்ளக்கூடிய சாத்தியக்கூறு இருக்கிறது என்பதுகூட எனக்குத் தெரியாது.

பிறகு நான் பிரிட்டிஷ் ராணுவத்தில் பணியாற்றிக் கொண்டிருந்தபோது, நான் பங்கெடுத்த ஒரு கூட்டத்தின் மூலமாக, திடீரென்று தேவனுடைய அழைப்பினால் நான் சந்திக்கப்பட்டேன். இரட்சிப்பை குறித்த அல்லது புதிய மறுபிறப்பை குறித்த அல்லது சுவிசேஷ சத்தியத்தைக் குறித்த போதனை எதையும் நான் அப்பொழுது அறிந்திருக்கவில்லை. அப்பொழுது நான் அவைகளுக்கு முற்றிலும் அந்நியனாக இருந்தேன். ஆனால், ஒரு காரியத்தை மட்டும் நான் அறிந்திருந்தேன்: தேவன் ஏதோ ஒன்றை எனக்குக் கிடைக்கும்படி வைத்திருக்கிறார். அதை பெற்றுக்கொள்வதற்கு இன்னொரு வாய்ப்பு எனக்குக் கிடைக்காமல் போகலாம். நான் அங்கே ஒரு தீர்மானத்தை எடுத்தே ஆக வேண்டும் என்பது எனக்குத் தெளிவாகத் தெரிந்தது. நான் அதை செய்யத் தவறினால், அவர் இரண்டாவது முறையும் திரும்ப அழைப்பார் என்று எதிர்பார்ப்பதற்கு எனக்கு எந்த உரிமையுமில்லை.

தேவனுடைய கிருபையின் எல்லையை ஜனங்கள் மீறுகிறார்கள் என்பதைப் பார்க்கும்போது, தங்களுடைய மனதை அதற்கென்று ஆயத்தப்படுத்தி, அந்த ஒப்புக்கொடுத்தலை அவர்களால் செய்ய முடியவில்லை என்பதைப் பார்க்கும்போது அது எப்பொழுதுமே என்னை வருத்தப்படுத்துகிறது. நீங்கள் தேவனுடைய அழைப்பை இதுவரை ஒருபோதும் எதிர்கொள்ளாமலிருந்து, இப்பொழுது இந்த புத்தகத்தை படிக்கும்போது நீங்கள் அதை எதிர்கொண்டால், உங்களுக்கு இரண்டாவது

சந்தர்ப்பமும் கிடைக்கும் என்று நீங்களாகவே ஊகம் பண்ணிக் கொள்ளாதீர்கள். ஒருவேளை மீண்டும் மீண்டும் உங்களுக்கு சந்தர்ப்பங்கள் கொடுக்கப்படலாம். ஆனால் நீங்கள் அதை நம்பியிருக்க முடியாது. அது எந்த ஒரு சூழ்நிலையாக இருந்தாலும், தேவன் உங்களை அழைக்கும்போது, அதை ஏற்றுக் கொள்ளாமலிருப்பது, தேவனை அவமதிக்கும் பண்படக்கமற்ற ஒரு செயலாகும்.

எல்லாவற்றையும் கூட்டி செயல்படுத்துகிறார்

நம் ஒவ்வொருவருடைய வாழ்க்கையின்மீதும் தேவன் வைக்கும் அழைப்பு, அவருடைய முழுமையான நோக்கம் மற்றும் திட்டத்துடன் நேரடித் தொடர்புடையதாய் இருக்கிறது. இது நம்மை தேவனுடைய ஒப்பற்ற இறையாண்மை என்ற விஷயத்திற்குள் கொண்டு வருகின்றது. இதைக் குறித்து நாம் முந்தின அதிகாரத்தில் மிகவும் சுருக்கமாகப் பார்த்தோம். அதோடு அவருடைய அழைப்பிற்கு செவிமடுக்கலாமா அல்லது வேண்டாமா என்ற நம்முடைய தெரிந்துகொள்ளுதலுக்குள்ளும் இது நம்மைக் கொண்டு வருகின்றது. இப்பொழுது நாம் நமக்கு மிகவும் பழக்கப்பட்ட இந்த வசனத்தை பார்க்க ஆரம்பிக்கலாம்.

> *''அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி, அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம் [சகலமும் நன்மைக்கு ஏதுவாக முடியும்படி தேவன் வேலை செய்கிறார் என்று இன்னொரு மொழிபெயர்ப்பு சொல்கிறது].''*
>
> *ரோமர்: 8:28*

அழைக்கப்பட்டவர்கள் என்ற வார்த்தையைக் கவனியுங்கள். சகலமும் நன்மைக்கு ஏதுவாக முடியும்படி தேவன் எல்லோருக்கும் கிரியை செய்வதில்லை. மாறாக, தம்முடைய அழைப்பை ஏற்றுக் கொண்டவர்களுக்கு மட்டுமே அவர் அதைச் செய்கிறார். நீங்கள் அவருடைய அழைப்பை ஏற்றுக் கொள்ளும்போது, ஒரு விசேஷமான வகுப்பைச் சேர்ந்தவர்களாக நீங்கள் மாறுகிறீர்கள். இவர்களைச் சுற்றித்தான் தேவனுடைய எல்லா நோக்கங்களும்

மையம் கொண்டிருக்கிறது.

நான் இதை உங்களுக்குச் சொல்கிறேன்: இந்த செய்தியை நீங்கள் நன்றாகப் புரிந்து கொண்டு, உள்வாங்கிக் கொண்டு விட்டீர்கள் என்றால், பிறகு நீங்கள் ஒருபோதும் இந்த அண்டசராசரத்தில் ஊசலாடிக் கொண்டிருக்கும் ஒரு துரும்பு தூசியைப் போல உணர மாட்டீர்கள். ஏதோ ஒரு இடத்தில் நிகழும்படி எதிர்பார்த்திருக்கும் ஒரு விபத்தைப்போல நீங்கள் ஒருபோதும் இருக்க மாட்டீர்கள். தேவனுடைய நித்தியமான திட்டத்தின் பிரிக்க முடியாத, மிக முக்கியமான ஒரு பகுதியாய் நீங்கள் இருக்கிறீர்கள் என்பதை புரிந்துணர்வீர்கள்.

தன்னுடைய அழைப்பை ஏற்றுக் கொண்டவர்களுக்கு சகலத்தையும் நன்மைக்கு ஏதுவாக முடியச் செய்யும்படி, தேவன் ஏழு கட்டங்களில் வேலை செய்கிறார் அல்லது தேவன் ஏழு செயல்களைச் செய்கிறார் என்று வேதவசனம் நமக்கு வெளிப்படுத்துகிறது. நம்முடைய வாழ்க்கையில் தேவனுடைய அழைப்பு வருவதற்கு முன்னே, அவர் ஏற்கனவே மூன்று காரியங்களை செய்து முடித்திருக்கிறார்: அவர் நம்மை *முன்னறிந்திருக்கிறார்*, அவர் நம்மை *தெரிந்தெடுத்திருக்கிறார்*, அவர் நம்மை *முன்குறித்திருக்கிறார்*. அதன் பிறகுதான், அவர் நான்காவது நடவடிக்கையை எடுக்கிறார். அவர் நம்மை *அழைக்கிறார்*. நாம் அதை ஏற்றுக் கொண்டோமென்றால், அவர் ஐந்தாவது நடவடிக்கையை எடுத்து, நம்மை *இரட்சிக்கிறார்*. இது கடைசி இரண்டு நடவடிக்கைகளை நிறைவேற்றி முடிக்கும்படி தேவனுக்கு வழியைத் திறந்து விடுகிறது: அவர் நம்மை *நீதிமானாக்குகிறார்*. அவர் நம்மை *மகிமைப்படுத்துகிறார்*. இந்த ஒவ்வொன்றையும் நாம் சுருக்கமாகப் பார்ப்போம்.

தேவன் நம்மை முன்னறிந்தார்

நம் ஒவ்வொருவரைக் குறித்து தேவனுக்கிருக்கும் நித்திய முன்னறிவிலிருந்து நம்முடைய அழைப்பு ஆரம்பமாகிறது.

> *தம்முடைய குமாரன் அநேக சகோதரருக்குள்ளே முதற்பேறானவராயிருக்கும் பொருட்டு, தேவன் எவர்களை*

முன்னறிந்தாரோ, அவர்களைத் தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன் குறித்திருக்கிறார். எவர்களை முன் குறித்தாரோ அவர்களை அழைத்துமிருக்கிறார்.

ரோமர் 8:29-30

கர்த்தர் நம்மை முன்னறிந்திருந்தார். அவர் நம்மை முன்கூட்டியே அறிந்திருந்தார். நாம் பிறப்பதற்கு முன்பே அவர் நம்மை அறிந்திருந்தார். நமக்கு பெயரிடப்படுவதற்கு முன்பே அவர் நம்மை அறிந்திருந்தார். அவர் நம்மை நித்தியத்திலிருந்தே அறிந்திருக்கிறார்.

தேவனுடைய அறிவு மெய்யாகவே நம்மை ஆச்சரியப்பட வைக்கிறது. ஒரு எடுத்துக்காட்டிற்கு வேதாகமம் இவ்வாறு சொல்கிறது: அவர் நட்சத்திரங்களையெல்லாம் அறிந்து, அவைகள் ஒவ்வொன்றையும் பெயரிட்டு அழைக்கிறார். சுமார் ஐம்பது பில்லியன் ட்ரில்லியன் நட்சத்திரங்கள் இந்த அண்டவெளியில் இருப்பதாக விஞ்ஞானிகள் நமக்குச் சொல்கிறார்கள். *பில்லியன் கணக்கான ட்ரில்லியன்* நட்சத்திரங்கள் வான்வெளியில் தொங்கிக் கொண்டிருக்கின்றன. தேவன் இவைகள் ஒவ்வொன்றையும் அவைகளின் பெயரால் தனித்தனியாக அறிந்திருக்கிறார்.

JÊ%Y"Ã pÛV A+PeLX"ß hÃË +V¾¶ &RYß &U&X¼Ã«© g&Z L¡ &Q "ef T"Àef \"À CW| | A+PeLX"ß hÃËLÔ JÃ L"reh¶, I «© A+PeLX"ß hÃËLÔ CW| | L"reh¶ ËÚL±T| ¶ Gß Ý C&Vr i Û] "À (U¦ &R¾ 10:29, É eL" 12:6 I ¾¶ T"ÀeLÍ ¶. pXÀ %N"Åf \Tz, ¯j LÔ A+PeLX"ß hÃËL+[A§L G¡ ¢ e+L¼Å Y"j f] "Å, JÃ A+PeLX"ß hÃË CXYNU"L f +Peh¶.) B ¼â ¶ &RYâ eh¦ %RÁV"UÅ, A+YLÕÅ Jß\"f È¶ R+W¼&X ËZ"©. ``A+PeLX"ß hÃË¼ß APeL B W'R+] ¼Å LX«© %L"ÔYRÚh ei P &RYß &SW¶ J©ehf \"À" Gß Ý JÃYÀJÃ¹ +\ %N"ß] "À &RYâ eh¦ %RÁV"UÅ C«R A¡ PNWWNW|§Å JÃ A+PeLX"ß hÃË¾¶ Gj h¶ CÅ+X.

²\h C&Vr %N"ß] "À ``Ej LÔ R+X¼ÈÔ[U¼%WÅX"¶

எண்ணப்பட்டிருக்கிறது" (மத்தேயு 10:30; லூக்கா 12:7). உங்களுடைய தலையில் எத்தனை முடிகள் உண்டு என்பதைக்கூட தேவன் அறிந்து வைத்திருக்கிறார்.

தேவனுடைய அறிவு, வானத்து நட்சத்திரகளிலிருந்து அடைக்கலான் குருவி வரை, பிறகு உங்களுடைய தலையிலுள்ள முடிகள் வரைக்கும் என இந்த அண்டசராசரம் முழுவதும் பரந்து விரிந்து வியாபித்திருக்கிறது. அது இந்தக் காலம் வரை மாத்திரமல்ல, நித்தியம் வரைக்கும் பரந்து விரிந்திருக்கிறது. தேவனுடைய அறிவின் முழுமையை நீங்கள் உணர ஆரம்பித்தால், பிறகு உங்கள் வாழ்வை குறித்து முற்றிலும் வேறுபட்ட ஒரு மனநிலை உங்களுக்கு உண்டாகும்.

அவர் நம்மை தெரிந்து கொண்டார்

தேவனுடைய முன்னறிவின் அடிப்படையில், அதற்கு பின், அவர் நம்மை தெரிந்தெடுத்தார். குறிப்பிட்ட சில கிறிஸ்தவர்களை, பேதுருவின் முதல் நிருபம், ஒரு குறிப்பிட்ட கூட்ட கிறிஸ்தவர்களை "பிதாவாகிய தேவனுடைய முன்னறிவின்படி தெரிந்து கொள்ளப்பட்டவர்கள்" என்று வருணிக்கிறது (1 பேதுரு 1:2). இங்கு *தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்* என்பது, *தெரிந்துக்கொள்ளப்பட்டவர்கள்* என்பதற்கான வேறொரு வார்த்தையாய் இருக்கிறது. இந்த கிறிஸ்தவர்கள் தேவனுடைய முன்னறிவின்படி தெரிந்துக்கொள்ளப்பட்டவர்களாய் இருந்தனர்.

உங்களுடைய அழைப்பு, ஒரு பின்யோசனை கிடையாது. உங்களை இரட்சித்த பிறகு, "இந்த நபரை வைத்து நான் என்ன செய்ய போகிறேன்? சபையில் இந்தப் பெண்ணுக்கு நான் என்ன வேலை கொடுக்கப் போகிறேன்?" என்று தேவன் சொல்வதில்லை. தேவன் உங்களை இரட்சித்திருக்கிறார். காரணம், அவர் உங்களைக் குறித்து ஒரு நோக்கத்தை வைத்திருக்கிறார்.

இவ்விதத்தில் உங்களுடைய மனதினால் இதை சிந்தித்துப் பார்க்கவாவது முடிகிறதா? ஒரு உலகம் உண்டாவதற்கு முன்பே, எதையும் தேவன் சிருஷ்டிப்பதற்கு முன்பே, அவர் உங்களுக்காக ஒரு திட்டம் வைத்திருந்தார்.

அப்படியென்றால், நீங்கள் எவ்வளவு முக்கியமானவர்கள் என்பதை உங்களால் பார்க்க முடிகிறதா? கிறிஸ்தவர்கள் தங்களைக் குறித்து முக்கியத்துவம் இல்லாதவர்களாய், அற்பமானவர்களாய் பேசுவதை கேட்பதைக் காட்டிலும் அதிகமாய் என்னை வருத்தப்படுத்தக் கூடிய ஒரு விஷயம் வேறு இல்லை. முக்கியத்துவமில்லாத அற்பமான கிறிஸ்தவர் என்று ஒருவருமில்லை. நம்மில் ஒவ்வொருமே மிக மிக முக்கியமானவர்கள்தான்.

மேலும், தனக்காக ஒன்றைச் செய்யும்படி தேவன் உங்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறார் என்றால், உங்களால் அதைச் செய்ய முடியும் என்பதை அவர் அறிந்திருக்கிறார். தமது கிருபையினால் நீங்கள் செய்யக்கூடியவைகளை செய்யும்படியாகவே, அவர் உங்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறார். எனவே நீங்கள் தோல்வி அடைந்து விடுவீர்கள் என்ற பயத்தால், உங்களுடைய அழைப்பிலிருந்து ஒருபோதும் ஓடி விடாதீர்கள்.

அவர் நம்மை முன்குறித்தார்

நம்மை முன்னறிந்து, நம்மை தெரிந்து கொண்டவர், பிறகு "அவர் நம்மை முன்குறித்துமிருக்கிறார்" (ரோமர் 8:29).

முன்குறித்தார் என்ற வார்த்தையின் அர்த்தத்தை, தற்காலத்தைய மதவாத பரிசேயர்கள் திரித்து விட்டார்கள். தேவன் இரட்சிக்கப்படுவதற்காக, நம்மை முன்குறிக்கவில்லை. இயேசுகிறிஸ்துவினுடைய சாயலுக்கு ஒப்பாயிருக்கும்படியே, அவர் நம்மை முன்குறித்தார். நான் இரட்சிக்கப்படும்படி முன்குறிக்கப்பட்டிருக்கிறேன் என்று ஒரு நபர் என்னிடம் சொல்லி, அவருடைய வாழ்க்கையில் ஒரு கனியையும் நான் பார்க்கவில்லையென்றால், நான் அவருடைய வார்த்தைகளை சந்தேகப்படுவேன். ஆனால் இயேசுகிறிஸ்துவினுடைய சாயலுக்கு ஒருவர் ஒப்பாயிருப்பதை நான் பார்த்தால், அவர் முன்குறிக்கப்பட்டிருந்த காரணத்தினால்தான் அது சாத்தியமானது என்று நான் அதை விசுவாசிக்க வேண்டியிருக்கும். வேறு எவ்விதத்திலும் இது சாத்தியமாகாது.

முன் குறிக்கப்படுவது என்றால், உங்கள் வாழ்க்கைப் பாதையை தேவன்

ஏற்கனவே திட்டமிட்டு விட்டார் என்று அர்த்தமாகும். உங்கள் வாழ்க்கை செல்ல வேண்டிய பாதையை அவர் முன்கூட்டியே திட்டமிட்டு விடுகிறார். ஒவ்வொரு வார நாட்களிலும், ஒரு நாளின் ஒவ்வொரு மணி நேரத்திலும் நீங்கள் எங்கே இருக்க போகிறீர்கள் என்பதை தேவன் அறிந்திருக்கிறார். உங்களுக்கு எதிராக வரப்போகின்ற பிரச்சனைகளையும், நெருக்கடியான சூழ்நிலைகளையும் அவர் அறிந்திருக்கிறார். அவை ஒவ்வொன்றுக்கும் அவர் ஒரு பதிலை வைத்திருக்கிறார். தேவனிடத்தில் நெருக்கடியான நிலை என்று எதுவும் இல்லை. நடக்கின்ற நிகழ்வுகள் எதுவும் ஒருபோதும் அவரை அதிர்ச்சிக்குள்ளாக்குவதில்லை. தேவன் முன்னேற்பாடு செய்து வைக்காத ஒன்றும் ஒருபோதும் இப்பிரபஞ்சத்தில் நடைபெறுவதில்லை.

இவைதான் நம்மைக் குறித்து தேவன் நித்தியத்தில் ஏற்கெனவே எடுத்து விட்ட மூன்று நடவடிக்கைகளாய் இருக்கின்றன. அவைகளை குறித்து அவர் ஒருபோதும் நம்மிடம் கலந்தாலோசிக்கவில்லை. உண்மையில், அவைகளை பற்றி நமக்கு ஒன்றும் தெரியாது. நமக்குத் தெரிந்த காலத்தில் இந்த மூன்று கட்டங்களும் நடக்கக்கூட இல்லை. காலங்கள் ஆரம்பமாகுமுன்னே அவை நித்தியத்தில் நிகழ்ந்தன.

அவர் நம்மை முன்னறிந்திருந்தார், அவர் நம்மை தேர்ந்தெடுத்தார், அவர் நம்மை முன்குறித்தார். கணினிகளால் என்ன செய்ய முடியும் என்பதைப் பார்த்து இன்றைக்கு நாம் வியந்து போகிறோம். ஆனால் நான் உங்களுக்குச் சொல்கிறேன், அவருடைய பரலோக கணினி, மற்ற எல்லாவற்றையும் விட விஞ்சி நிற்கக் கூடியதாய் இருக்கிறது! அது அதிசயமானது. இந்தப் பிரபஞ்சத்தில் தேவனுக்குத் தெரியாமல் எந்த ஒரு துரும்புமில்லை, எந்த ஒரு பூச்சியுமில்லை. அவருடைய திட்டத்தின் மைய விசையில் நாம் ஒரு பங்காயிருக்கிறோம்.

அவர் நம்மை அழைக்கிறார்

ரோமரின் **8:30**-ல் தொடர்ச்சியாக, “எவர்களை முன் குறித்தாரோ, அவர்களை அழைத்துமிருக்கிறார்,” என்று நாம் வாசிக்கிறோம். நான்காவது கட்டத்தில்தான், அவருடைய அழைப்பு வருகிறது.

தேவன் நம்மை முன்னறிந்து, தெரிந்து கொண்டு, முன்குறித்த *பின்*, அவர் நம் வாழ்க்கையில் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் குறுக்கிட்டு, நம்மை *அழைக்கிறார்*. நித்தியத்திலிருந்து அவருடைய நித்திய நோக்கங்கள் வெளிப்பட்டு, குறிப்பிட்ட காலத்தில் நம்மை சந்திக்கும் அந்த இடத்தில்தான் தேவனுடைய அழைப்பு வருகின்றது. அதனால்தான் அழைப்பு என்பது, நம்முடைய வாழ்க்கையில் மிக மிக முக்கியமான ஒரு நேரமாகிறது. நீங்களும் என்னைப் போல, ஒரு கவலையற்ற, சுயத்தை திருப்திபடுத்தும், உலகப்பிரகாரமான, மனம் போகிற போக்கில் ஒரு வாழ்க்கையை வாழ்ந்து, தேவன் நமக்கென்று திட்டமிட்டிருந்த எதையும் குறித்து அறியாதிருந்திருக்க கூடும். ஆனால் நிச்சயமாக நான் திட்டமிடாத, அதைக் குறித்து ஒருபோதும் நினைத்திராத ஒரு சூழ்நிலையில், திடீரென்று தேவன் என்னை அழைத்தார் என்ற உண்மையால் நான் சந்திக்கப்பட்டேன். நான் அதற்கு எவ்வாறு பதில் அளிக்கப் போகிறேன் என்பதில்தான் என் முழு எதிர்காலமுமே அடங்கியிருக்கிறது என்பதை நான் உணர்ந்தேன். அந்த அழைப்பிற்கு 'ஆம்' என்று என்னை சொல்ல வைத்த தேவனுடைய கிருபைக்காக கர்த்தரை துதிப்பதற்கு எனக்கு நித்தியமும் போதாது.

நான் சொல்கிறேன், என்னை நம்புங்கள். நான் என்னையே எதற்கு ஒப்புக்கொடுக்கிறேன் என்பதைக் குறித்து எந்த யோசனையும் அப்பொழுது என்னிடத்தில் இல்லை. பொதுவாக, தேவன் ரொம்பவும் தெள்ளத் தெளிவான ஒரு படத்தை நமக்குக் கொடுப்பதில்லை. இருந்தாலும், என்னை அழைத்த ஒரு சில வாரங்களுக்குள் அவர் என் வாழ்க்கைக்கான திட்டமும் தெளிவுமான ஒரு வரைபடத்தை எனக்குக் கொடுத்தார். தேவன், பரிசுத்த ஆவியானவர் மூலமாக என்னிடம் பேசி, *"அது ஒரு சின்ன நீரோடை போலிருக்கும், அந்த நீரோடை ஒரு ஆறாக மாறும், அந்த ஆறு ஒரு பெரிய ஆறாக மாறும், அந்த பெரிய ஆறு ஒரு கடலாகும், அந்தக் கடல் ஒரு பெரிய பெருங்கடலாகும்,"* என்று சொன்னார். *தேவன் எதைக் குறித்துப் பேசிக் கொண்டிருக்கிறார்?* என்று அப்பொழுது நான் எனக்குள் நினைத்தேன். ஆனால் படிப்படியாக நான் ஒரு உணர்வுக்குள் வந்தேன். என் வாழ்க்கைப் பாதை எப்படி இருக்கப் போகிறது என்பதைக்

குறித்துத்தான் அவர் பேசிக் கொண்டிருந்தார்.

இன்றைக்கு கிட்டத்தட்ட இந்த உலகத்தின் பாதி மக்கள் தொகையை சென்றடைந்து கொண்டிருக்கிற எங்களுடைய ஊழியத்தின் விஸ்தரிப்பைக் குறித்து நீங்கள் அறிந்திருக்கிறீர்கள் என்றால், தேவனுடைய திட்டம் தொடர்ச்சியாக **60** ஆண்டுகளுக்கும் மேலாக செயல்படுத்தப்பட்டு வருகிறது, இன்னும் தொடர்ந்து செயல்படுத்தப்படுகிறது என்பதை நீங்கள் ஒத்துக்கொள்ள வேண்டியதாயிருக்கும். இதை செயல்படுத்துவதற்கு நான் ஏதாவது செய்தாக வேண்டுமே என்று நான் வழக்கமாக நினைத்ததுண்டு ஆனால் நான் அதிக முதிர்ச்சியுள்ளவனாக மாற மாற, அது நடக்கும், காரணம், அது நடக்கும் என்று தேவனே சொல்லியிருக்கிறார் என்பதை நான் அதிகதிகமாக உணர ஆரம்பித்தேன். நான் செய்ய வேண்டியதெல்லாம், தேவனோடு தொடர்ந்து இசைந்து இருப்பது மட்டுமே.

தேவன் நமக்குத் தந்திருக்கிற பெரும்பாலான வாக்குறுதிகள், நம்முடைய சொந்த முயற்சியால் அடைய முடியாத அளவிற்கு மகா மகா பெரியவைகளாய் இருக்கின்றது. நாம் அவைகளை விசுவாசத்தால் தழுவிக்கொண்டு, "தேவனே, நீர் சொன்னீர், நீர் செய்வீர்" என்று சொல்ல வேண்டியதுதான். அவ்வளவுதான்.

அவர் நம்மை இரட்சிக்கிறார்

நீங்கள் அவருடைய அழைப்பிற்கு மறுவினையாற்றும்போது, அவர் உங்களை இரட்சிக்கிறார்.

நான் இரட்சிக்கப்பட முடியுமா என்பதை அறியாமலேயே, என்னுடைய வாழ்க்கையின் **24** வருடங்களை நான் கழித்து விட்டேன் என்பதை நான் குறிப்பிட்டிருந்தேன். நீங்களும் கூட அதே நிலையில் இருக்கக்கூடும். நான் ஒன்றை உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன், நீங்கள் இரட்சிக்கப்பட முடியும், நீங்கள் இரட்சிக்கப்பட்டிருக்கிறீர்கள் என்பதை நீங்கள் அறிந்து கொள்ளவும் முடியும். பாருங்கள், முதலில், தெசலோனிக்கேயருக்கு எழுதின கடிதத்தில், பவுல் விசுவாசிகளாய் மாறின இயேசுகிறிஸ்துவினுடைய

சீஷர்களுக்கு இதை எழுதுகிறார். அவர் எழுதுகிறார், ‘‘கர்த்தருக்குப் பிரியமான சகோதரரே,.......இரட்சிப்படையும்படிக்கு, ஆதி முதல் தேவன் உங்களைத் தெரிந்து கொண்டபடியினாலே நாங்கள் உங்களைக் குறித்து, எப்பொழும் தேவனை ஸ்தோத்தரிக்கக் கடனாளிகளாயிருக்கிறோம்’’ (2 தெசலோனிக்கேயர் 2:13).

நீங்கள் இரட்சிக்கப்படும்படியாக, தேவன் உங்களைத் தெரிந்தெடுத்தார். இயேசு தன்னுடைய அப்போஸ்தலர்களிடம், “நீங்கள் என்னைத் தெரிந்து கொள்ளவில்லை, நான் உங்களை தெரிந்து கொண்டேன்’’ என்றார் (யோவான்:15:16). இரட்சிக்கப்படும்படியாக, தேவன் உங்களை தெரிந்தெடுக்காவிட்டால், நீங்கள் ஒருபோதும் இரட்சிக்கப்பட மாட்டீர்கள். ஆக, தேர்ந்தெடுப்பதென்பது முதலில் நம்முடைய கையில் இல்லை. இங்கு நாம் செய்யக்கூடியதெல்லாம் எதிர்வினையாற்றுவது மட்டுமே.

தேவனுடைய பணியில், தேவனுடைய தெரிவுகள் மட்டுமே முக்கியத்துவம் வாய்ந்தவைகளாக இருக்கின்றன. நாம் ஒரு ஜனாதிபதியை தெரிந்தெடுக்கும்படி ஓட்டு போட முடியும், நம்மால் நீதிபதிகளை நியமிக்க முடியும்; சபையில் ஒருவரை மூப்பராக நம்மால் அறிவிப்பு செய்யவும் முடியும். ஆனால் தேவன் அவர்களை தெரிந்தெடுக்காவிட்டால், அங்கே கனி இருக்காது. இயேசு சொல்கிறார், “நீங்கள் போய் கனி கொடுக்கும் படிக்கும் உங்கள் கனி நிலைத்திருக்கும் படிக்கும் நான் உங்களை ஏற்படுத்தினேன்’’ (யோவான் 15:16). நாம் தேவனுடைய தெரிந்தெடுப்பிலிருந்து விலகிப்போன பிறகு, மதரீதியான எல்லாவிதமான முயற்சிகளையும் நாம் எடுக்கலாம். ஆனால் அங்கு நிலையான கனி இருக்காது.

2 தெசலோனிக்கேயர் 2:13-ம் வசனத்தின் பின்பகுதி, ‘‘நீங்கள் ஆவியினாலே பரிசுத்தமாக்கப்படுகிறதினாலும், சத்தியத்தை விசுவாசிக்கிறதினாலும், இரட்சிப்படையும்படிக்கு ஆதிமுதல் தேவன் உங்களை தெரிந்து கொண்டபடியினாலே...’’ என்று சொல்கிறது. பரிசுத்த ஆவியானவர் உங்களை ஆயத்தப்படுத்தி, நீங்கள் கர்த்தரைச் சந்திக்கப் போகும் இடத்துக்கு நேராக உங்களைத் திருப்பி வழிநடத்துகிறார். நீங்கள் கர்த்தரால் அழைக்கப்படும்போது, நீங்கள் இரட்சிப்பிற்குள்

அழைக்கப்படுகிறீர்கள். ஆனால் நீங்கள் இரட்சிக்கப்பட்ட பிறகுதான், தேவனுடைய அழைப்பு ஆரம்பமாகிறது.

நான் இந்த கருத்தை மிகவும் தெளிவுபடுத்த விரும்புகிறேன்: *நீங்கள் ஒருவேளை இரட்சிக்கப்பட்டிருக்கலாம். ஆனால்* தேவன் உங்களை என்ன நோக்கத்திற்காக இரட்சித்தாரோ, *அந்த நோக்கத்தைச் சார்ந்த உங்களுடைய அழைப்பை நீங்கள் இன்னும் மெய்யாகவே கண்டுபிடிக்காமல் இருக்கலாம்.* இது ஒரு பரிதாபமான நிலையாய் இருக்கிறது. தேவனுடைய அழைப்பின் புனிதத்தன்மை மற்றும் அதன் முக்கியத்துவத்தைக் குறித்து இதற்கு மேல் மிகவும் வலுவாக என்னால் வலியுறுத்திச் சொல்ல முடியாது. அது நம் ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் மிகவும் மோசமான பின்விளைவுகளை உண்டாக்கக்கூடியதாய் இருக்கிறது.

அவர் நம்மை நீதிமான்களாக்குகிறார்

தேவன் உங்களை இரட்சித்தபோது, அவருடைய இந்த நடவடிக்கையில் கடைசியாக இரண்டு செயல்கள் இருக்கின்றன: அவர் நம்மை *நீதிமானாக்குகிறார்*, அவர் நம்மை *மகிமைப்படுத்துகிறார்*.

ரோமர் 8-ல் இவ்விரண்டு இறுதி கட்டங்களும் கடந்த காலத்தில் நிகழ்ந்தவைகளாக சொல்லப்பட்டிருக்கின்றன: "எவர்களை அழைத்தாரோ, அவர்களை *நீதிமான்களாக்கியுமிருக்கிறார்.* எவர்களை *நீதிமான்களாக்கினாரோ,* அவர்களை *மகிமைப்படுத்தியுமிருக்கிறார்.*" (ரோமர் 8:30). தேவனுடைய நித்திய நோக்கங்களில், இவைகளெல்லாம் எதிர்காலத்தில் எப்பொழுதோ நிகழப்போகும் புதிய சம்பவங்கள் அல்ல. அவைகள் நித்தியமாக ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன.

நீதிமானாக்கப்படுதல் என்ற இந்த வார்த்தை, நாம் முன்பு பார்த்த *முன்குறிக்கப்படுதல்* என்ற வார்த்தை போன்றது. முன்குறிக்கப்படுதல் என்ற வார்த்தையைப்போலவே, நீதிமானாக்கப்படுதல் என்ற வார்த்தையும் நம்மை பயமுறுத்தும் ஒரு இறையியல் வார்த்தையாக இருக்கிறது. மக்கள் அதை விட்டு சற்று விலகியிருக்கவே விரும்புகிறார்கள். ஆனால்

அப்படியிருப்பது பரிதாபத்துக்குரிய ஒரு விஷயமாகும். ஏனெனில், நீதிமானாக்கப்படுதல் என்ற வார்த்தை, மெய்யாகவே புதிய ஏற்பாட்டின் மகத்தான பல சத்தியங்களில் ஒன்றாய் இருக்கிறது. உண்மையில், முழு வேதாகமத்திலும் என்றுதான் அதைச் சொல்ல வேண்டும்.

நீதிமானாக்கப்படுதல் என்றால் என்ன அர்த்தம்? உண்மையில், அது பல அர்த்தங்களின் ஒரு தொடர்ச்சியோடு தொடர்புடையதாய் இருக்கிறது. முதலாவதாக, அது ஒரு குற்றத்திலிருந்து விடுவிக்கப்படுதல் என்று அர்த்தமாகிறது. 'குற்றமற்றவன்' என்று உங்களையும் என்னையும் பார்த்து பரலோகம் சொல்லும் ஒரு தீர்ப்பாயிருக்கிறது. *நீதிமானாக்கப்படுதல்* என்ற வார்த்தைக்கு நான் பலமுறை கொடுத்திருக்கிற விளக்கம் இதுதான்: "நான் ஒருபோதும் பாவம் செய்யாதவன்போல நீதிமானாக்கப்பட்டிருக்கிறேன்." நாம் நீதிமான்களாக எண்ணப்படுகிறோம். அதாவது தேவன் நீதியை நம்முடைய கணக்கில் வைக்கிறார். அதற்குக் காரணம், நாம் தேவனுடைய நீதியினால் நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறோம். அது ஒருபோதும் பாவத்தை அறிந்ததில்லை. குற்ற உணர்வின் நிழல் எதுவும் அதன் மீது இல்லை, மன்னிக்கப்பட வேண்டிய கடந்த காலம் எதுவும் அதற்கில்லை. நாம் தேவனுடைய நீதியினால் நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறோம்.

ஆனால், நாம் நீதிமான்களாக *எண்ணப்படுவதோடு* நின்று விடுவதில்லை. காரணம், நாம் நீதிமான்களாகவும் *ஆக்கப்பட* வேண்டும். தேவனுடைய நீதி ஒரு ஈவாக பெற்றுக் கொள்ளப்படுகிறது. ஆனால் நாம் அதை அப்படியே விட்டு விட முடியாது. நம்மிடமிருந்து ஒரு எதிர்வினை எதிர்பார்க்கப்படுகிறது. பவுல் இதை பிலிப்பியர் 2:12-13-ல் மிகத் தெளிவாக குறிப்பிடுகிறார்: "அதிக பயத்தோடும் நடுக்கத்தோடும் உங்கள் இரட்சிப்பு நிறைவேற பிரயாசப்படுங்கள். ஏனெனில் தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும், செய்கையையும் உங்களில் உண்டாக்குகிறவராயிருக்கிறார்."

நீதிமானாக்கப்படுதல் என்பது நீதிமான் என்று எண்ணப்படுகிற அந்த நிலையிலிருந்து, நீதியின் கிரியைகளை நடப்பிக்கிற ஒரு நிலைக்கு கடந்து செல்தல் என்ற விளக்கத்தையும் உள்ளடக்கியிருக்கிறது. நாம் நம்முடைய

சுயநீதியின் கிரியைகளிலிருந்து ஆரம்பிப்பதில்லை. மாறாக, இரட்சிப்பின் மீது நாம் வைத்த விசுவாசத்தின் அடிப்படையில், நம்முடைய கணக்கில் தேவன் வைத்த நீதியிலிருந்துதான் நாம் ஆரம்பிக்கிறோம். அதற்குப் பிறகு, தேவன் நம்மில் என்ன கிரியை செய்தாரோ, அதை நாம் வெளியே நடப்பித்துக் காண்பிக்கிறோம்.

அவர் நம்மை மகிமைப்படுத்துகிறார்

ரோமர் 8:30-ல் பவுல் தொடர்ந்து சொல்கிறார், "எவர்களை [தேவன்] நீதிமான்களாக்கினாரோ, அவர்களை மகிமைப்படுத்தியுமிருக்கிறார்." தேவன் நம்மை இரட்சிக்கிறார் என்ற வார்த்தைகளோடு பவுல் தன்னுடைய போதனையை முடித்து விடவில்லை. தேவன் நம்மை நீதிமான்களாக்குகிறார் என்ற வார்த்தைகளோடும் அவர் முடித்து விடவில்லை. பவுல் தொடர்ந்து, தேவன் நம்மை மகிமைப்படுத்துகிறார் என்ற சத்தியத்திற்கும் செல்கிறார்.

திரும்பவும், வேதவசனத்தில் இந்த வினைச்சொல் கடந்த கால வினைச் சொல்லாக இருப்பதை கவனித்துப் பாருங்கள். வேதவசனத்தின் அடிப்படையில், தேவன் உங்களை இரட்சித்தார், உங்களை நீதிமானாக்கினார் என்பதை உங்களால் விசுவாசிக்க முடியும் என்றால், பிறகு அதே வசனங்களின் அடிப்படையில், தேவன் உங்களை மகிமைப்படுத்தினார் என்பதையும் உங்களால் விசுவாசிக்க முடியும். வருங்காலத்தில் ஆச்சரியமான ஒன்று நடக்கப் போவது உண்மைதான். ஆனால் மகிமைப்படுத்தப்படுவதென்பது, இப்பொழுது நமக்கு நடந்திருக்கிற ஒன்றாகும். அது இங்கு, இப்பொழுது, இந்த வாழ்க்கையில் நடக்கின்ற ஒன்றாக இருக்கிறது.

மகிமைப்படுத்தப்படுவது அல்லது மகிமையில் பிரவேசிப்பது என்பது, கிறிஸ்துவின் மகிமையை அவரோடுகூட பகிர்ந்து கொள்வதாகும். இயேசு, சிலுவையில் அறையப்படுவதற்கு முன், தமது சீஷர்களை குறித்து, பிதாவினிடத்தில் தீர்க்கதரிசனமாக ஜெபித்து, "நீர் எனக்குத் தந்த மகிமையை நான் அவர்களுக்குக் கொடுத்தேன்," என்று சொன்னார்

(யோவான் 17:22). இயேசு *நடக்கப்போகிற* ஒரு காரியத்தை குறித்துச் சொல்லவில்லை. அது ஏற்கனவே சம்பவித்து விட்டது. அது அவருடைய பரிகார மரணம், அவருடைய ஜெயங்கொண்ட உயிர்த்தெழுதல், மற்றும் அவருடைய பரமேறிச் செல்லுதல் மூலமாக நமக்குக் கிடைக்கும்படி இருக்கிறது.

இயேசுவின் உயிர்த்தெழுதல் மூலம் நாம் நீதிமான்களாக்கப்படுகிறோம். ஆனால் தேவன் நம்மில் கிரியை செய்வதை உயிர்த்தெழுதலோடு நிறுத்தி விடுவதில்லை. அவர் உயிர்த்தெழுதலையும் தாண்டி பரமேறுதலுக்குள்ளும் நம்மை நடத்திச் செல்கிறார். பரமேறுதல் மூலம், நாம் நீதிமான்களாக்கப்படுவது மட்டுமல்ல, நாம் மகிமைப்படுத்தப்படவும் செய்கிறோம். இதை நான் மறுபடியும் சொல்கிறேன்: நாம் இயேசுவின் உயிர்த்தெழுதல் மூலம் நீதிமான்களாக்கப்படுகிறோம். இயேசுவின் பரமேறுதல் மூலம் நாம் மகிமைப்படுத்தப்படுகிறோம்.

எபேசியர் 2:4-7 வசனங்களில், பவுல் இதை தெளிவுப்படுத்துகிறார்:

> *தேவனோ, இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவராய், நம்மில் அன்பு கூர்ந்த தம்முடைய மிகுந்த அன்பினாலே அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்த நம்மைக் கிறிஸ்துவுடனே கூட உயிர்ப்பித்தார், கிருபையினாலே இரட்சிக்கப்பட்டீர்கள். கிறிஸ்து இயேசுவுக்குள் அவர் நம்மிடத்தில் வைத்த தயவினாலே தம்முடைய கிருபையின் மகா மேன்மையான ஐசுவரியத்தை வருங்காலங்களில் விளங்கச் செய்வதற்காக, கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை அவரோடே கூட எழுப்பி, உன்னதங்களிலே அவரோடே கூட உட்காரவும் செய்தார்.*

திரும்பவும் கவனியுங்கள், தேவன் செய்த இந்த மூன்று கிரியைகளும் கடந்தகால வினைச்சொற்களாக இங்கு எழுதப்பட்டிருக்கிறது: அவர் நம்மை கிறிஸ்துவுடனேகூட உயிரோடெழுப்பினார். அவர் நம்மை கிறிஸ்துவுடனேகூட எழுப்பினார். ஆனால் அங்கேயே நிறுத்தி விடாதீர்கள். அவர் நம்மை உன்னதங்களில் கிறிஸ்துவுடனேகூட உட்காரவும் செய்தார். எப்படிப்பட்ட ஒரு இருக்கையில் இயேசு இப்பொழுது உட்கார்ந்திருக்கிறார்? அவர் இப்பொழுது தேவனுடைய சிங்காசனத்திலே வீற்றிருக்கிறார். நாமும் அவருடன்

கூட உட்கார வைக்கப்பட்டிருக்கிறோம் என்றால், நாம் எதின் மேல் உட்கார்ந்திருக்கிறோம்? தேவனுடைய சிங்காசனம். *புதிய ஆங்கில வேதாகமம் (New English Bible)* உண்மையில் அதை இப்படியாக மொழி பெயர்க்கிறது: ''அவர் நம்மை அவரோடேகூட சிங்காசனத்தில் வீற்றிருக்கும்படி செய்தார்." இந்த மொழிபெயர்ப்புதான், மெய்யாகவே சத்தியத்தை அப்படியே வெளிக்கொண்டு வருகிறது. அவருடைய உயிர்த்தெழுதலின் மூலம் நாம் நீதிமான்களாக்கப்பட்டோம். அவருடைய பரமேறுதலின் மூலம் நாம் மகிமைப்படுத்தப்பட்டோம். இப்பொழுது நாம் அவரோடுகூட மகிமையில் இருக்கிறோம்.

மகிமைப்படுத்தப்படுதலைக் குறித்து பவுல் இந்தக் குறிப்பை கொலோசேயர் **3:1-3** வசனங்களில் சொல்கிறார்:

> *"நீங்கள் கிறிஸ்துவுடன் கூட எழுந்ததுண்டானால், கிறிஸ்து தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடுங்கள். பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங்கள். ஏனென்றால் நீங்கள் மரித்தீர்கள், உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது."*

நாம் சென்றடைய வேண்டிய இடம் தேவனுக்குள் இருக்கிறது என்பதைக் குறிப்பிட்டுப் பேசி இந்த அத்தியாயத்தை நாம் ஆரம்பித்தோம். அதையேதான் பவுலும் இந்த வசனத்தில் குறிப்பிட்டுச் சொல்கிறார். இயேசு சிலுவையில் மரித்தபோது, நீங்களும் உங்களுடைய பழைய, பாவ வாழ்க்கையோடு கூட மரித்தீர்கள். இப்பொழுது நீங்கள் அவரோடுகூட உயிரோடெழுப்பப் பட்டிருக்கிறீர்கள், நீங்கள் அவரோடுகூட சிங்காசனத்தில் அமர்த்தப் பட்டிருக்கிறீர்கள். உங்களுடைய ஜீவன் தேவனுக்குள் கிறிஸ்துவோடேகூட மறைக்கப்பட்டிருக்கிறது. தேவனுக்குள் கிறிஸ்துவுடன் மறைக்கப்பட்டிருக்கும் ஒரு வாழ்க்கையை விட அதிக முக்கியத்துவம் வாய்ந்த ஒரு இடம் உங்களுக்குக் கிடைக்குமா என்று சிந்தித்துப் பாருங்கள். பிறகு பவுல் மேலும் சொல்கிறார்: "நம்முடைய ஜீவனாகிய கிறிஸ்து வெளிப்படும் போது, நீங்களும் அவரோடே கூட மகிமையிலே வெளிப்படுவீர்கள்" (வசனம் **4**).

இந்த சத்தியத்தை உறுதியாக பற்றிப் பிடித்து கொள்ளுங்கள். கிறிஸ்து உங்களுடைய ஜீவனாக இருக்கிறார். இந்த நான்கு எளிய வார்த்தைகளும், நீங்கள் உங்களுடைய வாழ்க்கையை சந்திக்கும் விதத்தையே முற்றிலும் மாற்றி விடும். நாம் கிறிஸ்துவுடன் மகிமைப்படுத்தப்பட்டிருக்கிறோம் என்பதை உணருவதே, தேவனுடைய ஆச்சரியமான திட்டத்தின் உச்சகட்டமாய் இருக்கிறது.

நித்தியத்திற்குள் திரும்பிச் செல்கிறோம்

தீமோத்தேயுவுக்கு எழுதிய இரண்டாம் நிருபத்தில், பவுல் கூறுவதாவது:

> *"அவர் நம்முடைய கிரியைகளின்படி நம்மை இரட்சிக்காமல் தம்முடைய தீர்மானத்தின் படியும், ஆதி கால முதல் கிறிஸ்து இயேசுவுக்குள் நமக்கு அருளப்பட்ட கிருபையின் படியும் நம்மை இரட்சித்து, பரிசுத்த அழைப்பினாலே அழைத்தார்."*
>
> *(2 தீமோத்தேயு 1:8-9)*

நம்முடைய வாழ்க்கையில் என்ன நிகழ்கிறது என்பதை விளக்கும்படி, பவுல் மறுபடியும், மறுபடியும் நித்தியத்தை நோக்கியே பார்க்கிறார் என்பதைக் கவனியுங்கள். நித்தியத்தின் கண்ணோட்டத்தில் நாம் இந்தக் கட்டங்களைப் பார்க்காதவரை, நம்மில் ஒருவரும் இவைகளை மெய்யாகவே புரிந்து கொள்ள முடியாது. காரணம், தேவனுடைய திட்டம் அங்கேதான் ஆரம்பமானது. நம்முடைய நற்கிரியைகளின்படி அல்ல, தேவன் தம்முடைய சொந்த நோக்கத்தின் படியும், காலங்கள் தோன்றும் முன்னே, கிறிஸ்துஇயேசுவுக்குள் அவர் நமக்கு அருளின கிருபையின்படியும், தேவன் நம்மை ஒரு பரிசுத்த அழைப்பினால் அழைத்திருக்கிறார்.

நான் சொல்வதை நீங்கள் கிரகிக்க முடிந்தால், இது முதற்கொண்டு உங்களுடைய வாழ்க்கையைக் குறித்து முற்றிலும் வித்தியாசமான மனப்பான்மையை உடையவர்களாய் நீங்கள் இருப்பீர்கள். நீங்கள் பாதுகாப்பின்மையையும், நிச்சயமற்ற தன்மையையும் உணர்கிறீர்கள் என்றால், அந்த உணர்வுகள் படிப்படியாக வலுவிழந்து ஒன்றுமில்லாமல் போகும் என்பதை என்னால் துணிந்து, நிச்சயமாகச் சொல்ல முடியும்.

நீங்கள் ஒரு நித்திய திட்டத்தின் ஒரு அங்கமாக இருக்கிறீர்கள். அதோடுகூட இயேசுகிறிஸ்துவுக்குள் தேவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவராகவும் நீங்கள் இருக்கிறபடியால், நீங்கள்தான் இந்த திட்டத்தின் மையமாக இருக்கிறீர்கள். நீங்கள் ஏதோ சுற்றுப்புற விளிம்பு வளையத்தில் இல்லை. நீங்கள் ஏதோ எங்கோ ஒரு தொலைதூரத்தில், ஒரு மூலையில் இருக்கும் ஒரு விண்மீன் கூட்டத்திலுள்ள ஒரு விண்மீன் அல்ல. நீங்கள் தேவனுடைய திட்டத்தின் இருதயமாக, அதன் மையமாக இருக்கிறீர்கள். உங்களுடைய அழைப்புக்கு இதுதான் அர்த்தம். இப்பொழுது உங்களுடைய ஸ்தானத்தை எப்படிக் கண்டுபிடிப்பது என்பதைக் குறித்து இன்னும் அதிகமாக நாம் கற்றுக் கொள்வோம்.

3

உங்களுடைய இடத்தைக் கண்டுபிடிக்க ஏழு படிகள்

“தேவன் உன் போக்கையும், உன் வரத்தையும் இது முதற்கொண்டு என்றைக்கும் காப்பார்.” சங்கீதம் 121:8

நம் ஒவ்வொருவருடைய வாழ்க்கையைக் குறித்த தேவனுடைய அழைப்பை அறிந்து கொள்ளும்படி முன் வருவதன் ஒரு அம்சத்தை ஒரு சொற்றொடரில் சுருக்கிச் சொல்லி விடலாம்: *உங்களுடைய இடத்தைக் கண்டுபிடித்தல்*. நீங்கள் உங்களுடைய இடத்தைக் கண்டுபிடிக்கும் வரைக்கும், நீங்கள் ஒருபோதும் ஒரு நிறைவு பெற்ற கிறிஸ்தவராய் வாழ முடியாது.

உங்களுடைய இடம், உங்களுடைய வாழ்க்கையின் எல்லாப் பகுதியையும் தொடுகிறது. பூகோளரீதியாக, இந்த பூமியில் தேவன் உங்களுக்கென்று ஒரு இடத்தை வைத்திருக்கிறார். உதாரணத்திற்கு, நீங்கள் நியூயார்க்கில் வாழ்கிறீர்களா அல்லது டோக்கியோவில் வாழ்கிறீர்களா அல்லது லண்டனில் வாழ்கிறீர்களா அல்லது டல்லாஸில் வாழ்கிறீர்களா என்பதுகூட முக்கியமான ஒரு விஷயமாயிருக்கிறது.

நீதிமொழிகள் புத்தகம் இவ்வாறு நமக்குச் சொல்கிறது, “தன் கூட்டை விட்டு அலைகிற குருவி எப்படியிருக்கிறதோ, அப்படியே, தன் ஸ்தானத்தை விட்டு அலைகிற மனுஷனும் இருப்பான்” (நீதிமொழிகள் 27:8). தன் கூட்டை விட்டு வெளியேறிய ஒரு பறவை, மறுபடியும் தன் கூட்டுக்குள் திரும்ப

முடியாத நிலையை நீங்கள் பார்த்ததுண்டா? அந்த பறவையைக் காட்டிலும் மிகவும் பலவீனமான, பரிதாபமான வேறொன்று இருக்க முடியாது. உங்களுடைய இடத்தை விட்டு நீங்கள் வெளியே இருப்பதும் அதைப் போலத்தான் இருக்கிறது! நான் பலருக்கு ஆலோசனை சொல்லியிருக்கிறேன். சில நேரங்களில் நான் அவர்களிடம் எளிமையாக இவ்வாறு சொல்வேன், "பூகோளரீதியாக, இந்த பூமியில் உங்களுக்குப் பொருத்தமான இடத்தில் இப்பொழுது நீங்கள் இல்லாமலிருப்பதே உங்களுடைய பிரச்சனைகளில் ஒன்றாய் இருக்கிறது. இப்பொழுது நீங்கள் இருக்கும் இடம், நீங்கள் இருக்க வேண்டிய இடமே அல்ல. நீங்கள் அதைக் கண்டுபிடிக்கும்வரை, உங்களால் ஒருபோதும் மெய்யாகவே செழித்து வளர்ச்சியடைய முடியாது."

உங்களுக்கென்று தேவன் வைத்திருக்கிற இடம், பூகோளரீதியாக இருப்பதோடு நின்று விடுவதில்லை. அவர் உங்களுக்கென்று ஒரு வேலைஸ்தலத்தை அல்லது ஊழியத்தை வைத்திருக்கிறார். அவர் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் உங்களுக்கென்று ஒரு குறிப்பிட்ட ஸ்தானத்தை வைத்திருக்கிறார். ஒரு எடுத்துக்காட்டிற்கு, வேதவசனம் சொல்கிறது, நாம் ஒவ்வொருவருமே அந்த சரீரத்தின் ஒரு உறுப்பாக இருக்க வேண்டும். அவ்வாறே, நாம் ஒவ்வொருவரும் அவ்வுறுப்புக்குரிய சரியான இடத்தில் பொருந்த வேண்டும்.

இந்த அத்தியாயத்தில், உங்களை உங்களுக்குரிய இடத்தில் பொருந்தச் செய்யும்படி என்னுடைய போதனை மிகவும் குறிப்பாக வடிவமைக்கப்பட்டிருக்கிறது. நீங்கள் உடனடியாக அவ்விடத்தை அடைந்து விட மாட்டீர்கள். ஆனால் நீங்கள் என்ன வாசித்துக் கொண்டிருக்கிறீர்களோ, அதை செயல்படுத்துவீர்கள் என்றால், நீங்கள் நிச்சயம் அந்த இடத்தை அடைவீர்கள் என்று தேவனுடைய வார்த்தையின் அதிகாரத்தில், என்னால் உறுதிபடச் சொல்ல முடியும் என்று நான் விசுவாசிக்கிறேன்.

உங்கள் சரீரங்களை ஒப்புக்கொடுங்கள்

பவுல் ரோமருக்கு எழுதிய நிருபம், நம்முடைய இடத்தைக் கண்டு

பிடிப்பதற்கான நம்முடைய ஆரம்பப்புள்ளியை நமக்குக் கொடுக்கிறது.

> *“அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும், தேவனுக்குப் பிரியமுமான ஜீவ பலியாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக் கொள்கிறேன். இதுவே, நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை.”*
>
> *ரோமர் 12:1*

பின்வரும் விளக்கத்தை நீங்கள் ஏற்கெனவே என்னிடமிருந்து ஒருவேளை கேட்டிருக்கலாம். வேதாகமத்தில் *அப்படியிருக்க* என்ற வார்த்தையை நீங்கள் பார்த்தீர்கள் என்றால், அது *ஏன் அங்கே எழுதப்பட்டுள்ளது* என்பதைக் கண்டுபிடிக்கும்படி நீங்கள் முயற்சிக்க வேண்டும். இந்த அதிகாரம் *அப்படியிருக்க* என்ற வார்த்தையோடு ஆரம்பிக்கிறது: ‘‘அப்படியிருக்க சகோதரரே......உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்.” *அப்படியிருக்க* என்ற வார்த்தை ரோமர் 12-ல் இருப்பதற்கு முந்தின 11 அதிகாரங்களுமே காரணமாக இருக்கின்றன என்பதுதான் இந்தச் சூழ்நிலையில் என்னுடைய பதிலாய் இருக்கிறது. அந்த அதிகாரங்கள் மனுகுலத்திற்கான தேவனுடைய மீட்பின் திட்டத்தை மிகவும் துல்லியமாக, ஒரு குறைவுமில்லாமல், ஒப்புயர்வற்ற விதத்தில், அதன் காரண காரியங்களை தொடர்புபடுத்தி, முழுமையாக, படிப்படியாக வெளிப்படுத்துகின்றன.

இதையும் நான் உங்களிடத்தில் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். நீங்கள் வேதாகமத்தை விசுவாசிக்கிறீர்கள் என்று மிகவும் படித்த ஒரு நபரிடம் சொல்வதைக் குறித்து ஒருபோதும் தயக்கம் கொள்ளாதீர்கள் அல்லது வருத்தப்படாதீர்கள். காரண காரியங்களை படிப்படியாக பகுத்தறிந்து எடுத்துக் காண்பிக்கும் விஷயத்தில் வேதாகமத்தைக் காட்டிலும் விஞ்சி நிற்கக்கூடியது வேறு எதுவும் இல்லை. வேதாகமத்தை ஆழ்ந்து அறிந்து விட முடியாது. நீங்கள் அதை ஐம்பது முறை வாசித்திருக்கலாம். ஒவ்வொரு முறையும், “இதை நான் முன்பு ஏன் பார்க்காமல் விட்டேன்?” என்று உங்களைச் சொல்ல வைக்கக்கூடிய ஒரு புதிய விஷயத்தை நீங்கள் பார்ப்பீர்கள்.

ரோமர் நிருபத்தின் அந்த முதல் 11 அதிகாரங்களைக் குறித்துச் சொல்லும்போது, முதல் 8 அதிகாரங்களை, ஆவியானவரால் நிரப்பப்பட்ட வாழ்க்கைக்குள் நடத்திச் செல்லும் பாதை என்று வருணிக்க முடியும். ரோமர் 9, 10, 11 அதிகாரங்கள், தேவனால் விசேஷமாக தெரிந்தெடுக்கப்பட்ட இஸ்ரவேல் மக்களோடு அவர் இடைப்படும் விதத்தை மையமாகக் கொண்டுள்ளது. இது பவுல் ரோமருக்கு எழுதிய நிருபத்தின் மிக முக்கியமான ஒரு பகுதி, இது ஒரு பின்சேர்க்கை அல்ல. ஏன்? ஏனென்றால், இஸ்ரவேல் இல்லாமல் மனுகுலத்திற்க்கான தேவனுடைய மீட்பின் திட்டமும், பூமியில் தேவனுடைய ராஜ்யம் ஸ்தாபிக்கப்படுவதற்கான திட்டமும் நிறைவேறாது.

முதல் 11 அதிகாரங்களில் எழுதப்பட்டிருக்கிறவைகள் யாவும், ஆழமாய் உள்மனதினால் கிரகிக்க முடியாத தேவனுடைய இரக்கத்தையும், கிருபையையும், கிறிஸ்துவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் மூலம் நமக்காக அவர் ஏற்படுத்தி வைத்திருக்கிற முன்னேற்பாடு முழுமையாக நமக்குப் போதும் என்பதையும் வெளிக்கொண்டு வருகின்றன. தேவன் நமக்காக என்ன செய்திருக்கிறார் என்பதைக் குறித்து இவையெல்லாம் பேசுகின்றன.

இதற்கு பிறகு, ரோமர் 12:1-ம் வசனத்தில் *அப்படியிருக்க* என்ற வார்த்தை வருகின்றது. இதற்கு நாம் எவ்வாறு எதிர்வினையாற்ற வேண்டும்? தேவன் நமக்காக இலவசமாய் செய்த யாவற்றிற்கும், நமக்காக இலவசமாய் கொடுத்த யாவற்றிற்கும் பதிலாக அவர் நம்மிடத்தில் என்ன கேட்கிறார்? இது என்னை மெய்யாகவே ஆசீர்வதிக்கிறது. காரணம், வேதாகமம் எளிதில் நம்முடைய அன்றாட வாழ்க்கையில் நடைமுறைப்படுத்திப் பார்க்கக்கூடிய ஒரு புத்தகமாக இருக்கின்றது. தேவன் நம்மிடமிருந்து ஏதோ பயங்கரமான ஆவிக்குரிய காரியத்தையெல்லாம் எதிர்பார்க்கவில்லை. அவர் மிகவும் எளிமையான ஒன்றை, நடைமுறைக்குச் சாத்தியமான ஒன்றை கேட்கிறார்: *உன் சரீரத்தை எனக்குக் கொடு. உன்னுடைய சரீரத்தை என்னுடைய பலிபீடத்தில் ஒரு ஜீவபலியாக ஒப்புக்கொடு*. இதுதான் நாம் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை. தேவன் என்ன செய்திருக்கிறாரோ, அதற்குத் தகுந்த விதத்தில்

மறுவினையாற்றும் ஒரு ஆராதனையாய் இது இருக்கிறது. நம்முடைய இடத்தை கண்டுபிடிக்கும்படி நாம் எடுத்து வைக்கும் முதல் படி, நம்முடைய சரீரங்களை அவருக்கு முன்பாக, அவருக்குச் செய்யும் ஊழியம் எனும் பலிபீடத்தில் அவைகளை வைத்து, 'கர்த்தாவே, என்னுடைய சரீரம் உமக்குச் சொந்தம்,' என்று சொல்வதாகும்.

பவுல் நம்முடைய சரீரத்தை "ஜீவபலி" என்று அழைக்கிறார். காரணம், பழைய ஏற்பாட்டில் செலுத்தப்பட்ட செம்மறி, வெள்ளாடு, காளை போன்ற பலிகளெல்லாம் அவருடைய மனதில் இருந்தன. அவைகள் கொல்லப்பட்டு கர்த்தருடைய பலிபீடத்தில் வைக்கப்பட்டன. அந்த காளை அல்லது செம்மறியாடு அல்லது வெள்ளாட்டைப் போலவே, நீங்களும் உங்களுடைய சரீரங்களை பலிபீடத்தில் ஒப்புக்கொடுக்க வேண்டும் என்று பவுல் கூறுகிறார். ஆனால் அங்கே ஒரேயொரு வித்தியாசம் உண்டு. இந்தப் பலியை ஒருவருமே கொல்லத் தேவையில்லை. தேவன் ஒரு ஜீவனுள்ள சரீரத்தை பலியாக விரும்புகிறார்.

உங்களுடைய சரீரத்தை தேவனுடைய பலிபீடத்தில் முற்றிலுமாய் நீங்கள் அர்ப்பணித்து விட்டீர்கள் என்றால், அவ்வளவுதான், இனி உங்களுடைய சரீரம் உங்களுக்குச் சொந்தமானதல்ல. அது தேவனுக்குச் சொந்தமாகி விடுகிறது. உங்களுடைய சரீரத்துக்கு என்ன வேண்டும், என்ன வேண்டாம் என்பதை இனி நீங்கள் தீர்மானிக்க முடியாது. தேவன் அதைச் செய்கிறார். நீங்கள் எங்கே வாழப் போகிறீர்கள் என்பதை நீங்கள் தேர்ந்தெடுப்பதில்லை. தேவன் அதைத் தேர்ந்தெடுக்கிறார். அவர் அந்தப் பொறுப்பை எடுத்துக் கொள்ளும்போது, அது நமக்கு மனநிறைவைக் கொடுக்கிறது.

ஒரு சொத்துக்கு, ஒருவர் சொந்தக்காரராய் இருக்கும்போது, அதை பராமரிக்கும் பொறுப்பு அவருடையது என்பதை நாம் அறிவோம். நீங்கள் ஒரு வாடகை வீட்டில் குடியிருந்தால், அது உங்களுக்குச் சொந்தமல்ல, நீங்கள் அதற்குப் பொறுப்பும் அல்ல. தேவன் "நம்மை வாடகைக்கு எடுக்கிறார்" என்றால் (ஒரு பேச்சுக்குச் சொல்கிறேன்), அவருக்கு நம்மீது எந்த பொறுப்பும் இல்லை. ஆனால் அவர் நம்மை சொந்தமாக கொண்டிருக்கிறார் என்பதால், நம்மை பராமரிப்பது அவருடைய பொறுப்பாகி

விடுகிறது.

நீங்கள் உங்களுடைய சரீரத்தை ஒரு ஜீவபலியாக தேவனுடைய பலிபீடத்தில் முன் ஒருபோதும் ஒப்புக்கொடாமல் இருந்திருக்கக் கூடும். ஆனால் இதுதான், தேவனுடைய சித்தத்தை அறிந்து கொண்டு, உங்களுக்குரிய இடத்தை கண்டுபிடிப்பதற்கான வழிவாசலாய் இருக்கிறது. நீங்கள் ஒரு வாய்ப்புக்குப் பின் அடுத்த வாய்ப்பு என பல்வேறு வாய்ப்புகளை, ஒரு பிரயாணத்திற்குப் பின் அடுத்த பிரயாணம் என பல்வேறு பிரயாணங்களை முயற்சித்து பார்த்திருக்கலாம். ஆனால் இந்தப் படியை நீங்கள் ஒருபோதும் முடிக்கவே இல்லையென்றால், நீங்கள் மெய்யாகவே உங்களுடைய இடத்தை ஒருபோதும் அடையவே முடியாது.

நான் அடிக்கடி இந்த தலைப்பை எடுத்து போதிக்கிறேன். காரணம், இது ஒரு மிக மிக முக்கியமான பொறுப்பாய் இருக்கிறது. உங்களுடைய தீர்மானத்தை நீங்கள் உறுதிப்படுத்த விரும்பினால், பின்வரும் ஜெபத்தை நீங்கள் சொல்லலாம். இது உங்களுடைய எஞ்சிய வாழ்க்கை முழுவதையும் பாதிக்கக்கூடிய மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு கணமாக இருக்கிறது. உங்களுடைய இரட்சகரும், சபையின் தலையாயிருப்பவருமாகிய கர்த்தராகிய இயேசுவிடம் நீங்கள் ஜெபிக்கிறீர்கள் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே, நான் மன்னிக்கப்பட்டு, நித்திய ஜீவனைப் பெற்று, தேவனுடைய பிள்ளையாக நான் மாறும்படி நீர் எனக்காக சிலுவையில் மரித்தீர். நான் உமக்கு நன்றி சொல்கிறேன்.

கர்த்தாவே, சபையின் தலையாயிருக்கும் உம்மிடம் நான் வருகிறேன். கர்த்தாவே, இப்பொழுது நான் என்னுடைய சரீரத்தை உமக்குச் செய்யும் ஊழியம் என்னும் பலிபீடத்தில் வைக்கிறேன். உம்முடைய சரீரமாகிய சபையில் எனக்குரிய இடத்தில் நீர் என்னை வைக்கும்படி நான் உம்மை வேண்டிக் கொள்ளுகிறேன். எந்த தயக்கமும், ஐயமுமின்றி நான் என்னை உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன். இன்று முதல் என் சரீரம் உமக்குச் சொந்தம். நீர் அதனிடத்தில் எங்கு செல்லச்

சொல்கிறீரோ, அங்கு அது செல்லும். நீர் அதனிடத்தில் என்ன செய்யச் சொல்கிறீரோ, அதை அது செய்யும். நீர் அதனிடத்தில் என்ன சொல்ல சொல்கிறீரோ, அதையே அது சொல்லும். நீர் அதனிடத்தில் என்ன ஊழியம் செய்யும்படி சொல்கிறீரோ, அந்த ஊழியத்தை அது எப்படியாவது செய்யும்.

உம்முடைய நாமத்தில் உம்மிடம் நான் வரும் இவ்வேளையில் நீர் என்னை ஏற்றுக்கொண்டதற்காக நன்றி கர்த்தாவே, ஆமென்.

உங்களுடைய மனம் புதிதாகி மறுரூபமாகட்டும்

நாம் நம்முடைய சரீரங்களை ஜீவபலியாக ஒப்புக்கொடுத்து விட்ட பிறகு, இப்பொழுது நாம் இரண்டாவது படிக்குச் செல்லுகிறோம்:

> *"நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல் தேவனுடைய நன்மையும், பிரியமும், பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்.*
>
> *ரோமர் 12:2*

நீங்கள் உங்களுடைய சரீரத்தை கர்த்தரிடத்தில் ஒப்புக்கொடுக்கும்போது, உங்களுக்கு நீங்களே செய்து கொள்ள முடியாத ஒரு காரியத்தை தேவனே உங்களுக்குச் செய்கிறார்: அவர் உங்களுடைய மனதை புதிதாக்குகிறார். நீங்கள் வித்தியாசமாக சிந்திக்க ஆரம்பிக்கிறீர்கள். நீங்கள் வித்தியாசமான நோக்கங்களை உடையவர்களாக இருப்பீர்கள். வித்தியாசமான அளவுகோல்கள். வித்தியாசமான முன்னுரிமைகள். நீங்கள் வித்தியாசமாக சிந்திக்க ஆரம்பிப்பதால், நீங்கள் வாழும் விதமும் வித்தியாசமாக மாறுவதை தவிர்க்க முடியாது. தேவன் நம்மை வெளியேயிருந்து உள்ளே உருமாற்றுவதில்லை. அவர் நம்மை உள்ளேயிருந்து வெளியே உருமாற்றுகிறார்.

அடிப்படையில், நீங்கள் என்ன உடுத்துகிறீர்கள், நீங்கள் என்ன சாப்பிடுகிறீர்கள், நீங்கள் என்ன குடிக்கிறீர்கள், நீங்கள் எங்கு செல்கிறீர்கள், உங்களால் எதைத் தொட முடியும், உங்களால் எதைத் தொட முடியாது என்பது போன்ற விதிமுறைகளினாலும், புறம்பான சடங்கு வழிபாடுகள்

மூலமாகவும் மதமானது ஜனங்களை மாற்றும்படி முயற்சிக்கின்றது. ஆனால் அந்த விதிமுறைகள் ஜனங்களை மாற்றுவதில்லை. காரணம், நம்முடைய உள்ளான பகுதிதான் மாற்றப்பட வேண்டிய முக்கியத்துவத்தை உடையதாய் இருக்கிறது. தேவன் உங்களுடைய இருதயம், உங்களுடைய மனம், நீங்கள் சிந்திக்கின்ற விதம் மற்றும் உங்களுடைய நோக்கங்கள் என உங்களுக்கு உள்ளேயிருந்துதான் ஆரம்பிக்கிறார். அவர் சொல்கிறார், *நீ உன் சரீரத்தை என்னிடத்தில் ஒப்புக்கொடுக்கும்போது, நீ சிந்திக்கும் விதத்தை நான் மாற்றுவேன். நீ உன் மனதில் புதிதாக்கப்படுவாய். உனக்கு வித்தியாசமான மனோநிலைகள், வித்தியாசமான முன்னுரிமைகள், வித்தியாசமான பிரதிவினைகள் உண்டாகும். அவைகள் என்னுடைய சித்தத்துக்கு இசைவாக இருக்கும்.*

தேவனுடைய சித்தத்தைக் கண்டுபிடித்தல்

உங்களுடைய புதுப்பிக்கப்பட்ட மனதின் உதவியால், நீங்கள் மூன்றாவது படியை கண்டுபிடிப்பீர்கள். அதாவது உங்களுடைய வாழ்க்கையைக் குறித்த தேவனுடைய சித்தத்தை நீங்கள் கண்டுபிடிப்பீர்கள். நீங்கள் உங்களுடைய சரீரத்தை தேவனிடத்தில் ஒப்புக்கொடுத்து, உங்களுடைய மனதை புதுப்பிக்கும்படி தேவனுக்கு இடம் கொடுக்காதவரை, தேவனுடைய சித்தத்தை அதன் முழு வடிவத்தோடும், அதன் துல்லியத்தோடும் உங்களால் கண்டுபிடிக்கவே முடியாது.

ரோமர் **8**-ம் அதிகாரத்தை ஒரு கணம் நாம் பார்ப்போம்:

> *அன்றியும், மாம்சத்தின்படி நடக்கிறவர்கள் மாம்சத்துக்குரியவைகளை சிந்திக்கிறார்கள், ஆவியின்படி நடக்கிறவர்கள் ஆவிக்குரியவைகளைச் சிந்திக்கிறார்கள். மாம்ச சிந்தை மரணம்; ஆவியின் சிந்தையோ ஜீவனும், சமாதானமுமாம். எப்படியென்றால், மாம்ச சிந்தை தேவனுக்கு விரோதமான பகை. அது தேவனுடைய நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்படியாமலும், கீழ்ப்படியக் கூடாமலும் இருக்கிறது.*
>
> *ரோமர் 8:5 - 7*

மாம்ச சிந்தை என்பது, ஆதாமின் வழிவந்த விழுந்துபோன சந்ததியாராய் இயற்கையாய் நாம் எல்லோரும் சிந்திக்கும் விதமாய் இருக்கிறது. நம்மை குறித்தும், மற்ற எல்லாவற்றைக் குறித்தும் நம்முடைய புதுப்பிக்கப்படாத மனதிலிருந்து சிந்திக்கும் விதமாய் இது இருக்கிறது. இவ்விதமான மாம்ச சிந்தை தேவனுக்கு விரோதமான பகையாய் இருக்கிறது. தேவன் தம்முடைய இரகசியங்களை தம்முடைய பகைஞருக்கு வெளிப்படுத்தமாட்டார். ஆகையால் உங்களுடைய வாழ்க்கைக்கான தம்முடைய திட்டத்தை, தேவன் உங்களுடைய மாம்ச சிந்தை நிறைந்த மனதிற்கு வெளிப்படுத்தமாட்டார். ஆனால் உங்களுடைய மனம், தேவனுடைய இரக்கத்தின் மூலம், பரிசுத்த ஆவியானவரால் புதிதாக்கப்படும் போது, நீங்கள் உங்களுக்கான தேவனுடைய சித்தத்தை கண்டுப்பிடிக்க ஆரம்பிப்பீர்கள்.

தேவனுடைய சித்தம் மூன்று கட்டங்களில் வருகிறது என்பதை ரோமர் 12:2-ம் வசனம் நமக்குக் காண்பிக்கிறது: *நன்மை, பிரியம், பரிபூரணம்.* படிப்படியாக வெளிப்படும் தேவனுடைய சித்தத்தில் நீங்கள் தொடர்ந்து முன்னேறிச் செல்லச் செல்ல, அது மேலும் மேலும் சிறந்ததாக மாறிக் கொண்டே போகிறது.

தேவனுடைய விருப்பம் *நன்மையானது* என்பது நீங்கள் உணர வேண்டிய முதலாவது விஷயமாக இருக்கிறது. தேவன் தம்முடைய பிள்ளைகளுக்கு தீமையானது நடக்க வேண்டும் என்று ஒருபோதும் விரும்ப மாட்டார். நீங்கள் உங்களுடைய வாழ்க்கையை தேவனுக்கு ஒப்புக் கொடுத்தால், அதன் நிமித்தம் நீங்கள் நிறைய இழக்கப் போகிறீர்கள், பயங்கரமான காரியங்கள் உங்களுக்கு சம்பவிக்கும், நீங்கள் பெரிய தியாகங்கள் செய்ய வேண்டியதாயிருக்கும், நீங்கள் வாழ்க்கையை ஒருபோதும் சந்தோஷமாக அனுபவிக்க மாட்டீர்கள் என்றெல்லாம் உங்களை நம்ப வைக்கும்படி பிசாசு முயற்சிப்பான். ஆனால் அதில் எந்த உண்மையும் இல்லை.

1941-ம் வருடம், நான் இயேசுவை சந்தித்த அந்த இரவில், தேவனிடத்தில் நான் முழுமையாய் சரணடைந்தேன். ஒன்றை நான் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். அன்றிலிருந்து என்னுடைய வாழ்க்கை நிறைவின் மேல்

நிறைவடைந்து, வசதியின் மேல் வசதியடைந்து, மேலும் மேலும் சிறந்த நிலையை அடைந்து, இன்னும் அதிக உற்சாகத்தைக் கொடுக்கக்கூடியதாய் மாறிக் கொண்டே செல்கின்றது. எவ்வளவு நாட்கள் நான் வாழ்கிறேனோ, அவ்வளவு நாட்களும் இது நடந்து கொண்டே இருக்கும். என்னுடைய அனுபவத்திலிருந்து என்னால் இதை நிச்சயமாகச் சொல்ல முடியும். தேவனுடைய சித்தம் நன்மையானதுதான்.

அடுத்ததாக, தேவனுடைய சித்தம் *பிரியமானது* என்பதை நீங்கள் கண்டுபிடிப்பீர்கள். அதை நீங்கள் என்றென்றைக்குமாய் வேண்டாம் என்று மறுத்து விட மாட்டீர்கள். ஆனால் நீங்கள் அதை விசுவாசத்தில் தழுவிக் கொண்டாக வேண்டும். "தேவனே, நான் இதைச் செய்யும்படி நீர் அனுமதித்தீர் என்றால், பிறகு நான் உம்முடைய சித்தத்தை ஏற்றுக் கொள்வேன்," என்று நீங்கள் சொல்லிவிட முடியாது. பிறகு தேவன் சொல்வார், நீ முதலில் என்னுடைய சித்தத்தை ஏற்றுக்கொள். பிறகு நீ என்ன செய்யும்படி நான் அனுமதிப்பேன் என்பதை நான் உனக்குத் தெரியப்படுத்துவேன்.

கடைசியில், தேவனுடைய சித்தம் *பரிபூரணமானது* என்பதை நீங்கள் கண்டுபிடிப்பீர்கள். தேவனுடைய சித்தத்தின் கடைசி வெளிப்பாடு, உங்களுடைய வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியையும், ஒவ்வொரு சின்ன சின்ன விஷயத்தையும், ஒவ்வொரு சூழ்நிலையையும் உள்ளடக்கியிருக்கிறது அதிலிருந்து ஒன்றும் விடுபடவில்லை. பாருங்கள், நாம் முக்கியமற்றதென்று நினைக்கும் சில காரியங்கள் மிக மிக முக்கியமானதாயிருக்கும். தேவன் தன்னையே முக்கியமான விஷயங்களில் மட்டும் ஈடுபடுத்திக் கொள்கிறார் என்று நாம் நினைக்கிறோம் என்றால், நாம் அவரை தவற விட்டு விடுவோம்.

1963-ம் வருடம், தற்செயலாக நானும், என்னுடைய முதல் மனைவி லிடியாவும், எங்களால் தத்தெடுக்கப்பட்ட ஆப்பிரிக்க தேசத்தைச் சேர்ந்த மகள் ஜெஸிக்காவும் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் குடியேறும்படி சென்றோம். ஒருமுறை சென்று திரும்பி விடலாம் என்றுதான் நான் திட்டமிட்டிருந்தேன். ஆனால் ஒரு வருகைக்கு ஆறு மாதங்கள் என்பது மிக அதிகமான காலம் என்று குடியுரிமை அதிகாரி என்னிடம் சொன்னார். ஆகையால் நான்

அவரிடம், “எனக்கு உதவி செய்யுங்கள். நான் என்ன செய்யட்டும்?” என்று கேட்டேன்.

அதற்கு அந்த அதிகாரி சொன்னார், “சரி, வாருங்கள். நீங்கள் குடியேற உதவி செய்கிறோம்.” ஆக, இவ்வளவு பெரிய நாட்டில் நான் தற்செயலாக குடியேறினேன். ஒரு அமெரிக்க பிரஜையாக வேண்டுமென்பது ஒருபோதும் என்னுடைய நோக்கமாக இருந்ததில்லை (இருந்தாலும், ஒரு சில ஆண்டுகளுக்குப் பிறகு நான் ஒரு அமெரிக்க பிரஜையானேன்). ஆனால் அது என்னுடைய முழு வாழ்க்கையிலும் நான் எடுக்க வேண்டிய மிக முக்கியமான, வேறு எந்த மாற்று எண்ணமும் இல்லாமல் இறுதியானதாகச் செய்ய வேண்டிய ஒரு தீர்மானமாக இருந்தது. நான் பரிசுத்த ஆவியானவரால் நடத்தப்பட்டிருக்காவிட்டால், நான் அதை தவற விட்டிருப்பேன்.

இந்தத் தெளிவான வித்தியாசத்தை உங்களால் பார்க்க முடிகிறதா? சில தீர்மானங்களுக்காக நான் வியர்வை சிந்தி, ஜெபித்து, உபவாசித்திருக்கிறேன். ஆனால் அவைகளோ முடிவில் முக்கியத்துவம் இல்லாதவைகளாய் மாறி விட்டன. மற்ற தீர்மானங்கள் எளிதாக , எந்தப் பிரயாசமும் இல்லாமல் நிறைவேறியுள்ளன. ஒரு வீடு வாங்கும்படி அதை மதிப்பீடு செய்வதற்கு நான் ஒரு மணி நேரத்துக்கும் அதிகமாக ஒருபோதும் செலவிட்டதில்லை. அது எப்பொழுதுமே அப்படித்தான் நடந்திருக்கிறது. (“வீடு நன்றாக இருக்கிறது. இந்த வீட்டின் விலை என்ன? இதை நான் எடுத்துக்கொள்கிறேன்.”) நானும் என்னுடைய மனைவி ரூத்தும் பொருட்களை வாங்கும்படி கடைக்குச் செல்லும்போது, அரை மணி நேரத்தில் அந்தக் கடையிலுள்ள பாதி பொருட்களை நாங்கள் வாங்கி விடுவோம். கடைக்குச் சென்று பொருட்களை வாங்குவதில் நேரத்தைக் கழிப்பதை நாங்கள் இருவருமே விரும்புவதில்லை. ஆகையால் ஒருமுறை கடைக்குச் சென்று பொருட்களை வாங்கி விட்டோம் என்றால், அடுத்த ஆறு மாதங்களுக்கு அதைக் குறித்து சிந்திக்கவே மாட்டோம். நாங்கள் கடைக்கு செல்லுமுன், ரூத் இவ்வாறு ஜெபிப்பாள், “கர்த்தாவே, நாங்கள் சரியான கடைக்குச் செல்லும்படி எங்களுக்கு உதவி செய்யும். நாங்கள் சரியான இடத்தில் இருக்க எங்களுக்கு உதவும்.” சிறப்பு விற்பனைகள்

எங்கே நடைபெறுகிறது என்பதை அறிய நாங்கள் ஒருபோதும் தினசரி செய்தித்தாள்களை வாசித்ததில்லை. ஆனால் நாங்கள் செல்லும் கடையில் எங்களுக்கு எப்பொழுதுமே நல்ல சலுகை கிடைக்கும். அதுதான் தேவனுடைய சித்தத்திற்குள் பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலாகும்.

தாழ்மையுள்ளவர்களாயிருங்கள்

உங்களுடைய இடத்தை கண்டுபிடிப்பதில், நான்காவது படி ரோமர் 12-ம் அதிகாரத்தின் 3-வது வசனத்தில் வருகிறது:

> *"அல்லாமலும், எனக்கு அருளப்பட்ட கிருபையினாலே நான் சொல்லுகிறதாவது, உங்களில் எவனானாலும், தன்னைக் குறித்து எண்ண வேண்டியதற்கு மிஞ்சி எண்ணாமல், அவனவனுக்கு தேவன் பகிர்ந்த விசுவாச அளவின் படியே, தெளிந்த எண்ணமுள்ளவனாய் எண்ண வேண்டும்."*

இது நம்மில் அநேகருக்கு ஒரு இலேசான, எளிதான படியல்ல. என் சொந்த வார்த்தைகளில், சொல்ல வேண்டுமானால், தாழ்மையுள்ளவர்களாயும், உங்களைக் குறித்த நிஜமான முகத்தை உடையவர்களாயும் இருங்கள். உங்களைக் குறித்த நிஜமான முகத்தை உடையவர்களாய் நீங்கள் வாழ வேண்டுமென்றால், நீங்கள் தாழ்மையுள்ளவர்களாய் இருக்க வேண்டியது அவசியம் என்பதை நான் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். காரணம், உங்களைக் குறித்த உண்மைகளை நீங்கள் எதிர்கொள்ளும்போது, அவைகள் உங்களை தாழ்மைக்குள்ளாய் நடத்தும். நம்மை குறித்த உண்மையை நாம் காணக்கூடாதபடி நம்மைத் தடுக்கும் ஒரே தடை, நம் தற்பெருமை மாத்திரமே. ஒரு எடுத்துக்காட்டிற்கு, நாம் ஒரு கண்ணாடியில் நம்மைப் பார்க்கிறோம். "சாத்தியமில்லை! பார்ப்பதற்கு மெய்யாகவே நான் இப்படி இல்லை," என்று சொல்லுகிறோம். ஆனால் நாம் பார்ப்பதற்கு அப்படித்தான் இருக்கிறோம். ஆகையால் நாம் தாழ்மையாயிருக்கக் கற்றுக்கொள்ள வேண்டும்.

தெளிவாகச் சொல்ல வேண்டுமானால், தாழ்மையாக *இருப்பது*, தாழ்மையாக இருப்பதுபோல *உணர்வது* அல்ல. "தாழ்மை உணர்வோடு

இரு," என்று தேவன் சொல்லவில்லை. "தாழ்மையாயிரு" என்றுதான் அவர் சொல்கிறார். "தாழ்மையாயிருத்தல்" என்பது நீங்கள் எடுக்கக்கூடிய ஒரு தீர்மானமாய் இருக்கிறது. இயேசு இதற்கு ஒரு நல்ல உதாரணத்தை கொடுத்தார். அவர் சொன்னார், ''நீங்கள் ஒரு விருந்துக்கு அழைக்கப்படும்போது, பந்தியின் முதல் வரிசையில் உட்காராதீர்கள் என்பதுதான் என்னுடைய அறிவுரை. காரணம், உங்களைக் காட்டிலும் முக்கியமான இன்னொரு விருந்தாளி அங்கு வந்திருக்கலாம். பிறகு நீங்கள் பின் வரிசைக்குத் தள்ளப்படுவீர்கள். அது உங்களுக்கு சங்கடத்தை உண்டாக்கி விடும். ஆகையால் நீங்கள் விருந்துக்குப் போகும்போது, பின் வரிசையில் உட்காருங்கள். அங்கிருந்து நீங்கள் ஒரே ஒரு வழியில்தான் செல்ல முடியும். அது மேலே முன்னேறிச் செல்லும் வழியாகும். (லூக்கா 14:7-11 வசனங்களைப் பார்க்கவும்)

'ஜான் பன்யன்' தன்னுடைய 'மோட்சப் பிரயாணம் (Pilgrim's Progress)' என்ற புத்தகத்தில் இப்படியாக எழுதுகிறார்:

கீழே இருப்பவன் வீழ்ச்சிக்கு அஞ்ச தேவையில்லை,
தாழ்ந்திருக்கிறவன், பெருமைக்கு அஞ்ச தேவையில்லை;
தாழ்மையுள்ளவன் என்றென்றுமே,
தேவனை தன் வழிகாட்டியாக பெற்றிருக்கிறான்.

பாருங்கள், நீங்கள் தரையில் இருக்கும்போது, அதற்கும் கீழே நீங்கள் போக முடியாது.

தாழ்மையுள்ளவர்களாய் வாழ்வதில் எப்பொழுதுமே ஒரு தீர்மானம் உள்ளடங்கியிருக்கிறது. நீங்கள் எங்கே உட்காருவீர்கள், நீங்கள் எப்படி மற்றவர்களோடு தொடர்புகொள்வீர்கள் என்ற தீர்மானங்கள் இதில் அடங்கியிருக்கிறது. உங்களைக் குறித்து எண்ண வேண்டியதற்கும் மிஞ்சி உயர்வாக எண்ணாதிருங்கள் என்று பவுல் கூறுகிறார். ஒரு வேலைக்காக வங்கிக்குள் நீங்கள் நுழையும் அந்த முதல் நாளிலேயே, அந்த வங்கியின் அதிபராக மாறிவிட வேண்டும் என்று எதிர்பார்க்காதீர்கள். நீங்கள் உங்களையும், உங்களுடைய ஊழியத்தின் ஆற்றலையும் பார்க்கும்போது, ஆரம்பத்திலேயே உங்களை அப்போஸ்தலன் என்று அழைக்கத்

தொடங்காதீர்கள். கற்றுக்கொள்ளக்கூடிய, தாழ்மையுள்ள ஒரு ஊழியனாய் ஆரம்பியுங்கள். உங்களுடைய உயர்வை தேவன் பார்த்துக் கொள்வார். இயேசு சொன்னார், ''தன்னைத் தான் உயர்த்துகிறவனெவனும் தாழ்த்தப்படுவான், தன்னைத் தான் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்" **(லூக்கா14:11).** இப்பொழுது தேர்ந்தெடுப்பதென்பது உங்களுடைய கையில் இருக்கிறது.

நன்கு அறியப்பட்ட புகழ் பெற்ற பத்திரிக்கை ஒன்று நடத்தின வாக்கெடுப்பினால் என்னுடைய கவனம் ஈர்க்கப்பட்டது. உலகத்திலேயே மிகவும் பிரபலமான நபர் யார் என்ற கேள்விக்குப் பதிலாக, **11** பேர் இறுதியாக தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் என்று நான் நினைக்கிறேன். அவர்களில் ஒருவர், அமெரிக்க ஜனாதிபதி. இன்னொருவர் கல்கத்தாவின் அன்னை தெரேஸா. என்னுடைய நினைவில் இருக்கிறபடி, மற்ற எல்லோருமே கலை மற்றும் பொழுதுபோக்குத்துறையைச் சேர்ந்தவர்கள் என்று என்னால் சொல்ல முடியும். அப்பொழுது நான் எனக்குள் இவ்வாறு சிந்தித்துப் பார்த்தேன், *நாம் வாழும் இந்த சந்ததியாரிடத்தில் காணப்படும் எப்பேர்ப்பட்ட ஒரு அடையாளம் இது. உண்மைக்கும் பொழுதுப்போக்குக்கும் நம்மால் இன்னும் வித்தியாசம் காண முடியவில்லையே!* என்று நான் வருத்தப்பட்டேன். அதில் தெரிவு செய்யப்பட்ட பெரும்பாலானோரிடம் தங்களுடைய வாழ்க்கையிலிருந்து எடுத்துக் காண்பிப்பதற்கு எதுவுமில்லை. எல்லாமே வெறும் நடிப்புதான். அது மிகவும் ஆபத்தானது.

நாம் மேலே ஆகாயத்தில் பறக்கிறவர்களாய் இராமல், இந்த பூமிக்கு இறங்கி வர வேண்டும். நம்மைக் குறித்த நிஜமான முகத்தை உடையவர்களாய் நாம் இருக்க வேண்டும். உண்மைகளை நேரடியாக எதிர்கொள்ள வேண்டும். நான் அளவுக்கு மீறிய எடையுள்ளவனாய் இருக்கிறேன். இந்த உண்மையை எதிர்கொள்ளுங்கள். நான் பொய்களைச் சொல்கிறேன். இந்த உண்மையை எதிர்கொள்ளுங்கள். நான் மற்றவர்கள் மேல் பொறாமை கொள்கிறேன். இந்த உண்மையை எதிர்கொள்ளுங்கள்.

மெய்யாகவே தேவன் உங்களுக்கு உதவி செய்வதற்கு முன், அவர்

உங்களை சத்தியத்தை அறிந்து கொள்ளும் நிலைக்குக் கொண்டு வருகிறார் என்பதை எப்பொழுதாவது நீங்கள் கண்டுபிடித்திருக்கிறீர்களா? உங்களுடைய முயற்சியில் மனந்தளர்ந்து, இனியும் முடியாது என்று நீங்கள் விட்டுவிடும் அந்த நேரத்தில் தேவன் சொல்கிறார், *இப்பொழுது நான் உனக்கு உதவி செய்ய ஆயத்தமாய் இருக்கிறேன். உனக்கு மெய்யாகவே என்னுடைய கிருபை தேவை என்பதை இப்பொழுது நீ கண்டு கொண்டாய். இதற்கு முன்பு உன்னுடைய சொந்த பெலத்திலே உன்னால் கையாள முடியும் என்று நீ நினைத்தாய். உன்னால் அதைச் செய்ய முடியாது.* தாழ்மையுள்ளவர்களாய், உங்களை குறித்த உண்மையை உணர்ந்தவர்களாய் நீங்கள் வாழும்போது, நீங்கள் தேவனுடைய கிருபையையும் உதவியையும் அற்புதமாய் கண்டுபிடிக்கிறீர்கள்.

உங்களுடைய விசுவாச அளவை அடையாளம் கண்டு, அதை அங்கீகரியுங்கள்

ரோமர் **12:3**ன் இறுதிப்பகுதி சொல்கிறது, "தேவன் பகிர்ந்த விசுவாச அளவின்படியே, தெளிந்த எண்ணமுள்ளவனாய் எண்ண வேண்டும்." உங்களுக்கு முன்பாக படிப்படியாக வெளிப்படும் பாதையில் அடுத்து வரும் காரியம் இதுதான். உங்களுடைய இடத்தை நோக்கிச் செல்லும் பிரயாணத்தில் இதுதான் ஐந்தாவது படி: தேவன் உங்களுக்கு ஒரு குறிப்பிட்ட அளவு விசுவாசத்தைக் கொடுத்திருக்கிறார் என்பதை நீங்கள் கண்டுபிடிப்பதுதான் இந்தப் படியாக இருக்கிறது.

சிலர் தங்களிடத்தில் இருக்கும் விசுவாசத்தை விட மிக அதிகமான விசுவாசம் தங்களுக்கு இருப்பதாகச் சொல்லிக்கொள்வதை கேட்பதைக் காட்டிலும்விட அதிக தர்மசங்கடமான காரியம் வேறு ஒன்றும் இருக்க முடியாது. அது அவர்களை சீக்கிரத்திலோ அல்லது பின்னரோ அழிவிற்கு நேராக நடத்தி விடும். எபிரேய ஆசிரியர் சொல்கிறார், "விசுவாசமானது, நம்பப்படுகிறவைகளின் உறுதியாய் இருக்கிறது" (எபிரேயர் **11:1**). விசுவாசம் என்பது ஒரு உறுதி. அந்த உறுதி ஒன்று உங்களிடம் இருக்கலாம் அல்லது உங்களிடம் இல்லாமலிருக்கலாம். அதைக் குறித்து பேசுவதினால், அது

உங்களுக்கு கிடைத்து விடாது. “தேவனே, என்னிடத்தில் போதுமான விசுவாசம் இல்லை,” என்று நீங்கள் சொல்லலாம். அதற்கு அவர், உன்னுடைய விசுவாசத்தை நீ பெருக்கிக் கொள்ளும்படி நிறைய வழிகள் உண்டு என்று பதில் கொடுப்பார்.

நான் வட ஆப்பிரிக்காவில், பிரிட்டிஷ் ராணுவத்தில் பணியாற்றியபோது, நான் இரட்சிக்கப்பட்ட சில நாட்களுக்குள்ளேயே நிகழ்ந்த ஒரு சம்பவத்தை நினைத்துப் பார்க்கிறேன். மருத்துவர்களால் குணமாக்க முடியாத ஒரு நோயின் காரணமாக ஒரு வருடம் முழுவதும் ஒரு மருத்துவமனையில் செலவழித்தேன். அந்த நிலையில் நான் எனக்குள் இவ்வாறு சொல்லிக் கொள்வேன், *“என்னிடத்தில் விசுவாசமிருந்தால் தேவன் என்னை குணமாக்குவார் என்பது எனக்குத் தெரியும்.”* எப்பொழுதுமே நான் சொல்லும் அடுத்த காரியம் இதுதான்: *“ஆனால் எனக்கோ விசுவாசமில்லை.”* அதை நான் சொல்லும்போதெல்லாம், “மனச்சோர்வின் சகதி நிலம்” என்று ஜான் பன்யன் அழைக்கும் நம்பிக்கையின்மையின் பள்ளத்தாக்கில் இருந்தேன்.

ஒரு நாள், ஒரு பிரகாசமான ஒளிக்கதிர் அவ்விருளின் பள்ளத்தாக்கை ஊடுருவியது. அது என்ன தெரியுமா? “ஆதலால், விசுவாசம் கேள்வியினாலே *வரும்*, கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்” (ரோமர் 10:17). விசுவாசம் இல்லாதிருந்தால் அதை நீங்கள் பெறமுடியும்! அது வரும். எப்படி? தேவனுடைய வசனத்தை கேட்பதினாலே விசுவாசம் வரும். வீண் பெருமைகளைப் பேசுவதினால் அல்ல. ஆவிக்குரிய மிகைப் படுத்தப்பட்ட பேச்சாலும் அல்ல.

சில வருடங்களுக்கு முன் டென்மார்க் நாட்டின் கோபென்ஹேகன் நகரிலுள்ள ஒரு சபையில் நான் ஜெபத்திற்காக, சிலரை முன்னே வரும்படி அழைத்தேன். அவர்கள் வியாதிப்பட்டிருந்த படியால் அவர்களுக்கு எண்ணெய் பூசி ஜெபிக்க இருந்தேன். அவர்களில் ஒருவரிடம், “உங்களுக்கு விசுவாசம் இருக்கிறதா?” என்று கேட்டேன்.

“உலகத்திலிருக்கிற எல்லா விசுவாசமும் என்னிடத்தில் இருக்கிறது,”

என்று அவர் பதில் கூறினார்.

உலகத்திலிருக்கிற எல்லா விசுவாசமும் உங்களிடம் இருந்தால், பிறகு நீங்கள் ஏன் வியாதியாய் இருக்கிறீர்கள்? என்றுதான் நான் உடனடியாக நினைத்தேன். அவர் சுகம் பெற மாட்டார் என்று எனக்கு தெரியும். எனக்கு அது நிச்சயமாகத் தெரியும். அது போலவே, நாங்கள் ஜெபித்தபோது, ஒன்றும் நடக்கவில்லை. அவரிடத்தில் விசுவாசத்தைக் குறித்த மூளை அறிவு இருந்தது. ஆனால் அதன் உறுதியும், நிச்சயமும் அவருக்குள் ஒரு வெளிப்பாடாக இல்லை. அவரிடம் வெறும் பேச்சுதான் இருந்தது. ஆனால் அவரிடம் நிஜம் இல்லை.

உங்களிடத்தில் கடுகளவு விசுவாசம் இருந்தால், உங்களால் மலையையே பெயர்க்க முடியும் என்று இயேசு கூறினார் (மத்தேயு 17:20-ஐ பாருங்கள்). உங்களிடத்தில் எவ்வளவு அளவு விசுவாசம் இருக்கிறது என்பது முக்கியமல்ல. உங்களுடைய விசுவாசத்தின் தரம்தான் இங்கு முக்கியம். தாழ்மையும், தங்களைக் குறித்து உண்மையும் உள்ளவர்களுக்கு விசுவாசம் கொடுக்கப்படுகிறது.

உங்களுடைய விசுவாசம் உங்களுடைய இடத்தோடு பொருந்துகிறது என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்

தேவன் ஏன் உங்களுக்கு ஒரு குறிப்பிட்ட அளவு விசுவாசத்தை தருகிறார்? உங்களுடைய முன்னேற்றப் பாதையின் ஆறாவது படி இதோ: கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் உங்களுக்கென்று ஒரு குறிப்பிட்ட இடத்தை அவர் வைத்திருக்கிறார். உங்களுக்கென்று குறிக்கப்பட்ட இடத்துக்கு ஏற்ப, அவர் உங்களுக்குக் கொடுத்திருக்கிற விசுவாசம் வடிவமைக்கப்பட்டிருக்கிறது. நீங்கள் கையாக இருக்க வேண்டும் என்று தேவன் விரும்பினால், கைக்குரிய விசுவாசத்தை அவர் உங்களுக்குக் கொடுப்பார். நீங்கள் காதாக இருக்க வேண்டும் என்று அவர் விரும்பினால், காதுக்குரிய விசுவாசத்தை அவர் உங்களுக்குக் கொடுப்பார். நீங்கள் கால் விரலாக இருக்க வேண்டும் என்று அவர் விரும்பினால், கால் விரலுக்குரிய விசுவாசத்தை அவர் உங்களுக்குக் கொடுப்பார்.

ஆக, பாருங்கள், நீங்கள் கால் விரலாக இருக்கிறீர்கள். ஆனால் ஒரு மூக்கைப் போல செயல்பட விரும்புகிறீர்கள் என்றால், அங்கே கட்டுப்பாடே இல்லாமல் போய் விடும். நீங்கள் என்ன செய்ய முயற்சிக்கிறீர்களோ அதற்கும், உங்களிடத்தில் இருக்கும் விசுவாசத்திற்கும் இடையே முற்றிலும் முரண்பட்ட ஒரு நிலைதான் காணப்படும். உங்களிடத்தில் போதுமான விசுவாசம் இல்லை என்பது அதற்குக் காரணமல்ல. நீங்கள் உங்களுடைய விசுவாசத்தை, அது கொடுக்கப்படாத ஒரு நோக்கத்திற்காக பயன்படுத்தும்படி நீங்கள் முயற்சித்துக் கொண்டிருக்கிறீர்கள் என்பதே அதற்குக் காரணமாய் இருக்கிறது. கிறிஸ்துவினுடைய சரீரத்தில் உங்களுடைய இடத்திற்கும், வேலைக்கும் ஏற்ற விசுவாசம் உங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

என்னுடைய கை, ஒரு கையாய் தன்னுடைய வேலையை திறம்பட செய்கிறது. அது என்னுடைய வேதாகமத்தை திறக்கிறது, அதன் பக்கங்களை திருப்புகிறது. நான் அதனிடம் செய்யச் சொல்வதையெல்லாம், கூடுதலாகவோ அல்லது குறைவாகவோ அது செய்து விடுகிறது. ஆனால் அதே வேலைகளை என்னுடைய கால்களால் நான் செய்ய முயன்றால், நான் பிரச்சனைக்குள் சிக்கிக் கொள்வேன்.

கிறிஸ்தவர்கள் தொடர்ச்சியாக விசுவாசத்துக்காக போராடுகிறார்கள் என்றால், அவர்கள் செய்யத் தேவையில்லாத ஒரு வேலையைச் செய்யும்படி முயற்சித்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற ஒரு முடிவுக்கு நீங்கள் எப்பொழுதும் வரலாம். அவர்கள் ஒரு கையாக இருந்து கொண்டு, ஒரு காலாக செயல்படும்படி முயற்சிக்கிறார்கள் அல்லது ஒரு காலாக இருந்து கொண்டு, ஒரு கையாக செயல்படும்படி முயற்சிக்கிறார்கள். இது உங்களுடைய இடத்திற்கு நேராக உங்களை வழிநடத்தும்படி தேவனுடைய வழிமுறையாக இருக்கின்றது. உங்களுக்கென்று தேவன் வைத்திருக்கும் இடத்திற்கு உங்களுடைய விசுவாசம் பொருந்தும்போது, நீங்கள் ஒருபோதும் அங்கே போராடிக் கொண்டிருக்க மாட்டீர்கள்.

நம்மில் ஒருவரும், தன்னில்தானே போதுமானவர்களல்ல என்பதை நாம்

நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். நம்மில் ஒவ்வொருவரும் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஒரு உறுப்பாக இருக்கிறோம். நாம் ஒருவர் மற்றவருக்கு ஏற்ற உறுப்புகளாகவும் இருக்கிறோம். நீங்கள் ஒரு விரலாக இருந்தால், நீங்கள் எந்தக் கையுடன் இணைக்கப்பட வேண்டும் என்பதை கண்டுபிடிக்க வேண்டும். வெளியே ஒரு தனி விரலாக உங்களால் இருக்க முடியாது. நீங்கள் ஒரு கையாக இருந்தால், நீங்கள் ஒரு கரத்துடன் இணைக்கப்பட்டாக வேண்டும்.

தனித்தன்மையின் மிகுதியே பல கிறிஸ்தவர்களின் பெரிய பிரச்சனைகளில் ஒன்றாக இருக்கிறது. எபிரெயர் நிருபத்தில் ஒரு போதனைத் தொடரை நான் போதித்திருக்கிறேன். அதில் "நாம் செய்யக் கடவோம்" என்ற வார்த்தைகளோடு 12 பகுதிகள் இருக்கின்றன. எபிரேயர் நிருபம், 12 முறை "நாம் செய்யக் கடவோம்" என்று கூறுகிறது. அது "நான் செய்யக் கடவேன்" என்று சொல்லவில்லை. "நாம் செய்யக் கடவோம்" என்றுதான் அது சொல்கிறது. இது ஒரு கூட்டுத் தீர்மானம், இது ஒரு கூட்டுச் செயல். நம்முடைய சொந்த பெலத்திலே நாம் ஒருபோதும் சாதிக்க முடியாத காரியங்கள் பல உள்ளன. கிறிஸ்துவினுடைய சரீரத்தில் நம்முடைய இடத்தை கண்டுபிடிக்க வேண்டும்.

உங்களுடைய இடம், உங்களுடைய வரங்களை எப்படி தீர்மானிக்கிறது என்று கற்றுக்கொள்ளுங்கள்

இப்பொழுது நாம் கடைசி படிக்கு வருகிறோம். இது பெரும்பாலான கிறிஸ்தவர்களை உற்சாகப்படுத்தும் ஒரு சத்தியமாக இருக்கிறது. காரணம், இது வரங்களோடு சம்பந்தப்பட்டது. ரோமர் 12-ல் தொடர்ந்து வாசிப்போம்.

> *ஏனெனில் நமக்கு ஒரே சரீரத்திலே அநேக அவயவங்களிருந்தும், எல்லா அவயவங்களுக்கும் ஒரே தொழில் இராதது போல. அநேகராகிய நாமும் கிறிஸ்துவுக்குள் ஒரே சரீரமாயிருக்க, ஒருவருக்கொருவர் அவயவங்களாயிருக்கிறோம். நமக்கு அருளப்பட்ட கிருபையின் படியே நாம் வெவ்வேறான வரங்களுள்ளவர்களான*

படியினாலே (நாம் அவைகளைப் பயன்படுத்துவோம்)
ரோமர் 12:4-6

நாம் அவைகளைப் பயன்படுத்துவோம் என்ற வார்த்தைகள் மிக முக்கியமானவை. வாழ்க்கையோடு தொடர்புபடுத்தாமல், சூழ்நிலைகளோடு சம்பந்தப்படுத்தாமல் வரங்களை நாடித் தேடுவதென்பது மதியீனமானதும், மாயையானதுமாய் இருக்கிறது. நமக்கு என்ன தேவையென்பதை நாம் மிகவும் குறிப்பாக அறிந்திருக்க வேண்டும்.

உங்களுக்கு அவசியமான வரங்கள் என்ன என்பது உங்களுக்கு எப்படி தெரியும்? இந்த கேள்விக்கான விடையைத் தீர்மானிப்பது எது? சரீரத்தில் எது உங்களுடைய இடம் என்பதுதான் அதைத் தீர்மானிக்கிறது. நீங்கள் ஒரு கையானால், உங்களுக்கு கைக்குரிய வரங்கள் தேவை. நீங்கள் ஒரு கண்ணாயிருந்தால், உங்களுக்கு கண்ணுக்குரிய வரங்கள் தேவை. நீங்கள் ஒரு காலாக இருந்தால், உங்களுக்கு காலுக்குரிய வரங்கள் தேவை. (வரங்களைக் குறித்த அடுத்த இரண்டு அத்தியாயங்களில், நமக்கு கிடைக்கும்படி இருக்கிற பல்வேறு வரங்களைப் பற்றி நாம் இன்னும் விரிவாகப் பார்ப்போம்.)

பல வருடங்களுக்கு முன், தேவன் என்னை ஜனங்களுக்குள்ளிருந்து பிசாசுகளை வெளியே துரத்தும் ஊழியத்திற்குள் கட்டாயப்படுத்தி, என்னுடைய விருப்பத்திற்கு எதிராக நடத்தினார். இதற்காக நான் ஜெபித்ததுமில்லை. அந்த ஊழியம் சிலரிடத்தில் எனக்கு கெட்ட பெயர் வாங்கித் தந்தது, என்னை அவர்களுக்குப் பிரியமில்லாதவனாக்கியது. அதே ஊழியம் என்னை பலருக்குப் பிடித்தவனாகவும், அவர்கள் மத்தியில் பிரபலமானவனாகவும் மாற்றினது. இதில் விசித்திரமாக நடந்தது என்னவென்றால், அதுவரை நான் யாரிடத்தில் மிகவும் நெருங்கிப் பழகி வந்தேனோ, அவர்களுக்கு நான் பிடிக்காதவனாய் ஆனேன். அதே சமயம் இவர்கள் என்னை ஒருபோதும் நேசிக்க மாட்டார்கள் என்று நான் யாரை நினைத்தேனோ அவர்களுக்கு நான் பிரியமானவனானேன். இது வழக்கத்திற்கு மாறாக நடக்கின்ற ஒன்றாக இருந்தது. ஆனால் நான் இந்த ஊழியத்தில் செயல்பட ஆரம்பித்தபோதுதான், தேவன் எனக்குக்

கொடுத்திருக்கிற வரங்களை நான் கண்டுபிடித்தேன்.

ஒரு சம்பவம் என் நினைவுக்கு வருகிறது. என்னுடைய நண்பர் ஒருவர் தன்னுடைய சகோதரியை லிடியாவிடமும், என்னிடமும் கூட்டிக் கொண்டு வந்து, "இவளுக்கு விடுதலை தேவை," என்று சொன்னார். நான் அந்தப் பெண்ணை பார்த்து, ''உனக்கு _______________ பொல்லாத ஆவிகளிலிருந்து விடுதலை தேவையென்று," என்று சொல்லி, எட்டு பொல்லாத ஆவிகளின் பெயரை சொன்னேன். *இது எப்படி எனக்கு தெரியும்?* என்று பிறகு நான் என்னையே கேட்டுக் கொண்டேன். தேவன் எனக்கு ஒரு அறிவை உணர்த்தும் வசனத்தை கொடுத்தார் என்பதை பிறகுதான் நான் உணர்ந்தேன். திடீரென்று அவர் எனக்கு அந்த வரத்தைக் கொடுத்து விடவில்லை. நான் அவருடைய சித்தத்தில் இருந்தபோது, அவர் அழைத்த ஊழியத்தில் செயல்படும் போதுதான் அவர் அதை எனக்குக் கொடுத்தார்.

ஆக, இது உங்களுக்கும் அப்படித்தான். தேவன் உங்களை அழைத்த அழைப்பிற்கு தேவையான வரங்களைக் நிச்சயம் கொடுப்பார் என்று நீங்கள் உறுதியாக நம்பலாம். ஆனால் வரங்களை உங்கள் வேலையிலிருந்து தனியாகப் பிரிக்காதீர்கள்.

உங்களுடைய வரங்களை பயன்படுத்துதல்

தேவன் உங்களுக்காக ஒரு இடத்தை வைத்திருக்கிறார் என்பதையும், அந்த இடத்தை சென்றடையும் வழியில் அதில் செயல்படும்படி அவர் உங்களை ஆயத்தப்படுத்துகிறார் என்பதையும் இதுவரை நாம் கற்றுக்கொண்டோம்.

ஒருவேளை, உங்களுடைய இறுதியான இடத்தை நீங்கள் இப்பொழுதே கண்டுபிடித்து விடாமல் இருக்கலாம். ஆனால் நீங்கள் படிப்படியாக அதை நோக்கிச் செல்வீர்கள். ஆனால் நீங்கள் மேலும் மேலும் முன்னே செல்லச் செல்ல, எதைச் செய்யும்படி நீங்கள் அழைக்கப்பட்டீர்களோ அதற்கும், நீங்கள் என்ன செய்து கொண்டிருக்கிறீர்களோ அதற்கும் இடையேயான ஒத்திசைவு அதிகமாகிக் கொண்டே இருக்கும்.

நீங்கள் உங்களுடைய இடத்தை கண்டுபிடிக்கும்போது, உங்களுடைய வரங்களை நீங்கள் பயன்படுத்த ஆரம்பிப்பீர்கள். உங்களுடைய இடத்தை முதலில் கண்டுபிடிக்காமல், உங்களால் வரங்களை பயன்படுத்த முடியாது என்று நான் சொல்லவில்லை. ஆனால் நீங்கள் உங்களுடைய இடத்தில் இருந்து செயல்படும்போதுதான், உங்களுடைய வரங்கள் தேவனுடைய நோக்கத்தை முழுமையாக நிறைவேற்றி முடிக்கும் என்பதை என்னால் உறுதியாகச் சொல்ல முடியும். நம்முடைய குறிப்பிட்ட அழைப்பில் நாம் செயல்படும்படி நமக்கு உதவும் வரங்களைக் குறித்து நாம் தொடர்ந்து பார்க்கலாம்!

4

வரங்கள்

உங்களுக்கு தேவையான கருவிகள்

நமக்கு அருளப்பட்ட கிருபையின்(charis - காரிஸ்)படியே, நாம் வெவ்வேறான வரங்களுள்ளவர்களான(charismata - கரிஸ்மாட்டா)படியினாலே, நாம் அவைகளை பயன்படுத்தக் கடவோம்.

ரோமர் 12:6

தேவன் பேச்சோடு நின்று விடுவதில்லை, அவர் அதைச் செயல்படுத்திப் பார்க்கிறவராக இருக்கிறார். நீங்கள் செயல்படுவதற்கு சரியாக ஆயத்தபடாத ஓர் இடத்தில் அவர் உங்களை வைக்க மாட்டார். போர்க்கவசம் மற்றும் ஆயுதங்கள் மற்றும் அவைகளை பயன்படுத்துவதற்கு தேவைப்படும் பயிற்சியை உங்களுக்குக் கொடுக்காமல், அவர் உங்களை ராஜ்யத்தின் யுத்தத்திற்கு அனுப்பமாட்டார். உங்களுக்குத் தேவையான எல்லா கருவிகளையும் கொடுக்காமல், அவர் உங்களுக்கு ஒரு வேலையை தர மாட்டார்.

அந்த கருவிகள்தான் கிருபையின் வரங்களாகும்(charismata - காரிஸ்மாட்டா). என் நண்பர் பாப் மம்ஃபோர்ட் சொன்னார், "ஆவிக்குரிய வரங்களை கருவிகளாக பயன்படுத்த வேண்டும். அவைகளை விளையாட்டுப் பொம்மைகள்போல வைத்து விளையாடி விடக்கூடாது. இதை நாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்." அநேகக் கிறிஸ்தவர்கள்

அவற்றை விளையாட்டு பொம்மைகளைப் போல பயன்படுத்துகின்றனர். இது வரங்களை தவறான முறையில், தவறான நோக்கத்தில் பயன்படுத்துவதாகும். மற்ற அநேக கிறிஸ்தவர்கள் தேவனுடைய வேலையைச் செய்ய விரும்புகிறார்கள். ஆனால் அவர்களிடம் கருவிகள்தான் இல்லை. இவ்விரண்டையும் இணைக்க வேண்டியவர்களாய் நாம் இருக்கிறோம். அதாவது, நாம் தேவனுடைய வேலையைச் செய்ய விரும்புகிறவர்களாய் மாத்திரம் இருந்துவிடாது, அந்த வேலையைச் செய்ய தேவைப்படும் கருவிகளை உடையவர்களாய், அவைகளை பயன்படுத்துகிறவர்களாயும் நாம் இருக்க வேண்டும். உண்மையில், சபையில் காணப்படும் ஒரு பெரிய பிரச்சனை இதுதான்: இன்றைக்கு பல கிறிஸ்தவர்கள் தங்களுக்கு தேவன் தந்த வேலையை உத்தமத்தோடும், நல்மனச்சாட்சியோடும், ஆனால் சரியான கருவிகள் இல்லாமல் செய்யும்படி முயற்சிப்பதேயாகும். இதன் விளைவாக, அவர்கள் எதைச் செய்யும்படி அழைக்கப்பட்டிருக்கிறார்களோ, அவர்களால் அதை நிறைவேற்ற முடியாமல் போய் விடுகிறது. இந்த அத்தியாயத்திலும், அடுத்த அத்தியாயத்திலும், குறிப்பாக உங்களுக்கு அருளப்பட்டிருக்கிற வரத்தைக் குறித்து நீங்கள் அறிந்து கொள்ளும்படி, தேவனுடைய அழைப்பை குறித்த உங்களுடைய பார்வையை விரிவுப்படுத்த உங்களுக்கு உதவும்படி நான் விரும்புகிறேன்.

கரிஸ்மா என்ற வார்த்தையின் மூலப்பதம்

ஒன்பது வித்தியாசமான கிரேக்க வார்த்தைகள், இவை எல்லாம் *'வரம்'* என்ற அர்த்தமுடைய ஆங்கில வார்த்தையாகிய *கிப்ட்(Gift)* என்ற வார்த்தையினால் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இதனால், வேதாகமத்தின் சில மொழிபெயர்ப்புகளில், இது எதை குறிக்கின்றது என்பதை புரிந்து கொள்வது கடினமாக இருக்கிறது.

இப்பொழுது நாம் இந்த ஒன்பது வார்த்தைகளில் ஒன்றின் மீது மட்டும் முக்கியமான கவனத்தைச் செலுத்தப் போகிறோம். அது *கரிஸ்மா* என்ற வார்த்தையாகும். *கரிஸ்மா* என்ற வார்த்தையிலிருந்து, பலராலும் நன்கு அறியப்பட்ட *கரிஸ்மேட்டிக்*(Charismatic) என்ற வார்த்தை வருகிறது. இது

அதிகமாக தவறான விதத்தில் பயன்படுத்தப்படுகிற ஒரு வார்த்தையாகும். *கரிஸ்மா* மற்றும் *கரிஸ்மேட்டிக்* என்ற இரண்டு வார்த்தைகளும் அடிப்படையில் *கரிஸ்* என்ற ஒரு மூல வார்த்தையிலிருந்து வருகின்றன. புதிய ஏற்பாட்டில், இது 'கிருபை' என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. வேதாகமத்திற்கு வெளியே இந்த கிரேக்க வார்த்தையை பயன்படுத்தும்போது, இது வழக்கமாக, ''அழகு'' அல்லது, ''நேர்த்தியானது'' என்று மொழிபெயர்க்கப்படுகிறது. இந்த பொதுவான மொழிப்பெயர்ப்பு, நமக்கு வெளிச்சத்தைக் கொடுப்பதாகத்தான் நான் நினைக்கிறேன். தேவன் நம்மை அழகானவர்களாக, நேர்த்தியானவர்களாகக் காண்கிறார். காரணம், நாம் கிறிஸ்துவுக்குள் இருக்கிறோம்.

நான் ஃப்ளோரிடா நகரில் வசித்தபோது, ஒருநாள் சூரிய வெளிச்சம் நிறைந்த அந்த அழகான சூழலில், நான் சூரியனை குறித்து யோசித்துக் கொண்டிருந்தேன். அப்பொழுது எனக்குள் இந்த சிந்தனை வந்தது: சூரியன் ஒருபோதும் நிழல்களைக் காண்பதில்லை. காரணம், நிழல்கள் சூரிய வெளிச்சம் படுகிற பொருட்களின் அந்தப்பக்கத்தில்தான் எப்பொழுதும் விழுகின்றன. தேவனைக் குறித்தும் இப்படித்தான் நான் புரிந்துகொள்கிறேன். அவர் நிழல்களைப் பார்ப்பதில்லை. அவர் தம்முடைய கிருபையின் வெளிச்சத்தை நம்மீது பிரகாசிக்கச் செய்கிறார். அதினால் நாமும் பிரகாசிக்கிறோம்.

கிருபையைப் பற்றி நாம் புரிந்து கொள்ள வேண்டிய ஒரு அடிப்படை சத்தியம் என்னவென்றால், அதை நம்மால் சம்பாதித்து விட முடியாது. சம்பாதிக்கப்பட கூடிய எதுவும் கிருபை அல்ல. ஆனாலும் அநேகர் அதை சம்பாதிக்க முயற்சிக்கின்றார்கள். அவர்கள் நல்மனசாட்சியுள்ளவர்கள். அவர்கள் சபைக்குச் செல்கிறார்கள். அவர்கள் தங்களுடைய ஜெபங்களைச் சொல்கிறார்கள். அவர்கள் தங்களுடைய வேதாகமத்தை வாசிக்கிறார்கள். ஆனால் அவர்கள் ஒருபோதும் தேவனுடைய கிருபையை ருசி பார்த்ததில்லை. காரணம், தாங்கள் அதற்கு நல்லவர்களாக இருக்க வேண்டும் என்றுதான் அவர்கள் எப்பொழுதுமே உணருகிறார்கள்.

பிரச்சினை என்னவென்றால், நீங்கள் ஒருபோதும் போதுமான அளவிற்கு நல்லவர்களாக இருக்க முடியாது. அதனால்தான் பொதுவாகச் சொன்னோமென்றால், பயங்கர பாவிகளாயிருந்து மனந்திரும்பின புது விசுவாசிகள், பாரம்பரிய விசுவாசிகளை விட தேவனுடைய கிருபையை நன்றாக, சீக்கிரமாகப் புரிந்துகொள்ளுகிறார்கள். தாங்கள் அதை சம்பாதிக்கவில்லை என்றும், தங்களால் அதை ஒருபோதும் சம்பாதிக்க முடியாதென்றும் அவர்கள் அறிந்திருக்கிறார்கள். ஆகையால் அவர்கள் அதை அப்படியே ஏற்றுக்கொள்ளுகிறார்கள். ஆனால் மறுபக்கத்தில், “நல்ல” மக்கள், தேவனுடைய கிருபையைப் பெறுவதற்கு தங்களுடைய வழிமுறையான நல்லவர்களாக இருப்பதை நிறுத்துவது கடினம் என்று உணருகிறார்கள்.

இது பெருமளவில் உங்களுடைய பின்னணியை சார்ந்திருக்கிறது. உங்களுடைய கடமையை வலியுறுத்துகிற, ஒரு சமூக அமைப்பில் நீங்கள் வளர்க்கப்பட்டிருந்தால், பிறகு தேவன் வரங்களை இலவசமாகக் கொடுக்கிறார் என்பதை புரிந்து கொள்வது உங்களுக்கு கடினமாக இருக்கலாம். தேவனுடைய கிருபையைக் குறித்த ஆச்சரியமான ஒரு விஷயம் என்னவென்றால், அவர் ஒருவருக்கும் அதைக் குறித்து கணக்கு கொடுக்க வேண்டிய அவசியமில்லை. யோபு 33:13-ம் வசனம் சொல்கிறது, ‘‘அவர் தம்முடைய செயல்கள் எல்லாவற்றைக் குறித்துக் காரணம் சொல்லவில்லை.” தேவனுடைய நியாயத்தீர்ப்பில், அவருடைய வார்த்தையின் ஒவ்வொரு புள்ளியும், ஒவ்வொரு எழுத்தும் அப்படியே அவர் சொன்ன பிரகாரமாகவே நிறைவேறும். ஆனால் அவருடைய கிருபை இலவசமானது. ஆஹா, தேவனுடைய கிருபையின் சுதந்திரம் எவ்வளவு அழகானது!

உங்களுடைய வரங்களை கண்டறிதல்

இப்பொழுது நாம் இதை இன்னும் ஒரு படி முன்னே எடுத்துச் செல்வோம். *மா* (ma) என்ற எழுத்தை *கரிஸ்* என்ற வார்த்தையுடன் இணைத்தால், *கிருபை* என்ற பொதுவான அர்த்தம் உள்ள அந்த வார்த்தை, ஏதோ ஒன்றை குறிப்பிடுகிற ஒரு வார்த்தையாய் மாறி விடுகிறது. ஆகையால் *கரிஸ்மா* என்பது, கிருபையின் குறிப்பிட்ட வெளிப்பாடு அல்லது செயல்பாடு,

அல்லது பகிர்ந்தளிப்பாய் இருக்கிறது. *டா* (ta) என்ற எழுத்தை கடைசியில் சேர்த்தால், அந்த கிரேக்க பெயர்ச்சொல் பன்மையாக மாறி விடுகிறது: *கரிஸ்மாட்டா* (Charismata). ஆகையால் நாம் பார்க்கிறோம்:

கரிஸ் = கிருபை

கரிஸ்மா = கிருபையின் குறிப்பிட்ட வெளிப்பாடு

கரிஸ்மாட்டா = கிருபையின் பல்வேறு வெளிப்பாடுகள்.

வரங்கள் பற்றிய இந்த போதனையின் நோக்கம், தேவனுடைய ராஜ்யத்தில் உங்களுடைய அழைப்பையும், உங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற வேலையையும் குறித்த உங்களுடைய பார்வையை விரிவடைய செய்வதே ஆகும். ஒருவேளை உங்களிடத்தில் ஏற்கனவே கிருபையின் ஒரு வெளிப்பாடு (கரிஸ்மா) இருக்கிறது என்பதை நீங்கள் பார்க்கும்படி இது உதவி செய்யலாம். ஆனால் அது இருக்கிறது என்பதை நீங்கள் இன்னும் அடையாளம் காணாமல் இருந்திருக்கலாம். கிருபையின் மிகவும் முக்கியமான பல்வேறு வெளிப்பாடுகளில் (*கரிஸ்மாட்டா*) சில, கவனத்தை ஈர்க்காதவைகளாக இருக்கின்றன. ஆனால் நாம் நம் கவனத்தை ஈர்க்கக்கூடிய விஷயங்களில்தான் கவனம் செலுத்துகிறோம். ஆனால் என்னை நம்புங்கள், நம் கவனத்தை ஈர்க்காத சில விஷயங்களும் சமமான அளவில் மிக முக்கியமானவைகளாகத்தான் இருக்கின்றன.

புதிய ஏற்பாடு, அநேக *கரிஸ்மாட்டா*க்களை நமக்குக் கொடுக்கிறது. நான் அவற்றை நான்கு வெவ்வேறான தலைப்புகளின் கீழ் கொண்டு வந்துள்ளேன்: *அடிப்படையான வரங்கள், தனிநபர்க்குரிய வரங்கள், ஆவிக்குரிய வரங்கள்* மற்றும் *ஊழியத்திற்குரிய வரங்கள்*. இவற்றில் பல வரங்கள் வேதாகமத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட இடங்களில் சொல்லப்பட்டுள்ளன. உண்மையில், நீங்களும் தனிப்பட்ட விதத்தில் இவைகளை வகைப்படுத்தும்படி விரும்பலாம். இந்த அத்தியாயத்தில், முதல் மூன்று தலைப்புகளின் கீழுள்ள வரங்களை நாம் ஆராய்வோம். அடுத்த அத்தியாயத்தில் ஊழியத்திற்குரிய வரங்களைப் பற்றி நாம் பார்ப்போம்.

அடிப்படையான வரம் (கரிஸ்மாட்டா)

- தேவ நீதி (ரோமர் 5:17)
- நித்திய ஜீவன் (ரோமர் 6:23)

தனிநபர்க்குரிய வரம் (கரிஸ்மாட்டா)

- திருமணம் செய்யாதிருப்பது (1 கொரி. 7:7)

ஆவிக்குரிய வரம் (கரிஸ்மாட்டா)

வெளிப்பாட்டின் வரங்கள்

- அறிவை உணர்த்தும் வசனம் (1 கொரி. 12:8)
- ஞானத்தை போதிக்கும் வசனம் (1 கொரி. 12:8)
- ஆவிகளை பகுத்தறியும் வரம் (1 கொரி. 12:10)

வல்லமையின் வரங்கள்

- விசுவாசம் (1 கொரி. 12:9)
- அற்புதங்களை செய்யும் வரம் (1 கொரி. 12:10,28)
- குணமாக்கும் வரம் (1 கொரி. 12:9,28)

குரலை பயன்படுத்தும் வரங்கள்

- பற்பல பாஷைகளைப் பேசுதல் (1 கொரி. 12:10,28)
- பாஷைகளை வியாக்கியானம் செய்தல் (1 கொரி. 12:10,30)
- தீர்க்கதரிசனம் (1 கொரி. 12:6)

ஊழியத்திற்குரிய கரிஸ்மாட்டா

தனிநபர்கள்

- அப்போஸ்தலர்கள் (எபேசியர் 4:13; 1 கொரி. 12:28)
- தீர்க்கதரிசிகள் (எபேசியர் 4:13, 1 கொரி. 12:28)
- சுவிசேஷகர்கள் (எபேசியர் 4:13)

- மேய்ப்பர்கள்/போதகர்கள் (எபேசியர் 4:13)
- போதகர்கள் (எபேசியர் 4:13; ரோமர் 12:7; 1 கொரி. 12:28)

மாதிரிகள்

- தீர்க்கரிசனம் (ரோமர் 12:6)
- ஊழியம் செய்தல் / சேவித்தல் (ரோமர் 12:7, 1 பேதுரு 4:11)
- போதித்தல் (ரோமர் 12:7)
- புத்தி சொல்லுதல் / உற்சாகப்படுத்துதல் (ரோமர் 12:8)
- கொடுத்தல் / பகிர்ந்து கொள்ளுதல் (ரோமர் 12:8)
- வழிநடத்துதல் / ஆளுகை செய்தல் (ரோமர் 12:8)
- இரக்கஞ்செய்தல் (ரோமர் 12:8)
- உதவி செய்தல் / ஆதரவு கொடுத்தல் (1 கொரி. 12:28)
- நிர்வகித்தல் / கட்டுப்படுத்தி வழிநடத்துதல் (1 கொரி. 12:28)
- உபசரித்தல் (1 பேதுரு 4:9)
- தேவனுடைய வாயாக இருந்து பேசுதல் (1 பேதுரு 4:11)

இரண்டு அடிப்படை வரங்கள்

இரண்டு அடிப்படை வரங்கள் உண்டு, இவைகளை ஒவ்வொரு கிறிஸ்தவரும் பெற்றுக் கொள்கிறார் என்று நான் நம்புகிறேன்.

தேவனுடைய நீதி

முதல் வரம், ‘தேவனுடைய நீதி’ என்பதை அறிந்து நீங்கள் ஆச்சரியப்படக் கூடும். ஏன் இந்த வரம் முதலில் வருகிறது என்பதற்கான காரணத்தை நான் பின்பு சொல்லுகிறேன். தேவனுடைய நீதி ஒரு வரம்தான் என்பதற்கு அத்தாட்சியாக, ரோமர் 5-வது அதிகாரத்தை பாருங்கள். இந்த அதிகாரத்தில் ஆதாமுக்கும், கிறிஸ்துவுக்கும் இடையேயான ஒரு ஒப்பீடு எழுதப்பட்டிருக்கிறது. அது யூதருக்கே உரிய சிந்தையின் அடிப்படையில் எழுதப்பட்டிருக்கிறது. அதை நீங்கள் தல்மூத் வாதம் என்று அழைக்கலாம்.

(தல்மூத் என்பது யூத ரபிக்களின் புத்தகம்). பவுல் யூதர்களுக்கெல்லாம் ஒரு முன்மாதிரி யூதராக வாழ்ந்து வந்தார். இங்கே அவர் வேத வசனங்களைக் குறித்து தனது யூத பின்னணிக்கே உரிய விளக்கத்தை கொஞ்சமாய் எடுத்து அதை சந்தோஷமாய்க் கொடுக்கிறார்:

> *ஆனாலும், மீறுதலின் பலன் கிருபை வரத்தின்* (கரிஸ்மா) *பலனுக்கு ஒப்பானதல்ல. எப்படியெனில், ஒருவனுடைய மீறுதலினாலே அநேகர் மரித்திருக்க, தேவனுடைய கிருபையும் இயேசு கிறிஸ்து என்னும் ஒரே மனுஷனுடைய கிருபையினாலே வரும் ஈவும் அநேகர் மேல் அதிகமாய் பெருகியிருக்கிறது. மேலும், ஒருவன் பாவஞ்செய்ததினால் உண்டான தீர்ப்பு ஒரே குற்றத்தினிமித்தம் ஆக்கினைக்கு ஏதுவாயிருந்தது. கிருபை வரமோ* (கரிஸ்மா) *அநேக குற்றங்களை நீக்கி, நீதி விளங்கும் தீர்ப்புக்கு ஏதுவாகிறது. அல்லாமலும், ஒருவனுடைய மீறுதலினாலே, அந்த ஒருவன் மூலமாய் மரணம் ஆண்டு கொண்டிருக்க கிருபையின் பரிபூரணத்தையும், நீதியாகிய ஈவின் பரிபூரணத்தையும் பெறுகிறவர்கள், இயேசு கிறிஸ்து என்னும் ஒருவராலே ஜீவனை அடைந்து ஆளுவார்களென்பது, அதிக நிச்சயமாமே.*
>
> *ரோமர் 5:15-17*

ஆதாம் ஒரு முறை பாவம் செய்தான், அது முழு மனுகுலத்தின் மேலும் நியாயத்தீர்ப்பைக் கொண்டு வந்தது என்று பவுல் கூறுகிறார். நாம் பலமுறை பாவம் செய்திருக்கிறோம். ஆனால் இயேசு செய்த ஒரு நீதியின் செயல், நம் எல்லோருக்கும் தேவனுடைய நீதியை பெற்றுத் தந்திருக்கிறது.

நீதி என்பது ஒரு ஈவு. நீங்கள் அதை ஒரு ஈவாக பெறாவிட்டால், பிறகு நீங்கள் அதை ஒருபோதும் பெறவே முடியாது. ரோமர் 4:3-ம் வசனம், ஆபிரகாமைக் குறித்து பேசுகிறது. அது நமக்கு இவ்வாறு சொல்கிறது: ''ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான். அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது.'' ஆபிரகாம் எதையோ ஒன்றை சாதித்து அந்த நீதியை பெற்று விடவில்லை. அது அவனுக்கு ஒரு ஈவாகக் கொடுக்கப்பட்டது. உங்களுக்கு தேவனுடைய நீதி வேண்டுமென்றால், இயேசு கிறிஸ்துவின்

மீது நீங்கள் வைத்திருக்கும் விசுவாசத்தின் அடிப்படையில் உங்களுக்கு அருளப்படுகிற ஒரு ஈவாக நீங்கள் அதை ஏற்றுக்கொள்ள வேண்டும். அதற்காக நீங்கள் நன்றியுள்ளவர்களாகவும் இருக்க வேண்டும்.

நித்திய ஜீவன்

ஒவ்வொரு கிறிஸ்தவனும் பெற்றுக்கொள்ளுகிற அடுத்த கிருபை வரம் (*கரிஸ்மா*), நித்திய ஜீவனாகும். இது ரோமர் **6:23**ல் காணப்படுகிறது: "பாவத்தின் சம்பளம் மரணம், தேவனுடை ய கிருபைவரமோ *(கரிஸ்மா)* நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் உண்டான நித்திய ஜீவன்."

வரங்களின் வரிசையில், தேவனுடைய நீதியும், நித்திய ஜீவனும்தான் முதல் இரண்டு வரங்களாக இருக்க முடியும் என்பதை வரங்களுக்கிடையே உள்ள தொடர்பின் அடிப்படையில் நான் விசுவாசிக்கிறேன். நீங்கள் முதலில் தேவனுடைய நீதியென்னும் ஈவை பெறாதவரை, மற்ற எந்த வரங்களையும் பெறுவதற்கு நீங்கள் தகுதியடைய மாட்டீர்கள். உண்மையில், தகுதியடைந்தோர் பட்டியலில்கூட நீங்கள் இருக்க மாட்டீர்கள். நீதியென்னும் ஈவின் அடிப்படையில்தான், தேவன் உங்களுக்கு நித்திய ஜீவனை அளிக்கிறார். ஆபிரகாமைப் போல நீதிமானாக எண்ணப்படாதவர்களுக்கு, தேவனால் நித்திய ஜீவனை கொடுக்க முடியாது.

இது இந்தக் காரியங்களின் முடிவு அல்ல. தேவனிடத்தில் நீங்கள் காண்பிக்கும் உங்களுடைய நன்றியுணர்வு, இதற்குச் சரியான உகந்த விதத்தில் நீங்கள் மறுவினையாற்றும்படி உங்களை நடத்துகிறது. இது இன்னொரு வகையான நீதியாய் இருக்கிறது. புதிய ஏற்பாட்டின் கடைசியில், வெளிப்படுத்தின விசேஷம் **19**-ம் அதிகாரத்தில், கிறிஸ்துவின் மணவாட்டியைக் குறித்து வருணிக்கப்பட்டிருக்கிறதை நாம் பார்க்கிறோம். அவள் சுத்தமும் பிரகாசமுமான, மெல்லிய வஸ்திரம் உடுத்தியிருக்கிறாள் என்று இங்கு எழுதப்பட்டிருக்கிறது. இது பரிசுத்தவான்களுடைய நீதியின் கிரியைகளைக் குறிக்கிறது (**7, 8** வசனங்களைப் பார்க்கவும்). இது இயேசு கிறிஸ்துவின் மீதுள்ள விசுவாசத்தின் அடிப்படையில் தேவனுடைய ஈவாக *அருளப்பட்ட* நீதியைக் குறித்துப் பேசவில்லை. மாறாக, அதற்கு மறுவினையாக நம்முடைய கிரியைகளில் *வெளியே நடப்பிக்கப்படும்*

நீதியைக் குறித்துப் பேசுகிறது.

வேறு வார்த்தைகளில் சொன்னால், முதலில் தேவன் உங்களுக்கு நீதியை ஒரு ஈவாக அருளுகிறார். பிறகு நீங்கள் உங்களுக்கு அருளப்பட்ட நீதியை பிரயாசப்பட்டு செயல்படுத்துகிறீர்கள். பிலிப்பியருக்கு எழுதிய நிருபத்தில் பவுல் சொல்கிறார், “உங்கள் இரட்சிப்பு நிறைவேற பிரயாசப்படுங்கள்....... ஏனெனில் தேவனே ....செய்கையையும் உங்களில் உண்டாக்குகிறவராயிருக்கிறார்” (பிலிப்பியர் 2:12-13). அதாவது தேவன் உங்களுக்குள் என்ன கிரியையை செய்கிறாரோ, அதை நீங்கள் அப்படியே வெளியே நடப்பிக்கிறீர்கள். அதே அடிப்படையில் சொன்னோமென்றால், நீங்கள் வெளியே அந்தக் கிரியையை நடப்பிக்காவிட்டால், தேவனால் மேற்கொண்டு உங்களுக்குள் கிரியை எதுவும் செய்ய முடியாது. (வெளியே நடப்பிக்கப்பட வேண்டிய இந்த நீதியைக் குறித்து, “உங்கள் பணியை நிறைவு செய்வது” என்ற தலைப்பில் எழுதப்பட்ட 10-வது அத்தியாயத்தில் நாம் இன்னும் விரிவாகப் பார்ப்போம்.)

தனிநபர்க்குரிய வரம்

அந்த முதல் இரண்டு வரங்களையும் (கரிஸ்மாட்டா) ஆரம்ப அடிப்படை வரங்களாக நாம் எண்ணிக் கொள்ளலாம். இதன் வரிசையில், அடுத்த வகை வரத்தை நான் தனிநபர்க்குரிய வரம் என்று அழைத்தேன். அது ‘திருமணம் செய்யாமல் தனித்து வாழும்’ ஒரு வரமாகும். அதற்காக நீங்கள் எதையும் செய்வதில்லை. நீங்கள் ஒரு துறவியாக மாறி விடுவதில்லை. அது உங்களுக்குக் கொடுக்கப்படுகிறது. அதை பெற்றுக் கொள்வது மட்டுமே உங்களுடைய பொறுப்பாய் இருக்கிறது. சில நேரங்களில் நான் கிறிஸ்தவர்களிடம் இவ்வாறு சொல்வதுண்டு: “நீங்கள் ஒரு வரத்தை கேட்கும் போது, என்ன வேண்டும் என்பதை குறிப்பாகக் கேளுங்கள். அதுதான் உங்களுக்கு நல்லது. இல்லையென்றால், நீங்கள் நினைத்திராத வேறு வரம் உங்களுக்குக் கிடைத்து விடும்!”

பவுல் இதைச் சொல்கிறார்: “எல்லா மனுஷரும் என்னைப் போலவே இருக்க விரும்புகிறேன். ஆகிலும், அவனவனுக்குத் தேவனால் அருளப்பட்ட

அவனவனுக்குரிய வரமுண்டு *(கரிஸ்மா)*, அது ஒருவனுக்கு ஒரு விதமாயும், மற்றொருவனுக்கு வேறு விதமாயும் இருக்கிறது" (1 கொரிந்தியர் 7:7).

இந்தச் சூழ்நிலையில் பவுல் தன்னைப் பற்றி என்ன சொல்லுகிறார்? திருமணமே செய்து கொள்ளாமல் தனித்து வாழ்வதாக பவுல் தன்னைக் குறித்துச் சொல்கிறார். சில பெரிய தேவனுடைய ஊழியக்காரர்கள் இந்த வரத்தை உடையவர்களாயிருந்தனர். அவர்களில் பவுலும் ஒருவர். இன்னொருவர் இயேசு என்று நீங்கள் சொல்ல விரும்பினால் சொல்லலாம். நீங்கள் திருமணம் செய்யாவிட்டால் ஒன்றுமே நடக்காது என்று நினைக்காதீர்கள். இந்த எண்ணத்தை கைவிடுங்கள். காரணம், இந்த அடிப்படையில் நீங்கள் திருமணம் செய்தீர்கள் என்றால், உங்களுடைய திருமணம் தோல்வியில் முடியலாம். ஆனால் அதே நேரத்தில், எல்லாரும் திருமணம் செய்யாதிருக்கும் வரத்தை நாட வேண்டும் என்று நான் அறிவுறுத்தவில்லை.

என்னைப் பொறுத்தவரையிலும், நான் இரண்டுமுறை திருமணம் செய்திருக்கிறேன். திருமணமாகி வாழ்வதைக் குறித்து நான் மகிழ்ச்சியாக இருக்கிறேன். ஆனால் பவுல் திருமணம் செய்யாமல் தனியாக வாழ்வதைக் குறித்து மகிழ்ச்சியாயிருந்தார் என்பதை கவனியுங்கள். "எல்லா மனுஷரும், என்னைப் போலவே இருக்க விரும்புகிறேன்," என்று அவர் சொல்கிறார். தேவன் ஏன் இந்த வரத்தை பவுலுக்குக் கொடுத்தார்? பவுலின் ஊழியத்தைக் குறித்து வேதாகமத்தில் நீங்கள் வாசித்துப் பார்த்தீர்கள் என்றால், அவர் திருமணம் செய்திருந்தால், இரண்டில் ஏதாவது ஒரு விளைவுதான் அவருடைய வாழ்க்கையில் உண்டாகியிருக்கும் என்பதை நீங்கள் ஒத்துக்கொள்வீர்கள். ஒன்று, அவரால் தனக்குக் கொடுக்கப்பட்ட ஊழியத்தை செய்து முடித்திருக்க முடியாது, அல்லது அவருடைய திருமண வாழ்க்கை முழுமையாய் ஒரு பெருந்தோல்வியை சந்தித்திருக்கும். அவரைப் போல ஊழியம் செய்து வாழ்ந்தவரால், ஒரு வெற்றிகரமான திருமண வாழ்க்கையை நடத்தியிருக்க முடியாது.

ஜான் வெஸ்லிக்கு இந்த வரம் இருந்தது என்றுதான் நான் தனிப்பட்ட

முறையில் சொல்லுவேன். அவர் திருமணம் செய்யாதிருந்திருந்தால், நன்றாக இருந்திருக்கும். அவருடைய வாழ்க்கையில் அவர் செய்த மகா மோசமான தவறு, அவர் திருமணம் செய்து கொண்டதுதான். அது ஆரம்பம் முதல் கடைசி வரை தொடர்ந்து அவருக்கு இடையூறு செய்யக்கூடிய ஒன்றாகவே இருந்தது. அது அவருடைய ஊழியத்திற்கு ஒரு நன்மையும் செய்யவில்லை, ஆசீர்வாதமாகவும் இல்லை. நாம் இந்த விஷயத்தில் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். இந்த சமுதாயம் பின்பற்றுகிற வழிமுறைகளும், அதன் பழக்கவழக்கங்களும் நம்மைக் கட்டுப்படுத்தி நடத்தி விடாதபடி நாம் கவனமாக இருக்க வேண்டும்.

திருமணம் செய்யாமல் தனியாக வாழ்வதற்கு இன்னொரு ஏற்ற வழி உண்டு. இயேசு இதைக் குறித்து இவ்வாறு சொல்கிறார், "பரலோக ராஜ்யத்தினிமித்தம் தங்களை அண்ணகர்களாக்கிக் கொண்டவர்களும் உண்டு" (மத்தேயு **19:12**). உங்களையே அண்ணகராக்கிக் கொள்வது, ஒரு வரத்தை பெறுவதற்கு ஒப்பாகாது. அது ஒரு தியாகம். அது ஒரு தீர்மானம். பல நூற்றாண்டுகளாக, அருமையான தேவ மனிதர்கள் பலர், இத்தீர்மானத்தை எடுத்துள்ளார்கள் என நான் நம்புகிறேன்.

ஒன்பது ஆவிக்குரிய வரங்கள்

இப்போது நாம் ஆவிக்குரிய வரங்கள் என்று அழைக்கப்படும் பரிசுத்த ஆவியின் ஒன்பது வரங்களுக்கு வருகிறோம். அநேகர் இவைகள் மட்டும் தான் *'கரிஸ்மாட்டா'* (கிருபையின் வரங்கள்) என்று கருதுகிறார்கள். இவைகள் முக்கியமானவைகள்தான், ஆனால் இவைகள் மட்டும் கிருபையின் வரங்களல்ல.

> *ஆவியினுடைய அநுக்கிரகம் அவனவனுடைய பிரயோஜனத்திற்கென்று அளிக்கப்பட்டிருக்கிறது. எப்படியெனில் ஒருவனுக்கு ஆவியினாலே ஞானத்தைப் போதிக்கும் வசனமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே அறிவை உணர்த்தும் வசனமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே விசுவாசமும்,*

வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே குணமாக்கும் வரங்களும், வேறொருவனுக்கு அற்புதங்களைச் செய்யும் சக்தியும், வேறொருவனுக்குத் தீர்க்கதரிசனம் உரைத்தலும், வேறொருவனுக்கு ஆவிகளைப் பகுத்தறிதலும், வேறொருவனுக்குப் பற்பல பாஷைகளைப் பேசுதலும், வேறொருவனுக்குப் பாஷைகளை வியாக்கியானம் பண்ணுதலும் அளிக்கப்படுகிறது. இவைகளையெல்லாம் அந்த ஒரே ஆவியானவர் நடப்பித்து, தமது சித்தத்தின் படியே அவனவனுக்கு பகிர்ந்து கொடுக்கிறார். 1 கொரிந்தியர் 12:7-11

தேவனானவர் சபையிலே . . . . . . அற்புதங்களையும், ... குணமாக்கும் வரங்களையும், ...பலவித பாஷைகளையும் ஏற்படுத்தினார். 1 கொரிந்தியர் 12:28

நமக்கு அருளப்பட்ட கிருபையின் படியே நாம் வெவ்வேறான வரங்களுள்ளவர்களானபடியினாலே, நம்மில் தீர்க்கதரிசனஞ்சொல்லுகிற வரத்தை உடையவன் விசுவாசப் பிரமாணத்துக்கு ஏற்றதாகச் சொல்லக்கடவன்.

ரோமர் 12:6

இந்த வரங்களுக்கு மூன்று குணாதிசயங்கள் உண்டு. முதலாவது, அவைகள் எல்லாமே வெளியரங்கமான செயல்பாடுகள். பரிசுத்த ஆவியானவர் காணப்படாதவர். ஆனால் இந்த வரங்கள் மூலமாக அவர் தம்மை வெளிக்காட்டுகிறார். நாம் பார்க்க, கேட்க அல்லது உணர கூடிய விதத்தில், அவர் நம்முடைய புலன்களை பாதிக்கிறார்.

இரண்டாவதாக, இந்த வரங்களெல்லாமே, அனைவருடைய பிரயோஜனத்துக்கும் உரியவை. இவைகளின் மூலம் கிறிஸ்தவர்கள் ஒருவருக்கொருவர் ஊழியம் செய்ய முடியும். இவைகளெல்லாம் நடைமுறையில் சில நோக்கங்களை நிறைவேற்ற உதவுகின்றன.

மூன்றாவதாக, இந்த வரங்கள் எல்லாமே இயற்கைக்கு அப்பாற்பட்டவை. இவைகள் இயற்கையான திறமையினாலோ, விசேஷித்த கல்வியினாலோ வரக்கூடியவை அல்ல. படிப்பறிவு இல்லாத ஒரு நபர் கூட ஞானத்தைப்

போதிக்கும் வார்த்தையை அல்லது அறிவை உணர்த்தும் வார்த்தையை பெற முடியும். அதே போல் விசுவாச வரம், நம்முடைய இரட்சிப்பிற்கு தேவைப்படும் விசுவாசத்திற்கு அப்பாற்ப்பட்ட, விஞ்சிய ஒன்றாக இருக்கிறது. இந்த வரம், இயற்கையாய் நிகழ்கின்ற வளர்ச்சியினால் வரக்கூடிய விசுவாசம் அல்லது உண்மையாயிருத்தல் (faithfulness) என்ற ஆவியின் கனியிலிருந்து தெளிவான வேறுபாட்டை உடையதாய் இருக்கிறது. இந்த வரம், இயற்கைக்கு அப்பாற்பட்ட விசுவாசத்தை குறித்து பேசுகிறது. இது நம்முடைய இயல்பான திராணிக்கு அப்பாற்பட்டதாய் இருக்கிறது. இது இயற்கைக்கு அப்பாற்ப்பட்ட விளைவுகளை உண்டாக்குகிறது.

இந்த ஒன்பது வரங்களை மூன்று பிரிவுகளாக பிரிக்கலாம். முதல் பிரிவில், வெளிப்பாட்டின் வரங்கள் உள்ளடங்கியிருக்கின்றன். இத்தலைப்பின் கீழ், ஞானத்தைப் போதிக்கும் வசனம், அறிவை உணர்த்தும் வசனம், மற்றும் ஆவிகளை வேறுபிரித்து அறியும் அல்லது பகுத்தறியும் வரம் இருக்கின்றன.

இரண்டாவது பிரிவில், வல்லமையின் வரங்கள் உள்ளன. இத்தலைப்பின் கீழ், விசுவாசம், அற்புதங்கள் மற்றும் குணமாக்குதலின் வரங்கள் இருக்கின்றன.

மூன்றாவது பிரிவில், குரல் வரங்கள் உள்ளடங்கியிருக்கின்றன. இந்த வரங்கள், மனுஷனுடைய குரலொலி எழுப்பும் உடல் உறுப்புகளைப் பயன்படுத்துகின்றன. இப்பிரிவின் கீழ், பற்பல பாஷைகளைப் பேசுகிற, அந்நிய பாஷைகளை வியாக்கியானம் செய்கிற மற்றும் தீர்க்கதரிசனம் உரைக்கிற வரங்கள் இருக்கின்றன.

மூல கிரேக்க மொழியில், சில வரங்களின் இரு பகுதிகளுமே பன்மையில் உள்ளன. உதாரணத்திற்கு, குணமாக்குதல்களின் வரங்கள், அற்புதங்களை செய்யும் வல்லமைகள், ஆவிகளின் பகுத்தறிதல்கள், பற்பல பாஷைகளைப் பேசுதல் என்று அதைக் குறிப்பிடலாம். இதற்கு அர்த்தம், ஒவ்வொரு குணமாக்குதலும், ஒவ்வொரு அற்புதமும், ஒவ்வொரு பகுத்தறிதலும், ஒரு குறிப்பிட்ட பாஷையில் பேசும் ஒவ்வொரு வார்த்தையும் ஒரு வரமாய் இருக்கிறது. ஒரு குறிப்பிட்ட வரம், ஒரு குறிப்பிட்ட நபர் மூலமாக தொடர்ந்து வெளிப்பட்டால், அந்த நபரிடத்தில் அந்த வரம் இருக்கிறது என்று நாம் சொல்லாம்.

அறிவை உணர்த்தும் வசனம்

பவுல் பட்டியலிடுகிற முதல் இரண்டு வரங்களாகிய அறிவை உணர்த்தும் வசனமும், ஞானத்தைப் போதிக்கும் வசனமும் நம்முடைய வாழ்க்கையின் நடைமுறைச் சூழ்நிலையோடு சம்பந்தப்பட்டவை. அறிவை உணர்த்தும் வரம், ஒரு சூழ்நிலையை குறித்த உண்மைகளை நமக்குக் கொடுக்கிறது. ஞானத்தை போதிக்கும் வரம், அந்த உண்மைகளைக் குறித்து என்ன செய்ய வேண்டும் என்பதை நமக்குத் தெரியப்படுத்துகிறது. வேறு விதமாகச் சொன்னால், அறிவு நமக்குத் தகவலைக் கொடுக்கிறது. ஞானம் நமக்கு வழியைக் காண்பிக்கிறது.

ஞானத்தைப் போதிக்கும் வசனம்

ஞானத்தின் நோக்கம், நமக்கு சரியான வழிநடத்துதலைக் கொடுப்பதுதான். சாலமோன், பிரசங்கி 10:10ல் கூறும் வாக்கியம் இதை காண்பிக்கிறது. “இருப்பு ஆயுதம் மழுங்கலாயிருக்க, அதை ஒருவன் தீட்டாமற்போனால், அதிக பலத்தைப் பிரயோகம் பண்ண வேண்டியதாகும். ஆகையால் ஒரு காரியத்தைச் செவ்வையாய்ச் செய்வதற்கு ஞானமே பிரதானம்,'' அல்லது கிங் ஜேம்ஸ் மொழிபெயர்ப்பு ''ஞானமே வழிகாட்டுதலுக்கு பிரயோஜனமானது,” என்று சொல்கிறது. ஞானம், ஒரு நபர் தன்னுடைய ஆயுதத்தை தீட்டி கூர்மையாய் வைத்துக் கொள்ளும்படி செய்கிறது. இதன் விளைவு வெற்றியே.

இவ்விரண்டு வரங்களிலும், தேவனுடைய சர்வ ஞானத்தின் அல்லது சகலத்தையும் அறிந்திருக்கிற அவருடைய முழு அறிவின் ஒரு மிகச் சிறிய பகுதிதான் அந்த ஒரு வார்த்தையாய் கொடுக்கப்படுகிறது. தேவனிடத்தில் சர்வ ஞானமும், சகலத்தையும் அறிந்திருக்கிற அறிவும் இருக்கிறது. ஆனால் தேவனுடைய நாமத்துக்கே ஸ்தோத்திரம். அவர் தமது சகல ஞானத்தையும், சகல அறிவையும் நம் மேல் கொட்டிக் குவிப்பதில்லை. காரணம், அதன் பாரம் தாங்க முடியாமல் நாம் அப்படியே விழுந்து நொறுங்கிப் போவோம். ஆனால் ஒரு குறிப்பிட்ட பிரச்சனையில் நாம் மாட்டிக்

கொண்டிருக்கும்போது, அந்தச் சூழ்நிலையில் பிரச்சனைக்கான காரணத்தை அறிந்தாக வேண்டிய நிலையில் நாம் இருக்கிறோம் அல்லது ஒரு வழிகாட்டுதலும் நமக்கு தேவைப்படுகிறது. அதை நம்முடைய மூளை அறிவின் மூலமாகவோ அல்லது நம்முடைய கல்வியறிவின் மூலமாகவோ அல்லது நம்முடைய புலனறிவின் மூலமாகவோ நம்மால் அறிந்து கொள்ள முடியாத பட்சத்தில், சர்வாளுமையுள்ள தேவன் நமக்கு ஞானத்தை போதிக்கும் ஓர் வசனம் அல்லது அறிவை உணர்த்தும் ஓர் வார்த்தையை தருகிறார்.

ஆவிகளின் பகுத்தறிதல்கள்

பகுத்தறிதல் என்ற வார்த்தையின் அர்த்தத்தை நான் இவ்வாறு புரிந்து கொள்கிறேன்: நம்மை எதிர்த்து நிற்கும் ஆவிகளை இனங்கண்டறியக்கூடிய திராணி, அடையாளம் காணக்கூடிய திராணி, தெளிவாக வேறுபிரித்தறியக்கூடிய திராணி. இது தொடர்பாக, ஒன்றை நாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். கிறிஸ்தவ ஊழியம் என்பது ஆவி மண்டலத்தில் நடைபெறும் ஓர் ஊழியமாகும். எபேசியர் 6:12-ல் பவுல் இவ்வாறு சொல்கிறார்: மாம்சத்தோடும், இரத்தத்தோடும், மனுஷர்களோடும் நாம் யுத்தம் செய்யவில்லை. மாறாக, துன்மார்க்கமான ஆவிகளுக்கும், பொல்லாத ஆவிக்குரிய ராஜ்யத்துக்கும் விரோதமாக நாம் ஒன்று கூடி நிற்கிறோம். எனவே நம்முடைய ஆவிக்குரிய எதிரிகளுடன் யுத்தம் பண்ணத்தக்கதாக நாம் ஆயத்தமாக்கப்பட வேண்டும்.

இந்த வரத்திற்கு நான்கு விதமான நோக்கங்கள் உண்டு என்பதை என்னால் சொல்ல முடியும். இவ்வரத்தின் முதலாவது நோக்கம், கண்களால் காண முடியாத ஆவிக்குரிய உலகத்தை மறைத்துக் கொண்டிருக்கிற திரையை விலக்குவதாகும். இவ்வுலகத்தைத்தான் நாம் மெய்யாகவே கையாள வேண்டியிருக்கிறது. இதை நாம் வெற்றிகரமாகச் செய்ய வேண்டுமென்றால், இவ்வரத்தை நாம் பயன்படுத்தியாக வேண்டும்.

இவ்வரத்தின் இரண்டாவது நோக்கம், தேவன் பார்ப்பது போலவே நம்மையும் பார்க்க வைப்பதாகும் (1 சாமுவேல் 16:7-ஐ பார்க்கவும்). ஆவிகளைப் பகுத்தறியும் அல்லது வேறுபிரித்தறியும் இவ்வரம், ஒரு மனுஷனுடைய

வெளித்தோற்றத்துக்கு அப்பால் சென்று, அந்த நபருடைய இருதயத்தின் உண்மை நிலையை பார்க்க நமக்கு உதவுகிறது.

இவ்வரத்தின் மூன்றாவது நோக்கம், பிசாசினுடைய வஞ்சனையிலிருந்து நம்மைக் காப்பாற்றுவதாகும். சில சமயங்களில் சாத்தான் ஒளியின் தூதனாக வேஷம் தரித்து தேவனுடைய ஜனங்களிடம் வருவான் என்று வேதாகமத்தில் நமக்கு நினைவுபடுத்தப்பட்டிருக்கிறது. அவன் அழகானவனாக, நல்லவனாக, ஞானமுள்ளவனாக தோற்றமளிப்பான். ஆனால் அவனுடைய நோக்கமும், திட்டமும் நமக்கு தீங்கு செய்வதும், நம்மை அழிப்பதும்தான்.

இந்த வரத்தின் நான்காவது நோக்கம், மற்றவர்களுடைய பிரச்சனைகளுக்கான காரணத்தை அறிந்து, அவர்களுக்கு உதவி செய்வதாகும். இது பொல்லாத ஆவிகளை மாத்திரம் பகுத்தறியும் ஒரு வரம் அல்ல. இந்த வரம் ஆவிகளைப் பகுத்தறியும் ஒரு வரமாக இருக்கிறது. கிறிஸ்தவ வாழ்க்கையில் நாம் பல வகையான ஆவிகளோடு இடைப்பட வேண்டியுள்ளது. அவற்றில் நான்கு ஆவிகளைச் சொல்கிறேன்: முதலாவது, தேவனுடைய ஆவி, பரிசுத்த ஆவியானவர்; இரண்டாவது, தேவ தூதர்கள் - நல்ல தூதர்கள் மற்றும் பொல்லாத தூதர்கள்; மூன்றாவதாக, பிசாசுகள் அல்லது அசுத்த ஆவிகள்; நான்காவதாக, மனுஷனுடைய ஆவி.

இந்த வரத்தின் செயல்பாடு குறித்து வேதம் நமக்கு சில உதாரணங்களைக் கொடுக்கின்றது. இதில் இயேசுவின் ஊழியமும் உள்ளடங்கும். ஒரு எடுத்துக்காட்டிற்கு, யோவான் சுவிசேஷத்தில், நாத்தான்வேல் இயேசுவிடம் எப்படி வந்தான் என்று கூறப்பட்டுள்ளது. அவர் அவனை "கபடற்ற, உத்தம இஸ்ரவேலன்" என அறிவித்தார் (யோவான் 1:43-51 வசனங்களைப் பார்க்கவும்).

ஒருவேளை, இயேசு அங்கு நின்று, பிரசங்கம் செய்து கொண்டிருந்திருப்பார். நாத்தான்வேல் பின்னணியில் எங்கோ ஒரு அத்தி மரத்தின் கீழ் நின்று கொண்டு, அதைக் கேட்டுக் கொண்டிருந்திருப்பான். ஆனால் இயேசு தன்னை நெருக்கமாய்ச் சூழ்ந்திருந்த மக்களை தாண்டி அவனுடைய முகத்தை பார்த்து, அவனுக்குள் இருந்த கபடற்ற ஆவியைப் பகுத்தறிந்தார். நாத்தான்வேல் ஆச்சரியப்பட்டான். ஆனால், இயேசு அவனை பார்த்து, "இது ஆரம்பம்தான்," என்றார்.

விசுவாச வரம்

புதிய ஏற்பாட்டில், விசுவாசம் மூன்று வித்தியாசமான வடிவங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. முதலாவது, வாழ்வதற்கான விசுவாசமாகும். பவுல் சொல்கிறார், "விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான்" (ரோமர் 1:17). இந்த விசுவாசம், தேவனிடத்தில் அர்ப்பணிக்கப்பட்ட தொடர்ச்சியான, தனிப்பட்ட உறவின் ஒரு வெளிப்பாடாகும். இது முழு கிறிஸ்தவ வாழ்க்கைக்கும் தேவைப்படுகிற திராணி, உந்துவிசை மற்றும் ஒரு திசையைக் கொடுக்கிறது. ஒவ்வொரு கிறிஸ்தவனும், ஒரு கிறிஸ்தவனாக வாழ்வதற்கு தேவைப்படுகிற ஒரு வகை விசுவாசமாய் இது இருக்கிறது.

அடுத்ததாக, கனியாக வெளிப்படுகிற விசுவாசம் வருகிறது. இது கலாத்தியர் 5-ல் பட்டியலிடப்பட்டிருக்கிறது. கனி என்பது எப்பொழுதுமே குணாதிசயத்தின் ஒரு அம்சமாக இருக்கிறது.

மூன்றாவது வகையான விசுவாசம், விசுவாசமென்னும் வரமாகும். இது இயற்கைக்கு அப்பாற்பட்ட விசுவாசமாய், மனுஷனுடைய மட்டத்திற்கு மேலான ஒரு விசுவாசமாய், தேவனுடைய சொந்த விசுவாசமாய் இருக்கிறது. இந்த விசுவாசம், தேவனுடைய ராஜரீக சித்தத்தின்படி, பரிசுத்த ஆவியானவரால் உங்களுக்கு அருளப்படுகிறது. ஒரு விதத்தில், விசுவாச வரம், ஞானத்தைப் போதிக்கும் வசனம் மற்றும் அறிவு உணர்த்தும் வசனம் என்ற வரங்களோடு ஒத்திருக்கிறது. ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில், தேவனுடைய நோக்கத்தை நிறைவேற்றும்படி, தேவனுடைய சொந்த விசுவாசத்திலிருந்து ஒரு மிக மிகச் சிறிய பகுதியை எடுத்து இயற்கைக்கு அப்பாற்பட்ட விதத்தில் ஒரு வரமாக இது அருளப்படுகிறது.

அற்புதங்களைச் செய்யும் வரம்

அற்புதங்கள் செய்யும் வரமும், குணமாக்குதல்களின் வரங்களும் ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்புடையவை. இருந்தாலும், அவைகளுக்கிடையே தெளிவாகப் பிரித்தறியக்கூடிய வித்தியாசமும் உண்டு. அற்புதங்கள் அடிக்கடி நிகழ்கின்றவையாக இருக்கின்றன. அவைகள் கண்களால் காணப்படக்கூடியவைகளுமாக இருக்கின்றன. அவைகள் உண்டாக்கக்கூடிய விளைவுகளை வழக்கமாக ஏதோ ஒரு விதத்தில் நாம் பார்த்து விட முடியும்.

சுகமளித்தல் என்பது படிப்படியாக நிறைவேறுகிறவைகளாக இருக்கின்றன. பல நேரங்களில், அவைகள் கண்களுக்குத் தெரியாதவைகளாக இருக்கின்றன. நுரையீரலைப் பாதித்து, சுவாசிப்பதை கடினமாக்கின ஒரு வியாதியிலிருந்து ஒருவர் சுகமாகியிருக்கலாம். அதற்கு பல மணி நேரங்களோ அல்லது பல நாட்களோ அல்லது பல வாரங்களோ ஆகலாம். சரீரத்தில் கண்களால் காண முடியாத பல உறுப்புகளில் சுகம் உண்டாகிறது.

குணமாக்குதல்களின் வரங்கள்

இங்கே பேசப்படும் குணமாக்குதலின் தன்மை என்ன? இவ்வரத்தினால் ஊழியம் செய்கிறவர் மூலமாக, வியாதிப்பட்டவரின் சரீரத்துக்குள் கடந்து செல்லும் தேவனுடைய தெய்வீக, இயற்கைக்கு அப்பாற்பட்ட சுகமளிக்கும் வல்லமை என்றே நான் இதை சுருக்கமாகச் சொல்லுவேன். குணமாக்குதல் என்பது நேரடியாக வியாதியோடு சம்பந்தப்பட்டது. வியாதியில்லாத இடத்தில், குணமாக்குதல் தேவைப்படுவதில்லை. எனவே குணமாக்குதல் என்பது ஒரு விசுவாசியின் மூலம் கிரியை செய்து, வியாதிக்கு விரோதமாக எதிர்த்து நின்று, அதை சரீரத்திலிருந்து விரட்டியடித்து, அதின் இடத்தில் ஆரோக்கியத்தை கொண்டு வரும்படி செயல்படும் தேவனுடைய வல்லமையாய் இருக்கிறது.

ஆவியானவரின் வரங்கள், வானவில்லின் நிறங்களை போன்று இருக்கின்றன. அவைகள் ஒன்றுக்கொன்று வித்தியாசமான நிறங்களாயிருக்கின்றன. ஒரு நிறத்திலிருந்து அடுத்த நிறத்திற்கு மாறும் இடத்தில், அவைகள் ஒன்றோடு ஒன்று கலந்து விடுகின்றன. குணமாக்கும் வரங்கள் அற்புதங்களைச் செய்யும் வரங்களோடு கலந்து விடுகின்றன. அதேபோல, அற்புதங்களைச் செய்யும் வரங்கள் குணமாக்கும் வரங்களோடு கலந்து விடுகின்றன. இவை இரண்டுமே, ஏதோ ஓர் விதத்தில் விசுவாச வரத்தோடு கலந்து விடுகின்றன.

பற்பல நாவுகள் அல்லது பாஷைகளின் வரம்

அநேக கிறிஸ்தவர்களுக்கு, அந்நிய பாஷைகளில் பேசும் வரமே புரிந்து கொள்வதற்கு மிக மிகக் கடினமான ஒன்றாய் இருக்கிறது. புதிய ஏற்பாட்டின் பாஷையில், *நாவு* என்ற வார்த்தையும் *பாஷை* என்றுதான்

அர்த்தங்கொள்கிறது என்பதை நாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். ஆகையால் நாம் இதை நாவுகளின் வரம் என்றோ அல்லது பற்பல பாஷைகளின் வரம் என்றோ அழைக்கலாம். இந்த வெளிச்சத்தில் நாவுகள் அல்லது பாஷைகளை வியாக்கியானம் செய்வதைக் குறித்து நாம் வரையறுக்கலாம்.

நாவுகள் அல்லது பாஷைகளை வியாக்கியானம் செய்தல்

அறியப்படாத பாஷையில் ஏற்கெனவே பேசப்பட்ட ஒன்றின் அர்த்தத்தை, அறியப்படும் மொழியில் சொல்வதற்கு, இயற்கைக்கு அப்பாற்பட்ட விதத்தில், பரிசுத்த ஆவியால் அளிக்கப்படும் திறமையே வியாக்கியானமாகும். அந்நிய பாஷையில் பேசிய நபரே, அதன் அர்த்தத்தை வெளிக்கொண்டு கொண்டுவரலாம் அல்லது வேறொருவர் அதை கொண்டுவரலாம்.

அடிப்படையில், அந்நிய பாஷைகளின் விளக்கத்தைச் சொல்வதன் நோக்கமும், தீர்க்கதரிசனம் உரைத்தலின் நோக்கமும் ஒன்றாகத்தான் இருக்கிறது. 1 கொரிந்தியர் 14:4-5ல் பவுல் இவ்வாறாக கூறுகிறார்:

> *அந்நிய பாஷையில் பேசுகிறவன் தனக்கே பக்தி விருத்தி உண்டாகப் பேசுகிறான். தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறவனோ சபைக்கு பக்தி விருத்தியுண்டாகப் பேசுகிறான். நீங்களெல்லாரும் அந்நிய பாஷைகளைப் பேசும் படி விரும்புகிறேன். ஆகிலும் அந்நிய பாஷைகளில் பேசுகிறவன், சபைக்கு பக்திவிருத்தி உண்டாகும்படிக்கு அதன் அர்த்தத்தையும் சொல்லாவிட்டால், தீர்க்கதரிசனம் சொல்லுகிறவன் அவனிலும் மேன்மையுள்ளவன், ஆதலால் நீங்கள் தீர்க்கதரிசனம் சொல்லுகிறவர்களாக வேண்டுமென்று அதிகமாய் விரும்புகிறேன்.*

இந்த வரங்களின் பயன்பாடு, இவை எந்த அளவிற்கு மற்றவர்களை பக்திவிருத்திக்கேதுவாக கட்டியெழுப்புகின்றன என்பதன் அடிப்படையில்தான் சோதிக்கப்படுகிறது. அந்நிய பாஷையில் பேசுகிறவன் தனக்குத் தானே பக்திவிருத்தியை உண்டாக்குகிறான், வேறொருவனுக்கும் அல்ல. ஆனால்

தீர்க்கதரிசனம் உரைக்கும்போது, அது சபையை, ஒன்றுகூடி வந்திருக்கும் விசுவாசிகளின் கூட்டத்தாரை பக்திவிருத்திக்கேதுவாக கட்டியெழுப்புகிறது. எனவே தீர்க்கதரிசனம் சொல்வதென்பது, அந்நிய பாஷைகளில் பேசுவதைக் காட்டிலும் மேலானது என்று கூறப்பட்டுள்ளது. ஏனென்றால் இது அதிகமான எண்ணிக்கையில் கிறிஸ்தவர்களை பக்திவிருத்தியடைய செய்கிறது.

அந்நிய பாஷையைத் தொடர்ந்து, அதன் வியாக்கியானம் வரும்போது, எப்படியோ அதன் அர்த்தம் மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்லப்படுவதினால், அவர்கள் அதைக் கேட்டு, புரிந்து கொள்ளுகிறார்கள். ஆதலால், தீர்க்கதரிசன வார்த்தைகள் என்ன விளைவை ஏற்படுத்துமோ, அதே விளைவை இது ஏற்படுத்துகிறது. எனவே அந்நிய பாஷை பேசி அதை வியாக்கியானம் செய்தல் என்பது, அடிப்படையில் தீர்க்கதரிசனம் உரைத்தலுக்கு சமமாகக் கருதப்படுகிறது.

தீர்க்கதரிசனம் உரைத்தல்

தீர்க்கதரிசனம் என்பது, தேவனிடமிருந்து வரும் வார்த்தைகளைப் பேசும்படி பரிசுத்த ஆவியானவரால் ஒரு விசுவாசிக்குக் கொடுக்கப்படுகிற திராணியாகும். இவ்வார்த்தைகள், அந்த விசுவாசியின் சொந்த புரிந்துகொள்ளுதலினாலோ அல்லது அவருடைய கல்வியறிவினாலோ அல்லது அவருடைய சொந்த விளக்கங்களினாலோ வருகிறவைகள் அல்ல.

கருவிகளின் ஆதிநிலை பயன்பாட்டை திரும்ப மீட்பது

அப்போஸ்தல காலத்தின் முடிவில் இந்த வரங்கள் திரும்ப பெற்றுக்கொள்ளப்பட்டன என்றும், இன்று அவைகள் செயல்படுவதில்லை என்றும் அடிக்கடி சொல்லப்படுகிறது. ஆனால் அப்போஸ்தலனாகிய பவுலோ, **1** கொரிந்தியர் **1:7**-ம் வசனத்தில், “அப்படியே, நீங்கள் யாதொரு வரத்திலும் குறைவில்லாதவர்களாய் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வெளிப்படுவதற்குக் காத்திருக்கிறீர்கள்,” எனக் கூறி, கொரிந்துவிலிருந்த கிறிஸ்தவர்களுக்காக தேவனுக்கு நன்றி செலுத்தினார். ஒன்று இங்கு தெளிவாகத் தெரிகிறது. கிறிஸ்துவின் வருகைவரை, கிறிஸ்தவர்கள் தங்களுக்கு அருளப்பட்ட ஆவிக்குரிய வரங்களை பயன்படுத்தும்படி எதிர்பார்க்கப்படுகிறார்கள் என்பது இங்கு தெளிவாகத் தெரிகிறது. மற்ற

வரங்களோடு, அற்புதங்களைச் செய்யும் வரங்களையும், குணமாக்கும் வரங்களையும் தேவன் சபையிலே "ஏற்படுத்தினார்" என்று 1 கொரிந்தியர் 12:28-ம் வசனத்தில் பவுல் சொல்கிறார். ஆகையால் இந்த வரங்கள் கிறிஸ்தவருடைய சபை வாழ்க்கையில் இயல்பாய், ஒவ்வொரு முறை கூடி வரும்போதும் பயன்படுத்தப்பட வேண்டியவைகளாக இருக்கின்றன.

"ஆதித் திருச்சபையிலிருந்த அந்த நல்ல நிலைக்கு திரும்பக் கொண்டு வருதல் (restoration)" என்பதுதான் இன்றைய காலகட்டத்தில், தேவன் தம்முடைய ஜனத்தாரோடு கொண்டிருக்கிற உறவிற்கு ஒரு அடிப்படை முகாந்திரமாக இருக்கிறது என்று நான் விசுவாசிக்கிறேன். அவிசுவாசம் மற்றும் கீழ்ப்படியாமையின் மூலம் நாம் இழந்த சுதந்திரத்தை தேவன் நமக்குத் திரும்பக் கொடுக்கின்றார். இன்றைக்கு நாம் பெற்றுக் கொண்டிருக்கிற நன்மைகளின் ஒரு மிக முக்கியமான அம்சம், இந்த ஒன்பது வரங்களையும் திரும்பப் பெற்றுக் கொள்வதாகும். உலகம் முழுவதிலும் உள்ள இடங்களில், ஆவியானவரின் இந்த ஒன்பது வரங்களும் செயல்படுவதை நான் நேரடியாகப் பார்த்திருக்கிறேன். நாம் கற்றுக் கொண்ட இந்தக் காரியங்களெல்லாம் வெறும் கொள்கையோ, இறையியல் தத்துவங்களோ அல்லது உபதேசமோ அல்ல. இவை நம்முடைய அன்றாட வாழ்க்கையின் நிஜமான அனுபவங்களாய் இருக்க வேண்டியவை. (ஆவிக்குரிய வரங்களைக் குறித்த முழுமையான போதனைக்கு, *ஆவியானவரின் வரங்கள் (The Gifts of the Spirit)* என்ற தலைப்பில் எழுதப்பட்ட என்னுடைய புத்தகத்தை வாசித்துப் பாருங்கள்).

அடுத்ததாக, நான்காவது வகையான ஊழிய வரங்களைக் குறித்து நாம் அடுத்த அத்தியாயத்தில் விளக்கமாகப் பார்க்கலாம்.

5
ஊழிய வரங்கள்

“உனக்கு அளிக்கப்பட்ட வரத்தைப் பற்றி அசதியாயிராதே.”
1 தீமோத்தேயு 4:14

‘ஊழியம்’ என்கிற வார்த்தை, தன்னுடைய முழுமையான அர்த்தத்தை வெளிப்படுத்தத் தவறுகிற மதப்பாரம்பரிய வார்த்தைகளில் ஒரு வார்த்தையாக இருக்கிறது. ஒருமுறை, நான் ஒரு குழுவோடு பாகிஸ்தானுக்குச் சென்றேன். விமான நிலையத்திலிருந்த அதிகாரி ஒருவர் என்னிடம், “நீங்கள் என்ன வேலை செய்கிறீர்கள்?” என்று கேட்டார்.

நான் ஒரு கணம் யோசித்து விட்டு, “நான் ஒரு மினிஸ்டர்,” என்று சொன்னேன். தேவனுடைய ஊழியக்காரன் என்ற அர்த்தத்தில் நான் அப்படிச் சொன்னேன். ஆனால் ஆங்கிலத்தில் ‘மினிஸ்டர்’ என்று நான் சொன்னதை கேட்டு, அமெரிக்க அரசாங்கத்தினால் நான் ஒரு அமைச்சராக நியமிக்கப்பட்டிருக்கிறேன் என்ற முடிவுக்கு அவர் வந்து விட்டார். அது முதல் எனக்கு அங்கு சிவப்பு கம்பள வரவேற்புதான் கிடைத்தது. நிச்சயமாக, நான் எந்தத் தவறும் செய்யவில்லை. நான் உண்மையைத்தான் சொன்னேன். ஆனால் அவர் என்னைத் தவறாகப் புரிந்து கொண்டார்!

உண்மையைச் சொல்வதென்றால், *‘ஊழியக்காரன்’* என்ற வார்த்தைக்கு ‘வேலைக்காரன்’ என்பதுதான் அர்த்தமாகும். *‘வேலைக்காரன்’* என்ற வார்த்தைக்கு, புதிய ஏற்பாட்டில் பல்வேறு வித்தியாசமான வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. அவைகளில் ஒரு வார்த்தையிலிருந்துதான், *`கண்காணி (deacon)'* என்ற வார்த்தையை நாம் பெறுகின்றோம். அதின்

அர்த்தமும் 'வேலைக்காரன்' என்பதாகும். பல சபைகள் தங்களுடைய கண்காணிகளின் குழுவை *(board of deacons)* "வேலைக்காரர்களின் குழு (the board of servants)" என்று மாற்றி அழைத்தால், அந்த சபைகள் முற்றிலும் உருமாறி விடும். அந்த ஒரு பெயர் மாற்றம், அந்த சபையாருடைய குறிப்பாக அந்த சபையின் கண்காணிகளினுடைய (deacons) மனப்பான்மையை நிச்சயம் உருமாற்றி விடும்.

"தனிநபர்" வரங்கள்

கிறிஸ்து தமது சபையாக ஸ்தாபித்த சரீரத்தை கட்டி எழுப்புவதும், முதிர்ச்சி அடைய செய்வதுமே இவ்வரங்களின் நோக்கங்களாய் இருக்கின்றது. இதற்கு மிகவும் அத்தியாவசியமான ஊழியங்களாய் அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள், சுவிசேஷகர், மேய்ப்பர் மற்றும் போதகர் என்ற ஐந்து வகை ஊழியங்கள் இருக்கின்றன. இவ்வூழியங்களுக்கு, நான்கு முக்கியமான பணிகள் இருக்கின்றன என்று பவுல் இங்கு குறிப்பிடுகிறார். முதலாவது பணி, விசுவாசிகள் தேவனால் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட வேலையைச் செய்யும்படி அவர்களை ஆயத்தப்படுத்துவதாகும். இரண்டாவது பணி, சரீரமாகிய சபையை கட்டியெழுப்புவதாகும். மூன்றாவது பணி, சபையாராகிய நம் எல்லோரையும் ஒருமைப்பாட்டிற்குள் கொண்டு வருவதாகும். நான்காவது பணி, சபையாராகிய நமக்குள் முதிர்ச்சியையும், நிறைவான வளர்ச்சியையும் உண்டாக்குவதாகும் (எபேசியர் **4:15-16** வசனங்களைப் பாருங்கள்).

> *அவர் சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும் சிலரை சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும், போதகராகவும் ஏற்படுத்தினார்.*
>
> *(எபே. 4:13)*

> *தேவனானவர் சபையிலே முதலாவது அப்போஸ்தலரையும், இரண்டாவது தீர்க்கதரிசிகளையும் மூன்றாவது போதகர்களையும்.... ஏற்படுத்தியுள்ளார்"*
>
> *(1 கொரி. 12:28)*

> *நமக்கு அருளப்பட்ட கிருபையின் படியே, நாம் வெவ்வேறான*

வரங்களுள்ளவர்களான படியால், நம்மில் தீர்க்கதரிசனம் சொல்லுகிற வரத்தை உடையவன் விசுவாசப் பிரமாணத்துக்கேற்றதாகச் சொல்லக்கடவன்......போதிக்கிறவன் போதிப்பதிலும்......

(ரோமர் 12:6-7)

அப்போஸ்தலர்கள்

இந்த ஐந்து ஊழியங்களில், முதல் இரண்டு பிரதானமான ஊழியங்களாய் அப்போஸ்தலர்கள் மற்றும் தீர்க்கதரிசிகளின் ஊழியம் இருக்கிறது. சபையில் இடைவிடாது தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிற தேவனுடைய செயல்திட்டத்தின் இரகசியமானது, அப்போஸ்தலர் மற்றும் தீர்க்கதரிசிகள் மூலமாக வெளிப்படுத்தப்படுகிறது.

அப்போஸ்தலர்களை சபையின் கட்டடக்கலைஞர்களாக அல்லது சிற்பாச்சாரிகளாக நாம் பாவிக்கலாம். ஒரு கட்டடக்கலைஞர், அந்தக் கட்டடத்தின் அஸ்திபாரத்திலிருந்து, மேற்கூரை வரை, அதன் ஒவ்வொரு கட்டத்தை குறித்தும் அறிய வேண்டிய யாவற்றையும் அறிந்து வைத்திருக்க வேண்டும். அவர்கள் தங்களுடைய தொழில்ரீதியான கல்வியையும், பயிற்சியையும் பெற்றிருக்கிறார்கள். அவர்கள் அந்த திட்டப்பணியின் ஒவ்வொரு அம்சத்துக்கும் பொறுப்பானவர்களாக, அதற்கு பதிலளிக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். உலகப்பிரகாரமாகப் பார்க்கும்போது, இது ஒரு கட்டிடக்கலைஞனுக்குரிய தன்மையாக இருக்கிறது. ஆவிக்குரிய பிரகாரமாகப் பார்க்கும்போது, இது ஒரு அப்போஸ்தலனுக்குரிய தன்மையாக இருக்கிறது. அப்போஸ்தலர்கள், சபைக்கு அஸ்திபாரத்தை அமைத்துக் கொடுக்கிறார்கள். அவர்கள் சபைக்கு வெளிப்பாட்டைக் கொண்டு வரும் ஒரு வாய்க்காலாகவும் இருக்கிறார்கள் (எபேசியர் 2:20; 3:4-5 வசனங்களைப் பார்க்கவும்).

அப்போஸ்தலன் என்பவன் அதன் அர்த்தத்தின்படியே “அனுப்பப்பட்ட ஒருவனாக” இருக்கிறான். நீங்கள் அனுப்பப்படாவிட்டால், உங்களால் ஒரு அப்போஸ்தலனாக இருக்க முடியாது. எந்த அப்போஸ்தலனும் தன்னைதானே அனுப்பிக் கொள்ள முடியாது. இன்று அநேகர் தங்களைத் தாங்களே அப்போஸ்தலர் என்று அழைத்துக் கொண்டு, சுற்றித் திரிந்து ஊழியம்

செய்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் வேத வசனத்தின் நிபந்தனையை இவர்கள் நிறைவேற்றுவதில்லை. அப்போஸ்தலன் என்பவன் அனுப்பப்பட்ட ஒருவனாய் இருக்கிறான். அவன் தன்னை அனுப்பினவர்களுக்கு கணக்கு கொடுக்க வேண்டியவனாயும் இருக்கிறான்.

தீர்க்கதரிசிகள்

வெளிப்படுத்தின விசேஷம் என்ற புத்தகத்தில், ஒலிவ மரங்கள் குறிப்பாக தீர்க்கதரிசிகளுக்கு ஒரு அடையாளமாக காண்பிக்கப்பட்டு, விளக்கிச் சொல்லப்பட்டிருக்கின்றன (வெளிப்படுத்தின விசேஷம் 11-ம் அதிகாரத்தைப் பார்க்கவும்). ஒரு தீர்க்கதரிசியின் ஊழியம், விளக்குத்தண்டின் மீது வைக்கப்பட்டுள்ள விளக்குகள் எப்பொழுதும் தெளிவாகவும், பிரகாசமாகவும் எரியும்படி, விளக்குத்தண்டாகிய சபைக்கு புத்தம் புதிய எண்ணையாகிய வெளிப்பாட்டை தொடர்ந்து கொடுத்துக் கொண்டே இருக்கும் ஒரு ஒலிவ மரத்தைப் போல இருக்கிறது.

தீர்க்கதரிசி என்பவன் தேவனுடைய சார்பில் பேசுகிற ஒருவனாய் இருக்கிறான். தீர்க்கதரிசியினிடத்தில் ஒரு செய்தி உண்டு. அந்த செய்தி, தேவனிடமிருந்து ஒரு வெளிப்பாடாக நேரடியாக பெறப்படுகிறது. ஒரு குறிப்பிட்ட நேரத்தில், ஒரு குறிப்பிட்ட இடத்தில், ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் அல்லது ஒரு குறிப்பிட்ட கூடுகையில் கூடிவரும் கிறிஸ்தவர்களுக்கு கொடுக்கப்படும் ஒரு செய்தியாக அது இருக்கிறது. இதுதான் தீர்க்கதரிசியின் ஊழியத்தைச் செய்யும் அந்த மனுஷனை அல்லது அந்த மனுஷியை, தேவனுடைய வார்த்தையிலிருந்து பொதுவான சத்தியங்களை எடுத்து போதிக்கிற ஒரு பிரசங்கியாரிடமிருந்து வித்தியாசப்படுத்துகிறது. ஒரு தீர்க்கதரிசியிடம் குறிப்பான, தனிவகையான ஒரு செய்தி உண்டு.

உதாரணத்துக்கு, யோனா ஒரு பிரசங்கியாரைக் காட்டிலும் அதிக முக்கியத்துவம் வாய்ந்த ஒரு ஊழியத்தைச் செய்தான். யோனா நினிவே பட்டணத்திற்குள் சென்று, "நீங்கள் மனந்திரும்பாமல் இப்பொழுது வாழ்கிற பிரகாரமாகவே தொடர்ந்து வாழ்வீர்கள் என்றால், தேவன் உங்களை நியாயந்தீர்ப்பார்," என்று சொல்லியிருக்கலாம். அது உண்மையாகவும் இருந்திருக்கும். ஆனால் அவனிடத்தில் ஒரு குறிப்பான வெளிப்பாடு

இருந்தது. "நியாயத்தீர்ப்பு இன்னும் நாற்பது நாட்களுக்குள் வருகிறது," என்று சொல்லி அவன் அவர்களை எச்சரித்தான். அதுதான் அவனை தீர்க்கதரிசியாக்கிற்று.

சுவிசேஷகர்கள்

சுவிசேஷகன் என்ற வார்த்தை, "நற்செய்தி" என்ற அர்த்தமுடைய ஒரு கிரேக்க வார்த்தையிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது. சுவிசேஷகர்கள், நற்செய்தியை சுமந்து செல்லும் குறிப்பிட்ட வகை வேலையை பெற்றிருக்கிறார்கள். இவர்கள் எப்பொழுதும் ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு பிரயாணம் செய்து கொண்டே இருப்பார்கள். இவர்களால் ஓரிடத்தில் அதிக நாட்கள் தங்க முடியாது. காரணம், இவர்கள் எப்பொழுதும் இன்னும் சுவிசேஷத்தை கேள்விப்பட்டிராத மற்ற மக்களைக் குறித்தே சிந்தித்துக் கொண்டிருப்பார்கள்.

பவுல் ஒரு அப்போஸ்தலனாய் தன்னுடைய ஊழியத்தில் ஒரு சுவிசேஷகனுடைய வேலையையும் செய்து வந்தார். அவருடைய அப்போஸ்தல ஊழியத்தில் சுவிசேஷகனுடைய ஊழியமும் உள்ளடங்கியிருந்தது. பாருங்கள், சுவிசேஷகனுடைய ஊழியத்தின் பிரதான நோக்கம், பாவிகளை இரட்சகரிடம் அறிமுகப்படுத்தி, அவர்களை இரட்சிப்புக்குள்ளும், தண்ணீர் முழுக்கு ஞானஸ்நானத்திற்குள்ளும் நடத்துவதே ஆகும். அறிமுகத்தை உண்டாக்கிய பிறகு, அவர் அங்கேயே தங்கி, அறிமுக நிலையிலிருந்து இன்னும் ஆழமாக உள்ளே செல்வதில்லை. அவர் இன்னும் இரட்சகரிடம் அறிமுகப்படுத்தப்படாத மற்றவர்களை தேடிக் கண்டுபிடிக்கும்படி செல்கிறார்.

பாஸ்டர்கள் / மேய்ப்பர்கள்

பாஸ்டர் என்பவர் ஆடுகளின் மேய்ப்பர் ஆவார். இதற்குரிய கிரேக்க வார்த்தை, *பொய்மென்(poimen)* என்ற வார்த்தையாகும். இது பொதுவாக "மேய்ப்பர்" என்றே மொழிப்பெயர்க்கப்பட்டிருக்கிறது. ஒரே ஒரு இடத்தில் மட்டும், எபேசியர் 4:11-ம் வசனத்தில், ஆங்கிலத்தில் இது "பாஸ்டர்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. ஆனால் அந்த பட்டியலை வாசிக்கும்போது, அங்கே பயன்படுத்தப்பட்ட வார்த்தையும், *மேய்ப்பன்*தான் என்பதை அநேகர்

அறியாதிருக்கிறார்கள்.

இதை நான் சொல்லியே ஆக வேண்டும். பல ஆண்டுகளாக நான் இந்தக் குழப்பத்தோடு போராடிக் கொண்டிருந்தேன். எடுத்துக்காட்டிற்கு, பாஸ்டர்களைக் குறித்தும், மூப்பர்களைக் குறித்தும் நான் வழக்கமாகப் பேசுவதுண்டு. அப்படிப் பேசும்போது, பாஸ்டர் என்பவர் ஒரு நபர் என்பது போலவும், மற்றவர்கள் மூப்பர்கள் என்பது போலவும் நான் பேசுவேன். ஒருநாள் நான் புதிய ஏற்பாட்டை வாசித்துக் கொண்டிருந்தபோது, ஆவிக்குரிய விதத்தில் ஒரு மின்னலைப் போல வெளிச்சம் எனக்குள் பிரகாசித்தது. அது எனக்குள் ஒரு புரிந்துகொள்ளுதலை திடீரென்று கொண்டு வந்தது. *பாஸ்டர் (மேய்ப்பர்)* மற்றும் *மூப்பர்* என்ற பெயர்கள், ஒரே நபரையோ அல்லது ஒரே அழைப்பையோ அல்லது ஒரே ஊழியத்தையோ குறிக்கும் இரண்டு வித்தியாசமான பெயர்கள் என்பதை நான் அப்பொழுது புரிந்து கொண்டேன். புதிய ஏற்பாட்டு சபை ஒழுங்கைக் குறித்து நான் செய்து கொண்டிருந்த ஆராய்ச்சி, ஒரு நபர் சிறு சிறு தனித் துண்டுகளை ஒன்று சேர்த்து ஒரே படமாக்கும் (Jigsaw puzzle) முயற்சியைப் போல இருந்தது. பிரச்சனை என்னவென்றால், என்னிடத்தில் கூடுதலான ஒரு சிறு துண்டும் இருந்தது. நான் எவ்வளவு முயன்றாலும், வைப்பதற்கு இடமில்லாமல் என் கையில் ஒரு துண்டு எப்போதுமே மீதியாக இருந்தது. உண்மையில், இந்தக் கூடுதலான துண்டு என்னவென்றால், மேய்ப்பரை ஒரு ஊழியமாக அல்லது மூப்பர்களிலிருந்து வேறுபட்ட ஒரு நபராக சிந்திப்பதினால் உண்டான ஒன்றாகும். மூப்பர் என்பது ஒரு பெயர், பாஸ்டர் அல்லது மேய்ப்பர் என்பது அதே ஊழியத்துக்கான வேறொரு பெயராக இருக்கிறது.

வேதத்தில் மூப்பர்கள் கண்காணிகளாக இருந்தார்கள். மந்தையாகிய சபையை மேய்ப்பதே அவர்களுடைய வேலையாய், கடமையாய் இருந்தது. அவர்கள் உள்ளூர் சபையின் அங்கீகரிக்கப்பட்ட தலைவர்களாக இருந்தார்கள் என்பதில் எந்தக் கேள்வியும் இல்லை. உள்ளூர் சபையில், அவர்களுக்கு மேலே வேறொருவரும் இல்லை. நாம் அதை புரிந்து கொண்ட பிரகாரம், உள்ளூர் சபையின் பின்னணியில் எங்கோ ஒரு இடத்தில், ஒரு பாஸ்டர் இருந்திருப்பாரானால், பிறகு மூப்பர்களை வரவழைத்து, அவர்களுக்கு ஒரு சில கட்டளைகளைக் கொடுத்த பவுலின் செயல் ஒரு உச்சகட்ட

ஒழுங்கு மீறலாக இருந்திருக்கும். கவனியாமல் விடுமளவிற்கு அங்கே பின்னணியில் ஒரு பாஸ்டரும் இல்லை. இவர்கள் அனைவருமே கூட்டாக மேய்ப்பர்கள் அல்லது பாஸ்டர்களாக இருந்தனர். அவர்களே மூப்பர்களாகவும், கண்காணிகளாகவும், அல்லது பிஷப்மாராகவும் இருந்தனர்.

போதகர்கள்

தேவனுடைய ஜனத்திற்கு உபதேசத்தை விளக்குகின்றவரே போதகராவார். இந்த ஊழிய வரத்தை உடைய ஒரு நபர், வேதவசனங்களைச் சரியாகப் புரிந்து கொள்கிற ஒருவராக இருக்க வேண்டியது அவசியம்.

போதிப்பதில் இரண்டு தளங்கள் இருப்பதை நான் பார்க்கிறேன். இயேசு கிறிஸ்துவின் முழு சபையாகிய உலகளாவிய சபைக்கு செய்கிற போதக ஊழியம் ஒரு தளத்திலும், உள்ளூர் சபைக்குப் போதிக்கிற ஊழியம் இன்னொரு தளத்திலும் நடக்கிறது.

முழு சரீரமாகிய உலகளாவிய சபைக்கு போதகராயிருக்கும் ஒருவரின் ஊழியம் பொதுவாக எல்லோருக்கும் செய்யப்படுகிற ஒரு ஊழியமாக இருக்கிறது. இதை ஒரு சுவிசேஷகன் அல்லது அப்போஸ்தலனுடைய ஊழியத்தோடு ஒப்பிட்டுச் சொல்லலாம். இது எங்கும் சுற்றித் திரிந்து, பெரிய அளவில் செய்யப்படுகிற ஒரு ஊழியமாக இருக்கிறது. ஆனால் உள்ளூர் சபைக்குள் போதிக்கும் பொறுப்பில் இருப்பவர்கள் தனிநபர்களுக்கோ, சிறு சிறு குழுக்களுக்கோ போதிக்கும் ஊழியத்தைச் செய்கின்றார்கள்.

போதிக்கும் ஊழியத்தின் இந்த அம்சம், சுவிசேஷகர்களுடைய ஊழியத்துடன் உடன் இணைந்து செயல்படுகிறது. பவுல் எழுதுகிறார், "நான் நட்டேன், அப்பொல்லோ நீர் பாய்ச்சினான், தேவனே விளையச்செய்தார்" (1 கொரிந்தியர் 3:6). விவசாயத்தில் பின்பற்றப்படும் வழிமுறைகளிலிருந்து கொடுக்கப்பட்டிருக்கிற இந்த எளிமையான படம் நமக்கு நல்லதோர் உதாரணத்தை கொடுக்கிறது. சுவிசேஷம் பிரசங்கிக்கப்படும் இடங்களில், தேவனுடைய வார்த்தை விதையாக நடப்படுகிறது. ஆனால் அதன் தொடர்ச்சியாக, நீர் பாய்ச்சப்படா விட்டால், அந்த விதை வளர்ந்து பலன் கொடுக்காது. ஆகவே சுவிசேஷம் அறிவித்த பிறகு, அதற்கு அடுத்த ஊழியமாக நீர் பாய்ச்சுகிற ஊழியம் செய்யப்பட்டாக வேண்டும். அதுதான்

அப்பொல்லோவின் போதக ஊழியமாக இருந்தது.

கிறிஸ்து - பிழையற்ற, பரிபூரணமான உதாரணம்

இந்த ஊழிய வரங்கள் கிறிஸ்துவினுடைய பரமேறுதலின் வரங்களாய் இருக்கின்றன. அதாவது, அவர் பரமேறிச் சென்ற பிறகு, தமது சரீரமாகிய சபைக்கு அவர் அருளின வரங்களாய் இருக்கின்றன. இதில் அவர் எடுத்து வைத்த முதல் அடி, இந்த வரங்களின் மூலம் தமது ஜனங்களுக்கு தலைமைத்துவத்தை ஏற்படுத்திக் கொடுக்கும் வேலையாய் இருந்தது. தலைவர்கள் இல்லாத ஜனங்கள், தோற்கடிக்கப்பட்டவர்கள் என்பதினால், இது நிச்சயமாக அடிப்படைத் தேவையான ஒரு விஷயமாக இருக்கிறது. மேய்ப்பன் இல்லாத ஆடுகள் பெரும்பாலும் சிதறடிக்கப்படும். அவைகள் காட்டு மிருகங்களுக்கு இரையாகும்.

பின்வரும் குறிப்பை நாம் புரிந்து கொள்ள வேண்டியது மிகவும் அவசியமாயிருக்கிறது: தனிநபர்கள் இந்த வரங்களாக செயல்படுகிறார்கள். தேவன் அப்போஸ்தலர்களை வரங்களாகக் கொடுத்தார். அவர் தீர்க்கதரிசிகளை வரங்களாகக் கொடுத்தார். அவர் சுவிசேஷகர்களை வரங்களாகக் கொடுத்தார். அவர் மேய்ப்பர்கள் அல்லது பாஸ்டர்களை வரங்களாகக் கொடுத்தார். அவர் போதகர்களையும் வரங்களாகக் கொடுத்தார். திரும்பவும் எபேசியர் 4:7-ம் வசனத்தை பாருங்கள்: "கிறிஸ்துவினுடைய ஈவின் அளவுக்குத்தக்கதாக நம்மில் அவனவனுக்குக் கிருபை அளிக்கப் பட்டிருக்கிறது." இந்த வசனத்தில் சொல்லப்பட்டிருக்கும் *ஈவு* என்ற வார்த்தை, நாம் இதுவரை ஆராய்ந்துக்கொண்டிருக்கும் *வரம்* என்ற வார்த்தையிலிருந்து வித்தியாசமானது. இது *டொரியா(dorea)* என்ற கிரேக்க வார்த்தையாகும். இந்த வசனத்தைக் குறித்து எனக்கு ஒரு கோட்பாடு உண்டு.

டொரியா என்கிற இந்த வார்த்தை புதிய ஏற்பாட்டில் வழக்கமாக, ஒரு வரமாகச் செயல்படும் ஒரு தெய்வீகமான நபரைக் குறிக்கும்படி பயன்படுத்தப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட வரங்கள் இரண்டு உள்ளன. ஒன்று இயேசு, இன்னொருவர், பரிசுத்த ஆவியானவர். இதிலிருந்து நான் ஒன்றை குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். இயேசு என்ற தனிநபருடைய

வரத்திலிருந்து ஒரு குறிப்பிட்ட அளவு, இந்த “நபர்”களின் வரங்களில் செயல்படுகிறது.

இதை நான் இவ்வாறு விளக்குகிறேன். இந்த வரங்களில் ஒவ்வொரு வரத்தினுடைய பிழையற்ற, முழுநிறைவான, பரிபூரணமான உதாரணமாக இயேசுவே இருக்கிறார். அவரே பரிபூரணமான அப்போஸ்தலனாய் இருக்கிறார், பரிபூரணமான தீர்க்கதரிசியாய் இருக்கிறார், பரிபூரணமான சுவிசேஷகராய் இருக்கிறார், பரிபூரணமான மேய்ப்பராய் இருக்கிறார், பரிபூரணமான போதகராய் இருக்கிறார். ஒரு மனுஷனோ அல்லது ஒரு மனுஷியோ தன்னுடைய ஊழியத்தில் என்னவாக மாறுகிறார் என்பது, இயேசு அந்த நபருக்கு எவ்வளவு பகிர்ந்தளிக்கிறார் என்பதைச் சார்ந்ததாய் இருக்கிறது. ஆகையால், உங்களுடைய ஊழியம் இந்தப் பிரிவுகளில் ஏதாகிலும் ஒன்றாக இருக்குமாயின், அது உங்களுக்குள் இருக்கும் கிறிஸ்து ஒரு மேய்ப்பனாக, ஒரு போதகராக, ஒரு சுவிசேஷகராக, ஒரு தீர்க்கதரிசியாக, ஒரு அப்போஸ்தலனாக தனது ஊழியத்தை நிறைவேற்றுவதாகும்.

இந்த ஊழிய வரங்கள், ஆவியானவரின் வரங்களிலிருந்து வித்தியாசமானவை. ஆவியானவர் வரங்கள் என்பது, பரிசுத்த ஆவியானவர் தம்மையே விசுவாசிக்குள்ளிருந்து வெளிப்படுத்தும் குறிப்பிட்ட தருணங்களாக இருக்கின்றது. அந்தத் தருணங்கள் தற்காலிகமாகவும், குறுகிய காலத்திற்கு மட்டுமே நிலைத்திருக்கின்றன. அவைகள் ஒரு மின்னல் வெளிச்சத்தைப் போல வரும் போகும். ஆனால் ஊழிய வரங்கள், வாழ்நாள் முழுவதற்கும் செயல்படும் வரங்களாய் இருக்கின்றன. எது உங்களை ஒரு மேய்ப்பராக அல்லது ஒரு பாஸ்டராக தகுதிப்படுத்துகிறது? நீங்கள் வேதாகமக் கல்லூரியில் பட்டப்படிப்பு படித்து முடித்து விட்டீர்கள் என்பது உங்களை தகுதிப்படுத்தி விடாது. மாறாக, மேய்ப்பரும், பாஸ்டருமாகிய இயேசு தம்மையே உங்களில் தம்முடைய ஜனங்களுக்காக திரும்ப விட்டுச் சென்றிருக்கிறார் என்பதே அந்த உண்மையாகும். ஒரு சுவிசேஷகருக்கும், இன்னும் மற்ற ஊழிய வரங்களுக்கும் இது உண்மையாயிருக்கிறது.

இந்த வரங்கள் முழுவதும் தேவனுடைய கட்டுப்பாட்டில் மட்டுமே உள்ளன; இவர்கள் மனிதர்களுடைய தேர்ந்தெடுப்பை சார்ந்திருப்பதில்லை. ஒரு

உதாரணத்துக்கு, நாம் ஒரு பாஸ்டரை வேலைக்கு அமர்த்துவதில்லை (தேவன் அதை தடை செய்வாராக). அப்படி வேலைக்கு அமர்த்தப்பட்ட ஒரு மேய்ப்பர் நமக்குக் கிடைப்பாரானால், அவர் சம்பளத்துக்கு மாரடிக்கிற ஒரு பாஸ்டராகவே நடந்து கொள்வார். ஆனால் தேவன்தான் மேய்ப்பனை தேர்ந்தெடுக்கிறார். நாம் செய்யக்கூடியதெல்லாம், தேவனுடைய தேர்வை அங்கீகரித்து, அதை ஏற்றுக் கொள்வதே ஆகும். ஆக, தேர்ந்தெடுத்தல் என்பது நம்முடையதல்ல. காரணம், சபையானது மேலே பரலோகத்திலிருந்து நிர்வகிக்கப்படுகிறது. சபை என்பது ஒரு ஜனநாயக அமைப்பல்ல. எல்லாவற்றிற்கும் தலையாய் இருப்பவர் இயேசுவே. அவர் மேலேயிருந்து கிழ்நோக்கி சகலத்தையும் இயக்குகிறார். அவருடைய செயல்பாட்டின் முதல் தளம், இந்த ஐந்து முதல் நிலை ஊழியங்களாகும். இவைகள் இல்லாமல், சபை இயங்க வேண்டிய விதத்தில் ஒருபோதும் இயங்க முடியாது.

இந்த வரங்களோடு சம்பந்தப்பட்ட வார்த்தைகளை குறித்த நம்முடைய சிந்தை, பாரம்பரியத்தினாலும், வார்த்தைகளின் தவறான பயன்பாட்டினாலும், திரிக்கப்பட்டுள்ளது. ஒரு எடுத்துக்காட்டிற்கு, அநேக சபைகளில் அவர்கள் சுவிசேஷகர்களை வரவேற்பார்கள். ஆனால் அதே சபைகளுக்குள் பெரும்பாலானவைகளில் அப்போஸ்தலர்களுக்கு இடம் கொடுக்க மாட்டார்கள். இந்த விஷயத்தில், புதிய ஏற்பாட்டில் ஒரே ஒரு மனிதன்தான் சுவிசேஷகன் என்று அழைக்கப்பட்டான் என்ற தகவல் ஆச்சரியத்துக்குரியது. அவனுடைய பெயர் பிலிப்பு (அப்போஸ்தலர் நடபடிகள் 21:8ஐ பார்க்கவும்). ஆனால் அப்போஸ்தலர்கள் என்று அழைக்கப்பட்ட 28 நபர்களை நான் எண்ணியிருக்கிறேன். பெந்தெகோஸ்தேக்கு முன்பு 14 பேர், அதற்கு பின்பு 14 பேர். நாம் முன்பே பார்த்தபடி, தேவன்தான் இவைகளை சபையில் "ஏற்படுத்தினார்" (1 கொரிந்தியர் 12:28). இது நம்மை ஒரு கேள்வி கேட்கும்படி நடத்துகிறது: அப்படியானால், அவர்களை அகற்றுவதற்கு யாருக்கு அதிகாரம் இருக்கிறது?

மாதிரி வரங்கள்

மாதிரி வரங்கள் என்று நான் என்ன அர்த்தத்தில் சொல்கிறேன் என்றால், ஆதித்திருச்சபையில் என்ன வரங்கள் செயல்பட்டன என்பதை விவரித்துக் காண்பிக்கக்கூடிய எடுத்துக்காட்டான, முக்கியமான வரங்களைத்தான் மாதிரி

வரங்கள் என்று நான் சொல்கிறேன். ரோமர் மற்றும் கொரிந்தியருக்கு எழுதின நிருபங்களில், பவுல் ஒன்பது முன்மாதிரியான, முக்கியமான வரங்களை குறிப்பிடுகிறார். பேதுரு தனது முதல் நிருபத்தில், இன்னும் இரண்டு வரங்களை கூடுதலாகக் குறிப்பிடுகிறார். இந்த பதினொன்று வரங்களோடு இந்தப் பட்டியல் முடிந்து விடவில்லை. அவைகள், பரிசுத்த ஆவியானவரின் கிரியைக்கு எடுத்துக்காட்டுகளாக வேதவசனங்களில் கொடுக்கப்பட்டுள்ளன. இதை நீங்கள் வாசிக்கும் போது, ஒவ்வொன்றையும் குறித்து சிந்தித்து, "இந்த *கரிஸ்மாட்டா* / கிருபை வரங்களில் எவைகளை நான் பெற வேண்டும் என்று விரும்புகிறீர் ?" என்று கர்த்தரிடம் கேளுங்கள்.

இந்த முன்மாதிரியான, முக்கியமான வரங்களை குறிப்பிடுகின்ற மூன்று வசனங்களுக்கு நாம் திரும்புவோம்:

> *நமக்கு அருளப்பட்ட கிருபையின் படியே நாம் வெவ்வேறு வரங்களுள்ளவர்களான படியினாலே, நம்மில் தீர்க்கதரிசனஞ் சொல்லுகிற வரத்தையுடையவன், விசுவாசப் பிரமாணத்துக் கேற்றதாகச் சொல்லக்கடவன். ஊழியம் செய்கிறவன், ஊழியத்திலும், போதிக்கிறவன் போதிக்கிறதிலும், புத்தி சொல்லுகிறவன் புத்தி சொல்லுகிறதிலும், தரித்திருக்கக்கடவன். பகிர்ந்து கொடுக்கிறவன், வஞ்சனையில்லாமல் கொடுக்கக்கடவன், முதலாளியானவன் ஜாக்கிரதை யாயிருக்கக் கடவன், இரக்கஞ் செய்கிறவன் உற்சாகத்துடன் செய்யக்கடவன்.*
>
> *ரோமர் 12:6-8*

> *தேவன், அப்போஸ்தலர்களையும், . . . தீர்க்கதரிசிகளையும் . . . போதகர்களையும் . . . ஊழியங்களையும் . . . ஆளுகைகளையும் . . . ஏற்படுத்தினார்.*
>
> *1 கொரிந்தியர் 12:28.*

> *முறுமுறுப்பில்லாமல், ஒருவரையொருவர் உபசரியுங்கள்.......... ......ஒருவன் போதித்தால், தேவனுடைய வாக்கின் படி போதிக்க கடவன். . . .*
>
> *1 பேதுரு 4:9, 11*

தீர்க்கதரிசனம்

ஒரு தீர்க்கதரிசி, ஒரு "தனிநபர் வரமாகவே" ஊழியம் செய்து வாழ்கிறார். ஆனால் ஒரு விசுவாசிக்கு, மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ளும்படி ஒரு தீர்க்கதரிசனம் கொடுக்கப்படலாம். ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் ஒரு முறை பரிசுத்த ஆவியானவரால் அருளப்படும் ஒரு தீர்க்கதரிசனமாக இது இருக்கிறது.

சபைக்கு தீர்க்கதரிசனம் சொல்லுகிறவன் என்ன செய்கிறான்? 'தீர்க்கதரிசனம் சொல்லுகிறவனோ மனுஷருக்குப் பக்தி விருத்தியும், புத்தியும், ஆறுதலும் உண்டாக்கத் தக்கதாகப் பேசுகிறான்..................தீர்க்கதரிசனம் சொல்லுகிறவனோ, சபைக்குப் பக்திவிருத்தியுண்டாகப் பேசுகிறான்" (1 கொரிந்தியர் 14:3-4). தீர்க்கதரிசனமானது, பக்திவிருத்தி, புத்தி கூறுதல் மற்றும் ஆறுதல் உண்டாகப் பேசுவதன் எல்லைக்கு உட்பட்டுதான் செயல்படுகிறது. காரணம், தேவன் விசுவாசிகளை அதைரியப்படுத்துவதோ, மனச்சோர்வுக்குள்ளாக்குவதோ கிடையாது. அவர் விசுவாசிகளுக்கு எதிராக நியாயத்தீர்ப்பின் குறித்த எச்சரிக்கைகளை ஊற்றுவதில்லை. அப்படிப்பட்ட எச்சரிக்கைகள் அவிசுவாசிகளின் மேல்தான் ஊற்றப்படுகின்றன.

'பக்தி விருத்தி' என்ற வார்த்தை, பழமையான, மதப்பாரம்பரியம் நிறைந்த ஒரு வார்த்தை போலத் தெரிகிறது. ஆங்கிலத்தில் *edifice* என்ற வார்த்தை, ஒரு கட்டிடத்தைக் குறிக்கிறது. இது பெரும்பாலானோருக்குத் தெரியும். எனவே *பக்திவிருத்தி உண்டாக்குவது (To edify)* என்றால் 'கட்டியெழுப்புவது' அல்லது 'பலப்படுத்துவது' என்று அர்த்தம். அதாவது கிறிஸ்துவினுடைய சரீரமாகிய சபையின் அவயங்களாய் கிறிஸ்தவர்கள், தங்களுடைய குறிப்பிட்ட வேலைகளை பிரயோஜனமான விதத்தில் செய்யக் கூடியவர்களாய் மாறும்படி அவர்களை உருவாக்குவதாகும். நீங்கள் தீர்க்கதரிசன வரத்தை உடையவராய் இருக்கிறீர்கள் என்றால், அது நீங்கள் கர்த்தருக்கும் அவருடைய ஜனங்களுக்கும் சிறப்பான விதத்தில் ஊழியம் செய்யும்படி உங்களை உருவாக்க வேண்டும்.

'புத்தி சொல்லுதல்' என்ற வார்த்தைக்கு "எழுச்சியூட்டுதல், ஊக்கமளித்தல், அறிவுறுத்துதல், தைரியப்படுத்துதல்" என்று அர்த்தமாகும். அறிவுறுத்துதல் என்ற அர்த்தம், கடுமையாக எச்சரித்தல், இன்னும் கடிந்து

கொள்ளுதலையும் உள்ளடக்கியிருக்கிறது. ஆனால் அறிவுறுத்துதல் என்பது, தண்டனைக்கேதுவாக நியாயந்தீர்ப்பதை உள்ளடக்கியிருக்கவில்லை. "ஆனபடியால், கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களாயிருந்து, மாம்சத்தின் படி நடவாமல், ஆவியின்படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத் தீர்ப்பில்லை" (ரோமர் **8:1**).

'ஆறுதல் உண்டாகப் பேசுதல்' என்ற வார்த்தையை அதற்கு இணையான தற்கால வார்த்தைகளில் சொன்னோமென்றால், "உற்சாகப்படுத்துதல்" என்று சொல்லலாம்.

உண்மையான தீர்க்கதரிசனமும், குறிப்பாக, புத்தி சொல்லுதலும் ஒருவரை குற்றப்படுத்தி ஆக்கினைக்குள்ளாக தீர்க்காது என்று நான் மேலே குறிப்பிட்டிருந்தேன். இந்தக் குறிப்பை நான் மறுபடியும் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். காரணம், பல வருடங்களில், கிறிஸ்தவர்கள் தீர்க்கதரிசனம் என்ற பெயரில் சொல்பவைகளை நான் கேட்டிருக்கிறேன். ஆனாலும், அவை உண்டாக்கின விளைவுகளை தொகுத்துச் சொன்னால், அவை குழப்பத்திற்குள்ளும், குற்றஞ்சாட்டி நியாயந்தீர்த்தலுக்குள்ளும் நடத்தியிருக்கின்றன என்றுதான் சொல்ல முடியும். இது நிச்சயமாய் பரிசுத்த ஆவியானவரின் மெய்யான ஒரு வெளிப்படுத்தல் கிடையாது. தேவன் ஒருபோதும் குழப்பத்தை உண்டாக்குகிறவர் அல்ல. பரிசுத்த ஆவியானவரும் தேவனுடைய ஜனங்களை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிற ஊழியத்தைச் செய்கிறவரல்ல.

உண்மையான தீர்க்கதரிசனம் உரைத்தல், பிசாசின் நோக்கத்தை நிறைவேற்றுவதில்லை, அது அவனுடைய நோக்கங்களை *ஒன்றுமில்லாமல் ஆக்கி கவிழ்த்துப் போடுகிறது*. தீர்க்கதரிசனங்கள் என்ற பெயரில் சொல்லப்படுகிறவைகள், ஒருவரை ஊக்கமிழக்கச் செய்து, அதைரியப்படுத்தி, குற்ற உணர்வுக்குள் நடத்தினால், அது பிசாசின் வேலையை அப்படியே செய்வதற்கு ஒப்பாகும். தேவனுடைய ஜனங்களுக்கு எதிராக சாத்தானால் பெரும்பாலும் பயன்படுத்தப்படுகிற மகா பயங்கரமான ஆயுதங்கள், அவர்களை ஊக்கமிழக்கச் செய்து, அதைரியப்படுத்துவதும், அவர்களை குற்ற உணர்வுக்குள் நடத்துவதுமேயாகும். உங்களுக்கு நேராக வரும் ஒரு செய்தியோ அல்லது ஒரு ஆலோசனையோ அல்லது வேறு ஏதாகிலும் ஒன்றோ உங்களை அதைரியப்படுத்தி, ஊக்கமிழக்கச் செய்தால், அது

பரிசுத்த ஆவியானவரிடமிருந்து வந்தது என்று சொல்லாதிருங்கள்.

கிறிஸ்தவர்களுக்கிருக்கும் ஓர் பிரச்சனை என்னவென்றால், அவர்கள் குற்றவுணர்வுக்குள்ளாகும்போது, தங்களைத் தாழ்த்துவதாக எண்ணிக் கொண்டு, தாங்கள் எவ்வளவு மோசமானவர்கள் என்பதையே மற்ற எல்லோரிடமும் சொல்லிக் கொண்டு சுற்றித் திரிவார்கள். ஆனாலும் நீங்கள் இயேசுகிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டியாய் இருக்கிறீர்கள், நீங்கள் தேவனுடைய கைவேலைப்பாடாய் இருக்கிறீர்கள் என்பதுதான் வேதாகமத்தின் சத்தியமாயிருக்கிறது. அப்படியிருக்கும்போது, நீங்கள் உங்களையே குறை கூறிப் பேசும் போதெல்லாம், நீங்கள் தேவனுடைய கிரியைகளைத்தான் குறை கூறுகிறீர்கள். நீங்கள் தேவனை மகிமைப்படுத்தவில்லை. பிசாசைத்தான் மகிமைப்படுத்துகிறீர்கள்.

ஊழியம் செய்தல்/பணிவிடை செய்தல்

ஊழியம் என்பதற்கான கிரேக்க வார்த்தையின் அர்த்தம் "பணிவிடை செய்தல்" என்பதாகும். எந்த சொல்லிலிருந்து *கண்காணி(deacon)* என்ற வார்த்தை பெறப்பட்டதோ, அதனோடு இதற்கு தொடர்பு உண்டு. இது நம் கண்களால் பார்க்கக்கூடிய இந்த உலக வாழ்க்கையில், ஒரு அடிமை செய்யக்கூடிய பணிவிடை ஊழியத்திற்கு ஒத்த அர்த்தத்தை உடையதாயிருக்கிறது.

கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில், மற்றவர்களுக்கு பணிவிடை செய்வதே, மற்றவர்களை வழிநடத்திச் செல்லும் தலைமை நிலையை அடைவதற்கான வழியாய் இருக்கிறது. கர்த்தர் திடீரென்று ஒருவரை தேர்ந்தெடுத்து, உடனே அவரை ஒரு தலைவராக உயர்த்தி விடுவதில்லை என்றுதான் நான் நினைக்கிறேன். இயேசு தம்முடைய சீஷர்களை தம்மிடம் அழைத்து, "உங்களில் எவனாகிலும் பெரியவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்குப் பணிவிடைக்காரனாயிருக்கக்கடவன். உங்களில் எவனாகிலும் முதன்மையானவனாயிருக்க விரும்பினால் அவன் உங்களுக்கு ஊழியக்காரனாயிருக்கக்கடவன்," என்றார் (மத்தேயு **20:26-27**).

ஒன்றை நீங்கள் கவனிக்க வேண்டும். நீங்கள் எவ்வளவு மேலே உயர செல்ல விரும்புகிறீர்களோ, அவ்வளவு தாழ்வாக கீழேயிருந்து நீங்கள் ஆரம்பிக்க வேண்டும். நீங்கள் "தலைசிறந்த ஒரு நபராக" இருக்க

போகிறீர்களென்றால், நீங்கள் முதலில் ஒரு வேலைக்காரனாக மாற வேண்டும். நீங்கள் 'முதல்' இடத்தை அடையப் போகிறீர்கள் என்றால், நீங்கள் முதலில் அடிமையாக மாற வேண்டும்.

போதித்தல்

தீர்க்கதரிசனம் உரைத்தலைப் போல, போதித்தலும், நாம் முன்பு பார்த்த தனிநபர் வரங்களில் ஒன்றாய் இருக்கிறது. அது இங்கு திரும்பவும் மாதிரி வரங்களின் பட்டியலிலும் சொல்லப்பட்டிருக்கிறது.

நம்முடைய போதனையின் இலக்கு அன்பாய் இருக்கிறது. அன்பை உண்டாக்காத எந்த ஒரு போதனையும் தன்னுடைய இலக்கை தவற விட்டு விட்டது என்றுதான் நான் விசுவாசிக்கிறேன். நாம் பார்க்கப் போகிற முதல் வேதவசனம், இந்த ஊழிய வரத்தை தீவிரமாய் நாடித் தேடுவதில் உங்களுக்கிருக்கும் ஆர்வத்தை தணியச் செய்யக் கூடும். அந்த வசனம் இவ்வாறு சொல்கிறது: "என் சகோதரரே, அதிக ஆக்கினையை அடைவோம் என்று அறிந்து உங்களில் அநேகர் போதகராகாதிருப்பீர்களாக" (யாக்கோபு 3:1).

நான் இதன் முழு அர்த்தத்தையும் ஆழமாக சிந்தித்துப் பார்த்து, இங்கு சொல்லப்பட்டிருக்கிற *'போதகர் (teacher)'* என்ற வார்த்தை, *'உபதேசங்களைப் போதிக்கும் போதகர்'* என்ற அர்த்தத்தில் வருகிறது என்பதை நான் புரிந்து கொண்டேன். அப்போஸ்தலர் நடபடிகள் 2:42-ம் வசனம், எருசலேமிலிருந்த புதிய விசுவாசிகளை குறித்து இவ்வாறு சொல்கிறது: ''அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம் பண்ணுகிறதிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்." அப்போஸ்தலர்களின் உபதேசத்தில் தரித்திருப்பதுதான், போதிக்கின்ற பணியின் இன்றியமையாத, முதன்மையான நிபந்தனையாயிருக்கிறது. எங்கேயெல்லாம் சபைகள் அப்போஸ்தல உபதேசத்தை விட்டு விலகிச் செல்கின்றதோ, அங்கே அவர்கள் பிரச்சனைகளுக்குள்ளும், தோல்விக்குள்ளும் சிக்கிக் கொண்டதைத்தான் பார்க்க முடியும். வேதாகம உபதேசங்களைப் போதிக்கும் இந்த பணியைக் குறித்துத்தான் யாக்கோபு இங்கு பேசுகிறார் என்று நான் விசுவாசிக்கிறேன்.

போதிக்கும் பணியைச் செய்வதில் இரண்டு தளங்கள் உண்டு.

வேதாகமத்திலிருந்து நேரடியாக போதனைகளை எடுத்து போதிப்பவர்களும் உண்டு. இன்னொருவர் போதிப்பதை எடுத்து அதைத் திரும்ப மற்றவர்களுக்கு போதிப்பவர்களும் உண்டு. வேதாகமத்திலிருந்து நேரடியாக எடுத்து போதிக்கிறவர்களுக்கு, எதைப் போதிக்க வேண்டும் என்று தீர்மானிக்கின்ற பொறுப்பு இருக்கிறது. இன்னொருவர் போதித்ததை எடுத்து போதிக்கிறவர்கள், தங்களுக்கு என்ன கற்பிக்கப்பட்டதோ அதையே போதிக்கிறார்கள்.

2 தீமோத்தேயு 2:2-ம் வசனத்தில் பவுல் சொல்கிறார்: "அநேக சாட்சிகளுக்கு முன்பாக நீ என்னிடத்தில் கேட்டவைகளை மற்றவர்களுக்குப் போதிக்கத்தக்க உண்மையுள்ள மனுஷர்களிடத்தில் ஒப்புவி." இந்த வசனத்தில் நான்கு தலைமுறைகள் சுட்டிக் காண்பிக்கப்பட்டிருக்கின்றன என்று சொல்லி நான் கேள்விப்பட்டிருக்கிறேன். இங்கே பவுல் இருக்கிறார், தீமோத்தேயு இருக்கிறார், தீமோத்தேயுவினால் போதிக்கப்பட்ட உண்மையுள்ள மனுஷர்கள் இருக்கின்றனர் மற்றும் இவர்கள் யாருக்குப் போதிக்கப் போகிறார்களோ அவர்களைக் குறித்தும் இங்கு சொல்லப்பட்டிருக்கிறது. பவுல், தீமோத்தேயுவுக்கு என்ன போதித்திருந்தாரோ அதையே அவர்கள் போதிக்க வேண்டும். இது ஒரு வகையில் அப்போஸ்தல உபதேசத்தில் நிலைத்திருப்பதாகும்.

புத்திமதி கூறுதல்/உற்சாகப்படுத்தல்

இந்த ஊழிய வரத்தை, நான் *புத்திமதி கூறுதல்* அல்லது *உற்சாகப்படுத்தல்* என்று குறிப்பிட்டுள்ளேன். ஏனென்றால் இதற்கு பயன்படுத்தப்பட்டிருக்கிற கிரேக்க வார்த்தை, "உற்சாகப்படுத்துதல்" என்ற அர்த்தமுடைய ஒரு வார்த்தையாகும். கிறிஸ்துவின் சரீரமாகிய சபைக்கு உற்சாகமூட்டி, ஊக்கப்படுத்துகிற இந்த ஊழியம் பெருமளவில் தேவை என்பதை நீங்கள் ஒப்புக் கொள்கிறீர்களா? அதைரியப்படுத்துதல் என்பது பிசாசின் மகா வலிமையான ஆயுதங்களில் ஒன்று என்றுதான் நான் நினைக்கிறேன்.

இங்கே பயன்படுத்தப்பட்டிருக்கிற வார்த்தைக்கு இரண்டு அர்த்தங்கள் உண்டு. நாம் அவ்வார்த்தைகளை ஆங்கிலத்தில் இன்னும் அழகாகச் சொல்ல முடியும். "ஒருவரை உற்சாகமூட்டி எழுச்சியூட்டுதல் (cheer up)" அல்லது

"தட்டியெழுப்பு (stir up)". ஜனங்கள் உற்சாகமிழந்து சோர்ந்துப் போயிருந்தால், நீங்கள் அவர்களை உற்சாகப்படுத்துவீர்கள். ஜனங்கள் சோம்பலாய் அல்லது களைத்துப் போயிருந்தார்கள் என்றால், நீங்கள் அவர்களைத் தட்டியெழுப்புவீர்கள்.

கொடுத்தல்/பகிர்ந்து கொள்ளுதல்

கொடுத்தல் என்பதற்கான கிரேக்க வார்த்தையின் அர்த்தம் "மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ளுதல்" என்பதாகும். பகிர்ந்து கொள்வதும் ஒரு ஊழியம்தான் என்பதை ஒருவேளை நீங்கள் இன்னும் அறியாதிருக்கலாம். இந்த ஒரு காரணத்திற்காக, கிறிஸ்தவர்கள் எல்லாரும் ஏழைகளாக இருக்க வேண்டுமென்று தேவன் விரும்புகிறார் என்பதை நான் நம்புகிறதில்லை. தேவன் சில கிறிஸ்தவர்களுக்கு ஐசுவரியத்தை கொடுத்து ஆசீர்வதிக்கிறார். ஏன் ? காரணம், தேவன் அவர்களுக்கு பகிர்ந்து கொடுக்கும் ஒரு ஊழியத்தைக் கொடுத்திருக்கிறார். அவர்கள் தங்களுடைய பொருள் வளத்தை தேவனுடைய ராஜ்யத்திற்காக பயன்படுத்துகிறார்கள். தேவனுடைய ஊழியக்காரர்களை ஆசீர்வதிக்கவும், ஊழியத்தின் வேலைகள் நடக்கும்படி உதவி செய்யவும் அவர்கள் தங்களுடைய ஐசுவரியங்களை பயன்படுத்துகிறார்கள்.

நான் சொல்லப் போகும் விஷயம், எதையும் யோசிக்காமல் சொல்வதைப் போலத் தெரியலாம். ஆனாலும் நான் இதை உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். இந்த நாட்களில், தேவனுடைய ராஜ்யத்திற்காக நான் ஜெபிக்கும்போது, தேவன் தம்முடைய இராஜ்யத்தில் பணத்தை, அவர் என்ன செய்ய விரும்புகிறாரோ அதைச் செய்து கொண்டிருக்கும் நபர்களுக்கும், ஊழியங்களுக்கும், அந்தப் பணிகளுக்கும் நேராக திருப்பி விட வேண்டுமென்று ஜெபிக்கிறேன். மிகவும் அதிகமான பணம், பெயரளவில் செய்யப்படுகின்ற ஊழியங்களுக்கும், மதம் என்ற பெயரில் நடக்கின்ற வேலைகளுக்கும் அனுப்பப்பட்டு, வீணடிக்கப்படுவதை நான் பார்க்கிறேன். இது எனக்கு மிகவும் வேதனையாக இருக்கிறது. கொடுத்தல் அல்லது பகிர்ந்தளித்தலுக்கு நிறைய ஞானமும், பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலுக்கு உணர்வுள்ளவர்களாயிருப்பதும் அவசியமாயிருக்கிறது.

வழி நடத்துதல்/ஆளுகை செய்தல்

New American Standard மற்றும் *New International Version* என்ற ஆங்கில வேதாகமங்களின் மொழிபெயர்ப்புகளில், *வழிநடத்துதல்* என்ற வார்த்தை, “ஆளுகை செய்தல்” என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. அதற்கு அர்த்தம், “எல்லோருக்கும் முன்பாக எழுந்து நிற்பது” என்பதாகும்.

ஒரு மனிதன் தன் சொந்த குடும்பத்தை நடத்த அறியாதவனாய் இருந்தால், அவனால் தேவனுடைய சபையை நடத்த முடியாது என்று பவுல் போதிக்கிறார் (1 தீமோத்தேயு 3:5-ம் வசனத்தைப் பாருங்கள்). அதே வார்த்தைதான் இங்கே பயன்படுத்தப்பட்டிருக்கிறது. அதன் அர்த்தம், பொறுப்பேற்றுக் கொள்வது, ஒரு தலைவராயிருப்பது, ‘‘முன்னின்று நடத்துவது,” பாதுகாவலனாயிருப்பது என்பதாகும். நீங்கள் வழிநடத்திச் செல்கிற மக்களுக்கும், அவர்களை எதிர்க்கிற சக்திகளுக்கும் நடுவில் நிற்பது என்று இதற்கு அர்த்தமாகும். ஒரு தலைமையில்லாமல் ஆரம்பித்த எந்த ஒரு வேலையும் தடுமாறும்.

இரக்கங்காட்டுதல்

‘‘இரக்கம் செய்கிறவன்(காண்பிக்கிறவன்) உற்சாகத்துடனே செய்யக்கடவன்(காண்பிக்கக்கடவன்)” (ரோமர் 12:8). இந்த ஊழியம் நமக்கு எவ்வளவு அவசியமாய், அத்தியாவசியமாய், மிகவும் இன்றியமையாததாய் தேவைப்படுகிறது! ஒரு ஆண்டு காலம் நான் எகிப்தில் ஒரு மருத்துவமனையில் நோயாளியாக அனுமதிக்கப்பட்டிருந்தபோது, ஒரு இரட்சண்ய சேனையின் தலைவராயிருந்த, 75 வயதான ஒரு அன்பான பெண்மணி என்னை சந்திக்கும்படி கெய்ரோவிலிருந்து அல்பல்லாவுக்கு ஒரு சவாலான பிரயாணத்தை மேற்கொண்டு வந்திருந்தார்கள். அவருடைய வருகை என்னுடைய வாழ்க்கையை உருமாற்றியது. முற்றிலும் ஒரு புதிய விஷயத்தை அது அன்று எனக்குள் ஆரம்பித்து வைத்தது. இன்று வரை அது தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறது. மருத்துவமனையிலிருந்த முன்பின் அறிந்திராத ஒரு பிரிட்டிஷ் இராணுவ வீரனை சந்திக்கும்படி, அந்த பெண் செய்த தியாகத்துக்காக நான் தேவனுக்கு அளவில்லாமல் நன்றி சொல்லிக் கொண்டே இருக்கிறேன்.

இதுதான் இரக்கங்காட்டும் ஊழியமாய் இருக்கிறது. அந்த நாள் முதல் என்னுடைய ஊழியத்திற்கான பலன் எல்லாவற்றிலும், அந்த அன்பான பெண்ணுக்கும் ஒரு பங்கு உண்டு என்றுதான் சொல்ல வேண்டும். பல வருடங்களுக்கு முன், அவர் மரித்து, மகிமைக்குள் கடந்து சென்று விட்டார். ஆனால் எனக்கு அவர் காண்பித்த இரக்கத்தின் நிமித்தம் இன்னும் அவருடைய பரலோகக் கணக்கில் சேர்த்து வைக்கப்பட்டிருக்கிற பொக்கிஷத்தைக் குறித்து நான் எப்பொழுதுமே சிந்தித்துப் பார்ப்பதுண்டு.

உதவி செய்தல்/துணை செய்தல்

அடுத்த இரண்டு *கிருபை வரங்களைக் (கரிஸ்மாட்டா)* குறித்துப் பார்க்கும்படி, நாம் 1 கொரிந்தியர் 12:28-ம் வசனத்திற்குத் திரும்புவோம். இந்த வசனத்தில், தனிநபர் வரங்களைக் குறித்தும் சொல்லப்பட்டிருக்கிறது.

> *தேவனானவர் சபையிலே முதலாவது அப்போஸ்தலரையும், இரண்டாவது தீர்க்கதரிசிகளையும், மூன்றாவது போதகர்களையும், பின்பு அற்புதங்களையும், பின்பு குணமாக்கும் வரங்களையும், ஊழியங்களையும், ஆளுகைகளையும், பலவித பாஷைகளையும் ஏற்படுத்தினார்.*

அற்புதங்களைச் செய்யும் வரங்கள், குணமாக்கும் வரங்கள், பற்பல பாஷைகளில் பேசும் வரங்கள் என்பவை ஏற்கனவே பரிசுத்த ஆவியானவரின் ஒன்பது ஆவிக்குரிய வரங்களின் பட்டியலில் உட்படுத்தப்பட்டிருக்கின்றன (1 கொரிந்தியர் 12:7-10 வசனங்களை பார்க்கவும்). ஆனால் ஊழிய வரங்களாக தேர்ச்சி பெறும் கூடுதலான இரண்டு வரங்களை 28-ம் வசனத்தில் காண்கிறோம். முதலாவது, *ஊழியங்கள்,* அதாவது *உதவி செய்யும் ஊழியங்கள் (helps)*, இரண்டாவது *ஆளுகைகள்,* அதாவது *காரியங்களை ஒழுங்கு செய்து நிர்வகித்தல் (administrations)*.

"உதவி செய்தல்" என்ற வார்த்தையின் அர்த்தத்தை எளிதில் புரிந்து கொள்ள முடியும். அது வெளிப்படையானது. அமெரிக்காவில் அவர்கள் இவ்வாறு சொல்வார்கள்: இங்கே முதலாளிகளும் இருக்கிறார்கள். இங்கே செவ்விந்தியர்களும் இருக்கிறார்கள். உதவிக்காரராய் ஒருவர் இருக்கிறார் என்றால், அவர் ஒரு செவ்விந்தியராகத்தான் இருக்க வேண்டும்.

பிரிட்டனில் பெந்தேகொஸ்தே இயக்கத்தின் ஒரு காலகட்டத்தில் (1950-களில் அப்பொழுது நான் அங்குதான் வாழ்ந்து கொண்டிருந்தேன்), எல்லாருமே தலைவராக விரும்பினார்கள். ஒருவரும் “உதவி செய்பவராக” இருக்க விரும்பவில்லை. விளைவு, ஒன்றும் நடக்கவில்லை, எதுவும் செய்து முடிக்கப்படவில்லை! முடிவில், எல்லாம் சுக்குநூறாய் உடைந்து போனது. ஒருவேளை தேவன் உங்களை மற்றவர்களுக்கு உதவி செய்கிற ஒரு நபராக தேர்ந்தெடுத்திருக்கலாம்.

உபசரிப்பு

பேதுரு எழுதிய முதல் நிருபத்தில், நாம் இன்னும் இரண்டு சுவாரசியமான *கிருபை வரங்களை (கரிஸ்மாட்டா)* பார்க்கிறோம்:

> *முறுமுறுப்பில்லாமல் ஒருவரையொருவர் உபசரியுங்கள். அவனவன் பெற்ற வரத்தின் படியே (கரிஸ்மா) நீங்கள் தேவனுடைய பற்பல கிருபையுள்ள ஈவுகளைப் பகிர்ந்து கொடுக்கும் நல்ல உக்கிராணக்காரர் போல, ஒருவருக்கொருவர் உதவி செய்யுங்கள். ஒருவன் போதித்தால் தேவனுடைய வாக்கியங்களின்படி போதிக்கக் கடவன்.*
>
> *1 பேதுரு 4:9-11*

இந்தக் குறிப்பில் பட்டியலிடப்பட்டிருக்கிற முதல் வரம், 9-வது வசனத்தில் எழுதப்பட்டுள்ளது: “ஒருவரையொருவர் உபசரியுங்கள்.” மற்றவர்களுடைய தேவைகளை அக்கறையாய் கவனித்துக் கொள்கின்ற அந்த உபசரிப்பு, ஒரு *கிருபை வரம் (கரிஸ்மா)* என்பதை நம்மில் எத்தனை பேர் புரிந்து வைத்திருக்கிறோம்? (அது மட்டுமல்ல, முறுமுறுத்தல் ஒரு பாவம் என்பதை நம்மில் எத்தனை பேர் அறிந்து வைத்திருக்கிறோம்?)

ஒரு யூத பழமொழி இவ்வாறு சொல்கிறது, “ஒரு கை, இன்னொரு கையைக் கழுவுகிறது. இரண்டு கைகளும் சேர்ந்து முகத்தைக் கழுவுகின்றன.” இது அப்படித்தான் இருக்க வேண்டும். நம்முடைய முழு சரீரமும் ஒன்றையொன்று சார்ந்திருக்கின்றது.

தேவனுடைய வாயாக இருந்து பேசுவது

இறுதியாக, கடைசி வரமாக வருவது, “தேவனுடைய வாக்கியங்களின்படி”

அல்லது “தேவனுடைய வாயாக இருந்து” பேசும் வரமாகும் (வசனம் 11). ஒரு உரையாடலின் மத்தியில், அதைக் குறித்த இறுதி முடிவெடுக்கும் அதிகாரம் சிலரிடம் இருக்கும். அவ்வளவுதான், அதற்குப் பிறகு அங்கு பேசுவதற்கு ஒன்றும் தேவைப்படாது. அதற்காக அந்த நபர் பேசும் ஒவ்வொரு வார்த்தையும் தேவனுடைய வார்த்தை என்று நான் சொல்லவில்லை. ஆனால் குறிப்பிட்ட சில சூழ்நிலைகளில், விவாதத்திற்கு உட்படாத, கேள்விக்குள்ளாகாத ஒரு வகையான அதிகாரத்தோடு அந்த மனுஷன் அல்லது அந்த மனுஷி முடிவெடுத்து பேசுவார்.

என்னுடைய முதல் மனைவி லிடியா, அப்படிப்பட்டவர்தான். அவர் ஒரு வாக்கியத்தைப் பேசுவார். அதில் அநேகமாக பத்து வார்த்தைகள்தான் இருக்கும். ஆனால் அவர் அதை பேசிய பிறகு, அதற்கு மேல் பேசுவதற்கு அங்கு ஒன்றும் இருக்காது. சில சமயங்களில் அவை கூர்மையான வார்த்தைகளாய் இருக்கும்!

இதை திரும்பவும் சிந்தித்துப்பாருங்கள்

தயவு செய்து சிறிது நேரமெடுத்து இந்த நான்கு வகையான வரங்களின் பட்டியல்களை சிந்தித்துப் பாருங்கள்: அடிப்படையான வரங்கள், தனிநபர் வரங்கள், ஆவிக்குரிய வரங்கள் மற்றும் ஊழிய வரங்கள். நம்முடைய ஸ்தானங்களை காட்டும்படி தேவனிடம் நாம் ஜெபிக்கும் போது, நமக்குத் தேவையானதும், அவர் நமக்குக் கொடுக்க விரும்புவதுமான கிருபை வரங்களை (கரிஸ்மாட்டா), அவர் நமக்கு குறிப்பாகச் சுட்டிக் காண்பிக்கும்படி நாம் ஜெபிக்க வேண்டும். இங்கே நீங்கள் விரும்பினால் பயன்படுத்தக்கூடிய ஒரு மாதிரி ஜெபம் கொடுக்கப்பட்டுள்ளது:

> *“பிதாவே, மிகவும் தெளிவான, மிகவும் குறிப்பான, நடைமுறைக்கு உகந்த உம்முடைய வார்த்தைக்காக நான் உமக்கு நன்றி சொல்கிறேன். நான் உம்முடைய வார்த்தையை பார்க்கும்போது, உம்முடைய சரீரமாகிய சபையில் இருக்கும் எனக்குரிய ஸ்தானத்திற்கும், உம்முடைய கிருபை வரங்களுக்கும் இடையே உள்ள ஒரு உறவை நான் பார்க்க ஆரம்பிக்கிறேன். தேவனே, இந்த வினாடி முதல், உமது சரீரமாகிய சபையில்*

எனக்குரிய இடத்துக்கு நேராக, நீர் என்னை வழிநடத்தும். மற்ற எல்லா விதத்திலும் கூட என்னை வழிநடத்தும். எனக்குரிய ஸ்தானத்திற்கும், நான் செய்ய வேண்டிய வேலைக்கும் பொருத்தமான அந்தக் குறிப்பிட்ட கிருபை வரங்களை செயல்பாட்டிற்குக் கொண்டு வரும்படி நீர் எனக்குத் தந்திருக்கிற விசுவாசத்தை நான் பயிற்றுவிக்க எனக்கு உதவி செய்யும். தேவனே, நான் என்னை முற்றிலுமாக உமக்கு அர்பணிக்கின்றேன். இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கின்றேன், ஆமென்.

நம்மில் இயேசுவை தங்களுடைய சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டவர்களைக் குறித்து, எபேசியர் நிருபத்தில் ஒரு அழகான வசனம் பேசுகிறது:

கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள். இது உங்களால் உண்டானதல்ல. ஒருவரும் பெருமை பாராட்டாத படிக்கு இது கிரியையினால் உண்டானதல்ல. ஏனெனில், நற்கிரியைகளைச் செய்ய நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம். அவைகளில் நாம் நடக்கும் படி, அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம் பண்ணியிருக்கிறார்."

எபேசியர் 2:8-10

ஒருபோதும், உங்களையோ, உங்களுடைய வரங்களையோ குறைத்து மதிப்பிடாதீர்கள். காரணம், நீங்கள் தேவனுடைய செய்கையாய், கைவேலைப்பாடாய் இருக்கிறீர்கள். எனவே இதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் உங்களைப் பற்றியோ அல்லது உங்களுடைய வரங்களைக் குறித்தோ எதிர்மறையாகப் பேசினீர்கள் என்றால், நீங்கள் தேவனுடைய கரங்களின் கிரியைகளையே குற்றங்குறை கூறுகிறீர்கள் என்று அர்த்தம். '*செய்கை அல்லது கைவேலைப்பாடு*' என்ற வார்த்தைக்கு இங்கே பயன்படுத்தப்பட்டிருக்கும் கிரேக்க வார்த்தை, "*பொயேமா*" (Poiema) என்ற வார்த்தையாகும். இதிலிருந்துதான் '*கவிதை*' என்ற அர்த்தமுடைய *Poem* என்ற ஆங்கில வார்த்தை வந்திருக்கிறது. இது ஒரு தலைசிறந்த,

உச்ச உயர்தரமான கலை படைப்பைக் குறிக்கின்றது. தேவன் தம்மால் எந்த அளவிற்கு சிருஷ்டிக்க முடியும் என்பதை இந்த முழு உலகத்திற்கும் காட்ட நினைத்தபோது, அவர் நம்மை சிருஷ்டிக்கும்படி முடிவெடுத்தார். இது நம் கவனத்தை ஈர்க்க வேண்டிய ஒரு விஷயமல்லவா?

நீங்கள் தேவனுடைய படைப்பாற்றலை வெளிப்படுத்திக் காண்பிக்கும் தலைசிறந்த, உச்ச உயர்தரமான ஒரு படைப்பாக இருக்கிறீர்கள். நீங்கள் ஒரு நோக்கத்திற்காக சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறீர்கள். நீங்கள் என்ன நோக்கத்திற்காக சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறீர்கள்? நற்கிரியைகளைச் செய்யும்படி, ஒரு நல்ல பாதையில் நடக்கும்படி தேவன் அதை உங்களுக்காக முன்கூட்டியே ஆயத்தம் செய்து வைத்திருக்கிறார். அதுதான் உங்களுடைய அழைப்பாய் இருக்கிறது. அதுதான் தேவனால் உங்களுக்குக் கொடுக்கப்பட்ட ஒரு வேலையாய் இருக்கிறது. தேவன் கிறிஸ்துவுக்குள்ளாய் உங்களை சிருஷ்டித்தபோது, நீங்கள் செய்யும்படி ஒரு காரியத்தை அவர் முன்குறித்திருந்தார். எனவே "நான் என்ன செய்ய வேண்டுமோ?" என்ற ஒரு கேள்விக்குறியோடு நீங்கள் சும்மா உட்கார்ந்திருக்க வேண்டிய அவசியமில்லை. மாறாக, "தேவனே, நான் என்ன செய்ய வேண்டும் என்று நீர் முன்குறித்திருக்கிறீர்?" என்றுதான் நீங்கள் அவரிடம் ஜெபிக்க வேண்டும். இன்றைக்கு இந்த பூமியில் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்ட ஒவ்வொருவருக்கும் தேவன் ஒரு விசேஷித்த அழைப்பை வைத்திருக்கிறார். அப்படிப்பட்ட அழைப்பு இல்லாத ஒருவர் இங்கு இல்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

இந்த கோட்பாடை நன்கு புரிந்து வைத்திருந்த ஒரு நபர், லிடியா. எருசலேமில் நியமிக்கப்பட்ட வாழ்க்கை என்ற அர்த்தத்தில் வரும் *Appointment in Jerusalem* என்ற புத்தகத்தில் அவளுடைய வாழ்க்கையின் ஒரு பகுதி எழுதப்பட்டிருக்கிறது. அவளுடைய அனுபவத்திற்கான திறவுகோல் வசனம் எபேசியர் 2:10-ம் வசனமாகும். ''ஏனெனில், நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம். அவைகளில் நாம் நடக்கும் படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம் பண்ணியிருக்கிறார்." ஒரு நாள் அவள் ஸ்டாக்ஹோம் நகரில் உள்ள ஒரு ஹோட்டலில் இருந்து கீழே தெருவில் போக்கும் வரத்துமாயிருந்த மக்கள் கூட்டத்தைப் பார்த்துக்

கொண்டிருந்தாள். அப்பொழுது அவள் தனக்குள்ளே இவ்வாறு கேட்டுக் கொண்டாள்: *இந்த மக்கள் எங்கே போகிறார்கள் அல்லது எங்கேயிருந்து வருகிறார்கள் என்பது மெய்யாகவே அவர்களுடைய வாழ்க்கையில் ஏதாவது ஒரு வித்தியாசத்தை உண்டாக்கப் போகிறதா ?* அந்த நேரத்தில், தேவன் இந்த வசனத்தின் முக்கியத்துவத்தை அவளுடைய இருதயத்தில் உணர்த்தினார். அப்பொழுதுதான் வேறு ஒருவரும் செய்ய முடியாத ஒரு விசேஷமான வேலையை தேவன் தனக்கென்று முன்குறித்திருக்கிறார் என்பதை அவள் உணர்ந்தாள்.

அவள் அதை உணர்ந்தவுடன், "தேவனே, வேறெந்த பெண்ணும் செய்ய முடியாத ஒரு விசேஷமான வேலையை நீர் எனக்கென்று முன்குறித்திருக்கிறீர் என்றால், நான் அதைச் செய்வதற்கு ஆயத்தமாயிருக்கிறேன்," என்று சொன்னாள். தேவன் அவளுக்கு ஒரு அசாதாரணமான வேலையை கொடுத்தார். அவள் டென்மார்க்கில் பார்த்து வந்த தமது ஆசிரியை பணியை ராஜினாமா செய்து விட்டு, எந்தவொரு சபையின் அல்லது மிஷனரி அமைப்பின் உதவியுமின்றி, எருசலேமுக்குச் சென்றாள். அங்கே அவள் மரித்துக் கொண்டிருந்த ஒரு சிறு யூதக்குழந்தையை எடுத்து வளர்க்கும்படி வழிநடத்தப்பட்டாள். இப்படியாக, ஒரு 'சிறுவர் இல்லம்' உதயமானது. அந்த இல்லம் 20 ஆண்டுகள் இயங்கியது. லிடியாவுக்கு ஒரு விசேஷித்த பொறுப்பு இருந்தது. அதேபோல, நம் எல்லோருக்கும் ஒரு விசேஷித்த பொறுப்பு இருக்கிறது. இந்த கோட்பாடு நம் எல்லோருக்கும் பொருந்தும்.

தேவன் உங்களை எந்த நற்கிரியைகளுக்காக சிருஷ்டித்தார் என்பது உங்களுக்குத் தெரியுமா ? உங்களுக்கு அது தெரியாமலிருக்கலாம். ஆனால் உங்களுக்கு ஏதாவது ஒரு வழிகாட்டுதல் தெரியத் தொடங்கியிருக்கிறதா ? நீங்கள் தொடர்ந்து கவனம் செலுத்தி, விஷயங்களைப் பகுத்தறிந்து வளரும்போது, எண்ணற்ற மற்ற அநேகரைப் போல, நீங்களும் ஒன்றைக் கண்டுபிடிப்பீர்கள். தேவனுடைய ராஜ்யத்தில் உங்களுக்குரிய வேலையை நீங்கள் கண்டுபிடித்து விடாதபடி தடையாயிருக்கும் ஒவ்வொரு விஷயத்தையும் உதறித் தள்ளுவதற்கு நீங்கள் கற்றுக் கொள்ள வேண்டும் என்பதை நீங்கள் கண்டுபிடிப்பீர்கள்.

இதைக் குறித்தெல்லாம் நீங்கள் அறிந்து ஆய்வு செய்து கொண்டிருக்கும்

நேரத்தில், அங்கே உங்களுடைய எதிரி எதுவும் செய்யாமல் சும்மா இருக்கவில்லை என்பதையும் நீங்கள் சீக்கிரத்தில் கண்டுபிடிப்பீர்கள். உங்களுடைய அழைப்பைக் குறித்து அறிவதினால் வரக்கூடிய சந்தோஷத்தையும், நிறைவையும் நீங்கள் பெற்று விடாதபடி தடுப்பதற்கு பிசாசு எல்லா முயற்சிகளையும் எடுப்பான். அதில் உங்களை தோற்கடிக்க வேண்டும் என்று அவன் முயற்சிப்பான். அடுத்த இரண்டு அத்தியாயங்களில், அவனுடைய சதித்திட்டத்தைக் குறித்து நாம் கவனிப்போம். அது எப்படி வெளிப்படும் என்றும், அதற்கு நம்முடைய பதிலடி என்னவாக இருக்க வேண்டும் என்பதையும் நாம் பார்ப்போம்.

6
உங்கள் அழைப்பை நிறைவேற்றுவதில் உள்ள மிகப் பெரிய தடை

அவர்கள் சேனைகளின் கர்த்தருடைய வேதத்தை வெறுத்து, இஸ்ரவேலிலுள்ள பரிசுத்தருடைய வசனத்தை அசட்டை பண்ணினார்களே.

ஏசாயா 5:24

தற்போதைய காலகட்டத்தில், ஒருவருடைய அழைப்பை நிறைவேற்ற விடாதபடி தடுக்கக்கூடிய மிகப் பெரிய தடை என்ன என்பதை இந்த அதிகாரத்தில் நான் உங்கள் முன் வைக்க விரும்புகிறேன். இந்தப் பொல்லாத சக்தி குறிப்பாக ஆண்களைத்தான் குறிவைக்கிறது என்று நான் நினைக்கிறேன். இன்னும் குறிப்பாக சபையின் தலைமைப் பொறுப்பில் இருக்கிறவர்களைத்தான் இது அதிகமாய் தாக்குகிறது. இது என்னவாக இருக்கும் என்பதை ஊகிக்கும்படி நான் உங்களுக்கு 100 வாய்ப்புகளைக் கொடுத்தாலும், உங்களால் சரியாக ஊகிக்க முடியாது என்றுதான் நான் நம்புகிறேன்.

கிறிஸ்தவர்களில் ஆண்களையும், பெண்களையும் தங்களுடைய அழைப்பை நிறைவேற்ற விடாதபடி, தேவனுக்குள் தாங்கள் சென்றடைய வேண்டிய இடத்தை அடைய விடாதபடி தடுக்கக்கூடிய அந்தக் குறிப்பிட்ட பொல்லாத சக்தி, *பில்லிசூனியமாகும்*. இலட்சக்கணக்கான கிறிஸ்தவர்கள் தனிப்பட்ட விதத்தில் தங்களுடைய அழைப்பை நிறைவேற்றி விடாதபடி, தேவனுடைய இராணுவத்தில் வலிமையான விதத்தில் பங்காற்ற முடியாதபடி

கட்டிப்போடக்கூடிய தேவனுக்கு விரோதமான மிக மோசமான சத்துரு இதுதான். பில்லிசூனியம் என்பது உலகமெங்கும் முழுமையாகப் புரிந்து கொள்ளப்படாத ஒரு நிகழ்வாயிருக்கிறது. இது எங்கு செயல்படுகிறதோ, அந்தக் குறிப்பிட்ட கலாச்சாரத்தின் பின்னணியோடு பொருந்தக்கூடிய திறனை உடையதாய் இருக்கிறது.

சபைக்குள் மகா மோசமான விளைவுகளை உண்டாக்கிக் கொண்டிருந்த இந்தப் பொல்லாத வல்லமையை குறித்து நாம் கவனிக்க வேண்டிய மிக முக்கியமான ஒரு விஷயத்தை பவுல் நமக்காக எழுதி வைத்திருக்கிறார். இந்த வசனம் கலாத்தியர் 3-ம் அதிகாரத்தில் உள்ளது. இதிலிருந்து நாம் ஆரம்பிக்கலாம்.

> *புத்தியில்லாத கலாத்தியரே! நீங்கள் சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமற்போகத் தக்கதாக உங்களை மயக்கினவன் யார்? இயேசுகிறிஸ்து சிலுவையிலறையப்பட்டவராக உங்கள் கண்களுக்கு முன்பாக பிரத்தியட்சமாய் உங்களுக்குள்ளே, வெளிப்படுத்தப்பட்டிருந்தாரே!'*
>
> *கலாத்தியர் 3:1*

1963-ஆம் ஆண்டு, அமெரிக்க ஐக்கிய நாடுகளின் மேற்கு கடற்கரை பகுதியிலிருந்த ஒரு பட்டணத்திலுள்ள ஒரு சபையின் போதகராக நான் பொறுப்பேற்றேன். அந்த சபையை நிர்வகிக்கும் பொறுப்பிலிருந்தவர்கள் என்னை ஒருமனதாக தேர்ந்தெடுத்தார்கள் என்று எனக்குச் சொல்லப்பட்டது. அந்த நாட்களில் நான் அவ்வளவு எச்சரிக்கையுள்ளவனாக செயல்படவில்லை. அமெரிக்கர்களின் சபை வாழ்க்கை எப்படியிருக்கும் என்பதைக் குறித்து நான் ஒன்றும் அறியாதிருந்தேன். இந்நிலையில் நான் பிசாசின் சூழ்ச்சி வலைக்குள் காலடி எடுத்து வைத்தேன். சபையின் நிர்வாகக் குழுவில் 12 அங்கத்தினர்கள் இருந்தார்கள். சபைக்குச் சென்ற போதுதான், சபையில் மொத்தம் அந்த 12 பேர்தான் இருந்தனர் என்பது எனக்குத் தெரிய வந்தது! ஒரே மாதத்திற்குள் நிர்வாக குழுவிலிருந்த எல்லா உறுப்பினர்களும் தங்களுடைய பதவிகளை ராஜினாமா செய்து விட்டார்கள். மிகவும் கடினமான, பாதுகாப்பற்ற, அபாயகரமான ஒரு சூழ்நிலையில் நான் இருந்ததை புரிந்து கொண்டேன். உண்மையிலேயே,

இந்தச் சிறிய சபையாருக்குள் இருந்த மனநிலையைத்தான் என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. அது என்னைப் பெரிதும் குழப்பியது. அவர்கள் பெந்தேகோஸ்தே கிறிஸ்தவர்களாயிருந்தாலும், ஒடுக்கப்பட்டவர்களாய், சந்தோஷமாகவோ, விடுதலையாகவோ வாழ முடியாத நிலையில் இருந்தார்கள்.

அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையை, முன் ஒருபோதும் நான் என்னுடைய வாழ்க்கையில் கையாண்டதில்லை. வேறு எந்த நம்பிக்கையும் இல்லாத ஒரு சூழ்நிலையில், நான் தேவனை நோக்கி திரும்பினேன். அவர் எனக்கு கலாத்தியர் **3:1**-ம் வசனத்தைக் கொடுத்தார். அவர்கள் ஒரு பிடிக்குள் சிக்கி, மயக்கமான ஒரு நிலையில் இருக்கிறார்கள் என்று தேவனே என்னிடம் சொன்னார். நான் அதை நம்ப வேண்டியதாயிருந்தது. அந்த மக்களின் நிலைக்கு வேறெந்த ஏற்ற, போதுமான விளக்கமும் காணப்படவில்லை.

அவர்கள் எப்படி ஒரு பிடிக்குள் சிக்கி மயங்கிக் கிடந்தார்கள் என்பதை நான் சீக்கிரமாய் கண்டுபிடித்தேன். எனக்கு முன்பு அந்த சபையிலிருந்த போதகரின் மனைவி மிகவும் திறமையுள்ள ஒரு பெண். ஆனால் அவர் எல்லோர் மீதும் அதிகமாக ஆதிக்கம் செலுத்தக்கூடியவராக இருந்தார். கடந்த இரண்டு அல்லது மூன்று வருட காலகட்டத்தில், அவர் சபையின் போதகராயிருந்த தனது கணவரை விவாகரத்து செய்தார். அச்சபையின் நிர்வாக குழுவின் ஒரு முக்கிய உறுப்பினர் தனது மனைவியை விவாகரத்து செய்தார். பிறகு சபைப் போதகரின் மனைவியும், நிர்வாகக் குழுவின் மிக முக்கிய உறுப்பினரும் திருமணம் செய்து கொண்டார்கள். ஒரு பெந்தேகோஸ்தே சபையில், இப்படிப்பட்ட ஒன்றைச் செய்து விட்டு நீங்கள் தப்பித்துக் கொள்கிறீர்கள் என்றால், அதற்கு வழக்கத்தை மீறிய ஒரு காரணம் இருந்தாக வேண்டும். அந்தப் பெண் என்ன சொன்னாலும், என்ன செய்தாலும் அதை எதிர்த்து நிற்கக்கூடிய தைரியம் இல்லாத அளவிற்கு, அவர் அவர்களை அடக்கி வைத்திருந்தார். இது நமக்கு மிகவும் அதிர்ச்சி தரக்கூடிய ஒரு சூழ்நிலையாக இருந்தது.

நான் பில்லிசூனியம் எனும் பிசாசின் பொல்லாத சக்தியோடு எதிர்த்து போராடிக் கொண்டிருக்கிறேன் என்பதை நான் உணர்ந்தவுடன், அதற்கான தீர்வையும், ஆயுதங்களையும் வேதவசனத்திலிருந்து பெற்றுக் கொள்ளும்படி, நான் தேவனை நாட ஆரம்பித்தேன். இறுதியாக, அச்சூழ்நிலையை லிடியாவும்

நானும் மேற்கொண்டோம். நாங்கள் அந்த சபையிலிருந்த பில்லிசூனியத்தை தோற்கடித்தோம். அங்கே தேவனுடைய ஆசீர்வாதம் திரும்புவதை நாங்கள் கண்டோம்.

ஆனால் அது தனிப்பட்ட விதத்தில் எனக்கு ஒரு தெளிவான பாடத்தைக் கற்றுத் தந்தது. அந்த அனுபவத்திற்கு முன், கிறிஸ்தவர்கள் இவ்விதத்தில் மயக்கப்படக்கூடும் என்ற எண்ணம் ஒருபோதும் என் மனதில் தோன்றினதே இல்லை. ஆனாலும் கலாத்தியர் **3:1**-ம் வசனத்தில் அதைக் குறித்துத்தான் சொல்லப்பட்டிருக்கிறது: உங்களை மயக்கினவன் யார் **?** அதற்கு பின்வரும் வசனங்களை வாசிப்பீர்களானால், அந்த மக்கள் இரட்சிக்கப்பட்டு, பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தை பெற்றிருந்தவர்கள் என்பது உங்களுக்குத் தெரிய வரும். அவர்கள் தேவனுடைய அற்புதங்களை கண்ணாரக் கண்ட பிறகும், அவர்கள் மயக்கப்பட்டிருந்தார்கள். அது கலாத்தியருக்கு சம்பவிக்கக் கூடுமானால், வேறு எந்த ஒரு கிறிஸ்தவனுக்கும் அது நடக்காது என்று நாம் எப்படி உத்தேசிக்க முடியும் **?**

பில்லிசூனியத்தின் தன்மை

பில்லிசூனியத்தின் தன்மையை குறித்து உங்களுக்கு நான் சொல்ல விரும்புகிறேன். முதலாவதாக, அதைக் குறித்த பொதுவான விஷயங்களைச் சொல்கிறேன். பிறகு சபையில் காணப்படும் பில்லிசூனியத்தைக் குறித்துச் சொல்கிறேன்.

ஆங்கிலத்தில் ஒன்றுக்கொன்று தொடர்புடைய மூன்று வார்த்தைகள் உள்ளன - பில்லிசூனியம் (witchcraft), குறிசொல்லுதல் (divination) மற்றும் மந்திரவாதம் (sorcery). வேதாகமத்தின் ஒரு ஆங்கில மொழிபெயர்ப்பு, பில்லிசூனியம் என்ற வார்த்தையை பயன்படுத்துகிறது. இன்னொரு மொழிபெயர்ப்பு அதே இடத்தில், குறிசொல்லுதல் அல்லது மாந்திரீகம் என்ற வார்த்தையை பயன்படுத்தலாம். அடிப்படையில், இவை மூன்றும் ஒரு கேக்கின் மூன்று அடுக்குகள் போல இருக்கின்றன. இந்த மூன்று அடுக்குகளுக்கிடையே தெளிவான வித்தியாசமுண்டு.

பில்லிசூனியம் என்பது ஒருவரை தன் பிடிக்குள் அகப்படுத்தி, அவர்

மீது ஆதிக்கம் செலுத்தும் பொல்லாத சக்தியாய் இருக்கிறது. இது சபைக்கு வெளியே சாபங்கள் மற்றும் மந்திர வார்த்தைகள் மூலமாக நம் கண்களால் பார்க்கக்கூடிய இந்த தளத்தில் செயல்படுகிறது. ஒன்றை நான் உங்களுக்குச் சொல்கிறேன், சாபங்கள், மந்திர வார்த்தைகளும் மெய்யாகவே வல்லமையாய் செயல்படக்கூடியவைகளாக இருக்கின்றன.

குறிசொல்லுதல் என்பது அடிப்படையில், முன்கூட்டியே எதிர்காலத்தைக் குறித்துச் சொல்லும் ஒரு வேலையாகும். இது எதிர்காலத்தை கணித்துச் சொல்லும்படி முற்படுகிறது. கை ரேகை பார்த்துச் சொல்லும் ஒருவரிடம் அல்லது ஒரு ஜோசியரிடம் நீங்கள் செல்கிறீர்கள் என்றால், நீங்கள் குறி சொல்லுகிற ஒரு தவறான நபரிடம் செல்கிறீர்கள் என்று அர்த்தம். அவர் குறிசொல்லுகிற ஒரு பொல்லாத ஆவியின் கீழ் செயல்படுகிறார். மோசேயினுடைய நியாயப்பிரமாணத்தின் கீழ் வாழ்ந்த இஸ்ரவேலர்களோடு நாமும் வாழ்ந்தோம் என்றால், குறிசொல்லுகிறவனிடம் ஒருவன் செல்வதற்கான தண்டனை மரணம் என்பதை நாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்!

மந்திரவாதம் என்பது மந்திரிக்கப்பட்ட கயிறுகள் அல்லது தாயத்துக்கள் அல்லது போதை மருந்துகள் மூலம் செயல்படுகிறது. போதை மருந்தின் முழு கலாச்சாரமும், மந்திரவாதத்தின் ஒரு அம்சமாய் இருக்கிறது. மந்திரவாதம் இசையின் மூலமாகவும் செயல்படுகிறது. இன்றைக்கு பெரும்பாலும் இசைக்கப்படும் ராக் இசை, மந்திரவாதத்தின் ஒரு செயல்பாடாய் இருக்கிறது. அது மக்களை மயக்குகிறது. இவ்வகையான இசையை கேட்ட பிறகு அந்த வாலிபர்களுடைய கண்களை கவனித்துப் பாருங்கள். அவைகள் உணர்ச்சியை வெளிக்காட்டாதவைகளைப் போல மாறி விடகின்றன. அவர்கள் தங்களுடைய வாழ்க்கையின் நிஜத்திலிருந்து துண்டிக்கப்பட்டவர்களாய் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அந்த இசையின் பின்னணியில் உள்ள சாத்தானின் வல்லமை, அவர்களை தன் பிடிக்குள் சிக்க வைத்து, தன் வசப்படுத்தி அவர்களை ஒரு விதமான மயக்கத்திற்குள் தள்ளி விடுகிறது.

இது இந்த உலகத்தில் புதிதான ஒன்றல்ல. ஒரு எடுத்துக்காட்டிற்கு, நீங்கள் ஆப்பிரிக்காவுக்கு சென்று, அங்கிருக்கும் ஒரு மந்திரவாதியுடன்

பேசிப் பாருங்கள். சாபங்கள், மந்திர வார்த்தைகள், எதிர்காலத்தைக் குறித்து கணித்துச் சொல்வது, தாயத்துக்களைப் பயன்படுத்துவது அல்லது இசை என ஜனங்களை தன் பிடிக்குள் சிக்க வைத்து மயக்கக்கூடிய இந்த எல்லா அம்சங்களையும் நீங்கள் அங்கு காண முடியும். இன்றைக்கு நம்முடைய வாலிபர்கள் மத்தியில் வாசிக்கப்படும் டிரம் இசை ஆப்பிரிக்காவிலிருந்துதான் வந்தது. அது சுற்றி வளைத்து, தென் அமெரிக்காவுக்கு சென்று பிறகு அங்கிருந்து வடக்கு அமெரிக்காவிற்கும் சென்றது. பிறகு இது வடக்கு அமெரிக்காவிலிருந்து உலகம் முழுவதிற்கும் பரவி விட்டது.

முரட்டாட்டத்தோடு இதற்குள்ள தொடர்பு

இங்கிருந்து நான் *பில்லிசூனியம்* என்ற பதத்தை மட்டும் பயன்படுத்த போகிறேன். ஆனால் இது பில்லிசூனியம், குறிசொல்லுதல் மற்றும் மாந்திரீகம் என்ற எல்லாவற்றையும் உள்ளடக்கியிருக்கிறது என்பதை புரிந்து கொள்ளுங்கள்.

பில்லிசூனியம் என்பது அடங்காமலிருத்தல் அல்லது கலகம் பண்ணுதலோடு நெருக்கமான தொடர்பு கொண்டுள்ளது: “இரண்டகம் பண்ணுதல், பில்லிசூனிய பாவத்திற்குச் சரியாய் இருக்கிறது **(1** சாமுவேல் **15:23)**. எங்கெல்லாம் நீங்கள் கலகம் அல்லது முரட்டாட்டத்தைப் பார்க்கிறீர்களோ, அது கடைசியில் பில்லிசூனியத்தில்தான் போய் முடியும் என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள். இந்த வார்த்தைகள், தீர்க்கதரிசியாகிய சாமுவேல், சவுல் ராஜாவிடம் பேசின வார்த்தைகளாகும். காரணம், அவன் தவறு என்று தெரிந்தே தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படியாமல் அதை மீறி நடந்தான். சாமுவேல் சவுல் ராஜாவை கடிந்து கொண்டு, “தேவனுடைய வார்த்தைக்கு விரோதமான உன்னுடைய கலகம், பில்லிசூனியத்துக்கு ஒப்பானது,” என்று கூறினார். ராஜாவாகிய சவுல் தான் மரிப்பதற்கு முன்பு, அவன் குறிசொல்லுகிற ஒரு சூனியக்காரியிடம் ஆலோசனை கேட்டான். இந்தச் சம்பவம் தற்செயலாய் நடந்த ஒன்றல்ல. இது அவன் முன்பே செய்த ஒரு மாபெரும் தவறினால் உண்டான ஒரு பின்விளைவாகும்.

ஒரு உதாரணத்திற்கு, **1960**-ஆம் ஆண்டுகளில், அமெரிக்க வாலிபர்களின் தலைமுறை பெரும்பாலும் போதைமருந்து உட்கொள்ளும் கலாச்சாரத்திற்குள்

சிக்கிக் கிடந்தது. அவர்களுடைய வாழ்க்கை முறை அடிப்படையில் முரட்டாட்டத்தால் நிறைந்திருந்தது. அவர் தங்கள் பெற்றோருக்கு எதிராக முரட்டாட்டம் செய்தார்கள். அவர்கள் தங்களுடைய அரசாங்கத்திற்கு எதிராக கலகம் செய்தார்கள். அவர்கள் தங்களுடைய பள்ளி, கல்லூரிகளுக்கு எதிராக முரட்டாட்டம் செய்தார்கள். அவர்கள் சபைக்கு விரோதமாய் கலகம் செய்தார்கள். இப்படி இன்னும் சொல்லிக் கொண்டே போகலாம். முடிவில் அவர்கள் எல்லோருமே எந்த விதிவிலக்கும் இன்றி, பில்லிசூனியத்தின் பிடிக்குள் சிக்கிக் கொண்டார்கள்.

முரட்டாட்டத்திற்கும் பில்லிசூனியத்திற்கும் இடையிலான தொடர்பை புரிந்துக்கொள்வது மிக அவசியமானது. முரட்டாட்டம், சட்டத்திற்கு விரோதமான ஆளுகையை ஏற்படுத்துகிறது. அதாவது தேவனால் நியமிக்கப்படாத ஆளுகையை அது ஏற்படுத்துகிறது. பில்லிசூனியம், தவறான ஆளுகையை ஆதரிக்கின்றது. ஆகையால், எங்கெல்லாம் சட்டத்திற்கு விரோதமான ஆளுகை இருக்கிறதோ, அங்கே அது பில்லிசூனியத்தின் வழியாக இயங்குவதை நீங்கள் பார்க்க முடியும்.

கலாத்தியர் **5:20**-ம் வசனத்தில், மாம்சத்தின் கிரியைகளில் ஒன்றாக பில்லிசூனியத்தை பவுல் பட்டியலிடுகிறார். ஆகையால் இது விழுந்து போன மனுஷனுடைய ஒரு தன்மையாயிருக்கிறது. ஆளுகை செய்யும் படியாகவே மனிதன் தேவனால் படைக்கப்பட்டான். ஆனால் தேவனுடைய அதிகாரத்தின் கீழ் இருந்து ஆளுகை செய்யும்படி அவன் படைக்கப்பட்டான். எப்பொழுது அவன் தேவனுடைய அதிகாரத்திற்கு விரோதமாக முரட்டாட்டம் செய்தானோ, அப்பொழுதே ஆளுகை செய்யும் உரிமையை அவன் இழந்தான். ஆனால் ஆளுகை செய்ய வேண்டும் என்ற அந்த ஆசையை அவன் ஒருபோதும் இழக்கவேயில்லை. அவன் விழுந்த பிறகு, ஆளுகை செய்யும்படி சட்டத்திற்கு விரோதமான வல்லமையை பயன்படுத்தக்கூடியவனாய் அவன் மாறி விட்டான்.

ஆக, மற்றவர்களைக் கட்டுப்படுத்தி நடத்தி, அவர்கள் என்ன செய்ய வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்களோ, அதை அவர்களை செய்ய வைக்க வேண்டும் என்ற அந்த விருப்பம், ஆரம்பத்தில் விழுந்து போன தன்மையின் ஒரு சாதாரணமான அம்சம் போல தெரிந்தாலும், அது அப்படிப்பட்டவர்களை பில்லிசூனியம் என்கிற பொல்லாத ஆவிக்குரிய

வல்லமைக்கு உட்படுத்துகிறது. அதற்குப் பின் அவர்கள் சுயாதீனமானவர்களாய், எந்தக் கட்டுப்பாடுமின்றி சுதந்திரமாய் செயல்படுவதில்லை. இனி அவர்கள் தங்களுடைய சுபாவமாய் அதைச் செய்வதில்லை. அவர்கள் அதைச் செய்கிறார்கள். காரணம், அப்படி அவர்களைச் செயல்பட வைக்கும் ஒரு ஆவியினால் அவர்கள் கட்டுப்படுத்தப்படுகிறார்கள்.

இப்படியாக, கலாத்தியர் **3:1**-ம் வசனத்தில் சொல்லப்பட்டுள்ள ஆவிக்குரிய ஒரு சூழ்நிலைக்குள் நாம் வருகின்றோம். இந்த சூழ்நிலையில், கலாத்தியாவிலிருந்த ஒரு சபையில் ஒரு பொல்லாத வல்லமை கிரியை செய்து கொண்டிருந்தது. இது விழுந்து போன மனுஷ சுபாவத்தின் வழியாக பிரவேசித்திருந்தாலும், இது வெறுமனே விழுந்து போன மனுஷ சுபாவம் மாத்திரம் அல்ல. மாறாக, அந்த சபையைக் குறித்து தேவன் வைத்திருந்த சகல நோக்கங்களையும் செயல்பட விடாமல் தடுத்துக்கொண்டிருந்த ஒரு அந்தகார, பொல்லாத, சாத்தானின் வல்லமையாக அது இருந்தது.

பில்லிசூனியம் என்ற வார்த்தையைக் குறித்து நீங்கள் நினைக்கும் போது, அதைப் புரிந்து கொள்ளும்படியாக, *அடக்கி ஆளுகை செய்தல், ஆதிக்கம் செலுத்துதல், கட்டுப்படுத்தி நடத்துதல், அச்சுறுத்துதல்* என்ற திறவுகோல் வார்த்தைகளை கருத்தில் எடுத்துக் கொள்ளுங்கள். நீங்கள் எங்கெல்லாம் மற்றவர்களை தங்களுடைய விருப்பத்திற்கேற்றபடி கட்டுப்படுத்தி நடத்துகிற நபர்களை சந்திக்கிறீர்களோ, மற்றவர்கள் மீது நியாயமற்ற முறையில் ஆதிக்கம் செலுத்துகிற நபர்களை எதிர்கொள்கிறீர்களோ, தங்களுடைய லாபத்திற்காக இன்னொருவரை பயன்படுத்திக் கொள்ளுகிற ஆட்களை சந்திக்கிறீர்களோ, மற்றவர்களை அச்சுறுத்தி தங்களுடைய காரியங்களை சாதித்துக் கொள்ளுகிறவர்களை சந்திக்கிறீர்களோ, அங்கெல்லாம் நீங்கள் சாத்தானை நேரடியாக எதிர்கொள்கிறீர்கள். தேவன் அப்படிப்பட்ட செயல்களிலெல்லாம் ஈடுபடுவதில்லை. தேவன் மனுஷனுடைய தனிப்பட்ட சுதந்திரத்தை கனம் பண்ணுகிறார். அவர் அதை அனுமதிக்கிறார். பில்லிசூனியம் அதை அடக்குகிறது. பில்லிசூனியம் அதை கட்டுப்படுத்த விரும்புகிறது. ஆனால் அதினால் கட்டுப்படுத்த முடியாவிட்டால், அது தன் விருப்பத்திற்கு ஏற்ப செயல்பட வைக்கும். அது எல்லா விதமான சூழ்நிலைகளிலும் காணப்படும்.

இதோ இங்கே நம்முடைய அன்றாட வாழ்க்கையிலிருந்து மூன்று உதாரணங்களை காண்போம்.

கணவனும், மனைவியும்

மனைவி தன் கணவனுடைய அதிகாரத்திற்கு கீழ் இருக்க வேண்டும் என்று தேவன் தீர்மானித்துள்ளார். ஆனால் வேதனைக்குரிய காரியம் என்னவென்றால், இதை கணவன் தவறாக பயன்படுத்த முடியும். விவாகரத்து மற்றும் ஆண்கள் கடமை தவறுகின்ற இந்த நாட்களில், பிள்ளைகளை வளர்க்கவும், குடும்ப தேவைகளை சந்திக்கவும், கணவன் இல்லாத சூழ்நிலையில், பல பெண்கள் குடும்பத்தை தலைமை தாங்கி நடத்த கட்டாயப்படுத்தப்படுகிறார்கள். ஆனால் ஒரு மனைவி வேண்டுமென்றே குடும்பத்தில் தலைமையை எடுத்துக் கொள்ளும்போது, அங்கே பில்லிசூனியத்தை காண்பீர்கள். ஏனென்றால், தன் விருப்பத்திற்கு ஏற்ப இயங்க செய்வதின் நிமித்தமே, அவள் அப்படி செய்வாள்.

தன் விருப்பத்திற்கு ஏற்ப இயங்க செய்வதற்கு, ஒரு மனைவியிடம் பல வழிகள் உண்டு. தனக்கு பிடிக்காத ஒன்றை, கணவன் ஒவ்வொரு முறை செய்யும்போதும் அவள் உணர்ச்சிவசப்படுவாள். இது அவளுடைய கணவனை அதிக மனஉளைச்சலுக்குள்ளாக்கும். ஆகையால் கணவன் அந்த மனஉளைச்சலைத் தவிர்க்க, அவர் அந்த விஷயத்தையே தவிர்த்து விடுவார். முடிவில், அந்த மனைவி தான் நினைத்ததை சாதித்து விடுவார்.

ஒரு ஊழியக்காரரை திருமணம் செய்த ஒரு அருமையான கிறிஸ்தவ சகோதரியின் சூழ்நிலையை நான் எதிர்க்கொண்டேன். அவர்களுக்கு ஐந்து பிள்ளைகள் இருந்தன. அவர்கள் நல்ல அர்ப்பணிப்புள்ள கிறிஸ்தவர்கள். கிறிஸ்தவராவதற்கு முன்பு, மாந்திரீகத்தில் அவளுக்கு தொடர்பு இருந்தது. அதிலிருந்து அவள் இன்னும் பூரண விடுதலை பெறாதிருந்தாள். அதை அவள் அறியாமலேயே, அவள் தன் குடும்பத்தின் மீது ஆதிக்கம் செலுத்தி வந்தாள்.

அது தன்னை வெளிப்படுத்திய விதங்களில் ஒன்று பின்வருமாறு: குடும்பத்தில் அவளுக்கு பிடிக்காத ஒன்று நிகழ்ந்தால் மிக பயங்கரமான தலைவலி அவளுக்கு வந்து விடும், அதற்கு பின்பு முழு குடும்பமும் சத்தம்

போடாமல் சுற்றி வர வேண்டியதிருக்கும். காரணம், "அம்மாவுக்கு பயங்கரமான தலைவலி." அம்மாவினுடைய தலைவலி வேதனைகளை தவிர்க்கும்படி, எல்லோரும் அவள் சொன்னதையே செய்தார்கள். இதுதான் தன் விருப்பத்திற்க்கேற்ப மற்றவர்களை இயங்க செய்வதாகும். அநேக நேரங்களில் இது சுயநினைவோடு எடுக்கப்படும் ஒரு தீர்மானம் அல்ல. அந்த நபருக்குள் இதை செய்யும் படியாக தூண்டும் ஏதோ ஒன்று இருப்பதால்தான் அந்த நபர் அதை செய்கிறார்.

பெற்றோர்களும், பிள்ளைகளும்

தேவன் பெற்றோருக்கு பிள்ளைகள் மேல் அதிகாரம் கொடுத்திருக்கிறார். ஆனால் பல நேரங்களில் பிள்ளைகள்தான் பெற்றோர்களை ஆளுகை செய்கிறார்கள். அவர்கள் அதை தங்கள் சுய விருப்பத்திற்கேற்ப பெற்றோரை இயங்கச் செய்வதின் மூலம் சாதிக்கிறார்கள். உதாரணமாக, சின்ன ஜானி, தன் விருப்பப்படி தன் பெற்றோர் செய்யா விட்டால் அடம் பிடிப்பான். குறிப்பாக, விருந்தினர் வந்திருக்கும்போது அவன் அதிக அடம்பிடிப்பான். எனவே அவனுடைய பெற்றோர் அவனை சாந்தப்படுத்தும்படி அவன் விரும்புவதையெல்லாம் வாங்கிக் கொடுப்பார்கள். இது என்ன ? இதுதான் மற்றவர்களை கட்டுப்படுத்தி இயங்கச் செய்வதாகும்!

பெற்றோர்களே, உங்கள் பிள்ளைகள் இப்படி அடம் பிடித்தால், இரண்டு அல்லது மூன்று முறை பாருங்கள். அப்படியே விட்டுவிட்டால், அவர்களுக்குள் ஒரு அசுத்த ஆவி புகுந்து விடும். பிறகு அந்த ஆவிதான் உங்களை அலைக்கழிக்கும். ஒரு சிறு குழந்தைக்குள் கூட ஒரு பலத்த அசுத்த ஆவி இருக்கக் கூடும். எதிரியின் சக்தியை பிள்ளையின் பருமனை வைத்தோ, வயதை வைத்தோ தீர்மானிக்காதீர்கள். அந்தக் குழந்தையல்ல, அதற்குள்ளிருக்கும் ஆவிதான் அதைக் கட்டுப்படுத்துகிறது.

சில பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை குறும்பு செய்ய அனுமதிப்பதை பார்க்கும் போது நான் நடுங்கி விடுவேன். அவ்வளவு அட்டூழியம்! இந்தியாவில் இருந்து வந்த ஒரு சகோதரர், ''இது ஆசியாவின் சிறுவர்களுக்கு சகஜம்!'' என்றார். பிள்ளைகள் சரியான விதத்தில் கட்டுப்படுத்தப்படவில்லை என்றால், அவர்களுக்குள் பொல்லாத பிசாசுகள் புகுந்து விடுகின்றன.

பெற்றோரின் ஒழுங்குபடுத்துதல், பிள்ளைகளை காப்பாற்றும்படியாக ஏற்படுத்தப்பட்டுள்ளது. தனித்து தங்களால் எதிர்க்க முடியாத, தங்களைக் காட்டிலும் அதிக பலமுள்ள ஆவிகளில் இருந்து அவர்களை பாதுகாக்கும்படியாகவே இது ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. பெற்றோர்கள் பிள்ளைகளை சரியான விதத்தில் ஒழுங்குப்படுத்தா விட்டால் பிள்ளைகள் இப்படிப்பட்ட ஆவிக்குரிய சக்திகளுக்கு உட்படுத்தப்படுகிறார்கள்.

மேய்ப்பரும் சபையாரும்

சபைகளில் பொதுவாக பெண் "தீர்க்கதரிசிகள்" இருப்பார்கள். தங்கள் தீர்க்கதரிசனங்களால் அவர்களே சபையை நடத்துவார்கள். சிறிய பெந்தேகொஸ்தே சபைகளில், எத்தனை போதகர்கள் ஒன்று அல்லது இரண்டு பெண்களினால் ஆதிக்கம் செலுத்தப்படுகிறார்கள் என்பதை நீங்கள் அறிந்தால் ஆச்சரியப்படுவீர்கள். இந்த இரண்டுப் பெண்களுக்குத்தான் பாஷைகளின் வியாக்கியானமும் தெரியும். அடிப்படையில், அவர்களுடைய வியாக்கியானங்கள், சபைப் போதகர் என்ன செய்ய வேண்டும் என்பதை எடுத்துச் சொல்லும். தன் சபை பெண் தீர்க்கதரிசிகளை விட்டு அந்த இளம் போதகர் தனியே பிரிந்து சென்றால், அவருக்கு ஐயோ!

இன்னும் பல பல உதாரணங்கள் இருக்கின்றன. ஆனால் இவையெல்லாம் காண்பிப்பது இதுதான். தேவனுடைய சட்டத்திற்கு விரோதமான ஆளுகை, பொல்லாத ஆவிக்குரிய சக்தியினால் ஆதரிக்கப்படுகிறது. இந்த பொல்லாத ஆவிக்குரிய வல்லமைதான், பில்லிசூனியமாகும்.

பில்லிசூனியம் சபையை எப்படி தோற்கடிக்கிறது?

வேதாகமம் இரண்டு முக்கியமான மந்திரவாதி வகைகளைக் குறிப்பிடுகிறது. ஆண், பெண் மந்திரவாதிகள். சூனியக்காரி என்பது பெண் மந்திரவாதியைக் குறிப்பிடுகிறது. மந்திரவாதி என்ற வார்த்தை ஒரு ஆண்பால் வார்த்தையாகும். சூனியக்காரி என்ற சொல், கிறிஸ்தவ வட்டாரங்களில் பிரபலமானதால், நாம் பில்லிசூனியம் என்றாலே பெண்களுக்குரியது என்று நினைக்கிறோம். ஆனால், அது தவறானது. ஏனென்றால் வேதாகமத்தில் சொல்லப்படுகிற முதல் மந்திரவாதி ஒரு ஆண்தான். அவன் பெயர் பிலேயாம்.

பிலேயாம் ஒரு ஜோசியக்காரன், குறி சொல்கிறவன், மந்திரவாதி. இஸ்ரவேலை சபிக்கும்படி மோவாபின் ராஜாவான பாலாக் அவனை விலைகொடுத்து வாங்கினான். பாலாக் பிலேயாமிடம், ''நீ யாரை சபிக்கிறாயோ, அவர்கள் சபிக்கப்படுவார்கள், நீ யாரை ஆசீர்வதிக்கிறாயோ அவர்கள் ஆசீர்வதிக்கப்படுவார்கள் என்பதை நான் அறிவேன்,'' என்றான். (முழு சம்பவத்தையும் எண்ணாகமம் 22 முதல் 24-ம் அதிகாரங்களில் வாசித்துப் பாருங்கள்). ஆப்பிரிக்காவில் பலர் ஒரு மந்திரவாதியிடம் இதே போலத்தான் சொல்வார்கள்: "நீர் என் குடும்பத்தை ஆசீர்வதித்தால், நான் ஆசீர்வதிக்கப்படுவேன்; நீர் என் எதிரியை சபித்தால், அவன் சபிக்கப்படுவான்." அந்தப் பகுதிகளில் இத்தகைய மந்திரவாதம்தான் நடக்கிறது.

வேதாகமத்தில், பெண் மந்திரவாதிக்கு ஒரு உதாரணம், ஆகாப் ராஜாவின் மனைவி யேசபேல் ஆவாள். அவள் தன் கணவனை கட்டுப்படுத்தி நடத்தி, அவன் மூலமாய் நாட்டையே ஆண்டு வந்தாள். அவள் செய்த கொடூரமான காரியங்களில் ஒன்று, ராஜாவின் முத்திரை மோதிரத்தைப் பயன்படுத்தி நாபோத்தின் மரணக் கட்டளையில் முத்திரையிட்டாள். அவனுடைய திராட்சத்தோட்டத்தை அபகரிக்கும்படி அவர்கள் திட்டமிட்டிருந்தார்கள் (1 இராஜாக்கள் 21-ம் அதிகாரத்தை வாசிக்கவும்). இது பில்லிசூனியமாகும். ஒரு ஆணுடைய அதிகார சின்னத்தை எடுத்து, அதைப் பயன்படுத்தி, ஒரு பெண்ணின் நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதாகும்.

பழைய ஏற்பாட்டில் காணப்படுகிற ஆண், பெண் என்ற இந்த இரண்டு வகையான பில்லிசூனியமும், புதிய ஏற்பாட்டில் சபையின் சூழ்நிலையில் சொல்லப்பட்டிருக்கிறது. சபைக்கு வெளியே அல்ல, சபைக்குள்தான் இது சொல்லப்பட்டிருக்கிறது. 2 பேதுரு 2:15-ம் வசனத்தில், கள்ளத்தீர்க்கத்தரிசிகளைக் குறித்துச் சொல்லும்போது, பிலேயாமும் அங்கே குறிப்பிடப்பட்டிருக்கிறான். இதே சூழ்நிலையில் யூதா 11-ம் வசனத்திலும் பிலேயாமின் பெயர் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்ல, வெளிப்படுத்தின விசேஷத்தில் எழுதப்பட்டுள்ள ஏழு சபைகளில் ஒன்றில் கிரியை செய்து கொண்டிருந்த ஒரு பொல்லாத சக்தியாக அவன் பட்டியலிடப்பட்டிருக்கிறான் (வெளிப்படுத்தின விசேஷம் 2:14-ஐ பார்க்கவும்).

வெளிப்படுத்தின விசேஷம் **2:20**-ம் வசனத்தில் மற்றொரு சபையைக் குறித்துச் சொல்லும்போது யேசபேலின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது:

> *ஆகிலும் உன் பேரில் எனக்குக் குறை உண்டு. என்னவெனில் தன்னை தீர்க்கதரிசியென்று சொல்லுகிற யேசபேல் என்னும் ஸ்திரியானவள் என்னுடைய ஊழியக்காரர் வேசித்தனம் பண்ணவும் விக்கிரகங்களுக்குப் படைத்தவைகளைப் புசிக்கவும் அவர்களுக்குப் போதித்து, அவர்களை வஞ்சிக்கும் படி, நீ அவளுக்கு இடங்கொடுக்கிறாய்.*

ஒன்றை நான் கவனித்திருக்கிறேன்: இவ்வகையான பில்லிசூனியங்கள், தேவனுடைய ஜனங்களுக்கு வெளியே கிரியை செய்கிறவைகளாய் இருந்தாலும், அவைகளின் பிரதான நோக்கம், தேவனுடைய ஜனங்களுக்குள் நுழைந்து, தங்களுடைய பொல்லாத கிரியைகளை செய்வதே ஆகும்.

இந்த இரண்டு வகையான பில்லிசூனியங்களின் செயல்பாடுகளை நாம் கவனித்து பார்க்கும்போது, அவைகள் பயன்படுத்துகின்ற இரண்டு தந்திரங்களை நம்மால் சீக்கிரமாய் புரிந்து கொள்ள முடியும்: பில்லிசூனியத்தினால் நம்மை நேரடியாக தோற்கடிக்க முடியவில்லை என்றால், அது உள்ளுக்குள்ளிருந்து நம்மை தோற்கடிக்க முயற்சிக்கும். பிலேயாமின் உதாரணத்தைப் பாருங்கள். முதலாவதாக, மந்திரவாதம் தேவனுடைய ஜனங்களை நேரடியாக சபிக்க முயலுகிறது. பிலேயாம் இஸ்ரவேல் மக்களை சபிக்கும்படியாக கூலிக்கு அமர்த்தப்பட்டான். இஸ்ரவேல் மக்கள் தேவனுக்குக் கீழ்ப்படிந்திருக்கும் வரைக்கும் பிலேயாம் அவர்களை சபிக்க தேவன் அனுமதிக்கவில்லை. இஸ்ரவேலை சபிக்கும் படியாக முயன்ற போதெல்லாம், தன் சுய விருப்பத்திற்கு மாறாகவும், தன்னைக் கூலிக்கு அமர்த்தின பாலாக் ராஜாவின் எரிச்சலுக்கு ஏதுவாகவும், பிலேயாம் அவர்களை ஆசீர்வதித்தே முடித்தான்.

நீங்கள் வேதாகமத்தைக் கவனமாக வாசித்து, அதன் பல்வேறு பகுதிகளை ஒன்று சேர்த்து பார்த்தால், பிலேயாம் அதோடு விட்டுவிடவில்லை என்பது தெரியும். இஸ்ரவேலை நேரடியாகச் சபிக்க முடியாது என்பதை அறிந்த பிலேயாம் வேறொரு அணுகுமுறையை பயன்படுத்தினான். இது எதிர்பார்த்த

ஒன்றுதான். அவன் பாலாக் ராஜாவிடம், மோவாப் பெண்களைக் கொண்டு இஸ்ரவேல் ஜனங்களை தன் வசப்படுத்தி, அவர்களோடு கலவும்படி செய்து, அதன் மூலம் அவர்களுடைய விக்கிரகங்களை இஸ்ரவேலர் வணங்கி ஆராதிக்கும்படி செய்து விட வேண்டும் என்று ஆலோசனை கூறினான். பாலாக் ராஜா இந்த முயற்சியில் வெற்றி பெற்றான். இதன் மூலம் பிலேயாமிடமிருந்தல்ல, தேவனிடமிருந்தே சாபம் இஸ்ரவேல் மக்கள் மேல் வந்தது.

பில்லி சூனியம் இப்படித்தான் கிரியை செய்கிறது. நம்மை நேரடியாக தோற்கடிக்க முடியாவிட்டால், தேவனிடமிருந்து சாபத்தைக் கொண்டு வரும் ஏதாவது ஒரு செயலுக்குள் நம்மைத் தூண்டி இழுக்கும்படி அது முயலும். காரணம், அப்படித்தான் தேவன் இந்த பிரபஞ்சத்தை ஒழுங்குபடுத்தியிருக்கிறார்.

ஐந்தாவது அணி

சபை வெளியே இருந்து ஒருபோதும் தோற்கடிக்கப்படமாட்டாது. தன் சொந்த அனுபவத்தைக் குறித்து, இயேசு இவ்வாறு சொல்கிறார், "இந்த உலகத்தின் அதிபதி (பிசாசு) வருகிறான். அவனுக்கு என்னிடத்தில் ஒன்றுமில்லை" (யோவான் 14:30-ஐ பாருங்கள்). பிசாசுக்கு இயேசுவிடம் ஒன்றுமில்லை. எனவே பிசாசினால் அவரை தோற்கடிக்க முடியவில்லை. சபையும், ''பிசாசுக்கு எங்களிடம் ஒன்றுமில்லை'' என்று சொல்லக் கூடுமானால், சபையை எவராலும் தோற்கடிக்க முடியாது. பிசாசு சபையை ஐந்தாவது அணியின் மூலம் தோற்கடிக்கிறான்.

'ஐந்தாவது அணி' என்ற வார்த்தையின் உருவாக்கத்தைக் குறித்து நான் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். 1936-ல் நானும் என் நண்பரும் ஒரு நடைப் பயணம் சென்று கொண்டிருந்தோம். அப்போது எனக்கு 21 வயது. நாங்கள் ஃபிரான்ஸ் நாட்டிலிருந்து பைரீனீஸ் மலைத்தொடர் வழியாய் ஸ்பெயின் நாட்டுக்கு சென்று கொண்டிருந்தோம். எதிர்பாராத விதமாக ஸ்பெயினில் நடந்துக் கொண்டிருந்த உள்நாட்டுப் போரில் சிக்கிக் கொண்டோம். இந்த உள்நாட்டுப்போரில் இரண்டு ஸ்பானியர்களின் பிரிவுகள் ஒருவரோடொருவர் போரிட்டுக் கொண்டிருந்தார்கள். இறுதியில் ஜெனரல் ஃப்ராங்கோ வெற்றி பெற்றார்.

ஒரு ஸ்பெயின் நகரத்தை தாக்கிக் கொண்டிருந்த ஒரு குறிப்பிட்ட ஸ்பெயின் நாட்டு ராணுவ தளபதியை குறித்ததான கதை இது. வேறொரு ராணுவ அதிகாரி அவரிடம் வந்து, "இந்த நகரத்தைப் பிடிக்க உங்களுடைய திட்டம் என்ன?" என்று கேட்டார்.

முதல் அதிகாரி, ''என்னிடம் நான்கு படைப்பிரிவுகள் உள்ளன. அவைகளில் ஒன்று வடக்கிலிருந்தும், ஒன்று தெற்கிலிருந்தும், ஒன்று கிழக்கிலிருந்தும், மற்றொன்று மேற்கேயிருந்தும் நகரை நோக்கி முன்னேறுகின்றன," என்று கூறினார். பிறகு ஒரு நொடிப் பொழுது அமைதலாய் இருந்த அவர், "ஆனால், என்னுடைய ஐந்தாவது அணிதான் நகரத்தைப் பிடிக்கும் என்று எதிர்பார்க்கிறேன்" என்று கூறினாராம்.

''உங்களுடைய ஐந்தாவது அணி எங்கேயிருக்கிறது?'' என்று இரண்டாவது ஜெனரல் கேட்டார்.

"நகரத்திற்குள் இருக்கிறது," என்று முதல் ஜெனரல் பதிலளித்தார்.

நகரத்திற்குள் இருந்து கொண்டு, நகரத்திற்கு வெளியில் இருந்து தாக்கும்படி உள்ளே வரும் வீரர்களுக்கு நகரத்தைக் காட்டிக் கொடுக்கும் தேசத்துரோகிகளே அந்த ஐந்தாம் அணி ஆவர். அதேபோல, சபைக்குள்ளிருக்கும் ஐந்தாவது அணியே நம்மை தோல்வியுறச்செய்கிறது. ஒரு தனிநபரோ அல்லது ஒரு கூட்ட ஜனமோ, வெளியே இருந்து வந்து நம்மை தோற்கடித்து விடப்போவதில்லை.

''பிசாசுக்கு என்னிடம் ஒன்றுமில்லை,'' என்று நான் சொல்லக் கூடுமானால், பிசாசினால் என்னை எவ்வகையிலும் தோற்கடிக்க முடியாது. நாம் ஒரு கூட்ட கிறிஸ்தவர்களாக, "பிசாசுக்கு எங்களிடம் ஒன்றுமில்லை" என்று சொல்லக்கூடுமானால், பிசாசு நமக்கு விரோதமாய் வல்லமையற்றவனாய் இருப்பான். அதனால்தான், தன்னையும் தன்னுடைய ஏஜென்ட்டுக்களையும் கிறிஸ்தவ சபைக்குள் எப்படியாகிலும் புகுத்தி விட வேண்டும் என்பதே சாத்தானுடைய விடாப்பிடியான திட்டமாய் இருக்கிறது.

அடுத்த அத்தியாயத்தில், பொதுவாக பேசுவதில் இருந்து திரும்பி, நாம் இன்னும் குறிப்பாக பேச ஆரம்பிப்போம். சபையின் மீது பில்லிசூனியம் உண்டாக்கக்கூடிய விளைவுகளை ஆராய்வோம்.

7
சபையில் உள்ள சத்துரு

இருளை வெளிச்சமும், வெளிச்சத்தை இருளுமாகப் பாவித்து,
......சாதிக்கிறவர்களுக்கு ஐயோ!

ஏசாயா 5:20

தாங்கள் மயக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற வெளிப்பாட்டைக் கொண்டு பவுல் கலாத்தியரை எதிர்கொண்டபோது இவ்விரண்டு வார்த்தைகளுடன் துவக்குகிறார்: புத்தியில்லாத கலாத்தியரே! நம்மில் யாரும் புத்தியில்லாதவர்கள் என அழைக்கப்பட விரும்ப மாட்டோம்! ஆனால் அநேக புத்தியில்லாத கிறிஸ்தவர்கள் உண்டென்பதை நாம் ஒத்துக்கொள்ளத்தான் வேண்டும்.

பவுல் வார்த்தைகளை வீணடிக்கவில்லை. கடந்த அத்தியாயத்தில் நாம் பார்த்ததுபோல, புத்தியில்லாத கலாத்தியரே! உங்களை மயக்கினவன் யார் என்று அவர்களைப் பார்த்துக் கேட்டு, அவர் அவர்களுடைய மூடத்தனத்தை வெளிப்படுத்தினார். *மயக்குதல்* என்பதற்கான கிரேக்க வார்த்தை, ''கண்களால் கவர்ந்திழுத்தல்'' என்று அர்த்தமாகும். இது ''பொல்லாத, வன்கண்ணை'' குறிக்கும். பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் பெற்ற ஒரு கிரேக்க பாரம்பரிய பாதிரியார் சில ஆண்டுகளுக்கு முன்பதாக என்னிடம் வந்தார். யாரோ ஒருவர் தன்மீது பொல்லாத வன்கண்ணை வைத்துவிட்டார் என்பதற்காக, அவர் என்னிடம் உதவிக்கு வந்தார். அப்பொழுது அவர் கலாத்தியரில் பயன்படுத்தப்பட்டிருக்கிற *பாஸ்க்கைனோ (Baskaino)* என்ற அதே மூல வார்த்தையைத்தான் பயன்படுத்தினார். அதாவது, யாரோ ஒருவர் வேண்டுமென்றே அவர் மீது

ஒரு சாபத்தை கூறியிருக்கிறார்கள் என்று அவர் சொன்னார். மாற்கு 7:21-23 சொல்லுகிறது:

எப்படியெனில், மனுஷருடைய இருதயத்துக்குள்ளிருந்து, பொல்லாத சிந்தனைகளும், விபச்சாரங்களும், வேசித்தனங்களும், கொலை பாதகங்களும், களவுகளும், பொருளாசைகளும், துஷ்டதனங்களும், கபடும், காமவிகாரமும், வன்கண்ணும், தூஷணமும், பெருமையும், மதிகேடும், புறப்பட்டு வரும். பொல்லாங்கானவைகளாகிய இவைகளெல்லாம், உள்ளத்திலிருந்து புறப்பட்டு மனுஷனைத் தீட்டுப்படுத்தும்.

வன்கண், உண்மையாகவே கிரியை செய்கிறது என்பதை அந்த பாதிரியார் நன்கு அறிந்திருந்தார். கலாத்தியரில் நாம் இன்னும் இதை ஆராய்ந்து பார்ப்போம்.

புத்தியில்லாத கலாத்தியரே! நீங்கள் சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமற் போகத்தக்கதாக உங்களை மயக்கினவர் யார்? இயேசு கிறிஸ்து சிலுவையிலறையப்பட்டவராக உங்கள் கண்களுக்கு முன்பாக பிரத்தியட்சமாய் உங்களுக்குள்ளே, வெளிப்படுத்தப்பட்டிருந்தாரே. ஒன்றை மாத்திரம், உங்களிடத்தில் அறிய விரும்புகிறேன். நியாயப் பிரமாணத்தின் கிரியைகளினாலேயா, விசுவாசக் கேள்வியினாலேயா, எதினாலே ஆவியைப் பெற்றீர்கள்? ஆவியினாலே, ஆரம்பம் பண்ணின நீங்கள் இப்பொழுது, மாம்சத்தினாலே முடிவு பெறப் போகிறீர்களோ? நீங்கள் இத்தனை புத்தியீனரா?

கலாத்தியர் 3 :1-3

கலாத்தியருக்குள் உண்டான இந்த எல்லாப் பொல்லாத விளைவுகளும், பில்லிசூனியத்தினால் உண்டாயின.

பில்லிசூனியம் வெளிப்படும் விதம்

தற்காலத்து இறையியல் பாஷையில், கலாத்தியரின் இந்தப் பிரச்சனைக்கு நாம் என்ன பெயர் கொடுக்கலாம்? அதற்கான வார்த்தை "*மதத்தின்*

சட்டத்திட்டங்களை கடைபிடிப்பதன் மூலம் தற்பெருமை பாராட்டிக் கொள்ளும் ஒரு மனநிலை (legalism)" என்று சொல்லலாம். இந்த மனநிலை, சபைக்குள் பில்லிசூனியம் இருக்கிறது என்பதை அப்பட்டமாக வெளிப்படுத்துகிறது என்பதை நான் உணர்ந்தபோது, அது என்னை உலுக்கியது. காரணம், அப்பொழுது நான் சபையினுடைய முழு தன்மையையும், அதன் செயல்பாட்டையும் முற்றிலும் வித்தியாசமான ஒரு வெளிச்சத்தில் கண்டேன்.

மதத்தின் சட்டத்திட்டங்களை கடைபிடிப்பதன் மூலம் தற்பெருமை பாராட்டிக் கொள்ளும் மனநிலை (legalism), கிறிஸ்தவர்களின் முதன்மையான பிரச்சனையாய் இருப்பது சாத்தியம் அல்ல என்று உங்களுக்கு தோன்றுகிறதா? இந்தப் பிரச்சனை பில்லிசூனியத்தினால் உண்டானது என்று சொன்னால், அது இன்னும் அசாத்தியம் என்பதுபோல உங்களுக்குத் தெரிகிறதா? "அப்படியிருக்க முடியாது, சகோதரன் பிரின்ஸ் அவர்களே," என்று நீங்கள் என்னிடம் கூறலாம். ஆனால், கலாத்தியரை விட நாம் மிக சிறந்தவர்களா என்ற ஒரு கேள்வியை நமக்கு நாமே கேட்டுக்கொள்ள வேண்டும். அவர்கள் உண்மையான ஜீவனுள்ள புதிய ஏற்பாட்டுக் காலத்து சபையாய் இருந்தார்கள். பரிசுத்த ஆவியினால் நிறைந்து அற்புதங்களை காண்கிறவர்களாய் இருந்தனர். அப்போஸ்தலனாகிய பவுல் *சரீரத்தில்* அவர்களுக்கு முன்பாக நின்று பிரசங்கித்தார். தற்காலத்து சபைகளில் எத்தனை பேர் கலாத்தியரை விட நாங்கள் சிறந்த நிலையில் இருக்கிறோம் என்று கூற முடியும்?

கருத்தளவில் நம்மோடு ஒத்துப் போகாதவர்களை மரியாதை குறைந்த விதத்தில் வருணித்துச் சொல்லும்படி, வழக்கமாக நாம் பயன்படுத்துகிற ஒரு வார்த்தைதான், *சட்டத் திட்டங்களைக் குறித்த தற்பெருமையாகும் (legalism).* சட்டத்திட்டங்களைக் குறித்த தற்பெருமைக்கு (legalism) இரண்டு விளக்கங்களை நான் கொடுக்கிறேன். முதலாதாக, சட்டத்திட்டங்களைக் குறித்த தற்பெருமை என்பது, "சட்டங்கள் அல்லது நியாயப்பிரமாணத்தை கைக்கொள்வதின் மூலம் நீதியை அடையும்படி நாடுவது" என்று அர்த்தமாகும்.

புதிய ஏற்பாட்டின் பெரும்பாலான மொழிப்பெயர்ப்புகள், நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்வதினால் நீதி வருவதில்லை என்றுதான்

சொல்கின்றன. நியாயப்பிரமாணம் என்ற அர்த்தம் மொழிப்பெயர்ப்பாளர்களால் உண்டாக்கப்பட்டுள்ளது. மூலபாஷையின் எழுத்துக்கள் *சட்டத்தைக் கைக்கொள்வதினால் நீதி வருவதில்லை* என்பதைத் தான் கூறுகின்றன.

சட்டத்தின் முன்மாதிரி, மோசேயின் நியாயப்பிரமாணம் ஆகும். ஆனால் அது மோசேயின் நியாயப்பிரமாணத்தோடு மாத்திரம் நின்று விடுவதில்லை. வேறுவிதமாகச் சொன்னால், மோசேயின் நியாயப்பிரமாணம் ஒரு முன்னுதாரணமான சட்டமாக இருக்கிறது. ஏனென்றால் அது ஒரு தெய்வீக சட்டம், பிழையற்ற சட்டம். அது தேவனால் கொடுக்கப்பட்ட சட்டம். மோசேயின் நியாயப்பிரமாணத்தை கைக்கொள்வதன் மூலம் நம்மால் நீதியைப் பெறமுடியாது என்றால், பிறகு வேறு எந்த ஒரு சட்டத்தினாலும் நமக்கு நீதியை உண்டாக்கிக் கொடுக்க முடியாது.

சட்டத்திட்டங்களைக் குறித்த தற்பெருமையின் இரண்டாம் விளக்கம் என்னவென்றால், "நீதியை பெறும்படி தேவன் தந்திருக்கிற நிபந்தனைகளோடு இன்னும் கூடுதலான நிபந்தனைகளைச் சேர்ப்பதாகும்.'' தேவன் அவர்களிடமிருந்து என்ன எதிர்பார்க்கிறாரோ, அதைக் காட்டிலும் அதிகமான எதிர்பார்ப்புகளை அவர்கள் மீது திணிப்பதாகும். இப்படிச் செய்வதன் மூலம், நாம் நம்மையே தேவனுடைய ஸ்தானத்தில் வைக்கிறோம். நீ இதையெல்லாம் செய்தாக வேண்டும் என்று தேவன் சொன்ன பிறகு, அதனோடு வேறெந்த ஒரு நிபந்தனையையும் கூடுதலாக சேர்ப்பதற்கு எந்த ஒரு சபைக்கும் அல்லது எந்த ஒரு ஊழியக்காரருக்கும் அல்லது எந்த ஒரு மத அமைப்பிற்கும் அதிகாரம் இல்லை.

பில்லிசூனியத்தின் உள்ளான கவர்ச்சி

பில்லிசூனியம் எப்படி செயல்படுகிறது என்பதை புரிந்துக்கொள்ளும்படி **1**-ம் வசனத்தில் பவுல் சொன்னதை மறுபடியும் கவனித்துப் பார்ப்போம்: ''நீங்கள் சத்தியத்துக்கு கீழ்ப்படியாமற் போகத்தக்கதாக உங்களை மயக்கினவன் யார் **?** இயேசு கிறிஸ்து சிலுவையிலறையப்பட்டவராக உங்கள் கண்களுக்கு முன் பிரத்தியட்சமாய் உங்களுக்குள்ளே வெளிப்படுத்தப்பட்டிருந்தாரே" **(**கலாத்தியர் **3:1).**

கல்வாரி சிலுவையில் கிறிஸ்து இயேசுவின் மரணம் நமக்காய் செய்து

முடித்தது என்ன என்பதை பார்க்க முடியாதபடி, பில்லிகூனியம் தேவனுடைய ஜனங்களின் கண்களைக் குருடாக்கி விடுகிறது. இதைத்தான் இவ்வார்த்தைகள் நமக்கு உணர்த்துக்கின்றன. இவ்வாறு குருடாக்கப்பட்ட நிலையில், அவர்கள் நீதியைப் பெறும்படி பல்வேறு மூல ஆதாரங்களை நோக்கி திரும்பி விடுகிறார்கள்.

இயேசு கிறிஸ்து கல்வாரி சிலுவையில் என்ன செய்து முடித்தாரோ, அதன் மூன்று அம்சங்கள் இங்கு நாம் பேசிக் கொண்டிருக்கிற விஷயங்களோடு தொடர்புடையவைகளாய் இருக்கின்றன. இந்த மூன்றும் நியாயப்பிரமாணத்தோடு சம்பந்தப்பட்டிருக்கிறது. முதலாவதாக, தேவனுடைய நீதியை அடைவதற்கு ஒரு வழியாக நியாயப்பிரமாணம் இராதபடிக்கு அதை அவர் என்றென்றைக்குமாய் நீக்கிப் போட்டார். “விசுவாசிக்கிற எவனுக்கும் நீதி உண்டாகும் படியாக கிறிஸ்து நியாயப்பிரமாணத்தின் முடிவாயிருக்கிறார்” (ரோமர் 10:4). கத்தோலிக்கரோ அல்லது அவர்களிடமிருந்து பிரிந்து சென்ற கிறிஸ்தவர்களோ, யூதரோ அல்லது புறஜாதியாரோ, எல்லோருக்கும் இது ஒன்றுதான். நீங்கள் ஒரு விசுவாசியாகி விட்டீர்கள் என்றால், பிறகு தேவனுடைய நீதியை அடைவதற்கான ஒரு வழியாகிய நியாயப்பிரமாணம் என்னும் வழி உங்களுக்கு அடைக்கப்படுகிறது.

இரண்டாவதாக, இயேசு கல்வாரி சிலுவையில் அனுபவித்தது, நம்முடைய விழுந்து போன, ஜென்ம சுபாவத்தின் மீதான தேவனுடைய நியாயத்தீர்ப்பு ஆகும். அநேகர் இதைப் புரிந்து கொண்டு, இதைக் குறித்து நன்றி பாராட்டுவதில்லை. ரோமர் 6:6 சொல்கிறது, “நம்முடைய பழைய மனிதன் (நம்முடைய ஜென்ம சுபாவம்) அவருடனே கூட சிலுவையில் அறையப்பட்டது.” தேவனுடைய இரக்கம், இதை நமக்குச் செய்வதற்குப் பதிலாக, கிறிஸ்து இயேசுவிற்கு இதைச் செய்தது. ஆனால் நம்முடைய புதுப்பிக்கப்படாத ஜென்ம சுபாவத்தைக் குறித்து தேவன் என்ன நினைக்கிறார் என்பதை நீங்கள் அறிய விரும்பினால், சிலுவையில் தொங்கும் இயேசுவை உங்கள் கண் முன் நிறுத்துங்கள். காரணம், இதுதான் அதைக் குறித்த தேவனுடைய கடைசி வார்த்தையாய் இருக்கிறது. சிலுவை, நம்முடைய ஜென்ம சுபாவத்துக்காக உருவாக்கப்பட்டது. சிலுவையில்தான் அது அறையப்பட்டிருக்க வேண்டும். 9 மற்றும் 10வது அத்தியாயங்களில் மனிதனுடைய வீழ்ச்சியடைந்த குணாதிசயங்களை குறித்து இன்னும்

அதிகமாக நாம் பார்ப்போம்.

மூன்றாவதாக, நாம் வாழும் விதத்தோடு பொருத்திப் பார்க்க வேண்டிய ஒரு செய்தி சிலுவையில் நமக்கு உண்டு. சிலுவையில் நம்முடைய மீட்பு விலைக்கிரயம் செலுத்தி வாங்கப்பட்டிருக்கிறது. இது ஏதோ நம்முடைய வாழ்க்கையின் வெளிப்பகுதியோடு சம்பந்தப்பட்ட ஒரு காரியம் மட்டும் அல்ல. இது நம்முடைய வாழ்க்கைக்குள் செயல்படுத்தப்பட வேண்டிய ஒரு கோட்பாடாகவும் இருக்கிறது. கலாத்தியர் **5:24**-ம் வசனத்தில் பவுல் இவ்வாறு சொல்கிறார், "கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள்." கிறிஸ்து இயேசுவில் தேவன் இதை செய்திருக்காவிட்டால், இப்பொழுது நம்மால் இதைச் செய்ய முடியாது. சிலுவையில் அறையப்பட்ட வாழ்க்கை எனும் கோட்பாட்டில், நம் சுயத்தை வெறுத்து, நம்முடைய மாம்சத்தின் விருப்பத்திற்கு மறுப்பு தெரிவித்து வாழும் ஒரு வாழ்க்கைமுறை அடங்கியிருக்கிறது. இதைத்தான் இயேசு சிலுவையில் செய்தார்.

கிறிஸ்தவர்களுடைய கண்கள் பில்லிசூனியத்தினால் சிலுவையின் நிஜத்திற்கு குருடாக்கப்படும்போது, அவர்கள் இம்மூன்று பரிமாணங்களையும் பார்க்கத் தவறுகின்றனர். நீதியைப் பெறுவதற்கு ஒரு வழியாக இருந்த நியாயப்பிரமாணத்தை தேவன் நீக்கிப் போட்டார் என்பதை அவர்கள் ஒருபோதும் புரிந்து கொள்வதில்லை. சிலுவை, நம்முடைய விழுந்து போன ஜென்ம சுபாவத்தின் மீதான தேவனுடைய நியாயத்தீர்ப்பை எடுத்துக் காண்பிக்கிறது என்பதையும் அவர்கள் ஒருபோதும் புரிந்து கொள்வதில்லை. அவர்கள் சிலுவையில் அறையப்பட்ட வாழ்க்கைமுறையின் கோட்பாட்டை தங்களுடைய வாழ்க்கையில் ஒருபோதும் செயல்படுத்திப் பார்ப்பதில்லை. அவர்கள் தங்களுடைய வாழ்க்கையில் தங்கள் மாம்சத்திற்கு மறுப்பு தெரிவிப்பதில்லை. அவர்கள் தங்கள் மனம் போன போக்கிலே வாழ்கிறார்கள். அவர்கள் தங்கள் சுயத்தைப் பிரியப்படுத்துகிற, தங்கள் சுயத்தை திருப்தி செய்கிற ஒரு வாழ்க்கையை வாழ்கின்றார்கள்.

*மத சட்டதிட்டங்களைக் குறித்த தற்பெருமையின் **(legalism)** மகா பயங்கரமான ஈர்ப்பு*

மதத்தின் சட்டதிட்டங்களைக் குறித்த தவறான வைராக்கியம்,

மனுஷனுடைய மனதை மிகவும் இறுக்கமாக தன்னுடைய பிடிக்குள் பிடித்து வைத்திருக்கிறது. அது மனுஷனுடைய தற்பெருமையை கவர்ந்து இழுக்கிறது. அதனால்தான் ஜனங்கள் அதைக் குறித்து சந்தோஷமாய் களிகூருகிறார்கள். அதனால்தான் அதையும் இதையும் செய்யச் சொல்கின்ற பல்வேறு சடங்குகள் நிறைந்த ஒரு மதத்திற்கு மக்கள் தங்களையே வைராக்கியமாய் அர்ப்பணித்துக் கொள்கிறார்கள்.

மத்திய கிழக்கு நாடுகளில் முஸ்லீம்கள் மத்தியில் பல வருடங்கள் நான் வாழ்ந்திருக்கிறேன். எனவே இஸ்லாமிய மதத்தைக் குறித்த சில விஷயங்கள் எனக்கு நன்கு தெரியும். கடந்த பதினான்கு நூற்றாண்டுகளில், அது ஒரு மனிதனைக்கூட ஒருபோதும் மகிழ்ச்சியாக்கினதில்லை என்று நான் பல முறை கூறியுள்ளேன். அது ஒரு நபரைக் கூட சந்தோஷப்படுத்தியதில்லை. அது வேதனைகளும், இறுக்கமும், அடிமைத்தனங்களும் நிறைந்த ஒரு மதம். இதற்குப் பிறகும் முஸ்லீம்கள் ஏன் அதற்கு வைராக்கியமாய் தங்களை அர்ப்பணித்துள்ளனர்? காரணம், அது அவர்களுடைய மதப்பெருமையை திருப்தி செய்கிறது. அல்லாவினுடைய அங்கீகாரத்தை சம்பாதிக்கும்படி அவர்கள் செய்த எல்லாவற்றையும் அவர்கள் உங்களிடத்தில் எடுத்துச் சொல்வார்கள்.

இந்தப் பழக்கம் இஸ்லாமியரோடு மட்டும் நின்று விடுவதில்லை. இது எல்லா மதத்தவருடைய ஒரு அம்சமாக இருக்கிறது. நம்முடைய நற்கிரியைகளைக் குறித்து பெருமைப்படுகிறவர்களாகவே நாம் வளர்ந்திருக்கிறோம். ஏற்கனவே தேவன் சபித்திருந்த நிலத்தின் கனியை தேவனுக்குக் காணிக்கையாகப் படைத்த காயீனைப் போல் நாம் மாறியிருக்கிறோம். இது நம்முடைய பழைய சுபாவத்தின் செயல்பாட்டைக் குறித்த ஒரு படவிளக்கமாக இருக்கிறது. நம்முடைய பழைய சுபாவம் தேவனுடைய சாபத்தின் கீழ் இருக்கிறது. ஆகையால் அதிலிருந்து நாம் அவருக்கு எதைக் கொடுத்தாலும், அது சபிக்கப்பட்டதென்று ஏற்கனவே அவர் அறிவித்த ஒன்றிலிருந்து எடுத்து அவருக்கு காணிக்கைச் செலுத்துவது போலாகும். அது ஒருபோதும் தேவனால் ஏற்றுக் கொள்ளப்படகூடிய ஒன்றாக இருக்காது.

பவுல் இதை பலமுறை சொல்லியிருக்கிறார்: ‘‘கிருபையினாலே இரட்சிக்கப்பட்டீர்கள். ஒருவரும் பெருமை பாராட்டாதபடிக்கு இது

கிரியைகளினால் உண்டாதல்ல" (எபேசியர் 2:8-9 வசனங்களைப் பாருங்கள்). இந்த வாக்கியத்தை குறைந்தபட்சம் மூன்று அல்லது நான்கு முறையாவது நீங்கள் புதிய ஏற்பாட்டில் பார்க்க முடியும். *"ஒருவரும் பெருமை பாராட்டாதபடிக்கு"* என்று ஏன் இது கூறவேண்டும்? நான் எப்பொழுதுமே இதைக் குறித்து சிந்தித்ததுண்டு. அப்பொழுது திடீரென்று அது எனக்கு தெளிவுபடத் தொடங்கியது: மக்கள் மத வைராக்கியமாய் வாழ்வதில் பிரியப்படுகிறார்கள். காரணம், அது அவர்களுக்கு ஒருவிதமான தற்பெருமையைக் கொடுக்கிறது. அது பரிசேயர்கள் மத வைராக்கியத்தில் இவ்வாறு சொல்லிக் கொள்வதைப் போலிருக்கிறது: "தேவனே, நான் வாரத்தில் இரண்டு நாள் உபவாசிக்கிறேன். என் சம்பாத்தியம் எல்லாவற்றிலுமிருந்து நான் தசம பாகம் செலுத்துகிறேன். நான் விபச்சாரம் செய்வதில்லை, எவனுடைய பொருளையும் அபகரிப்பதில்லை, அநியாயம் செய்வதில்லை'' (லூக்கா 18:11-12ஐ பாருங்கள்). ஆனால் அவன் நீதிமானாக்கப்படவில்லை. நம்முடைய பழைய, விழுந்து போன சுபாவத்தில் இருந்து எதையாகிலும் தேவனுக்கு செலுத்தி விடலாம் என்று நாம் நினைத்தோமென்றால், அது ஒரு விதத்தில், இயேசு சிலுவையில் மரித்திருக்க வேண்டிய அவசியமே இல்லை என்று நாம் தேவனிடத்தில் துணிகரமாகச் சொல்வது போலாகி விடும்.

நியாயப்பிரமாணத்தை கடைபிடிப்பதன் மூலம் நீதி வரக்கூடுமானால், பிறகு கிறிஸ்து மரித்தது வீண் என்று பவுல் கூறுகிறார் (கலாத்தியர் 2:21-ஐ பாருங்கள்). தேவனிடம் நாம் இவ்வாறு சொல்லும்போது, அவருடைய தயவை நாம் இழந்து போகிறோம். அது நமக்கு நல்லதல்ல. அது நமக்கு மகா மோசமான நஷ்டத்தைக் கொண்டு வந்து விடும். காரணம், இயேசுவை கனவீனப்படுத்தும் எந்த ஒரு செயலையும் நாம் செய்யும்போது, அது தேவனுடைய தயவை நாம் இழந்து போகும்படி செய்து விடுகிறது. அதற்காக தேவன் தம்முடைய பிரசன்னத்தில் இருந்தே நம்மை புறந்தள்ளி விடுவார் என்று அர்த்தமில்லை. ஆனால் சிலுவையில் கிறிஸ்து நமக்காக என்ன செய்து முடித்தாரோ அதை எவ்விதத்திலாவது நாம் குறைத்து மதிப்பிடுகிறோம் என்றால், பிறகு நம்மால் தேவனுடைய தயவில் வாழ முடியாது.

இதோ ஓர் சுவாரஸ்யமான குறிப்பு: பவுல் ரோமர், கொரிந்தியர்,

கொலோசெயர், எபேசியர் போன்ற அநேக திருச்சபைகளுக்கு கடிதங்களை எழுதினார். கிட்டத்தட்ட எல்லா கடிதங்களிலுமே, அவர் எந்த ஜனங்களுக்காக அந்தக் கடிதத்தை எழுதினாரோ, அவர்களுக்காக அவர் தேவனிடத்தில் நன்றி சொல்லி விட்டுத்தான் அந்தக் கடிதத்தை ஆரம்பிக்கிறார். கொரிந்தியருக்கு எழுதும் போதுகூட அவர் அவர்களுக்காக தேவனிடத்தில் நன்றி சொல்லி விட்டுத்தான் கடிதத்தை ஆரம்பிக்கிறார். இந்தக் கொரிந்து திருச்சபையில் ஒரு மனிதன் தன் தகப்பனுடைய மனைவியோடு சேர்ந்து வாழ்ந்து கொண்டிருந்தான். குடித்து வெறித்த நிலையில், அவர்கள் கர்த்தருடைய பந்தியில் பங்கெடுத்தார்கள். ஆனாலும் தேவன் அவர்களிடத்திலும் தம்முடைய கிருபையைக் காண்பித்தார் என்பதற்காக பவுல் தேவனுக்கு நன்றி செலுத்தினார்.

ஆனால் அவர் கலாத்தியருக்கு எழுதும்போது, அவர்களுக்காக தேவனுக்கு நன்றி சொல்லும் விஷயத்தையே தவிர்த்து விடுமளவிற்கு அவர் மிகுந்த கோபத்துடன் அதை எழுதுகிறார். அவருடைய முதல் வாக்கியம் இதுதான்: "தேவனுடைய கிருபையிலிருந்து நீங்கள் இவ்வளவு சீக்கிரமாய் விட்டு விலகுவதைக் குறித்து நான் ஆச்சரியப்படுகிறேன்." அவர்கள் அங்கே விபச்சாரம் செய்யவில்லை. அவர்கள் அங்கே குடித்து வெறிக்கவும் இல்லை. ஆனாலும் அவர்களுடைய பிரச்சனை என்ன? மதச் சட்டதிட்டங்களைக் கடைபிடிப்பதைக் குறித்த பொல்லாத வைராக்கியம். அப்பட்டமாய் வெளியே தெரியக்கூடிய மாம்சீகமான பாவங்களை மதவாதிகள் மிகவும் தீவிரமாய் நியாயந்தீர்க்கிறார்கள். ஆனால் இந்தப் பாவங்களைக் காட்டிலும் மத வைராக்கியம்தான் பவுலுடைய கண்களில் மிகவும் பொல்லாத ஒரு விஷயமாய் தெரிந்தது.

மதச் சட்டதிட்டங்களைக் குறித்த தற்பெருமையின் பொல்லாத விளைவுகள்

பில்லிசூனியம், தேவனுடைய மக்களை மத வைராக்கியத்திற்குள் நயவஞ்சகமாய் இழுக்கும்போது, நம்முடைய அழைப்பு மற்றும் தேவனுடைய இராஜ்யத்தில் நமக்குக் கொடுக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றுவதில் உண்டாகக்கூடிய பொல்லாத விளைவுகளை நாம் கவனிப்போம்.

முதலாவதாக, சிலுவையின் கிரியையை பார்க்க முடியாதபடி குருடாக்கப்பட்டிருக்கிற தேவனுடைய ஜனங்கள், அதன் விளைவாக, தங்களுடைய சொந்த முயற்சிகளையே சார்ந்திருக்கிறார்கள். அதினால் அவர்கள் திரும்பவும் நியாயப்பிரமாணத்தின் கீழ் கொண்டு வரப்படுகிறார்கள்.

இரண்டாவதாக, மத வைராக்கியம், தேவனுடைய இயற்கைக்கு அப்பாற்பட்ட அற்புதக் கிரியைகளுக்கு இடமளிப்பதில்லை. அற்புதங்களைக் குறித்து பவுல் ஒரு கேள்வியை இவ்வாறு கேட்கிறார்: "அற்புதங்கள், நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினால் நடந்ததா அல்லது விசுவாசக் கேள்வியினால் நடந்ததா**?"** **(**கலாத்தியர் **3:5**-ஐ பார்க்கவும்**)**. அற்புதங்கள் விசுவாசக் கேள்வியினால் மட்டுமே வரும் என்பதுதான் இதற்கு ஒரே பதிலாக இருக்க முடியும். பில்லிசூனியத்தின் ஆதிக்கத்தின் கீழ் சபையானது மதச் சட்டதிட்டங்களைக் குறித்த தற்பெருமையும் வைராக்கியமும் நிறைந்ததாய் மாறும்போது, இயற்கைக்கு அப்பாற்ப்பட்ட விதத்தில் நடக்கக்கூடிய தேவனுடைய அற்புத அடையாளங்களை அது இழக்கின்றது. இங்கு மதச் சட்டதிட்டங்களைக் குறித்த தற்பெருமைதான், பிரச்சனையாய் இருக்கிறது. காரணம், தேவன் நம்முடைய விழுந்து போன சுபாவத்திலிருந்து நாம் எடுக்கும் முயற்சிகளுக்கு ஈடாக, தம்முடைய இயற்கைக்கு அப்பாற்ப்பட்ட அற்புத அடையாளங்களைச் செய்ய மாட்டார். நம்முடைய மாம்ச முயற்சிகள் ஒருபோதும் தகுதி பெறாது. இந்தச் சீர்கேட்டின் அடுத்தபடி என்னவென்றால், தேவன் தம்முடைய இயற்கைக்கு அப்பாற்ப்பட்ட அற்புத அடையாளங்களை ஆதி அப்போஸ்தலர்களுடைய காலத்தோடு நிறுத்திவிட்டார், இப்பொழுது அவர் அற்புத அடையாளங்களையெல்லாம் செய்வதில்லை என்று இறையியல் நிபுணர்கள் நமக்குச் சொல்ல ஆரம்பித்து விட்டதுதான். முதலில், இயற்கைக்கு அப்பாற்ப்பட்ட தேவனுடைய அற்புத அடையாளங்களை நிராகரித்ததன் மூலம் நாம் பாவம் செய்கிறோம். பிறகு, தேவன் அந்த அற்புத அடையாளங்களையெல்லாம் இப்பொழுது செய்வதில்லை என்ற ஒரு விளக்கத்தைக் கொடுப்பதன் மூலம் நாம் நம்முடைய பாவத்தை இன்னும் அதிகமாக்கி விடுகிறோம். இது ஒரு பொய், ஒரு இறையியல் பொய். இது நம்முடைய தவறை மூடி மறைக்கும் ஒரு முயற்சியாகும்.

மூன்றாவதாக, நியாயப்பிரமாணத்தின் கீழ் திரும்பி வருவதென்பது, நம்

மீது சாபத்தைக் கொண்டு வரும். தேவனுடைய ஆசீர்வாதத்தில் வாழ்வதற்குப் பதிலாக, நாம் தேவனுடைய சாபத்தின் கீழ் காணப்படுவோம்.

கலாத்தியரில் இன்னும் சற்று முன்னேறி வாசிக்கலாம்:

நியாயப்பிரமாணத்தின் கிரியைக்காரராகிய யாவரும் சாபத்திற்குட்பட்டிருக்கிறார்கள்; நியாயப்பிரமாண புஸ்தகத்தில் எழுதப்பட்டவைகளையெல்லாம், செய்யத்தக்கதாக அவைகளில் நிலைத்திராதவன் எவனோ அவன் சபிக்கப்பட்டவன் என்று எழுதப்பட்டிருக்கிறதே.

கலாத்தியர் 3 :10

பாருங்கள், நீங்கள் நியாயப்பிரமாணத்தைக் கடைபிடிப்பதன் மூலம் நீதிமானாக்கப்பட போகிறீர்கள் என்றால், நீங்கள் *நியாயப்பிரமாணம் முழுவதையும் எப்பொழுதும்* கடைபிடித்தாக வேண்டும். நியாயப்பிரமாணத்தில் இங்கு கொஞ்சம் அங்கு கொஞ்சம் என ஒரு சில கட்டளைகளை மட்டும் கடைபிடித்து விட்டு, மற்றவைகளைக் குறித்து கவலைப்படாமல் நீங்கள் அப்படியே விட்டு விட முடியாது. நியாயப்பிரமாணம் என்பது முழுமையான, ஒரே சட்டத் தொகுப்பாய் இருக்கிறது. ஒன்று, நீங்கள் அதின் *எல்லாக்* கட்டளைகளையும் *எல்லா* நேரத்திலும் கைக்கொள்ள வேண்டும் அல்லது தேவனுடைய நீதியை அடையும் உங்களுடைய முயற்சியில் எந்த பயனும் கிடைக்கப் போவதில்லை.

நியாயப்பிரமாணத்தினாலே ஒருவனும் தேவனிடத்தில் நீதிமானாகிறதில்லையென்பது வெளியரங்கமாயிருக்கிறது. ஏனெனில் "விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான்" என்று எழுதியிருக்கிறதே. நியாயப்பிரமாணமோ, விசுவாசத்திற் குரியதல்ல. "அவைகளைச் செய்கிற மனுஷனே அவைகளில் பிழைப்பான்." மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறபடி கிறிஸ்து நமக்காகச் சாபமாகி நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி, மீட்டுக் கொண்டார்.

கலாத்தியர் 3:11-13

சாபம் என்ற வார்த்தை, அந்தக் கடைசி வசனத்தில் மூன்று முறை வருவதை நீங்கள் கவனித்தீர்களா? சாபத்திற்கான காரணம் என்ன? நியாயப்பிரமாணம்தான் சாபத்திற்கான காரணமாக இருக்கின்றது. நாம் சாபத்தின் கீழ் எப்படி வருகிறோம்? தேவனுடைய கிருபையிலிருந்தும், தேவனுடைய கிருபையோடு சேர்ந்தே வரும் இயற்கைக்கு அப்பாற்பட்ட அற்புத அடையாளங்களிலிருந்தும் விலகி, அதிலிருந்து விழுந்து, பின்வாங்கி, நம்முடைய சொந்த மாம்ச முயற்சிகளைச் சார்ந்து கொள்வதன் மூலம் நாம் திரும்பவும் சாபத்தின் கீழ் வருகின்றோம்.

"ஆனால் அது மோசேயின் நியாயப்பிரமாணமல்லவா," என்று நீங்கள் சொல்லலாம். உண்மைதான். பவுலின் மனதிலும் அது இருந்தது. ஆனால் நம் எல்லாரையும் குறித்து ஒரு சாபம் எரேமியாவின் புத்தகத்தில் நமக்கு எதிராக அழுத்தம்திருத்தமாக சொல்லப்பட்டுள்ளது: "மனுஷன்மேல் நம்பிக்கை வைத்து மாம்சமானதைத் தன் புயபலமாக்கிக் கொண்டு கர்த்தரை விட்டு விலகுகிற இருதயமுள்ள மனுஷன் சபிக்கப்பட்டவன் என்று கர்த்தர் சொல்லுகிறார்" (எரேமியா 17:5).

நம்முடைய சுய மாம்ச பெலனை நாம் நம்பும்போது, நாம் சாபத்தின் கீழ் வந்து விடுகிறோம். "மனுஷன் மீது தன் நம்பிக்கையை வைக்கிறவன் சபிக்கப்பட்டவன்." இன்றைக்கு எத்தனை சபைகள் மனுஷனை நம்புகிற கிறிஸ்தவர்களால் நிறைந்திருக்கின்றன? இதில் உங்களையே நம்புவதும் அடங்கியிருக்கிறது. இதைச் செய்கிற மனிதன் சாபத்திற்குட்பட்டிருக்கிறான் என்று வேதம் கூறுகிறது. ஏன்? காரணம், அந்த நபருடைய இருதயம் "கர்த்தரை விட்டு விலகிச் சென்று விடுகிறது."

அடிப்படையில், இதுதான் கிறிஸ்தவ சபையின் சரித்திரம் என்று நான் சொல்லுவேன். தேவன் தமது ஜனத்தை சந்திக்கிறார். அவர்கள் அவருடைய கிருபையையும், இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமையையும் அனுபவிக்கிறார்கள். ஆனால் அது பொதுவாக ஒரு தலைமுறைக்கு மேல் நீடித்திருப்பதில்லை. அதற்குப் பிறகு அவர்கள் திரும்பவும் தங்களுடைய சொந்த முயற்சிகளில் இறங்கி விடுகிறார்கள், மனிதனுடைய சட்டங்களையும், மனிதன் நியமிக்கின்ற வழிமுறைகளையும் பின்பற்ற ஆரம்பித்து விடுகிறார்கள்.

ஆபத்தை உண்டாக்கக்கூடிய ஒரு தவறில் விழுந்து விடுதல்

மதச் சட்டதிட்டங்களைக் குறித்த தற்பெருமையில் (legalism) காணப்படும் அடிப்படைத் தவறு என்ன? இதை அறிந்து கொள்ள வேண்டியது மிகவும் அவசியம். காரணம், இந்த அடிப்படைத் தவறு மகா மோசமான ஆபத்தை நமக்கு உண்டாக்கக்கூடிய ஒன்றாய் இருக்கிறது. பரிசுத்த ஆவியானவரை நிராகரிப்பதே இந்த அடிப்படைத் தவறாகும். நாம் தேவனுடைய ஆவியானவரை சார்ந்திருப்பதில்லை. பரிசுத்த ஆவியானவரை நாம் நிராகரிக்கும்போது, நாம் அங்கு ஒரு வெற்றிடத்தை உண்டாக்கி விடுகிறோம். இப்பொழுது அந்த வெற்றிடத்தை பில்லிசூனியத்தின் ஆவி நிரப்பி விடுகிறது. இது நாம் ஒன்றைச் செய்வதினால் உண்டாகிற ஒரு பின்விளைவாக இருக்கிறது.

சபையின் வரலாற்றைக் குறித்த நிபுணத்துவம் இல்லாத என்னுடைய தனிப்பட்ட கருத்து இதுதான்: கடந்த இருபது நூற்றாண்டுகளாக, நாம் இனி பரிசுத்த ஆவியானவரை நம்ப வேண்டியதில்லை என்ற ஒரு நிலையை நமக்கு உறுதி செய்யக்கூடிய மிகவும் பாதுகாப்பான ஒன்றைத் தேடும்படி நாம் தொடர்ந்து முயற்சித்துக் கொண்டே இருக்கிறோம். நல்ல வேளையாக, அப்படியொரு விஷயம் இங்கு இல்லவே இல்லை. பரிசுத்த ஆவியானவர் மீது நம்பிக்கை வைப்பதை ஒரு முடிவுக்குக் கொண்டு வருவதுதான், காலப்போக்கில் நீங்கள் செய்யக்கூடிய அபாயகரமான ஒரு செயலாயிருக்கும்.

மதத்தலைவர்கள், தங்களாலேயே கட்டுப்படுத்த முடியாத எந்த ஒரு விஷயத்தையும் குறித்து பயப்படுகின்றனர். ஆனால் மதத்தலைவர்கள் *கட்டுப்படுத்தக் கூடிய* எதுவும், என்ன செய்யப்பட வேண்டுமோ, அதைச் செய்வதற்கு வல்லமை இல்லாததாய் இருக்கிறது. நம்முடைய கட்டுப்பாட்டிற்குட்பட்ட ஒரு விஷயத்தைச் செய்வதிலேயே நாம் திருப்தியடைந்து விடுகிறோம் என்றால், தேவனுக்கு ஏற்புடையதாய் இல்லாத ஒன்றையே நாம் தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறோம், அதிலேயே திருப்தி அடைந்து விடுகிறோம் என்று அர்த்தம். பரிசுத்த ஆவியானவரை சார்ந்து வாழ்வதையே அநேகர் ஆபத்தாக எண்ணுகிறார்கள். ஒரு விதத்தில், அது உண்மைதான். நீங்கள் அவசரமாக சில தவறான முடிவுகளை எடுத்து விடலாம். உதாரணத்திற்கு, உங்கள் செயல்களில் நீங்கள் தவறலாம். இது

முன்பு நடந்திருக்கிறது. ஆனால் பரிசுத்த ஆவியானவரை சார்ந்து கொள்ளாமல் வாழ்வதென்பது இன்னும் அதிக ஆபத்தான காரியமாகும் என்பதை நான் இங்கு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். தெய்வத்துவத்தின் மூன்றாவது நபர் மிகவும் இரக்கமுள்ளவர், மிகுந்த பொறுமையுடையவர், மென்மையானவர். ஆனால் ''மிக்க நன்றி. நீர் எங்களுக்குத் தேவையில்லை,'' என்று நாம் அவரிடம் தொடர்ந்து சொல்வோமானால், நாம் அவரை அவமதித்து விட்டோம் என்று அர்த்தம். இது நம்மை அழிவுக்கு நேராக நடத்தி விடும்.

நாம் நியாயப்பிரமாணத்தின் வழியாக நீதியை அடையும்படி முயற்சிக்கும்போது, நாம் நம்முடைய மாம்ச சுபாவத்தை கட்டவிழ்க்கிறோம். ஆகையால்தான் மதச் சட்டத்திட்டங்களைக் குறித்து தற்பெருமை கொண்டிருக்கிற மக்களால் அநேக பிரச்சனைகள் உருவாகின்றன. மதச் சட்டதிட்டங்களைக் குறித்து தற்பெருமை பிடித்தவர்கள்தான், இயேசுவையும் அப்போஸ்தலர்களையும் சிலுவையில் அறைந்தார்கள். வேசிகளும், வரி வசூலிப்பவர்களும் அதைச் செய்யவில்லை. தேவனுடைய மிகப்பெரிய பிரச்சனை மதவாதிகள்தான் என்பதை என்னால் எவ்வித சந்தேகமும் இல்லாமல் உறுதியாகச் சொல்ல முடியும். ரோமர் 7:5ல் இது தெளிவாகக் கூறப்பட்டுள்ளதை காண்கிறோம்: ''நாம் மாம்சத்திற்கு உட்பட்டிருந்த காலத்தில் நியாயப்பிரமாணத்தினாலே தோன்றிய பாவ இச்சைகள் மரணத்திற்கு எதுவான கனிகளைக் கொடுக்கத்தக்கதாக நம்முடைய அவயவங்களிலே பெலன் செய்தது."

பாவ இச்சைகள் ஏன் தூண்டிவிடப்படுகின்றன? ஏனென்றால் நியாயப்பிரமாணத்தினால் நான் செயல்படும்போது, "நான் அதை செய்வேன்," என்று சொல்லுகிறோம். உண்மையை சொல்லப்போனால், நான் என்னுடைய விழுந்துபோன ஜென்ம சுபாவத்தைச் சார்ந்திருக்கிறேன். நான் என்னுடைய விழுந்து போன ஜென்ம சுபாவத்தை சார்ந்திருக்கும் போது, என்னுடைய ஜென்ம சுபாவத்தில் என்ன இருக்கிறதோ, அதையே நான் கட்டவிழ்க்கிறேன். என்னுடைய விழுந்துபோன ஜென்ம சுபாவத்தில் என்ன இருக்கிறது? பின் வரும் வசனத்தில் இதற்கான பதில் உண்டு. நான் அதை முன்பதாகவே சொல்லி விடுகிறேன். இது ஒரு அழகான படம் அல்ல. நம்முடைய சொந்த பெலனையும், சுய நீதியையும் நாம் சார்ந்து கொள்ள ஆரம்பிக்கும் அந்தக்

கணத்தில், கட்டவிழ்க்கப்படுவது இதுதான்:

> *மாம்சத்தின் கிரியைகள் வெளியரங்கமாய் இருக்கின்றன. அவையாவன: விபச்சாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம், விக்கிரக ஆராதனை, பில்லிசூனியம் [மாம்சத்தின் கிரியைகளில் ஒன்றாக பில்லிசூனியமும் இங்கு குறிப்பிடப்பட்டிருக்கிறதை கவனியுங்கள்], பகைகள், சண்டைகள், பிரிவினைகள், மார்க்கபேதங்கள், பொறாமைகள், கொலைகள், வெறிகள், களியாட்டுகள் முதலானவைகளே. இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று முன்னே நான் சொன்னது போல் இப்பொழுதும் உங்களுக்குச் சொல்லுகிறேன்."*
>
> *கலாத்தியர் 5:19-21*

இந்தப் பட்டியலில் கொடுக்கப்பட்டிருக்கிற வார்த்தைகள், பயன்படுத்தப்பட்டிருக்கிற மொழிபெயர்ப்பைப் பொறுத்து கொஞ்சம் வித்தியாசப்படுகின்றன. ஆனால் உண்மையில் நான்கு வகை மாம்சக் கிரியைகள் இருக்கின்றன. முதல் வகை, *பாலியல் ஒழுக்கக்கேடு* (விபச்சாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம்). இரண்டாவது வகை, *மாந்திரீகம்* மற்றும் *பொய்யான மத வழிபாடுகளின்* தளத்தில் நடக்கும் கிரியைகளாகும் (விக்கிரகாராதனை, பில்லிசூனியம்). மூன்றாவது வகை, *ஒழுக்கக்கேடான வாழ்க்கையாகும்* (குடித்து வெறித்தல் மற்றும் களியாட்டங்களில் இன்புறுதல்). நான்காவது மற்றும் பெரும்பான்மையான வகை, *எல்லா விதமான சச்சரவுகளும், உட்பூசல்களும், பிரிவினையுமாகும்*. இதினால்தான் சபைகள் பிரிந்து போகின்றன. இதற்கு உண்மையான காரணம், உபதேசமோ அல்லது இறையியலோ அல்ல, மாம்ச சுபாவமே ஆகும். மாம்ச சுபாவம் தன்னோடுதானே ஒத்துப் போக முடியாது. அப்படியானால் கர்த்தருக்குள் வாழும் சகோதர சகோதரிகளுடன் அது எப்படி ஒத்துப் போகும்? கிறிஸ்தவர்கள் தங்களுடைய எண்ணங்களிலும், தங்களுடைய மனப்பான்மைகளிலும் மாம்சீகமாக செயல்படும்போது, அந்த சபை பிரிவினையை நோக்கி செல்லுகிறது என்பதை நீங்கள் நிச்சயமாகச் சொல்லி விடலாம்.

ஏன் சபைப்பிரிவுகளுக்குள் இன்னும் பற்பல பிரிவுகள் காணப்படுகின்றன? ஏன் அவர்கள் அடிக்கடி பிரிந்து போகிறார்கள்? தங்களுடைய சபைப்பிரிவின் சட்டதிட்டங்களை கடைபிடிப்பதைக் குறித்து அவர்களுக்குள் எழும்பும் பொல்லாத மத வைராக்கியமே, இந்த அசுத்தமான மாம்சத்தின் கிரியைகளை கட்டவிழ்த்து விடுகிறது. வேசித்தனத்திற்கும், குடிவெறிக்கும் கிறிஸ்தவர்கள் விலகியிருக்கலாம். ஆனால் சண்டை சச்சரவுகளுக்கும், கசப்பிற்கும், பகைவைராக்கியத்திற்கும் அவர்களால் விலகியிருக்க முடியவில்லையென்றே தோன்றுகிறது.

தேவன் தாழ்மையுள்ளவர்களுக்கே கிருபை தருகிறார். தாங்கள் மிகச் சரியாய் இருக்கிறோம் என்று வைராக்கியம் பாராட்டுகிறவர்களுக்கு அல்ல.

நீங்கள் எதைச் சார்ந்திருக்கிறீர்கள்?

உங்களுடைய அழைப்பை நீங்கள் கண்டுபிடித்து, அதை வெற்றிகரமாக நிறைவேற்றி முடிப்பதற்கான திறவுகோல், உங்களையே நீங்கள் சார்ந்து கொள்வதை எப்படி நிறுத்துவது என்பதை கற்றுக் கொள்வதாகும். உங்களை சார்ந்து கொள்ளக் கூடிய அளவிற்கு நீங்கள் நம்பத்தக்கவர் அல்ல. கிறிஸ்தவ வாழ்க்கையில், நீங்கள் கற்றுக் கொள்ளக்கூடிய மிக முக்கியமான பாடம் என்ன தெரியுமா? தொடர்ச்சியாக, ஒவ்வொரு நிமிடமும், ஒவ்வொரு விநாடியும் பரிசுத்த ஆவியானவரை சார்ந்திருப்பது எப்படி என்று கற்றுக் கொள்வதாகும். ஒரே வார்த்தையில் சொன்னால், உங்களுடைய அழைப்பைக் குறித்தோ அல்லது தேவனுடைய இராஜ்யத்தில் உங்களுக்குக் கொடுக்கப்பட்ட ஒரு வேலையைக் குறித்தோ பரிசுத்த ஆவியானவரை கலந்து ஆலோசிக்காமல் ஒருபோதும் தீர்மானம் எடுக்காதீர்கள்.

ஒரு தீர்க்கதரிசனத்தின் மூலமாய் கர்த்தர் என்னோடு பேசின அந்த மிக முக்கியமான நேரத்தை இப்பொழுது நான் நினைவுகூருகிறேன். என் ஊழியத்தின் வளர்ச்சிப் பாதையில் ஒரு புதிய கட்டத்திற்குள் நுழைந்து, இதுவரை முன் ஒருபோதும் நடந்திராத ஒரு பாதையில் நான் நடப்பேன் என்று தேவன் என்னிடம் சொன்னார். அவர் சொன்னார், *"நீ இனி இன்னும் அதிக உணர்வுள்ளவனாக நடந்து கொள்ள வேண்டியது அவசியம். என்னைக் காட்டிலும் ஒரு படி முன்னே சென்று விடாதே. நான் பேசுவதற்கு முன் அவசரப்பட்டு ஒரு வார்த்தையைக் கூட உச்சரித்து*

விடாதே.'' பரிசுத்த ஆவியானவரை இந்த அளவிற்கு சார்ந்து கொள்ளும்போதுதான், அது நம்மை வெற்றிக்கு நேராக நடத்துகிறது என்ற உண்மையை இது இன்னும் அதிகமாய் உறுதிப்படுத்துகிறது. ஆனால் இது எனக்கு எளிதாயிருந்தது என்று நான் சொல்ல மாட்டேன். இயல்பாக, என்னுடைய சுபாவம் எப்படிப்பட்டது என்றால், நான் தனித்துச் சுதந்திரமாகச் செயல்படுகிற ஒரு நபர். வாழ்க்கையிலே, நான் எனக்கென்று ஒரு பாதையை அமைத்துக் கொண்டேன். பல விஷயங்களில் நான் வெற்றியும் கண்டிருக்கிறேன். எனக்கு மிகவும் நெருக்கமான நண்பர்களில் ஒருவர் என்னைக் குறித்து இவ்வாறு சொன்னார். தன்னுடைய சொந்த பெலத்தை, ஞானத்தை சார்ந்து வாழ்ந்து ஜெயிக்கிறவர்களில் என்னைப் போல வேறு ஒருவரையும் பார்த்ததில்லை என்று அவர் சொன்னார். என்னைக் குறித்த அவருடைய மதிப்பீட்டை நான் மறுக்க மாட்டேன். என்னுடைய கிறிஸ்தவ வாழ்க்கையில், என்னையே நான் சார்ந்து கொள்வதை தடுத்து நிறுத்துவதுதான், மிகவும் வலிமையான, விடாப்பிடியாக தொடர்ந்து எனக்கு எதிராய் நின்ற ஒரு சவாலாக இருந்திருக்கிறது.

நான் போராடுகிற ஒரு விஷயத்தை இங்கே உதாரணமாக தருகிறேன்: என் மனதில் ஒன்று தோன்றினால் அதை உடனடியாக சொல்லிவிடுவேன். ஆனால் அதை சொல்வதற்கு அது ஏற்ற நேரமாக இருக்காது. நான் யாரோடாவது பேசிக்கொண்டிருக்கும்போது, ஏதோ ஒன்றை சொல்லப் போவேன். அப்பொழுது பரிசுத்த ஆவியானவர், *இதை சொல்வதற்கு ஏற்ற நேரம் இதுவல்ல* என்று கூறுவார். பரிசுத்த ஆவியானவரை நான் சார்ந்து கொண்டிருந்தால், அவர் சொல்லுகிற காரியத்திற்கு செவிக்கொடுத்து காத்திருப்பேன். காத்திருப்பதற்கு பொறுமை தேவையாயிருக்கிறது. நீங்கள் பொறுமைக்காக ஜெபிக்கிறீர்களா ? அப்படிச் செய்கிறீர்கள் என்றால், அது உங்களுக்கு நல்லது. ஆனால் ஒன்றை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். நமக்கு பொறுமையைக் கற்றுக் கொடுக்கும்படி தேவனிடத்தில் பல வழிகள் இருக்கின்றன. *பொறுமைக்கான* பழைய கிங் ஜேம்ஸ் வார்த்தை, *நீடிய காலமாய் வேதனைப்படுவது (long suffering)* என்பதாகும். பொதுவாக, நாம் நீடிய பொறுமையை, நீடிய காலம் வேதனைப்படுவதன் மூலம்தான் கற்றுக்கொள்ளுகிறோம்.

இதே வரிசையில், பரிசுத்த ஆவியானவரின் சிறிய மென்மையான

உந்துதல்களை நீங்களும் உணர்ந்திருப்பீர்கள் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன். நீங்கள் உங்களுடைய காருக்குள் உட்காரும்போது, அங்கே நீங்கள் ஜெபிக்க வேண்டும் என்று ஆவியானவர் விரும்புகிறார் என்பதை நீங்கள் உணருகிறீர்களா? இன்றைக்கு காரில் பிரயாணம் பண்ணுவது மிகவும் ஆபத்தான ஒன்றாய் இருக்கிறது. விபத்து நடப்பதற்கான வாய்ப்புகள் மிகவும் அதிகமாய் இருக்கின்றது. தேவனுடைய பாதுகாப்பிற்காக நீங்கள் ஜெபிக்கிறீர்களா? உங்களுடைய சீட் பெல்ட்டை நீங்கள் அணிந்து கொள்கிறீர்களா? இரட்சிக்கப்பட்ட, கர்த்தருக்குள் மிகவும் பிரியமான பல சகோதரர்கள் இப்படி சீட் பாதுகாப்பு பெல்ட்டுகளை அணியாததினால், வாகன விபத்துக்களில் சிக்கி, பயங்கரமாய் காயப்பட்டிருக்கிறார்கள் என்பதை நான் அறிந்திருக்கிறேன்.

நான் விரும்புகிற பிரகாரமாக காரியங்கள் நடக்காதபோது, அதன் நிமித்தம் விரக்தி அடையாமல் இருக்கும்படி நான் இந்தப் பல வருடங்களில் கற்றுக் கொண்டேன். பெரும்பாலும் தேவனிடத்தில் இதற்கெல்லாம் ஒரு காரணம் இருக்கும் என்பதை நான் அறிந்து கொண்டேன். இத்தகைய சூழ்நிலைகளில், ‘‘பரிசுத்த ஆவியானவரே, எனக்குக் காண்பியும்,’’ என்பதுதான் நம்முடைய பதிலாக இருக்க வேண்டும். இந்த விஷயத்தில், நான் இன்னும் முதிர்ச்சியடைந்து விடவில்லை என்பது எனக்குத் தெரியும். ஆனால் பரிசுத்த ஆவியானவருடன் எனக்கு ஓர் நல்ல உறவு வேண்டும். ஆகையால் என்னுடைய மாம்சத்தில் எனக்கு எந்த நம்பிக்கையும் இல்லாத ஒரு இடத்திற்கு நான் வந்து விட்டேன். எனக்குத் தெரியும், அது நான் விரும்புகிற எதையும் உண்டாக்காது.

*மதச் சட்டதிட்டங்களைக் குறித்த தற்பெருமையிலிருந்து **(legalism)** விடுதலை*

மோசேயின் நியாயப்பிரமாணம், தேவன் இஸ்ரவேலுக்குக் கொடுத்த பிழையற்ற, முழு நிறைவான ஒரு வரைபடமாய் இருக்கிறது. பவுலும் இந்த உண்மையை வலியுறுத்திச் சொல்கிறார். நியாயப்பிரமாணம் “பரிசுத்தமாயும் நீதியாயும் நன்மையாயும் இருக்கிறது” (ரோமர் 7:12) என்று அவர் கூறுகிறார். யாராவது ஒருவர் அந்த வரைபடத்தை துல்லியமாக அப்படியே பின்பற்றியிருந்தார் என்றால், அவர் பரிபூரணமான நீதியை அடைந்திருப்பார்.

ஆனால் நியாயப்பிரமாணத்தினால் அந்த நீதியை அடைய முடியவில்லை. அதற்குக் காரணம், நம்முடைய விழுந்து போன ஜென்ம சுபாவத்தின் பெலவீனம்தான். நாம் ஒவ்வொருவருமே தேவனுக்கு விரோதமாக முரட்டாட்டம் பண்ணக்கூடிய ஒரு உள்ளான பிரச்சனையோடு கூடத்தான் பிறந்திருக்கின்றோம் என்று வேதம் வெளிப்படுத்துகிறது. இந்த நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளும்படி நம்முடைய சித்தத்தில் நாம் தீர்மானிக்கும்போது, நமக்குள்ளிருந்து இந்த கலகக்காரன் எழுந்து, நம்முடைய உண்மையான பிரயாசங்களை குலைத்துப் போடுகிறான். மதச் சட்டத்திட்டங்களை சரியாகக் கடைபிடிக்கும் முயற்சிக்குள் நாம் அடியெடுத்து வைக்கிறோம் என்றால், பில்லிசூனியம் என்னும் பொல்லாத ஆவிக்குரிய சக்தியின் அடிமைத்தனத்திற்கு கீழாக நாம் வருவோம்.

என்னுடைய சொந்த அனுபவத்திலிருந்து நான் இதைச் சொல்கிறேன். என்னுடைய உண்மையான நிலையை நான் கண்டபோது, வெறுமனே என் மனதை மாற்றிக் கொண்டால் மாத்திரம் போதாது என்று உணர்ந்தேன். நான் மனந்திரும்பி, மதச் சட்டதிட்டங்களைக் குறித்த தற்பெருமையின் ஆவிக்குரிய அடிமைத்தனத்திலிருந்தும், முரட்டாட்டத்திலிருந்தும் தேவன் என்னை விடுதலை செய்யும்படி நான் தேவனிடத்தில் ஜெபிக்க வேண்டியதாயிருந்தது. இது மன்னிக்கப்பட முடியாத பாவம் என்று நான் சொல்லவில்லை, ஆனால் அநேக நேரங்களில் நாம் பரிசுத்த ஆவியானவரை பொருட்படுத்துவதில்லை அல்லது நாம் அவரை அவமானப்படுத்துகிறோம்.

நான் கேம்ப்பிரிட்ஜ்-ல் இருந்தபோது நடந்த ஒரு விசித்திரமான சம்பவம் இப்பொழுது என் நினைவிற்கு வருகிறது. அங்கு இன்னொரு மாணவன் இருந்தான். அவனுடைய பெயர் ஸ்மித்தர்ஸ். அவன் ஒரு அராஜக, அடாவடிப் பேர்வழி. அவன் எதற்கும், யாருக்கும் கட்டுப்பட மாட்டான். அவனுடைய தாடி கறுப்பு நிறத்தில் ஒழுங்கற்று வளர்ந்திருந்தது. அது அந்நாட்களில் வழக்கத்தை மீறிய ஒன்றாக, விசித்திரமான ஒன்றாக இருந்தது. அவன் யாருக்கும் அடங்காதவனாக, ஒருவரையும் மதிக்காதவனாக இருந்தபடியால், பெரும்பாலும் எல்லோரும் அவனை அறிந்து வைத்திருந்தனர்.

ஒரு சமயம், கிங்ஸ் கல்லூரியின் மிகவும் முக்கியமான, மதிப்பிற்குரிய ஒரு ஆசிரியர், ஸ்மித்தர்ஸின் மேற்ப்படிப்புக்கு உதவித் தொகை எதுவும் தேவையா என்று அறியும்படி, அவனைக் காணச் சென்றார். ஸ்மித்தர்ஸின்

யாருக்கும் அடங்காத, அராஜகமான கொள்கைகள், அந்த ஆசிரியரிடம் அவனை பணிவாக நடந்து கொள்ள விடாது என்பதை நாங்கள் அறிந்திருந்தோம். அவர்களுடைய சந்திப்பு முடிந்தது. நாங்கள் ஸ்மித்தர்ஸிடம் "எப்படி நடந்து கொண்டாய்?" என்று கேட்டோம்.

"அவர் அங்கே இல்லாததுபோல நடந்து கொள்ள நான் முயற்சித்தேன்," என்று அவன் பதிலளித்தான்.

இந்தச் சம்பவத்தை என்னால் நம்முடைய வாழ்க்கையோடு தொடர்புப்படுத்திப் பார்க்க முடிகிறது. காரணம், நம்மில் பெரும்பாலானோர் பரிசுத்த ஆவியானவரிடத்தில் இதே மனநிலையை உடையவர்களாய்தான் நடந்து கொள்ளுகிறோம். அவர் அங்கே இல்லாதது போலவே நாம் செயல்பட முயற்சிக்கிறோம். நாம் அவருடைய பிரசன்னத்தை அசட்டை பண்ணியிருக்கிறோம். அது அவரை நிந்திக்கும் செயலாகும். கிருபையின் ஆவியை நாம் அவமானப்படுத்தியிருக்கிறோம் ஆகையால் நாம் மனந்திரும்ப வேண்டும். நாம் மனந்திரும்பினவுடன், நம்முடைய அழைப்பை நாம் நிறைவேற்ற முடியாதபடிக்கு நம்மை சிறைப்பிடித்து வைத்திருந்த அடிமைத்தனத்தின் ஆவியிலிருந்து தேவன் நம்மை விடுவிக்கும்படி நாம் அவரிடம் ஜெபிக்க வேண்டும்.

நான் இங்கு விலாவாரியாக சொல்லிக் கொண்டிருக்கிற இந்த விஷயம் உங்களுடைய அடிப்படைப் பிரச்சனையை மிகவும் துல்லியமாக எடுத்துக் காண்பிக்கிறதைப்போல நீங்கள் உணருகிறீர்களா? பல ஆண்டுகளாக, நீங்கள் போராடிக்கொண்டிருக்கும் ஒரு பிரச்சனையாக இது இருக்கக்கூடும். நீங்கள் மிகவும் கடினமாகப் பிரயாசப்பட்டிருக்கலாம். உங்களுடைய மிகச் சிறந்த முயற்சியாக இது செய்திருக்கலாம். ஆனாலும் புதிய ஏற்பாட்டில் சொல்லப்பட்டிருக்கிற நற்பலன்களை மெய்யாகவே உங்களுடைய வாழ்க்கை ஒருபோதும் உருவாக்கியதில்லை. இப்பொழுதே உங்களுடைய இக்கட்டான நிலையை பரிசுத்த ஆவியானவருக்கு தெரியப்படுத்த விரும்புகிறீர்களா? ஒருவேளை நீங்கள் இதைச் சொல்லும்படி விரும்பலாம்:

பரிசுத்த ஆவியானவரே, நான் மாட்டிக்கொண்டிருக்கிறேன். எவ்வழியாக செல்ல வேண்டும் என்று அறியேன். என்னால் தப்பிக்க முடியவில்லை. உம்மையல்லாமல், என் சொந்த

வழியில் சென்று, என் சுய விருப்பங்களை பின்பற்ற நான் முற்பட்டதற்காக வருந்துகிறேன். பரிசுத்த ஆவியானவரே என்னை மன்னியும். என்னை மீண்டும் புதிதாக உமக்கு அர்ப்பணிக்கிறேன். இயேசுவோடு இருக்க வேண்டிய ஆவிக்குரிய ஐக்கியத்தைக் குறித்து வேதாகமம் பேசுகிறது. நான் அதை விரும்புகிறேன். எனக்கு அதை தருவீரா? எனக்கு உதவும்படி வருவீரா?

பரிசுத்த ஆவியானவரே, உம்மை கனவீனப்படுத்தியதற்காக நான் வருந்துகிறேன். உம்மைக் கண்டு கொள்ளாமல் இருக்கும்படி, என்னால் முடிந்த எல்லாவற்றையும் நான் செய்திருக்கிறேன். என்னிலும், என் சுயபெலத்திலும் நான் நம்பிக்கை வைத்திருந்தேன். என்னை மன்னித்து, அந்த அடிமைத்தனத்தின் ஆவியில் இருந்து என்னை விடுவியும் என்று இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ஆமென்.

இப்போது என்ன?

இதோ ஓர் ஆச்சரியமான உண்மை. ஒருவேளை இதைக் குறித்து நீங்கள் ஏற்கனவே சிந்தித்திருக்கலாம் அல்லது ஒருபோதும் சிந்தித்துப் பார்க்காமல் இருந்திருக்கலாம். எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து தேவன் இஸ்ரவேல் ஜனங்களை மீட்டிருந்தார். நியாயப்பிரமாணத்தினால் அல்ல, விசுவாசத்தினால் தேவன் அதைச் செய்திருந்தார். தேவன் தம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலுக்கு மோசேயின் மூலமாக நியாயப்பிரமாணத்தின் உடன்படிக்கையைக் கொடுத்த உடனே, அவர்கள் செய்த முதல் செயல் என்ன தெரியுமா? அவர்கள் செய்த முதல் காரியம் என்னவென்றால் வேறே தேவர்கள் உனக்கு இருக்க வேண்டாம், விக்கிரகங்களை வழிபட வேண்டாம் என்ற முதல் இரண்டு கற்பனைகளை அவர்கள் முறித்தார்கள்.

நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்வது மிகவும் கடினமாய் இருக்கிறபடியால் ஜனங்கள் அதை முறிக்கிறார்கள் என்று சில போதகர்கள் கூறுகிறார்கள். ஆனால் இந்த சூழ்நிலையோடு சேர்த்துப் பார்க்கும்போது, இந்தக் கூற்று அபத்தமாக இருக்கிறது. ஒரு பொன் கன்றுக்குட்டியை வடிவமைத்து, அதை வணங்குவதென்பது, தேவனுக்கு கீழ்ப்படிவதைக் காட்டிலும் அவர்களுக்கு அது மிக மிகக் கடினமாய் இருந்தது. அவர்கள்

ஏன் உடனடியாக பாவம் செய்தார்கள்? ஏனென்றால் அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட நியாயப்பிரமாணமானது அவர்களுக்குள் இருந்த கலகக்காரனை தூண்டியெழுப்பிவிட்டது.

நம்முடைய சொந்த முயற்சிகளில் இறங்கும்படி நாம் விடப்படும்போது, நம்மால் இதைத்தான் சொல்ல முடியும், "தேவனே, என்னால் இதைச் செய்ய முடியவில்லை. நியாயப்பிரமாணத்தில் குறை ஒன்றும் இல்லை. அது ஒரு பிழையற்ற வழிகாட்டி. ஆனால் நான் அதை பின்பற்ற முற்படும்போதெல்லாம், சேற்றுக்குள் விழுந்து விடுகிறேன்."

தேவனுக்கு நன்றி. பரிசுத்த ஆவியானவர் என்னும் வழிகாட்டியை அவர் நமக்குத் தந்திருக்கிறார். நாம் பரிசுத்த ஆவியானவருக்கு அந்த வரைப்படத்தைக் கொடுத்தோமென்றால், அவர் சொல்வார், *நன்றி, எனக்கு ஏற்கனவே வழி தெரியும். எனக்கு வரைப்படம் தேவையில்லை. நீ செய்ய வேண்டியதெல்லாம், என் கையை பிடித்துக் கொண்டு, நான் உனக்கு வழிகாட்டும்படி அனுமதிக்க வேண்டும். அவ்வளவுதான்.*

இதோ, நீங்கள் பதிலளிக்க வேண்டிய இரண்டு முக்கியமான கேள்விகள். முதலாவது கேள்வி: நீங்கள் மறுபடியும் பிறந்தாக வேண்டும் என்பதன் முக்கியத்துவத்தை உணர்த்தும் ஒரு செய்தியை நீங்கள் எப்பொழுதாவது கேட்டிருக்கிறீர்கள? சந்தேகத்திற்கு இடமில்லாமல், ஆம் என்பதுதான் உங்களுடைய பதிலாக இருக்கும். இப்பொழுது என்னுடைய இரண்டாவது கேள்வி இதுதான்: பரிசுத்த ஆவியானவரால் நடத்தப்படுவது எப்படி என்பதைக் குறித்து தெளிவான, திட்டமிடப்பட்ட, ஒழுங்கான, நடைமுறைக்கு உகந்த போதனையை எப்பொழுதாவது கேட்டிருக்கிறீர்களா?

இக்கேள்விகளுக்கு நீங்கள் அளிக்கும் பதில்கள், சபையில் காணப்படும் வேர்ப் பிரச்சனைகளை அப்பட்டமாக வெளியே எடுத்துக் காண்பிக்கிறது. மறுபடியும் பிறந்த கிறிஸ்தவர்களில் பெரும்பாலானோருக்கு, பரிசுத்த ஆவியானவரால் வழிநடத்தப்படுவது எப்படி என்பதைக் குறித்து ஒருபோதும் போதிக்கப்பட்டதில்லை. அவர்கள் தேவனுடைய இராஜ்யத்திற்குள் பிரவேசித்து விட்டார்கள். ஆனால் அவர்கள் வழி தெரியாமல் அங்குமிங்கும் தடுமாறி விழுகின்றார்கள். அவர்கள் இன்னும் தங்களுடைய அழைப்பிற்குள் நுழையவே இல்லை. இராஜ்யத்தில் தேவன் அவர்களுக்கென்று நியமித்திருக்கிற குறிப்பிட்ட பணிகளை நிறைவேற்றுவதில் அவர்கள் இன்னும்

எந்த முன்னேற்றத்தையும் உண்மையாகவே அடையவில்லை. ஏன்? ஏனென்றால், பரிசுத்த ஆவியானவரால் நடத்தப்படுவது எப்படி என்பதை குறித்த அத்தியாவசியமான போதனையை அவர்கள் ஒருபோதும் பெற்றுக் கொண்டதே இல்லை.

இதுதான் அடுத்த அத்தியாயத்தின் கருப்பொருளாக இருக்கும்.

8
உங்களை வழி நடத்துகிற ஒருவர்

சத்திய ஆவியானவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்.

யோவான் 16:13

இப்பிரபஞ்சம் முழுவதிலும், பரிசுத்த ஆவியானவருக்கு மாற்று நபர் ஒருவருமில்லை. அவர் முற்றிலும் நிகரற்ற தனித்தன்மையை உடையவர். வேறெந்த நபரும், வேறெந்த வல்லமையும் செய்ய முடியாத காரியங்களை அவரால் மட்டுமே செய்ய முடியும். என்ன செய்ய வேண்டும் என்று தேவன் விரும்புகிறாரோ, அதை நம்மில் நிறைவேற்றக்கூடியவர் அவர் ஒருவரே.

பழைய ஏற்பாட்டில் ஒரு வசனம் இப்படியாகக் கூறுகிறது: ''செருபாபேலுக்குச் சொல்லப்படுகிற வார்த்தை என்னவென்றால், பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல, என்னுடைய ஆவியினாலேயே ஆகும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்கிறார்" (சகரியா 4:6). இந்த வசனத்தின் கடைசி சில வார்த்தைகள், நமக்கு மிகவும் முக்கியமாய் தேவைப்படுகிற சில விஷயங்களைச் சொல்கின்றன. சேனைகளின் தேவனே இங்கு பேசுகிறார். பரலோகம் மற்றும் பூமியிலுள்ள சகல சேனைகளுக்கும் கட்டளை கொடுக்கிற தேவனே இங்கு பேசுகிறார். அவர் சொல்கிறார், "ஜனங்களுடைய இருதயத்தில் முழுமையாய் உருவாக்க வேண்டிய பூரண மாற்றத்தை, செய்யப்பட வேண்டிய இந்த ஒரே மாற்றத்தை, பலத்தினாலும் பராக்கிரமத்தினாலும் செய்து விட முடியாது. பலவந்தமாய் அதைச் செய்து விட முடியாது. ஒரு அழுத்தத்தைக் கொடுத்து அதைச் செய்து விட முடியாது. சட்டத்தினால் அதைச் செய்து விட முடியாது.

அரசாங்கம் அதைச் செய்ய முடியாது. அதைச் செய்யக் கூடிய ஒரே நபர் உண்டு. அவர்தான் பரிசுத்த ஆவியானவர்."

நீங்கள் இந்த சத்தியத்தை இறுகப் பற்றிப் பிடித்துக் கொள்ள வேண்டுமென்று நான் விரும்புகிறேன்.

கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்காக ஆயத்தப்படுத்தின அழைப்புக்குள் நீங்கள் பிரவேசிக்க விரும்பினால், நீங்கள் முழுவதுமாய் பரிசுத்த ஆவியானவரை மட்டுமே சார்ந்து வாழ வேண்டும். தேவனுடைய ஆவியானவரை தவிர்த்து விட்டு, உங்களால் அதைச் செய்ய முடியாது. அவருக்கு மாற்றுசக்தி ஒன்றுமில்லை. கல்வியினால் அதைச் செய்ய முடியாது. உங்களுடைய தாலந்துகளும் திறமைகளும் அதைச் செய்து விட முடியாது. பணத்தினால் நிச்சயமாக அதைச் செய்ய முடியாது. தேவனுடைய ஆவியானவராகிய பரிசுத்த ஆவியானவரைத் தவிர வேறு ஒருவரும், வேறு எதுவும் அதை செய்ய முடியாது!

முதிர்ச்சியடைவதற்கான ஒரே வழி

பவுல் ரோமருக்கு எழுதின நிருபத்தில், ஒருக்காலும் மாற்ற முடியாத இதைக் காட்டிலும் இன்னும் மேம்படுத்த முடியாத, முழு நிறைவான ஒரு வாக்கியத்தை தெளிவுபட, அழுத்தந்திருத்தமாக எழுதியிருக்கிறார்: "மேலும் எவர்கள் தேவனுடைய ஆவியினாலே *நடத்தப்படுகிறார்களோ*, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள்" **(ரோமர்:8:14)**. பரிசுத்த ஆவியானவரால் நடத்தப்படுகிறவர்கள் மட்டுமே தேவனுடைய மகன்களாய், மகள்களாய் வாழ்வதற்கு தகுதியடைகிறார்கள். நாம் கவனித்திருக்கிறபடி, தேவனுடைய ஆவியானவரால் மறுபடியும் பிறந்து இரட்சிக்கப்பட்டவர்களில் பெரும்பாலானோர், அவரால் எப்படி நடத்தப்படுவதென்பதை இன்னும் கற்றுக் கொள்ளாமலிருக்கிறார்கள் என்பது வருந்தத்தக்க ஒரு உண்மையா யிருக்கிறது. ஆனால் கிறிஸ்துவுக்குள் வளர்ந்து முதிர்ச்சியடைவதற்கு இதைத் தவிர வேறு வழியே இல்லை.

கிரேக்க மொழியில் *நடத்தப்படுதல் (being led)* என்ற வார்த்தை, "எவர்கள் தேவனுடைய ஆவியானவரால் இடைவிடாமல் தொடர்ந்து நடத்தப்படுகிறார்களோ..........." என்ற அர்த்தத்தில், நிகழ்காலத்தில்

தொடர்ச்சியாக நடக்கக்கூடிய ஒரு வினைச்சொல்லாக எழுதப்பட்டுள்ளது. இது ஏதோ ஞாயிற்றுக்கிழமை காலை சபை ஆராதனையில் மட்டும் நடக்கும் ஒரு நிகழ்வல்ல அல்லது உங்களுடைய படுக்கையில் நீங்கள் முழங்கால்படியிட்டு ஜெபிக்கும்போது நடக்கும் ஒரு நிகழ்வல்ல. இது ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு மணி நேரமும், ஒவ்வொரு விநாடியும் நடக்கின்ற ஒரு நிகழ்வாய் இருக்கின்றது. எவர்கள் தேவனுடைய ஆவியானவரால் தொடர்ந்து நடத்தப்படுகிறவர்களோ, அவர்கள் மட்டுமே முதிர்ச்சியடைந்த தேவனுடைய குமாரரும், குமாரத்திகளுமாக மாறுகின்றனர்.

நான் இயேசுவை அறிந்து கொண்டபோது, தனிப்பட்ட விதத்தில் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையை, என்னை மிகவும் உற்சாகமூட்டக்கூடிய ஒரு அனுபவமாக நான் பெற்றுக் கொண்டேன். இரண்டாம் உலக மகா யுத்தம் நடந்து கொண்டிருந்தபோது, ராணுவ வீரர்கள் தங்கியிருந்த ஒரு அறையில், நான் சாஷ்டாங்கமாக விழுந்து கிடந்தபோது, ஒரு மணி நேரத்துக்கும் அதிகமாக நான் தேவனுடைய வல்லமையை அனுபவித்தேன். இது எனக்கு முற்றிலும் வித்தியாசமான ஒரு அனுபவமாக இருந்தது. இயேசுவோடு எனக்கு உண்டான இந்த முதல் சந்திப்பு, பரிசுத்த ஆவியானவரோடும், அவருடைய வல்லமையோடும் உண்டான ஒரு முதல் சந்திப்பாகவும் அமைந்து விட்டது.

அந்நாள் முதல், பரிசுத்த ஆவியானவர் எப்பொழுதுமே எனக்கு ஒரு நிஜமான நபராக இருக்கிறார். நான் பரிசுத்த ஆவியானவரைக் குறித்து கற்று அறிந்து கொண்டேன். நான் பரிசுத்த ஆவியானவரை விசுவாசித்தேன். நான் ஒரு பிரசங்கியாரான பிறகு, பரிசுத்த ஆவியானவரைக் குறித்து நான் பிரசங்கித்திருக்கிறேன். "நீங்கள் ஆவியானவரால் மறுபடியும் பிறந்து இரட்சிக்கப்பட்டாக வேண்டும்,'' என்று நான் பலமுறை பிரசங்கித்திருக்கிறேன். ஆனால் இதையெல்லாம் இப்பொழுது திரும்பிப் பார்க்கும்போது, அந்நாட்களில் நான் பரிசுத்த ஆவியானவரை அவசர சிகிச்சைக்குப் பயன்படும் ஆம்புலன்ஸ் வாகனத்தைப்போலத்தான் பயன்படுத்தினேன் என்பதை நான் மிகுந்த வருத்தத்துடன் சொல்லித்தான் ஆக வேண்டும். ஒரு இக்கட்டான சூழ்நிலைக்குள் நான் சிக்கிக் கொள்ளும்போது, ஆம்புலன்ஸ் வண்டியை நான் அழைப்பேன். ஆம்புலன்ஸ் எப்பொழுதுமே எனக்கு உதவ வந்தது. ஆனால் பரிசுத்த ஆவியானவரோடு எனக்கு இருந்த உறவு தொடர்ச்சியானதாக நிலைத்திருக்கவில்லை. அது

தேவைக்கேற்ப, சூழ்நிலைக்கேற்ப விட்டு விட்டு செயல்பட்டது.

இந்தப் பிரச்சனைக்கான ஒரு காரணம், நான் மதத்தில் ஆழமாக மூழ்கிப் போயிருந்ததுதான். ஆனால் நாம் பார்த்ததுபோல, மதமும், பரிசுத்த ஆவியானவரும் ஒன்றிணைந்து செயல்படுதில்லை. நாம் மதச் சடங்குகளில் மும்முரமாக ஈடுபடுகிறோம் என்றால், அதன் விளைவாக, நாம் பரிசுத்த ஆவியானவரை விட்டுவிட்டு, மற்றவைகளையே வழக்கமுறையாக செய்து கொண்டிருக்கிறோம் என்று அர்த்தம். என்னுடைய ஆரம்ப நாட்களில், நான் ஆவிக்குரிய வார்த்தைகளை அதிகமாக பயன்படுத்தினேன். ஆனால் என்னுடைய வாழ்க்கையில் உண்மையான ஆவிக்குரிய அனுபவம் காணப்படவில்லை. அதை நிவர்த்தி செய்து சீர்படுத்தும்படி, ஒன்றின் பின் ஒன்றாக, பல்வேறு அனுபவங்கள் வழியாக நான் கடந்து வரும்படி தேவன் அதை அனுமதித்தார். அதன் மூலம், நான் பரிசுத்த ஆவியானவரை எவ்வளவு முழுமையாகச் சார்ந்து கொள்ள வேண்டும் என்பதை தேவன் எனக்கு உணர்த்தினார்.

நீங்கள் இதை வாசிக்கும்போது, நீங்கள்கூட பலவிதமான மன உளைச்சல்கள், பிரச்சனைகள் மற்றும் ஆழ்ந்த கவலைகள் ஊடாக சென்று கொண்டிருக்கலாம். "தேவனே, ஏன் இப்படியெல்லாம் நடக்கின்றது?" என்ற ஒரு கேள்விக்குறியோடு நீங்கள் இருக்கலாம். இந்தப் பிரச்சனைகளையெல்லாம் உங்களுடைய வாழ்க்கைக்குள் தேவன் அனுமதித்ததற்கு ஒரு மிக முக்கியமான காரணம் இதுதான்: ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு மணி நேரமும், ஒவ்வொரு நொடிப்பொழுதும் பரிசுத்த ஆவியானவர் உங்களுக்கு எவ்வளவு அதிமுக்கியமான தேவையாயிருக்கிறார் என்பதை உங்களுக்குக் உணர்த்தவே தேவன் இவற்றையெல்லாம் அனுமதித்திருக்கிறார். கிறிஸ்தவ வாழ்வில் வெற்றி பெற வேறு வழியேயில்லை.

பரிசுத்த ஆவியானவர் எப்பொழுதுமே நமக்கு உதவி செய்ய ஆயத்தமாயிருக்கிறார். நாம் அவரை வற்புறுத்தவோ, நயந்து வருந்தி கேட்கவோ தேவையில்லை. அங்கே ஒரு பிரச்சனை இருக்கிறதென்றால், அது நிச்சயம் நம்மிடம்தான் இருக்கிறது. அவரிடம் ஒருபோதும் எந்தப் பிரச்சனையும் இல்லை. வேத வசனம் சொல்கிறது, "மாம்சம் ஆவிக்கு விரோதமாகவும், ஆவி மாம்சத்துக்கு விரோதமாகவும் இச்சிக்கிறது"

(கலாத்தியர் 5:17). அடிப்படையில் இதன் அர்த்தம் இதுதான்: தேவனுக்காக நாம் செய்ய விரும்பும் காரியங்களை அவ்வளவு எளிதாகச் செய்து விட முடியாது. காரணம், நம்முடைய பழைய, விழுந்து போன ஜென்ம சுபாவத்தில் ஆவியானவருக்கு விரோதமான கடுமையான பகையுணர்ச்சி இருக்கிறது. அது தேவனுக்காக வாழ விடாதபடி நம்மைத் தீவிரமாய் தடுக்கிறது. எனவே நம்முடைய பழைய விழுந்து போன ஜென்ம சுபாவம், நம் மீது ஆதிக்கம் செலுத்தி, நம்மைக் கட்டுப்படுத்தி நடத்தி விடாதபடி, நாம் கற்றுக்கொள்ள வேண்டும். சிலுவையில் நிகழ்ந்த இயேசுவினுடைய மரணத்தின் மூலம், நம்முடைய பழைய விழுந்து போன ஜென்ம சுபாவம் மரித்துக் கிடக்கிறது என்ற சத்தியத்தை நாம் கருத்தில் எடுத்து சிந்தித்துப் பார்க்கும்படி கற்றுக் கொள்ள வேண்டும். அதோடு நாம் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையின் மூலம் கர்த்தருக்காக வாழும்படியும் கற்றுக் கொள்ள வேண்டும்.

ஒருவரும் இந்தத் திராணியை உடனடியாகப் பெற்று விட முடியாது. ஆனால் சிலர் இதை சீக்கிரமாய் கற்றுக் கொள்கிறார்கள். அவர்கள்தான் முனைப்பாகச் செயல்படும் வெற்றியுள்ள கிறிஸ்தவர்களாய் வாழ்கிறார்கள். இவர்கள் நிச்சயம் பிரசங்கிமார்களாகத்தான் இருக்க வேண்டுமென்ற அவசியம் இல்லை. இவர்கள் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் சாதாரண அவயங்களாகக்கூட இருக்கலாம். இந்தப் பாடத்தைக் கற்றுக் கொள்பவர்களில் பெரும்பாலானோர் தேவனிடத்தில் பரிந்து மன்றாடி ஜெபிக்கிறவர்களாய் இருக்கிறார்கள். இவர்கள் அநேக நேரங்களில் வெளியரங்கமாய் காணப்பட மாட்டார்கள். இரகசியமான மறைவிடங்களில், இவர்கள் மற்றவர்களுக்காக பரிந்து மன்றாடி ஜெபித்துக் கொண்டிருப்பார்கள்.

நீங்கள் உங்களுடைய அழைப்பில் வெற்றி பெற விரும்பினால், தேவனுடைய ராஜ்யத்தின் பணியைச் செய்வதற்காகவே சிருஷ்டிக்கப்பட்ட நீங்கள் அந்தப் பணியை எடுத்துச் செய்ய விரும்பினால், உங்களுக்கு எதிராக வரும் பிரச்சனைகளையும், சத்துருவின் எல்லா பொல்லாத சக்திகளையும் நீங்கள் மேற்கொண்டு ஜெயிக்க விரும்பினால், இப்பொழுது நான் உங்களுக்கு கற்றுக் கொடுத்துக் கொண்டிருக்கும் இந்தப் பாடம் மிக மிக அத்தியாவசியமானது. நீங்கள் பரிசுத்த ஆவியானவரால் வழிநடத்தப்பட வேண்டும்.

பரிசுத்த ஆவியானவரின் அம்சங்கள்

பரிசுத்த ஆவியானவரின் குறிப்பிட்ட சில முக்கியமான குணாதிசயங்களை வருணிக்கும் சில எளிய சொற்களை நாம் பார்க்க ஆரம்பிப்போம்.

பரிசுத்த ஆவியானவர் ஒரு நபர்

நாம் அறிய வேண்டிய முதலாவது மற்றும் நமக்கு ஊக்கம் கொடுக்கக்கூடிய மிக முக்கியமான சத்தியம் என்னவென்றால், பரிசுத்த ஆவியானவர் ஒரு நபர் என்பதாகும். அப்போஸ்தலர்களின் விசுவாசப்பிரமாணத்தின் முடிவில் நாம் அறிக்கையிடும் ஒரு வாக்கியத்தின் பாதி அல்ல அவர். "பரிசுத்த ஆவியை விசுவாசிக்கிறேன், பரிசுத்த கத்தோலிக்க திருச்சபையை விசுவாசிக்கிறேன்," என்று வெறுமனே அறிக்கை செய்வதோடு அவர் முடிந்து விடுவதில்லை. இந்த அதிகாரபூர்வமான விசுவாச அறிக்கை, தேவனுடைய திரித்துவத்தின் மூன்றாவது நபரைக் குறித்து வெகு சில வார்த்தைகளையே கொடுக்கிறது என்றால், அது நிச்சயம் பேரிழப்பைத்தான் உண்டாக்கும் என்று நான் சொல்வேன்.

பரிசுத்த ஆவியானவர் தனிப்பட்ட விதத்தில், தன்னையே எதிலும் முன்னிலைப்படுத்திக் கொள்ள மாட்டார். இது அவருடைய மிகச் சிறந்த குணாதிசயங்களில் ஒன்றாய் இருக்கிறது. அவர் மற்றவர்களின் கவனத்தை ஒருபோதும் தன் பக்கம் ஈர்க்கிறவரல்ல. அவர் எப்பொழுதும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மேல் கவனத்தைப் பதிக்கிறார். அவர் தன்னையே எதிலும் முன்னிலைப்படுத்திக் கொள்ள மாட்டார் என்பதற்காக, நாம் அவரை பொருட்படுத்தாது, அலட்சியப்படுத்தி விட்டு விடலாம் என்று அர்த்தமல்ல.

இவ்விஷயத்தைக் குறித்து இயேசு என்ன சொல்லுகிறார் என்பதைப் பார்க்கும்படி, நாம் யோவான் எழுதிய சுவிசேஷத்திற்குச் செல்வோம். பின்வரும் வேதப் பகுதியில், சரீரப்பிரகாரமாய் அவர்களை விட்டுப் பிரிந்து, பரலோகத்தில் இருக்கிற தன் பிதாவினிடத்தில் திரும்பப் போவதாக இயேசு தன்னுடைய சீஷர்களிடம் சொல்கிறார். அதைச் சொல்லும்போது, அவர் அவர்களிடத்தில் ஒன்றைக் குறித்து விளக்கிச் சொல்கிறார். அதாவது, அவர் அவர்களை விட்டுப் பிரிந்து சென்ற பின்பு, அவர்களுடைய நல்வாழ்விற்காக

முன்கூட்டியே அவர் ஆயத்தம் பண்ணின முன்னேற்பாட்டைக் குறித்து அவர் இங்கு அவர்களிடம் விவரித்துச் சொல்கிறார். அந்த முன்னேற்பாடு, வேறொரு நபராய் இருக்கிறார். இயேசு பரலோகத்திற்குத் திரும்பிச் சென்ற பிறகு, அங்கிருந்து வேறொரு நபர் வருவார் என்பதே அந்த முன்னேற்பாடாய் இருக்கிறது. அந்த வேறொரு நபர் வேறு யாருமல்ல, பரிசுத்த ஆவியானவர்தான். இயேசு சொல்கிறார், "நான் உங்களுக்கு ஒரு உண்மையைச் சொல்கிறேன். நான் போகிறது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கும். நான் போகாதிருந்தால், தேற்றரவாளன் உங்களிடத்தில் வரார். நான் போவேனேயாகில் அவரை உங்களிடத்திற்கு அனுப்புவேன்" (யோவான் **16:7**).

உதவி செய்கிறவர் (helper), தேற்றரவாளன் (comforter), ஆலோசகர் (counselor) என்ற வார்த்தைகளெல்லாம் பரிசுத்த ஆவியானவரைக் குறிப்பிடும்படியே பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. வேதாகமத்தின் ரோமன் கத்தோலிக்க பதிப்பு, *பாராக்ளீட் (paraclete)* என்ற வார்த்தையை பயன்படுத்துகிறது. இது *பாராக்ளீட்டோஸ் (parakletos)* என்ற கிரேக்க வார்த்தையை எழுத்துக்கு எழுத்து அப்படியே ஆங்கிலத்துக்குக் கொண்டு வந்ததால் உண்டான ஒரு வார்த்தையாகும். இந்த வார்த்தையின் அர்த்தம், "கூடவே நமக்குத் துணையாக, நமக்கு ஆதரவாக இருந்து நம்மை நடத்தும்படி அழைக்கப்பட்டவர்," என்பதாகும். இதற்கு மிகவும் நெருக்கமான அர்த்தத்தை உடைய வார்த்தை, *வழக்கறிஞர் (advocate)* என்ற வார்த்தையாகும். இது குறிப்பாக சட்டரீதியான அர்த்தத்தை உடையதாக இருக்கிறது. இது பரிசுத்த ஆவியானவரை, உங்களுக்கு ஆதரவாக இருந்து, உங்களுக்கு உதவி செய்யும்படி அழைக்கப்பட்டவராக படம் பிடித்துக் காண்பிக்கிறது. நீதிமன்றத்தில் உங்களுடைய வழக்கை வாதாடுவதற்குப் போதுமான செயலாற்றலும், தகுதியும், திறமையும் உங்களிடத்தில் இல்லாதபோது, உங்களுக்கு ஆதரவாக உங்களுடைய வழக்கை எடுத்து வழக்காடுபவராக, இந்த வார்த்தை பரிசுத்த ஆவியானவரை படம் பிடித்துக் காண்பிக்கிறது. இவ்வார்த்தைகள் அனைத்தும் பரிசுத்த ஆவியானவரின் தன்மைகளை விவரிக்கின்றன: தேற்றரவாளன், உதவி செய்பவர், ஆலோசனைக் கூறுபவர், வழக்காடுபவர், பாராக்ளீட்.

குறிப்பாக, இங்கு இரண்டு விஷயங்களை கவனியுங்கள். முதலாவதாக, இயேசு இங்கு சொல்கிறார், "நான் சரீரப்பிரகாரமாய் உங்களை விட்டுச் செல்கிறேன்." நீங்கள் இதை வாசிக்கிற இதே நேரத்தில், இயேசு ஒரு தனி நபராய் பரலோகத்தில் பிதாவினுடைய வலது பாரிசத்தில் அமர்ந்திருக்கிறார். அவர் இங்கு இந்த பூமியில் இல்லை. இரண்டாவதாக, இயேசு தம்முடைய சீஷர்களிடத்தில், "நான் பரலோகத்திற்கு திரும்பி போனால், இங்கே என்னுடைய ஸ்தானத்தில் வேறொரு நபரை அனுப்பும்படி பிதாவை வேண்டிக்கொள்வேன்," என்று சொல்லும்போது (யோவான் 14:16ஐ பார்க்கவும்), குறிப்பாக, *வேறொரு* என்று அவர் சொல்லும் அந்த வார்த்தை மிக மிக முக்கியமானதாய் இருக்கிறது. ஏன் ? காரணம், இயேசுவும், பிதாவும் தனி நபர்களாய் இருப்பதுபோல, பரிசுத்த ஆவியானவரும் ஒரு தனி நபராய் இருக்கிறார் என்பதை இது வலியுறுத்துகிறது.

முழு வேதாகமும், குறிப்பாக புதிய ஏற்பாடு, தேவனுடைய திரித்துவ சுபாவத்தை வெளிப்படுத்துகின்றன. ஒரே தேவன் மூன்று நபர்களில் இருக்கின்றார்: பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர். தேவனுடைய இந்த மூன்று வெளிப்பாடுகளிலும், அவர் ஒரு தனி நபராய் வெளிப்படுகிறார். பிதாவை ஒரு தனிநபராகவும், குமாரனை ஒரு தனிநபராகவும் புரிந்து கொள்வதில் நமக்கு எந்தப் பிரச்சனையும் இல்லை. ஆனால் பரிசுத்த ஆவியானவர், வித்தியாசமான ஒரு வகை நபராக இருந்தாலும், அவரும் ஒரு தனிநபராக இருக்கிறார் என்பதைப் புரிந்து கொள்வது பெரும்பாலானோருக்குக் கடினமாக இருக்கிறது. இது தனிப்பட்ட விதத்தில் நான் கவனித்துப் பார்த்த ஒரு விஷயமாகும்.

யோவான் எழுதிய நற்செய்தியின் இதே அதிகாரத்தில் இன்னும் தொடர்ந்து வாசித்தீர்கள் என்றால், "சத்திய ஆவியாகிய அவர் வரும் போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்" என்று இயேசு சொல்வதை நீங்கள் வாசிக்க முடியும் (யோவான் 16:13).

புதிய ஏற்பாடு, கிரேக்க மொழியின் மூலமாகத்தான் நமக்குக் கிடைத்திருக்கிறது. இம்மொழியில் ஆண்பால், பெண்பால் மற்றும் பொதுப்பால் என இவைகளைச் சுட்டிக் காண்பிக்கக்கூடிய வார்த்தைகள் இருக்கின்றன. ஆனால் ஆங்கிலத்தில் அப்படிப்பட்ட வேறுபாடுகள் மிகக் கொஞ்சமாகத்தான் இருக்கின்றன. இருப்பினும் ஆங்கிலத்தில் *அவன், அவள், அது* என்ற

மூன்று மாற்றுப் பெயர்ச் சொற்கள் (pronouns) உண்டு. ஆனால் ஆங்கிலம் பிரெஞ்சு மொழியைப் போல அல்ல. ஒரு உதாரணத்திற்கு, பிரெஞ்சு மொழியில், *ஜன்னல்* என்ற வார்த்தை ஒரு ஆண்பால் வார்த்தையாகவும், *கதவு* என்ற வார்த்தை ஒரு பெண் பால் வார்த்தையாகவும் குறிப்பிடப்படுகின்றன. இவைகளை இலக்கணம் சார்ந்த பாலினங்கள் என்று அழைக்கிறோம்.

கிரேக்க மொழியில், ஆவியானவர் என்ற வார்த்தைக்கு *நியுமா (pneuma)* என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இது ஒரு ஆண்பால் வார்த்தையுமல்ல, ஒரு பெண்பால் வார்த்தையுமல்ல. இது ஆண், பெண்பால் வேறுபாடு காட்டாத பொதுப்பால் சார்ந்த ஒரு பெயர்ச்சொல்லாக இருக்கின்றது. பொதுப்பால் சார்ந்த, இதற்கு மிகவும் பொருத்தமான மாற்றுப் பெயர்ச்சொல் (pronoun), *"அது"* என்ற வார்த்தையாகும். ஆனால் இயேசு தன் சீஷர்களிடம் பேசின இந்த வார்த்தைகள், வேறொரு மாற்றுப் பெயர்ச்சொல்லான *"அது"* என்ற வார்த்தையைப் பயன்படுத்தியிருக்க வேண்டியதற்கான இலக்கண விதிகளை மீறியிருக்கின்றன. அவர் இங்கு ஆவியானவரைக் குறிப்பிடும்போது, *"அது"* என்ற வார்த்தையைப் பயன்படுத்தவில்லை. "சத்திய ஆவியாகிய *அவர்* வரும்போது," என்றுதான் இயேசு இங்கு சொல்கிறார். இயேசு ஏன் அப்படிச் சொன்னார்? பரிசுத்த ஆவியானவரும் ஒரு தனி நபர்தான் என்பதை எவ்வித சந்தேகமுமில்லாமல் நமக்கு உறுதிப்படுத்தும்படியே, இயேசு அப்படிச் சொன்னார். பரிசுத்த ஆவியானவரை *"அது"* என்று குறிப்பிட்டுச் சொல்ல முடியாது. பரிசுத்த ஆவியானவர், நம் மீது ஆதிக்கம் செலுத்தும் ஒரு ஆற்றலோ அல்லது ஒரு உபதேசமோ, இறையியல் கற்பனையோ அல்ல. அவர் ஒரு தனிநபர்.

இது நாம் உறுதியாக இறுகப் பற்றிப் பிடித்துக் கொள்ள வேண்டிய அதி முக்கியமான ஒரு சத்தியமாக இருக்கின்றது. இதை நீங்கள் புரிந்து கொள்ளவில்லை என்றால், அவரோடு தொடர்பும் ஐக்கியமும் கொள்வதில் உங்களுக்கு எப்பொழுதுமே பிரச்சனைகள் இருக்கும். அதேபோல, என் மனைவி ஒரு தனிநபர் என்பதை நான் புரிந்துணரவில்லை என்றால், அவருடனான உறவில் எனக்கு எப்பொழுதுமே பிரச்சனைகள் இருக்கும் என்பதுதான் உண்மை. எங்களுடைய திருமண உறவு முறிந்து போய் முடிவில் தோல்வியில்தான் முடியும். பரிசுத்த ஆவியானவர் ஒரு தனிநபர் என்ற

உண்மையை இன்னும் அநேகர் உறுதியாகப் பற்றிப் பிடித்துக் கொள்ளாதபடியால், அவரோடு ஒரு அசௌகரியமான, இலகுவாய் இல்லாத உறவையே உடையவர்களாய் இருக்கிறார்கள்.

பரிசுத்த ஆவி இப்பொழுது இங்கே இருக்கிறார்

இரண்டாவதாக, நீங்கள் இங்கு கவனிக்கும்படி நான் விரும்புகிற விஷயம் இதுதான்: இயேசு இங்கு தம்முடைய சீஷர்களிடம் இவ்வாறு சொல்கிறார், ''நான் உங்களை விட்டுச் செல்வதென்பது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கும். காரணம், நான் போகவில்லை என்றால், உங்களுக்கு உதவி செய்கிறவர் வர மாட்டார். ஆனால் நான் போவேனேயாகில், அவரை என்னுடைய இடத்தில் அனுப்புவேன்" (யோவான் **16:7**-ஐ பாருங்கள்). இயேசு இங்கு சொல்லிக் கொண்டிருக்கிற இந்தக் காரியம் அநேக கிறிஸ்தவர்களை வியப்படையச் செய்கிறது. ''நான் பூலோகத்திலும், பரிசுத்த ஆவியானவர் பரலோகத்திலும் இருப்பதைவிட, பரிசுத்த ஆவியானவர் பூலோகத்திலும், நான் பரலோகத்திலும் இருப்பது உங்களுக்கு நல்லது," என்று இயேசு இங்கு கூறுகிறார்.

"இயேசு உயிரோடு பூமியில் வாழ்ந்த காலத்தில் நானும் வாழ்ந்திருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்? அப்பொழுது மனுஷனாய் வாழ்ந்த இயேசுவோடு ஒரு உறவும், ஐக்கியமும் நாம் கொண்டிருப்போமே," என்று எப்பொழுதாவது நீங்கள் உங்களுக்குள் சொல்லியிருக்கக் கூடும். ஆம்! அது அற்புதமாகத்தான் இருந்திருக்கும். ஆனால் இந்த வசனத்தில் இயேசு இவ்வாறு சொல்கிறாரே, "நான் பரலோகத்திலும், பரிசுத்த ஆவியானவர் உங்களோடு பூலோகத்திலும் இருப்பதே உங்களுக்கு நல்லது."

சபையின் வளர்ச்சியை நீங்கள் ஆராய்ந்து பார்த்தால், இயேசு இங்கு சொல்லுகிற சத்தியம் தெளிவாகத் தெரியும். பரிசுத்த ஆவியானவர் இறங்கி வந்த அந்த பெந்தேகோஸ்தே நாளிலே, இயேசுவினுடைய சீஷர்கள் முற்றிலுமாக உருமாறின விதம், அவர்கள் முன்பு இயேசுவோடு வாழ்ந்த நாட்களில்கூட ஒருபோதும் நடந்ததில்லை என்றுதான் சொல்ல வேண்டும். கடைசி இராப்போஜனத்தின் அந்தக் கடைசி நிமிடங்களில் கூட, அவர்கள் தங்களுக்குள் யார் பெரியவன் என்று சண்டை போட்டுக் கொண்டிருந்தனர். இயேசு தம்முடைய மரணம் மற்றும் உயிர்தெழுதலை குறித்து

அவர்களிடத்தில் பகிர்ந்து கொண்ட அந்த ஆழமான, வல்லமையான சத்தியங்களில் ஒரு பாதியைக் கூட அவர்கள் புரிந்து, உள்வாங்கிக் கொள்ளவில்லை.

ஆனால் பரிசுத்த ஆவியானவர் வந்தபோதோ, இயேசுவின் அடையாளத்தை குறித்து முற்றிலும் வேறுப்பட்ட ஒரு வெளிப்பாடு அவர்களுக்குள் உண்டானது. அவருடைய மரணம் மற்றும் உயிர்த்தெழுதல், இன்னும் வேத வசனங்கள், இவைகளெல்லாம் எவ்வளவு நிஜமானவை, எவ்வளவு அர்த்தமுள்ளவை என்பதைக் குறித்த ஒரு விழிப்புணர்வு அவர்களுக்குள் அப்பொழுது ஒரு நொடிப்பொழுதில் உண்டானது. தங்களுடைய அனுபவத்தோடு யோவேல் தீர்க்கதரிசியின் வார்த்தைகளை தொடர்புபடுத்தி பேதுருவால் பெந்தேகொஸ்தே நாளைக்கு முன்பு இவ்விதத்தில் எழுந்து நின்று ஒருபோதும் பேசியிருக்க முடியாது. இந்த ஆழ்ந்த அறிவும், வெளிச்சமும் படிப்படியாக வரவில்லை. அது ஒரு நொடிப்பொழுதில் உண்டானது. பரிசுத்த ஆவியானவர் இறங்கி வந்த அந்தக் கணப்பொழுதில், அவர்களுடைய மனநிலையிலும், ஆவிக்குரிய சத்தியங்களை புரிந்து கொள்வதில் அவர்களுக்கிருந்த திறனிலும் புரட்சிகரமான விதத்தில் ஒரு முற்றிலுமான மாற்றம் உண்டானது.

பரிசுத்த ஆவியானவர் கர்த்தராயிருக்கிறார்

பரிசுத்த ஆவியானவரை குறித்ததான மூன்றாவது அம்சம், முதலாவது அம்சத்தின் நீட்டிப்பாகும். பரிசுத்த ஆவியானவர் ஒரு தனிநபர் மட்டுமல்ல, அவர் கர்த்தராகவும் இருக்கிறார். பிதாவாகிய தேவன் கர்த்தராய் இருப்பது போல, குமாரனாகிய தேவன் கர்த்தராய் இருப்பது போல, ஆவியானவராகிய தேவனும் கர்த்தராய் இருக்கிறார். தேவனுடைய திரித்துவத்தின் மற்ற இருவரோடும் இவர் சரிசமமான நிலையில் உள்ளார். “நைஸீன் க்ரீட்” என அழைக்கப்படும் அறிக்கையில், “பிதா மற்றும் குமாரனோடு இணைந்து வணங்கி ஆராதிக்கப்படும் பரிசுத்த ஆவியானவர்,” என்று கூறப்பட்டுள்ளது. ஆராதனை என்பது தேவனுக்கு மட்டுமே செலுத்தப்படும் ஒன்றாக இருக்கிறது. 2 கொரிந்தியரில், பவுல் இந்த எளிமையான வாக்கியத்தை எடுத்துரைக்கிறார்: “கர்த்தரே ஆவியானவர். கர்த்தருடைய ஆவி எங்கேயோ, அங்கே விடுதலை உண்டு” (2 கொரிந்தியர் 3:17). புதிய ஏற்பாட்டில்

பயன்படுத்தப்படும் *கர்த்தர்* என்ற வார்த்தை, பழைய ஏற்பாட்டில் தேவனுடைய பரிசுத்த பெயராக சில இடங்களில் பயன்படுத்தப்படும் *யெகோவா* என்னும் வார்த்தைக்கு ஒத்ததாக இருக்கிறது. இது ஒரே மெய் தேவனின் பெயராக இருக்கிறது. ஆகையால், ''கர்த்தரே ஆவியானவர்'' என்று பவுல் சொல்லும்போது, "ஆவியானவரே தேவன்; அவரே கர்த்தர்," என்ற அர்த்தத்தில் அவர் இங்கு சொல்கிறார்.

பவுல் தொடர்ந்து சொல்கிறார், "ஆவியானவர் எங்கே உண்டோ, அங்கே விடுதலையுண்டு." இங்கே சட்ட அமைப்பின் அடிமைத்தனத்துக்கும், விடுதலைக்கும் இடையே உள்ள வித்தியாசத்தைப் பார்க்கிறோம். நமக்கு விடுதலை எப்படிக் கிடைக்கிறது**?** அதற்கு ஒரேயொரு வழிதான் உண்டு. ஆவியானவர் எங்கேயோ, அங்கே விடுதலை உண்டு. இந்த வசனத்தை ஒருவர் வேறு சொற்களைப் பயன்படுத்தி மறு ஆக்கம் செய்து இவ்வாறு சொல்ல, நான் கேட்டிருக்கிறேன்: "எங்கே பரிசுத்த ஆவியானவர் கர்த்தராய் அங்கீகரிக்கப்பட்டு, கனம் பண்ணப்படுகிறாரோ, அங்கே விடுதலையுண்டு."

பெந்தேகொஸ்தே கிறிஸ்தவர்களுக்கு (நானும் அவர்களில் ஒருவன்தான்) எப்பொழுதுமே விடுதலையைக் குறித்து இப்படிப்பட்ட விசித்திரமான, விநோதமான எண்ணங்களெல்லாம் பெரும்பாலும் உண்டு. அதாவது, ஞாயிற்றுக்கிழமை மாலை **6:45** மணி ஆராதனையை, குதித்து நடனமாடி துவங்காவிட்டால், நமக்கு விடுதலையில்லை என்பது அவர்களது எண்ணம். அல்லது, நாம் எல்லோரும் நம் கைகளைத் தட்டி பாடல்களைப் பாடாவிட்டால், நமக்கு விடுதலையில்லை என்று அவர்கள் நினைக்கிறார்கள். சில பிரசங்கியார்கள் தங்கள் கால்களை ஓங்கி மேடையில் மிதித்து, உரத்த சத்தமாய் கத்தி பிரசங்கிக்கா விட்டால், தங்களுக்கு விடுதலையில்லை என்று அவர்கள் நினைக்கிறார்கள். உண்மைதான், சில பிரசங்கியார்கள் தங்கள் கால்களை மேடையில் ஓங்கி மிதித்து, கூச்சல் போட்டு பிரசங்கிக்கும்போதுதான், அவர்களுக்கே அது விடுதலையாக இருக்கிறது. ஆனால் என்னைப் பொறுத்தவரை, அப்படிச் செய்வது விடுதலையை உண்டாக்காது என்றுதான் நான் சொல்வேன்.

விடுதலை என்பது சபை ஆராதனையில் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் பின்பற்றப்படும் ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சி நிரல் அல்ல. அல்லது, குறிப்பிட்ட சில செயல்களை ஒன்றன் பின் ஒன்றாகச் செய்வதன் மூலம் விடுதலை

உண்டாவதுமில்லை. அது, ஒன்றைச் செய்யும்படி பரிசுத்த ஆவியானவர் உங்களை ஏவி நடத்துகிறாரா அல்லது மதப் பாரம்பரியத்தின் ஒரு கடமையாக அதைச் செய்தே ஆக வேண்டும் என்ற கட்டாயத்தினால் நீங்கள் அதைச் செய்கிறீர்களா என்பதைப் பொறுத்திருக்கிறது. மதப் பாரம்பரியங்கள் அடிமைத்தனத்தை மட்டுமே உருவாக்குகின்றன.

பிதாவாகிய தேவனிடத்திலும், குமாரனிடத்திலும் நாம் காண்பிக்கும் அதே பயபக்தியை பரிசுத்த ஆவியானவரிடத்திலும் நாம் காண்பிக்க வேண்டும். பாருங்கள், பரிசுத்த ஆவியானவர் மூலமாக தேவனிடத்தில் சேரக்கூடிய அந்த ஒரு வழியைத் தவிர வேறு ஒரு வழியும் நமக்கு இல்லை. காரணம், தேவனுடைய திரித்துவத்தில் ஒரு கோட்பாடு உண்டு. தேவனை நாம் அணுக வேண்டுமென்றால், தேவனால் அனுப்பப்பட்ட அவருடைய பிரதிநிதியை நாம் கனம் பண்ணியே ஆக வேண்டும். பிதாவாகிய தேவன் குமாரனை அனுப்பும்போது, “இதுமுதல், குமாரன் மூலமாக அல்லாமல் ஒருவனும் என்னிடம் வர முடியாது. நீங்கள் என்னுடைய பிரதிநிதியை தவிர்த்து விட்டு, வேறு எவ்வழியிலும் என்னிடம் வர முடியாது. காரணம், ஒவ்வொரு சூழ்நிலையிலும், நான் அனுப்பின என்னுடைய பிரதிநிதியை கனம் பண்ணுகிறேன்,” என்று சொன்னார்.

இயேசு இந்த பூமியில் தன்னுடைய வேலையை முடித்த பிறகு, அவர் தன்னுடைய பிதாவிடம் திரும்பிச் சென்றார். நான் இதை இவ்வாறு புரிந்து கொள்கிறேன் (இதை ஒரு வாக்கியத்தில் விளக்கிச் சொல்லி விட முடியாது. அந்த அளவிற்கு இது மிக மிக அருமையான ஒரு இறையியல் சத்தியம்). பிதாவும், குமாரனும் இணைந்து பரிசுத்த ஆவியானவரை அனுப்பினார்கள். இப்பொழுது அதே கோட்பாடு இங்கும் பொருந்தும். பரிசுத்த ஆவியானவர் மூலமாக அல்லாமல், வேறு எவ்வழியிலும் நாம் பிதாவிடமும் குமாரனிடமும் சென்று சேர முடியாது. அவரைத் தவிர்த்து விட்டு, நம்மால் செல்ல முடியாது. எபேசியர் 2-ம் அதிகாரத்தில், பவுல் சொல்கிறார், “அந்தப்படியே நாம் இருதிறத்தாரும் (யூதரும், புறஜாதியாரும்), ஒரே ஆவியினாலே பிதாவினிடத்தில் சேரும் சிலாக்கியத்தை அவர்மூலமாய்ப் பெற்றிருக்கிறோம்” (எபேசியர் 2:18).

குமாரனாகிய இயேசுவின் வழியாய் நாம் பிதாவினிடத்தில் சேருகிறோம் என்ற சத்தியத்தின் மீதுதான் அநேக கிறிஸ்தவர்கள் தங்கள் கவனத்தைப்

பதித்திருக்கிறார்கள். அது அப்படியே உண்மைதான். ஆனால் அது முழுமையான, பரிபூரண சத்தியமாகாது. பரிசுத்த ஆவியானவர் மூலமாக, குமாரனாகிய இயேசுவின் வழியாய் பிதாவைச் சென்றடையும் வழி நமக்கு உண்டாயிருக்கிறது என்பதுதான் முழுமையான சத்தியமாயிருக்கிறது. அது போலவே, பரிசுத்த ஆவியானவர் மூலமாக, நாம் குமாரனுக்குள் வாசம் பண்ணும்போது, பிதாவாகிய தேவனும் நமக்குள் வந்து வாசம் பண்ணுகிறார். நாம் தேவனிடத்தில் செல்வதாக இருந்தாலும், அல்லது தேவன் நம்மிடத்தில் வருவதாக இருந்தாலும், இந்த இரு திசையிலும் ஆவியானவரின் பங்கு இன்றியமையாத, அத்தியாவசியமான ஒன்றாக இருக்கிறது. இந்த சமன்பாட்டிலிருந்து, பரிசுத்த ஆவியானவரை நாம் நீக்கி விடுவோமென்றால், பிறகு நாம் தேவனிடத்தில் சேருவதற்கோ, தேவன் நம்மிடத்தில் சேருவதற்கோ வழி இல்லாது போய் விடும். எல்லாவற்றிற்கும் நாம் பரிசுத்த ஆவியானவரையே முற்றிலுமாய் சார்ந்திருக்கிறோம்.

புறாவும், தேவ ஆட்டுக்குட்டியும்

ஒரு நபரிடத்தில் பரிசுத்த ஆவியானவர் எதை விரும்புகிறார் என்பதைக் குறித்த ஒரு அழகான படம் வேத வசனத்தில் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதை அவர் ஒரே ஒரு மனிதனிடம்தான் கண்டார்: அவர்தான் இயேசு.

> *பின்னும் யோவான் சாட்சியாகச் சொன்னது: ஆவியானவர் புறாவைப் போல வானத்திலிருந்திறங்கி இவர் மேல் தங்கினதைக் கண்டேன். நானும் இவரை அறியாதிருந்தேன்; ஆனாலும், ஜலத்தினால் ஞானஸ்நானம் கொடுக்கும் படி என்னை அனுப்பினவர்: ஆவியானவர் இறங்கி யார் மேல் தங்குவதை நீ காண்பாயோ, அவரே பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் கொடுக்கிறவர் என்று எனக்குச் சொல்லியிருந்தார். அந்தப்படியே, நான் கண்டு, இவரே தேவனுடைய குமாரன் என்று சாட்சி கொடுத்து வருகிறேன் என்றான்.*
>
> *யோவான் 1:32-34*

பரிசுத்த ஆவியானவர் புறா வடிவில் இயேசுவின் மேல் இறங்கி தங்கி விடுவதே, இயேசுதான் மேசியா என்பதை உறுதிப்படுத்தும் ஒரு அடையாளமாக இருந்தது. ஆனால் அது இங்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த உண்மையாக இருக்கவில்லை. மெய்யாகவே மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு உண்மை இங்கு என்னவென்றால், பரிசுத்த ஆவியானவர் அவருக்குள் *தொடர்ந்து தங்கியிருந்தார்* என்பதுதான். பரிசுத்த ஆவியானவர் நம்மில் அநேகர் மீது இறங்கியிருக்கிறார். ஆனால் நாம் பேசின, செய்த அநேக காரியங்கள் அவரை பயமுறுத்தி வெளியே அனுப்பி விட்டது. இயேசு ஒருபோதும் அந்த புறாவை பயமுறுத்தி விரட்டிவிடவில்லை.

இப்பொழுது, யோவான் ஸ்நானகன், இயேசுவை அறிமுகம் செய்யும் அந்தக் காட்சியைப் பாருங்கள். “மறுநாளிலே யோவான் (ஸ்நானகன்) இயேசுவை தன்னிடத்தில் வரக்கண்டு: இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி,” என்றான் (யோவான் 1:29). யோவான் இயேசுவை ஒரு ஆட்டுக்குட்டியாக படம்பிடித்துக் காண்பித்தான்.

இவ்வசனங்களில், தேவனுடைய திரித்துவத்தின் இரண்டு நபர்களை நாம் பார்க்கிறோம். குமாரனும், ஆவியானவரும் இங்கே விலங்குகளின் சிருஷ்டிப்பிலிருந்து ஒரு குறிப்பிட்ட வகை விலங்கைப் போல படம் பிடித்துக் காண்பிக்கப்பட்டிருக்கிறார்கள். இயேசு இங்கு ஒரு ஆட்டுக்குட்டியாக படம்பிடித்துக் காண்பிக்கப்பட்டிருக்கிறார். மேலேயிருந்து இறங்கின பரிசுத்த ஆவியானவர் ஒரு புறாவாக படம் பிடித்துக் காண்பிக்கப்பட்டிருக்கிறார்.

இது இந்த சத்தியத்தை அழகாக விவரித்து சித்தரிக்கும் விதமாக இருக்கிறது. புறாவாக சித்தரிக்கப்பட்ட பரிசுத்த ஆவியானவர் யாரைத் தேடுகிறார்? ஆட்டுக்குட்டியானவரின் சுபாவத்தை அவர் தேடிக் கொண்டிருக்கிறார். ஆட்டுக்குட்டியானவரின் சுபாவத்தை அவர் எங்கே கண்டுபிடிக்கிறாரோ, அங்கே அவர் இறங்குவது மட்டுமல்ல, அங்கேயே அவர் தங்கியும் விடுகிறார். இங்கு சித்தரிக்கப்பட்டிருக்கும் புறா, மிகவும் அழகான, எந்தக் கலப்புமில்லாத, சுத்த வெண்மையான ஒரு பறவையாய் இருக்கிறது என்றுதான் நான் விசுவாசிக்கிறேன். இந்த பறவையைக் குறித்து இன்னொரு சுவாரசியமான உண்மை இருக்கிறது. அது என்னவென்றால், ஒரு பொருளை தன்னுடைய இரண்டு கண்களையும் ஒருங்கிணைத்து கூர்ந்து நோக்கிப் பார்க்கும் திறன் கொண்ட வெகு சில பறவைகளில்

இதுவும் ஒன்றாய் இருக்கிறது. மொத்தத்தில், இது ஒரு மென்மையான பறவை. இதை எளிதாக பயமுறுத்தி விரட்டி விடலாம். நாம் பரிசுத்த ஆவியானவருக்கு உணர்வுள்ளவர்களாய் இருக்க வேண்டும் என்பதையே இவை அனைத்தும் நமக்கு காண்பிக்கிறது.

பல ஆண்டுகளுக்கு முன், 1946-ம் வருடம், நாங்கள் எருசலேமில் வசித்து வந்த வீட்டில் ஒரு சிறுவர் கூட்டத்தில், நான் போதித்துக் கொண்டிருந்தேன். முதல் தளத்தில், ஒரு பெரிய வரவேற்பறையில் இந்த கூட்டங்கள் நடைப்பெற்றன. வராந்தாவிற்குச் செல்லும் வழியிலிருந்த ஒரு கதவிற்கு முன்பாக பிரசங்கமேடை இருந்தது. அந்த கதவிற்கு என் முதுகைக் காண்பித்தபடி, பிரசங்கமேடைக்குப் பின்னால் நான் நின்று கொண்டிருந்தேன். எனக்குப் பின்னால் இருந்த அந்த வராந்தாவில், நாங்கள் ஒரு வட்ட மேஜையை வைத்திருந்தோம். ஒரு அரேபியப் பெண்ணின் கருப்பு சால்வையை அதன் மேல் விரிப்பாக நாங்கள் பயன்படுத்தியிருந்தோம். நான் அன்று அந்த சிறுபிள்ளைகளுக்கு பரிசுத்த ஆவியானவரைக் குறித்து கற்றுக் கொடுத்துக் கொண்டிருந்தேன். பரிசுத்த ஆவியானவர் ஒரு புறாவைப் போல இருக்கிறார் என்றும், அவர் நம்மோடு தங்கியிருக்க வேண்டுமென்று நாம் விரும்பினால், அவரை பயமுறுத்தி விரட்டி விடக் கூடிய எந்த ஒரு காரியத்தையும், நாம் பேசவோ செய்யவோ கூடாதென்று நான் அவர்களிடத்தில் வலியுறுத்திச் சொல்லிக் கொண்டிருந்தேன்.

நான் இவ்வாறாகக் கற்றுக் கொடுக்கையில், பிள்ளைகளின் கவனம் என் மீது ஆணியடித்தாற்போல் உறுதியாய் பதிந்திருந்ததை நான் கவனித்தேன். அவர்கள் அப்படியே எந்த சலசலப்புமில்லாமல் அசைவற்று ஸ்தம்பித்துப் போய் உட்கார்ந்திருந்தார்கள். அவர்களுடைய கண்கள் அகல விரிந்திருந்தது. அவர்கள் என் திசையை நோக்கிக் கூர்மையாகக் கவனித்துக் கொண்டிருந்தனர். சிறுபிள்ளைகளின் கூட்டத்திலிருந்து, இப்படியொரு கவனத்தை நான் ஒருபோதும் பார்த்ததில்லை. எனக்குத் தெரியாமலே, ஒரு அழகிய வெண்புறா அந்த கருப்பு நிற மேஜை விரிப்பின் மத்தியில் இறங்கி நின்று கொண்டிருந்தது. உண்மையில், அந்த கருப்பு நிற சால்வையின் பின்னணியில், அந்த வெண்புறாவைப் பார்க்கும்போது அது திடீரென்று நிகழ்ந்த, உள்ளம் கொள்ளை கொள்கிற ஒரு காட்சியாக இருந்தது. சிறுபிள்ளைகள் மிகவும் உன்னிப்பாக அதைக் கவனித்துக் கொண்டிருந்தனர்.

காரணம், எதையாவது செய்து அந்த புறாவை விரட்டி விடுவோமோ என்ற பயத்தில், அவர்கள் எந்த சலசலப்புமுமில்லாமல், மிகவும் அமைதலாக உட்கார்ந்திருந்தனர்.

என்னுடைய இந்த பிரசங்கத்தை கர்த்தர்தாமே தெரிந்து கொண்டு, அதை அவர் தெளிவுபட விளக்கிக் காண்பித்தார். அந்த சிறுபிள்ளைகளுக்குள் அப்படியொரு ஆழ்ந்த ஈடுபாடு கொண்ட கவனத்தை நான் பார்த்தபடியால், அந்த சத்தியம் அப்படியே என் இருதயத்தினுள் பதிந்து விட்டது. *பரிசுத்த ஆவியானவர் அப்படிப்பட்டவர் என்பதை நாம் புரிந்து கொள்ளும்போது மட்டுமே, அவரை குறித்த நம்முடைய மனநிலையிலும், அவரோடு நமக்கிருக்கும் உறவிலும் நாம் மிகவும் ஜாக்கிரதை உணர்வுள்ளவர்களாய் இருப்போம்.* இதை நான் அப்பொழுது எனக்குள் சிந்தித்துப் பார்த்தேன்.

ஆட்டுக்குட்டியானவருடைய சுபாவத்தின் தன்மைகள்

இப்பொழுது நாம் நம்முடைய கவனத்தை ஆட்டுக்குட்டியானவருடைய சுபாவத்தின் பக்கமாய் திருப்புவோம். வேதாகமத்தில், ஒரு ஆட்டுக்குட்டி, பரிசுத்த ஆவியானவரை கவர்ந்து இழுக்கும் குறிப்பிட்ட சில குணாதிசயங்களை உடையதாயிருக்கிறது: தூய்மை, சாந்தம் மற்றும் பலிபீடத்தில் ஒரு பலியாக வைக்கப்பட்ட வாழ்க்கை. பரிசுத்த ஆவியானவர் எப்பொழுதும் உங்களோடு கூட இருக்க வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்களா**?** அப்படியானால் நீங்கள் பண்படுத்தி வளர்க்க வேண்டிய குணாதிசயங்கள்: தூய்மை, சாந்தம் மற்றும் உங்களுக்கென்று சுயமாய் வாழாத ஒரு வாழ்க்கை அதாவது, கிறிஸ்துவுக்காகவும் அவருடைய சரீரமாகிய சபைக்காகவும் தியாகமாய் அர்ப்பணிக்கப்பட்ட ஒரு வாழ்க்கை. அப்பொழுது, அந்த புறாவாகிய பரிசுத்த ஆவியானவர் உங்களுக்குள் தங்கி விடுவார். நீங்களும் அவரை பயமுறுத்தி, வெளியே துரத்தி விட மாட்டீர்கள்.

இயேசு தம்முடைய முழு ஊழியத்தின் வெற்றியும் பரிசுத்த ஆவியானவரின் கிரியைகளால்தான் நடந்தது என்பதை வெளிப்படுத்தினார். அவருடைய ஊழியத்தில் நடந்த மகத்தான அற்புதங்களுக்கு அவர் ஒருபோதும் புகழ்ச்சியை எடுத்துக் கொள்ளவில்லை. இயேசு தம்முடைய சொந்த ஊராகிய நாசரேத்தின் தேவாலயத்தில் இருந்தபோது, வாசிக்கும்படி

அவரிடத்தில் ஏசாயா தீர்க்கதரிசியின் புத்தகம் கொடுக்கப்பட்டது:

> *அப்பொழுது, ஏசாயா தீர்க்கதரிசியின் புஸ்தகத்தை விரித்த போது, "கர்த்தருடைய ஆவியானவர் என் மேலிருக்கிறார். தரித்திரருக்கு சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி, என்னை அபிஷேகம் பண்ணினார்; இருதயம் நருங்குண்டவர்களைக் குணமாக்கவும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், குருடருக்குப் பார்வையையும் பிரசித்தப்படுத்தவும், நொறுங்குண்டவர்களை விடுதலையாக்கவும், கர்த்தருடைய அநுக்கிரக வருஷத்தைப் பிரசித்தப்படுத்தவும், என்னை அனுப்பினார்," என்று எழுதியிருக்கிற இடத்தை அவர் கண்டு..."*
> *லூக்கா 4:17-19*

நம்முடைய அழைப்பில் நாம் முன்னேறும்போது, அந்த செய்தியையும், அந்த ஊழியத்தையும் நாம் தொடர விரும்பினால், ஆண்டவராகிய இயேசு இருந்த அதே நிலையின் கீழ் தான் நாமும் இருக்கிறோம். அது பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தினால் மட்டுமே சாத்தியமாகிறது. ஜான் வெஸ்லி அந்த வார்த்தைகளை தன்னுடைய பத்திரிக்கைகளில் ஒன்றில், மேற்கோள் காட்டி எழுதியிருந்தார். அவர் அதில் இவ்வாறு சொல்லியிருந்தார், ''சுவிசேஷத்தை அறிவிக்கும்படி மெய்யாகவே அழைக்கப்பட்டிருக்கிற ஒவ்வொருவரைக் குறித்தும் இந்த வார்த்தைகள் உண்மையாயிருக்கிறது என்றுதான் நான் நம்புகிறேன்.'' பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகமில்லாமல், நமக்கு வெற்றி உண்டாகக்கூடிய வழி வேறு எதுவும் இல்லை.

எந்த ஒரு அழைப்பின் வெற்றியும், பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தினுடைய அளவுக்குத் தக்கதாக இருக்கிறது. பரிசுத்த ஆவியானவர் இல்லாமல், இயேசுவாலேயே அதைச் செய்ய முடியவில்லை என்றால், நீங்களும் நானும் அதை செய்ய முடியாது என்பதை நிச்சயமாக அறிந்து கொள்ளுங்கள்.

பவுல் எழுதுகிறார்:

> *அன்றியும் நீங்கள் மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரையாகப் பெற்ற தேவனுடைய பரிசுத்த ஆவியைத்*

துக்கப்படுத்தாதிருங்கள். (புறாவாகிய பரிசுத்த ஆவியானவரை பயமுறுத்தி, விரட்டி விடாதீர்கள். அதுமட்டுமல்ல, புறாவை விரட்டக்கூடிய சில காரியங்களை அவர் பட்டியலிடுகிறார்:) *சகலவிதமான கசப்பும், கோபமும், மூர்க்கமும், கூக்குரலும், தூஷணமும், மற்ற எந்தத் துர்க்குணமும் உங்களை விட்டு நீங்கக் கடவது.*

எபேசியர் 4:30-31

அந்தப் புறாவாகிய பரிசுத்த ஆவியானவர் எதிர்பார்க்கும் சில குணாதிசயங்களைக் கூறி பவுல் இங்கு நிறைவு செய்கிறார்: "ஒருவருக்கொருவர் தயவாயும் மன உருக்கமாயும் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்ததுபோல நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்" (வசனம் 32). இந்தப் பண்புகளில் வளருவதென்பது நம்முடைய பொறுப்பாய் இருக்கிறது. இவ்விதத்தில்தான் பரிசுத்த ஆவியானவரை நம் பக்கமாய் ஈர்த்து, அவர் நம்மில் எப்பொழுதும் தங்கியிருக்கும்படி நாம் செய்ய முடியும்.

பின் திரும்பிப் போகாதீர்கள்

அப்படியானால், பரிசுத்த ஆவியானவரின் முதன்மையான வேலை என்ன? பரிசுத்த ஆவியானவரின் மூலமாகவே நாம் கிறிஸ்துவுக்குள் ஒன்றிணைக்கப்படுகிறோம். கலாத்தியர் 5:18 இப்படியாக குறிப்பிடுகிறது: "ஆவியானவரால் நடத்தப்படுவீர்களானால், நீங்கள் நியாயப்பிரமாணத்துக்கு கீழ்ப்பட்டவர்களல்ல." நம்முடைய விழுந்து போன ஜென்ம சுபாவத்தில், நாம் நியாயப்பிரமணத்திற்கு கீழ் இருந்தோம். நம்முடைய விழுந்து போன ஜென்ம சுபாவம் அவருக்குள் மரித்ததாக எண்ணப்படும்படி, இயேசு நம்முடைய விழுந்துபோன ஜென்ம சுபாவத்தில் மரித்தார். அவ்வாறு நாம் மரித்ததாக எண்ணப்படும்போது, அதன் விளைவாக உயிர்தெழுந்த கிறிஸ்துவோடு நாம் ஒன்றிணைக்கப்பட முடியும். கிறிஸ்துவுக்குள் இவ்வாறு ஒன்றிணைவதை பவுல் திருமண உறவோடு ஒப்பிட்டுச் சொல்கிறார். இது ஒருவேளை மத வைராக்கியம் பிடித்தவர்களை அலறச் செய்யலாம். ஆனால் வேதாகமம்,

இயேசுவோடு நமக்கிருக்கும் உறவை வருணிக்கும்படி, இது போன்ற முனைப்பு மிக்க, ஆழமான அன்பை வெளிப்படுத்துகிற வார்த்தைகளை பயன்படுத்துவதற்குத் தயங்குவதே இல்லை.

உங்களுடைய அழைப்பில் உங்களை முன் நடத்திச் செல்லும்படி, சட்டங்களையோ அல்லது மத அமைப்பையோ சார்ந்திருக்காதீர்கள். இப்படிப்பட்ட அமைப்புகளோடு பரிசுத்த ஆவியானவர் தன்னுடைய ஸ்தானத்தைப் பகிர்ந்து கொள்ள மாட்டார். ஈசாக்கு வரும்போது, அங்கே இஸ்மவேல் வெளியேறித்தான் ஆக வேண்டும். அவர்கள் இருவரும் ஒரே வீட்டில் தங்கியிருக்க முடியாது.

இரட்சண்ய சேனையை பிரான்ஸ் நாட்டிற்கு கொண்டு வந்த வில்லியம் பூத்தின் மகள், கேட் பூத்-க்ளிப்போர்ன், ஒரு முறை இவ்வாறாகக் கூறினார்: “கிறிஸ்து நம் மீது ஆழமாய் அன்புகூருகிறார். அதேபோல, நாமும் அவரை ஆழமாய் அன்புகூர வேண்டும் என்று அவர் விரும்புகிறார்.” நம்மில் அநேகருக்கு இயேசுவிடம் ஒரு வைராக்கியமான, ஆழமான அர்ப்பணிப்பு தேவையாயிருக்கிறது. அதை நாம் பரிசுத்த ஆவியானவர் மூலமாக மட்டுமே பெற முடியும். அவர்தான் உயிர்தெழுந்த கிறிஸ்துவுடன் அந்த திருமண உறவை நமக்கு ஏற்படுத்தி தருவார்.

கிறிஸ்துவோடு ஒன்றிணைந்திருக்கும் நம்முடைய உறவு, ஆராதனையினால் நிறைவடைகிறது. பரிசுத்த ஆவியானவர் மூலமாய், உயிர்த்தெழுந்த கிறிஸ்துவை நாம் ஆராதிக்கும்போது, நாம் அவருடன் ஒன்றிணைகிறோம். “வேசியோடு இசைந்திருக்கிறவன், அவளுடனே ஒரே சரீரமாயிருக்கிறானென்று அறியீர்களா?........ அப்படியே கர்த்தரோடு இசைந்திருக்கிறவனும் அவருடனே ஒரே ஆவியாயிருக்கிறான்” என்று பவுல் கூறுகிறார் (1 கொரிந்தியர் 6:16-17). ஒரு நபருடைய சரீரம் எப்படி ஒரு வேசியோடு இசைந்திருக்க முடியுமோ, அப்படியே பரிசுத்த ஆவியானவர் மூலமாய், ஒரு விசுவாசியினுடைய ஆவி, தேவனுடைய ஆவியுடன் ஒன்றாய் இசைந்திருக்க முடியும். தேவன் தம்மை ஆவியோடும் உண்மையோடும் தொழுது கொள்ளுகிறவர்களை தேடுகிறார்.

இது நம்முடைய வாழ்க்கையில், நாம் வாழும் விதத்தில், நாம் சிந்திக்கும் விதத்தில் உண்டாக வர வேண்டிய மாற்றத்தின் தேவையை நமக்கு உணர்த்துகிறது. இப்பொழுது பரிசுத்த ஆவியானவரின் உதவியோடு,

மெய்யாகவே நாம் எவ்வாறு இருக்கிறோம் என்பதை நாம் பார்க்க ஆரம்பிக்க முடியும், அதோடு நம்முடைய விடுதலைக்கு நேராக நாம் எடுத்து வைக்க வேண்டிய அடிகளை நாம் எடுத்து வைக்கவும் முடியும்.

9

உங்கள் “சுயம்” ஒத்துழைக்க வேண்டும்

நிர்ப்பந்தமான மனுஷன் நான்! இந்த மரண சரீரத்தினின்று யார் என்னை விடுதலையாக்குவார்? நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாய் தேவனை ஸ்தோத்தரிக்கிறேன். (தேவனுக்கு நன்றி! நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாக அந்த விடுதலை உண்டாயிருக்கிறது. அவர் என்னை விடுதலையாக்கியிருக்கிறார்.)

ரோமர் 7:24-25

புதிய ஏற்பாட்டின் முழு வெளிப்பாட்டிலும், பெயர் குறிப்பிடப்படாத இரண்டு நபர்கள், தனித்துவம் வாய்ந்த முக்கியத்துவமுடைய ஒரு இடத்தைப் பெற்றிருக்கிறார்கள். இவ்விரண்டு நபர்களுடைய ஆரம்பம், அவர்களுடைய சுபாவம் மற்றும் அவர்களுடைய முடிவைக் குறித்து நீங்கள் முழுமையாக, நன்கு அறிந்து பழக்கப்பட்டிராதவரை, புதிய ஏற்பாட்டின் சுவிசேஷ செய்தியையும், தேவனுடைய ராஜ்யத்தில் உங்கள் அழைப்பு மற்றும் வளர்ச்சியில் அதின் பயன்பாட்டையும், நீங்கள் ஒருபோதும் புரிந்து கொள்ளவே முடியாது என்று சொன்னால், உண்மையில் அது சரியான ஒரு கூற்றாகத்தான் இருக்கும். அவர்கள் யார்? வேதாகமத்தின் அழகான, மிகவும் பழைமையான கிங் ஜேம்ஸ் ஆங்கில மொழிபெயர்ப்பில், இவ்விரண்டு நபர்களும், *பழைய மனிதன் (the old man)* மற்றும் *புதிய மனிதன் (the new man)* என்றழைக்கப்படுகின்றனர். வேதாகமத்தின் தற்கால மொழிபெயர்ப்புகளில், அவர்கள் *பழைய சுபாவம் (the old self)* மற்றும் *புதிய சுபாவம் (the new self)* என்று அழைக்கப்படுகின்றனர்.

எபேசு சபைக்கு பவுல் எழுதின கடிதத்தில், அவர் இவ்வாறாகக் கூறினார்: ‘‘நீங்களோ இவ்விதமாய் கிறிஸ்துவைக் கற்றுக் கொள்ளவில்லை. இயேசுவினிடத்திலுள்ள சத்தியத்தின்படியே, நீங்கள் அவரிடத்தில் கேட்டறிந்து அவரால் போதிக்கப்பட்டீர்களே” (எபேசியர் **4:20-21**). பவுல் இதை அர்ப்பணிப்பு உணர்வுள்ள கிறிஸ்தவர்களுக்கு எழுதினார் என்பதை கவனிக்க வேண்டியது இங்கு முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக இருக்கிறது. இருந்தாலும், இயேசுவுக்குள் அவர்களுடைய ஸ்தானம் அல்லது நிலை என்ன என்பதைக் குறித்து அவர்கள் கேள்விப்பட வேண்டும் என்று தேவன் விரும்புகிற அந்த சத்தியத்தை அவர்கள் ஒருவேளை இன்னும் கேள்விப்படாமல் இருந்திருக்கக்கூடும் என்ற சாத்தியக்கூறை பவுல் இங்கு விட்டு வைக்கிறார். இன்றைக்கு பெரும்பாலான நேர்மையான கிறிஸ்தவர்களைக் குறித்து இது உண்மையாய் இருக்கிறது. அவர்கள் இன்னும் தங்களுடைய பழைய சுபாவம் மற்றும் புதிய சுபாவத்தை குறித்த சத்தியத்தைக் கேள்விப்படாமல் இருக்கிறார்கள்.

> *அந்தப்படி, முந்தின நடக்கைக்குரிய மோசம் போக்கும் இச்சைகளாலே கெட்டுப் போகிற பழைய மனுஷனை (பழைய சுபாவத்தை) நீங்கள் களைந்து போட்டு, உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியுள்ளவர்களாகி மெய்யான நீதியிலும், பரிசுத்தத்திலும், தேவனுடைய சாயலாகச் சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனை (புதிய சுபாவத்தை) தரித்துக் கொள்ளுங்கள்.*
> *எபேசியர் 4:22-24*

இவ்விரண்டு மனுஷர்களை அல்லது சுபாவங்களைக் குறித்து நாம் மிகவும் குறிப்பான ஒரு நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்று வேதாகமம் நிபந்தனையிடுகிறது:

1. பழைய மனிதனை *களைந்து போடுங்கள்*
2. புதிய மனிதனை *தரித்துக் கொள்ளுங்கள்*

இதை நாம் செய்ய வேண்டுமானால், முதலில் நாம் பழைய மற்றும் புதிய சுபாவத்தை வேறுபடுத்தி இனம் கண்டறியக் கற்றுக் கொள்ள வேண்டும் என்பது இங்கு தெள்ளத்தெளிவாகத் தெரிகிறது. பழைய மனிதனின் ஆரம்பம் மற்றும் சுபாவத்தைக் குறித்து சுருக்கமாகச் சொல்கிற பவுலின்

வார்த்தைகளிலிருந்து நாம் ஆரம்பிக்கலாம்: "முந்தின நடக்கைக்குரிய மோசம் போக்கும் இச்சைகளாலே கெட்டுப் போகிற பழைய மனுஷன்........"

இந்த வசனத்தில் காணப்படும் *கெட்டுப் போகிற (corruption)*, *இச்சைகள் (lust)* மற்றும் *மோசம் போக்குகிற (deceit)* என்ற வார்த்தைகள் மிகவும் முக்கியமான மூன்று திறவுகோல் வார்த்தைகளாக இருக்கின்றன. *மோசம் போக்குகிற (deceit)* என்ற வார்த்தையிலிருந்து நாம் துவங்குவோம். பழைய சுபாவம், உண்மையற்ற ஒன்றை உண்மையான ஒன்றாக சாத்தானால் நம்ப வைக்கப்பட்டு, வஞ்சித்து ஏமாற்றப்பட்டதன் விளைவாக உண்டான ஒன்றாகும். இன்னும் சுருக்கமாக சொன்னால், சாத்தானுடைய பொய்க்கு மனிதன் செவி கொடுத்து, அதன்படி செயல்பட்டதன் விளைவாக உண்டானதுதான் பழைய சுபாவம்.

அந்தப் பொய்யின் முழு வடிவத்தையும் புரிந்து கொள்ளும்படி, நாம் மனிதனுடைய சிருஷ்டிப்பு மற்றும் மனித சரித்திரத்தின் ஆரம்பத்திற்குச் செல்ல வேண்டும். ஆதாமும் ஏவாளும் சிருஷ்டிக்கப்பட்ட பின்பு, தோட்டத்திலிருந்த நன்மை தீமை அறியத்தக்க மரத்தின் கனியைப் புசிக்க வேண்டாம் என்று தேவன் அவர்களை எச்சரித்திருந்தார். இதை உங்களுடைய நினைவிற்குக் கொண்டு வாருங்கள். விளையாட்டாக எடுத்துக் கொள்ள முடியாத, மிகவும் உறுதியான ஒரு கட்டளையை தேவன் அவர்களுக்குக் கொடுத்திருந்தார்: ''அதை நீ சாப்பிடும் நாளில் சாகவே சாவாய்'' (ஆதியாகமம் 2:17).

ஆதியாகமத்தின் அடுத்த அதிகாரத்தில், சாத்தான் சர்ப்பத்தின் வடிவில், ஸ்திரீயாகிய ஏவாளிடம் வந்து, அவளை சோதித்தான் என்று நாம் வாசிக்கிறோம். அவனுடைய சோதனையின் அடிப்படை என்னவென்றால், தேவனுடைய எச்சரிப்பை அவள் அலட்சியப்படுத்தி, புறந்தள்ளி விட வேண்டும், அவளுடைய கணவனிடத்திலும், அவளிடத்திலும் தேவன் சொன்ன வார்த்தைக்கு அவள் கீழ்படியாமல் போகும்படி செய்து விட வேண்டும் என்பதுதான். இதைச் செய்யும்படி ஏவாளை தூண்டுவதற்காக சாத்தான் தன்னுடைய பொய்யை, *பொய்யை* அங்கே முன்னே வைத்தான்.

"நீங்கள் சாகவே சாவீர்கள்," என்று தேவன் கூறியிருந்தார்.

"நீங்கள் சாகவே சாவதில்லை!" என்று சாத்தான் கூறினான் (ஆதியாகமம் 3:4).

இது ஒரு நேரடியான பொய்! தேவனுடைய சத்தியத்தை மறுதலித்து, இந்தப் பொய்க்கு இடம் கொடுத்தபோதுதான் பழைய மனிதன் பிறந்தான். அப்படியானால், பழைய சுபாவம், வஞ்சிக்கப்பட்டதன் விளைவாக, சாத்தானுடைய பொய்யை நம்பி செயல்பட்டதன் விளைவாக உண்டானது. வஞ்சித்து, மோசம்போக்குவதே மனுக்குலத்திற்கு விரோதமான சாத்தானின் பிரதான செயல்பாடு என்பதை மனதில் வைத்துக் கொள்ளுங்கள். வெளிப்படுத்தல் **12:9**-ல் சாத்தான் இவ்வாறு அழைக்கப்படுகிறான்: "உலகமனைத்தையும் மோசம் போக்குகிற பிசாசு என்றும் சாத்தான் என்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய பெரிய வலுசர்ப்பம்...."

வஞ்சனைக்குட்பட்டு மோசம்போன நிலை, ஒரு பேரழிவின் கிரியையை ஆரம்பித்து, அது படிப்படியாக தொடர்ந்து நடக்கும்படி செய்து விடுகிறது. யாக்கோபின் நிருபத்தில், வஞ்சிக்கப்படுதல் *இச்சையை* உண்டாக்குகிறது என்று கூறப்பட்டுள்ளது. இச்சையென்பது தாறுமாறான, அசுத்தமான, தேவனுக்கு விரோதமாக முரட்டாட்டம் பண்ணுகிற ஒரு தவறான, நெறிபிறழ்ந்த விருப்பமாகும். இச்சையென்பது, தேவனுடைய விருப்பத்திற்கு எதிரான, முரண்பட்ட ஒரு விருப்பமாகும். இவ்விருப்பத்திற்கு இடம் கொடுப்பவருடைய நல்வாழ்வை சீரழித்து விடக்கூடிய ஒன்றாய் இது இருக்கிறது. இச்சை தொடர்ந்து பாவத்தை உருவாக்குகிறது. பாவம் மரணத்தை உருவாக்குகிறது.

> *சோதிக்கப்படுகிற எவனும், நான் தேவனால் சோதிக்கப்படுகிறேன் என்று சொல்லாதிருப்பானாக. தேவன் பொல்லாங்கினால், சோதிக்கப்படுகிறவரல்ல, ஒருவனையும் அவர் சோதிக்கிறவருமல்ல, அவனவன் தன் தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு, சிக்குண்டு சோதிக்கப்படுகிறான்."*
>
> *யாக்கோபு 1:13-15*

பழைய மனிதன் தன்னுடைய ஆவிக்குரிய வாழ்க்கையிலும், தன்னுடைய தனிப்பட்ட ஒழுக்க வாழ்க்கையிலும், தன்னுடைய சரீரப்பிரகாரமான வாழ்க்கையிலும் என தன்னுடைய தனிப்பட்ட எல்லா பகுதிகளிலும் மகா மோசமான சீர்கேட்டை அடைந்து கெட்டுப் போனவனாக இருக்கிறான். உண்மையை சொன்னால், பழைய மனிதன் சாத்தானின் பிள்ளையாகவே

இருக்கிறான். ஆதியாகமம் 3:15-ல், மனிதன் தேவனுடைய வார்த்தைக்குக் கிழ்ப்படியாமல் விழுந்து போனவுடனே, தேவன் சர்ப்பத்திடம் பேசுகிறார். அவர் அங்கே சர்ப்பத்தினுடைய வித்தை குறித்து பேசுகிறார்: "உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும், அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன். அவர் உன் தலையை நசுக்குவார். நீ அவர் குதிங்காலை நசுக்குவாய்." அந்த பழைய மனிதன், சாத்தானுடைய பிள்ளையாய் அல்லது அவனுடைய வித்தாய் இருக்கிறான். காரணம், அது சாத்தானுடைய சுபாவத்தையே பிறப்பித்திருக்கிறது.

இயேசு அவருடைய நாட்களில் வாழ்ந்த மதப்பெருமை பிடித்த தலைவர்களை பார்த்து, "நீங்கள் உங்கள் பிதாவாகிய பிசாசினால் பிறந்தவர்கள்," என்று கூறினார் (யோவான் 8:44). கீழ்படியாமையின் பிள்ளைகளுக்கு சாத்தானே தகப்பனாய் இருக்கிறான். அவனுடைய சுபாவமே அவர்களுக்குள் உண்டாகியிருக்கிறது. சாத்தானின் சுபாவத்தை ஒரே வார்த்தையில் சொல்லி விடலாம்: *முரட்டாட்டம் அல்லது கலகம்.* இந்த உலகத்தில் நடக்கின்ற எல்லா வகையான கலகங்களுக்கும் அவன்தான் ஒரே தலைவனாக இருக்கிறான். ஆகையால் பழைய மனிதனின் குணம் எப்பொழுதுமே கலகம் நிறைந்த ஒரு குணமாகத்தான் இருக்கிறது. வேதவசனமும் இதை உறுதிப்படுத்துகிறது: "நாமெல்லாரும், ஆடுகளைப் போல, வழி தப்பித் திரிந்து, அவனவன் தன் தன் வழியிலே போனோம்" (ஏசாயா 53:6). தான் விரும்பும் வழியில் வாழும்படி பின் திரும்பிச் செல்வதே பழைய மனிதனின் அடையாளமாய் இருக்கிறது. அது தேவனுக்கு தன் முதுகை காட்டுகிறது, அது தன் சொந்த விருப்பங்களையும், தன்னைப் பிரியப்படுத்தி திருப்திப்படுத்தும் காரியங்களையுமே நாடிச் செல்கிறது.

இந்த உண்மை இன்னும் விரிவாக எபேசியரின் நிருபத்தில் விளக்கமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அங்கு பவுல் எழுதுகிறார்:

> *அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும் மரித்தவர்களா-யிருந்த உங்களை உயிர்ப்பித்தார். அவைகளில் நீங்கள் முற்காலத்திலே இவ்வுலக வழக்கத்திற்கேற்ற படியாகவும், கீழ்ப்படியாமையின் பிள்ளைகளிடத்தில் இப்பொழுது கிரியை செய்கிற ஆகாயத்து அதிகாரப்பிரபுவாகிய ஆவிக்கேற்ற*

படியாகவும் நடந்து கொண்டீர்கள். அவர்களுக்குள்ளே நாமெல்லாரும் மற்ற காலத்திலே நமது மாம்ச இச்சையின் படியே நடந்து நமது மாம்சமும், மனசும் விரும்பினவைகளைச் செய்து, சுபாவத்தினாலே மற்றவர்களைப் போல கோபாக்கினையின் பிள்ளைகளாயிருந்தோம்.

எபேசியர் 2:1-3

“சுபாவத்தினாலே..........கோபாக்கினையின் பிள்ளைகளாயிருந்தோம்” என்ற சொற்றொடரை கவனியுங்கள். நாம் ஏன் தேவனுடைய கோபாக்கினையின் பிள்ளைகளாக இருந்தோம்? காரணம், நாம் சுபாவத்தினாலே “கீழ்ப்படியாமையின் பிள்ளைகளாயிருந்தோம்.” கீழ்ப்படியாமை, எப்பொழுதுமே தேவனுடைய கோபாக்கினையைக் கொண்டு வருகிறது. ஆகையால், சாத்தானின் வஞ்சனை மற்றும் இச்சையின் விளைவாக உண்டான சீர்கேடடைந்த முரட்டாட்டமான ஒரு சுபாவத்தை நமக்குள் உடையவர்களாய் நாம் இருக்கிறோம். இதை நாம் இவ்வாறு தொகுத்துச் சொல்லலாம்: நம் ஒவ்வொருவருக்குள்ளும் முரட்டாட்டம் பிடித்த கலகக்காரன் ஒருவன் இருக்கிறான். வேதவசனம் அந்த கலகக்காரனை “பழைய மனிதன்” என்றழைக்கிறது.

மனிதனுடைய தீர்வுகள்

பொதுவாக மனிதர்கள், தேவனுடைய தீர்வுகளாயிராத வழிமுறைகளைப் பின்பற்றி இந்த முரட்டாட்டத்தை எதிர்கொள்ளும்படி முயற்சிக்கிறார்கள். முதலாவதாக, நம்முடைய சுயத்திலிருந்து ஆரம்பிக்கும் எல்லா தீர்வுகளையும் நாம் ஒதுக்கி வைத்து விடுவோம். காரணம், அவைகளில் பெரும்பாலானவை, நம்முடைய சுயத்தைப் புரிந்துணருதல், சுய திருப்தி, சுயத்தின் உணர்ச்சிகளை அடக்கிக் கொள்ளாமல் அப்படியே வெளிப்படுத்துதல் என நம்முடைய சுயத்தை மையப்படுத்தி அடைகின்ற தீர்வுகளாகவே இருக்கின்றன. இவைகள்தான் தற்கால உளவியல் மற்றும் நம்முடைய சிந்தனைகளில் தினந்தோறும் பெருகிக் கொண்டே செல்கின்றன. இவைகளை நாம் ஏன் ஒதுக்கி வைக்க வேண்டும்? காரணம், இந்த எல்லா “தீர்வுகளுமே” கலகக்காரனான நம்முடைய சுயத்திடம் நம்முடைய கட்டுப்பாட்டைக் கொடுத்து விடுகின்றன. தாங்கள் விரும்புவதை வெளிப்படுத்தக்கூடிய சுதந்தரம்

பிள்ளைகளுக்குக் கொடுக்கப்பட வேண்டும் என்று சொல்கிற, பிள்ளைகளை கண்டித்து, ஒழுங்குப்படுத்துவது தவறு என்றே முடிவெடுத்து விட்ட சில தலைமுறையினரை நாம் கடந்து வந்திருக்கிறோம். அவர்கள் முரட்டாட்டம் பிடித்த ஒரு கலகக்காரனுக்குத்தான் தன்னுடைய உணர்வுகளை வெளிப்படுத்தக்கூடிய சுதந்தரத்தைக் கொடுத்துக் கொண்டிருந்தார்கள் என்பதை அவர்கள் நிச்சயம் கற்றிருப்பார்கள் என்று நான் நம்புகிறேன். ஆனாலும் அது அவர்களுக்கு காலதாமதமாய் கற்றுக் கொண்ட ஒரு பாடமாகத்தான் இருக்கும்.

இரண்டாவதாக, தேவனுடைய தீர்வு ஒரு நியாயப்பிரமாண சட்ட முறையைச் சார்ந்ததல்ல. விழுந்துபோன பழைய ஜென்ம சுபாவப் பிரச்சனையை எதிர்கொண்டு ஜெயிக்கும்படி, அநேகர் நியாயப்பிரமாணத்தை நாடிச் செல்கிறார்கள். மோசேயின் நியாயப்பிரமாணம் இஸ்ரவேல் ஜனங்களிடத்தில்தான் கொடுக்கப்பட்டது. ஆனாலும் இஸ்ரவேல் ஜனங்கள் தோற்றுப் போனார்கள். இதுவே நியாயப்பிரமாணம் விரும்பத்தகுந்த முடிவை அடையவில்லை என்பதை செயல்விளக்கமாய் நமக்கு எடுத்துக் காண்பிக்கிறது. அதற்காக நியாப்பிரமாணத்தில் ஏதோ ஒரு தவறு இருக்கிறது என்று அர்த்தமல்ல. நியாயப்பிரமாணம் தன்னில்தானே நல்லது என்று ரோமர் 7-ல் பவுல் கூறுகிறார். ஆனால் நியாயப்பிரமாணத்தினால் கலகக்காரனை உருமாற்றி விட முடியாது. முரட்டாட்டம் பிடித்த கலகக்காரனை மாற்ற முடியாத எதுவும் நிரந்தரத் தீர்வாய் இருக்க முடியாது.

மூன்றாவதாக, விழுந்துபோன பழைய ஜென்ம சுபாவத்தை மேற்கொள்ளும்படி தேவன் கொடுக்கக்கூடிய தீர்வு, நிச்சயம் ஒரு மதம் கிடையாது. மதம் என்பது ஒரு குளிர்சாதனபெட்டியை போன்றது. அது உணவுப்பொருள் கெட்டுப் போவதை தற்காலிகமாகத்தான் தடுக்கிறது அல்லது மூடி மறைக்கிறது. ஆனால் அது முற்றிலுமாய் அதை மாற்றி விட முடியாது. உதாரணத்திற்கு, ஒரு நல்ல இன்சுவையுள்ள ஆப்பிளை எடுத்துக் கொள்வோம். அது பார்ப்பதற்கு மிகவும் அழகான, புத்தம் புதிய, பசியைத் தூண்டி விடுகிற ஒன்றாயிருக்கிறது. ஆனால் அதை அப்படியே விட்டு விட்டோம் என்றால், அது சீக்கிரத்தில் வாடி நலிவடைந்து விடும். காரணம், அதை வாடி நலிவடையச் செய்யும் கிரியை ஏற்கெனவே அதற்குள் நடந்து கொண்டிருக்கிறது. ஆனால் அந்தப் பழத்தை ஒரு குளிர்சாதனபெட்டியில்

வைப்பதன் மூலம், அது வாடி கெட்டு நலிந்து போவதை தற்காலிகமாக கொஞ்ச நேரத்திற்கு தடுப்பதற்கு சாத்தியமிருக்கிறது. ஆனால் அதை ஒரு குளிர்சாதனபெட்டியில் வைத்தால்கூட, எப்படியோ அது முடிவில் அழுகித்தான் போகும்.

தேவனுடைய தீர்வு

நம்முடைய பழைய விழுந்துபோன ஜென்ம சுபாவத்தை மேற்கொள்ளும்படி தேவன் நியமித்திருக்கிற தீர்வை, நமக்கு மிகவும் பழக்கப்பட்ட ஒரு வார்த்தையில் தொகுத்துச் சொல்லி விடலாம்: *மரண தண்டனை.* தேவன் அந்தப் பழைய மனிதனை ஒரு சபைக்கோ அல்லது ஒரு உளவியல் நிபுணரிடமோ அனுப்புவதில்லை. அவர் அவனை இன்னும் கொஞ்சம் மேம்படுத்துவதில்லை. அவர் அவனை சீர்திருத்தி உருமாற்றுவதில்லை. அவர் அவனை மதவைராக்கியமுள்ளவனாக மாற்றுவதுமில்லை. தேவன் அந்தப் பழைய மனிதனுக்கு மரணதண்டனை கொடுக்கிறார். முரட்டாட்டம் பிடித்த அந்த கலகக்காரனுக்கு இதைத் தவிர வேறு தீர்வு இல்லை. ஆனால் புதிய ஏற்பாட்டின் நற்செய்தி என்னவென்றால், அந்த மரணம் கிறிஸ்து இயேசுவுக்குள் ஏற்கெனவே நிகழ்ந்து விட்டது! சுவிசேஷத்தின் செய்தியை புரிந்துக்கொள்வதற்கு இதுவே திறவுகோலாகும்.

இயேசு நம்மை விடுதலையாக்கியிருக்கிறார் என பவுல் கூறுகிறார் (ரோமர் 7:24-25 வசனங்களைப் பார்க்கவும்). இயேசு எவ்வாறு நம்மை விடுதலையாக்கியிருக்கிறார்? "நம்முடைய பாவ சரீரம் ஒழிந்து போகும் பொருட்டாக நம்முடைய பழைய மனுஷன் அவரோடே கூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக்கிறோம்" (ரோமர் 6:6).

நம்முடைய பழைய விழுந்துபோன ஜென்ம சுபாவம், மகா மோசமான, மிகவும் தரங்குறைந்த அந்த சுபாவம், கிறிஸ்துவுடனே கூட சிலுவையில் அறையப்பட்டதை அறிந்து, விசுவாசிப்பதே, பாவத்தின் அடிமைத் -தனத்தினின்று விடுதலையடைந்து தப்பிப்பதற்கான ஒரே வழியாகும். இயேசு சிலுவையில் மரித்தபோது, முரட்டாட்ட குணமுள்ள அந்த கலகக்காரன், விழுந்துபோன அந்தப் பழைய ஜென்ம சுபாவ மனிதன், அவருக்குள் மரணம் அடைந்தான்.

பல ஆண்டுகளுக்கு முன், ஒரு ஈஸ்டர் நேரத்தில், என்னுடைய மனதில் கல்வாரி மலை, அதாவது கொல்கொதா மலையைக் குறித்த காட்சியை நான் தியானித்துக் கொண்டிருந்தேன். அதில் மூன்று சிலுவைகள் நடப்பட்டிருந்தன. அதன் மத்தியில் இருந்த சிலுவை மற்ற இரண்டு சிலுவைகளைக் காட்டிலும் மிஞ்சின ஒன்றாய், எல்லா விதத்திலும் மிக மிகச் சிறந்த ஒன்றாயிருந்தது. மையத்தில் இருந்த சிலுவை அதன் இரண்டு பக்கங்களிலும் இருந்த சிலுவைகளைக் காட்டிலும் உயரமாயிருந்தது. இந்தக் காட்சி என்னுடைய மனதில் இருந்தபோது, பரிசுத்த ஆவியானவர் என்னிடம் பேசினார். அவர் என்னிடம் ஒரு கேள்வியைக் கேட்டார்: *நடுமையத்திலிருந்த சிலுவை யாருக்காக செய்யப்பட்டது ?* தொடர்ந்து, அவர் இன்னொன்றையும் சொன்னார், *"இதற்கான பதிலை நீ சொல்வதற்கு முன், ஜாக்கிரதையாய் சிந்தித்து பதில் சொல்."*

ஆகையால் நான் நேரமெடுத்து, அதைக் குறித்து சிந்தித்துப் பார்த்து, "நடுவில் இருந்த சிலுவை பரபாஸுக்காக செய்யப்பட்டது," என்ற பதிலை நான் கொடுத்தேன். அதுவும் ஒரு உண்மைதான். அந்த நடுமையத்திலிருந்த சிலுவை பராபாஸுக்கு மரண தண்டனை விதிக்கப்படும்படி செய்யப்பட்டது. அவன்தான் நடுவிலிருந்த அந்தச் சிலுவையில் மரித்திருக்க வேண்டும். ஆனால் கடைசி நேரத்தில், தேவனுடைய திட்டத்தின்படி, அங்கே ஒரு பரிமாற்றம் நடந்தது. இயேசு அவனுடைய இடத்தை எடுத்துக் கொண்டார்.

அப்பொழுது பரிசுத்த ஆவியானவர் என்னிடம், *"நடுவிலிருந்த அந்தச் சிலுவை பராபாஸுக்காக செய்யப்பட்டிருந்தது. ஆனால் இயேசு அந்த நடுச்சிலுவையில் அறையப்பட்டு கொல்லப்பட்டார் என்றால், இயேசு பரபாஸின் இடத்தை எடுத்துக் கொண்டார் என்றுதானே அர்த்தம்,"* என்று கேட்டார்.

"ஆம், அது சரிதான்," என்று நான் பதிலளித்தேன்.

ஆனால் இயேசு உன்னுடைய இடத்தை எடுத்துக் கொண்டார் என்றல்லவா நான் நினைத்தேன், என்று பரிசுத்த ஆவியானவர் என்னுடன் சொன்னார்.

"ஆம், அவர் அதைத்தான் செய்தார்," என்று நானும் அதை ஒத்துக் கொண்டேன்.

அப்படியானால் நீ தான் அந்த பரபாஸ், என்று அப்பொழுது பரிசுத்த ஆவியானவர் சட்டென்று கூறினார்.

அந்த நொடிப்பொழுதில்தான், நான் அதை புரிந்து உணர்ந்து கொண்டேன். எனக்குள் ஒரு வெளிச்சம் உண்டானது. இது ஒரு வல்லமையான ஆவிக்குரிய சத்தியம். இதைக் குறித்து நான் ஒருபோதும் தர்க்கம் செய்ததில்லை. நான் இதை எளிமையாக அப்படியே ஏற்றுக் கொள்ளுகிறேன். தேவனுடைய வார்த்தை இதை நமக்கு தெளிவாக எடுத்துரைக்கிறது. ஆனாலும் பரிசுத்த ஆவியானவர் ஒருவரே நாம் இதைத் தெளிவாகப் பார்க்கும்படி உதவக்கூடியவராக இருக்கிறார்: *நீ தான் அந்த குற்றவாளி! உன்னுடைய பழைய விழுந்து போன மனிதனே அந்தக் குற்றவாளி. சட்டத்தின்படி உனக்காகவே அந்தச் சிலுவை செய்யப்பட்டது. அது உன்னுடைய அளவுகளின்படியே செய்யப்பட்டது. அது உனக்கு மிகச்சரியாகப் பொருந்தும். நீ அதில் தான் அறையப்பட வேண்டும், நீ அதில் தான் மரித்தாக வேண்டும்.*

ஆனால் தேவனுடைய இரக்கத்தின் மகிமையான, ஆச்சரியமான சுவிசேஷச் செய்தி இதோ இங்கே நமக்காக இருக்கிறது. கடைசி நிமிடத்தில், அங்கே ஒரு இடமாற்றம் நடந்தது. இயேசு பரபாஸின் இடத்தை எடுத்துக் கொண்டார். அதாவது நம்முடைய பழைய விழுந்துபோன மனிதனுக்குரிய இடத்தை இயேசு எடுத்துக் கொண்டார்.

அப்படியானால் நாம் எங்கே, எப்படி வாழ வேண்டும்?

அந்த இட பரிமாற்றத்தில், இயேசு தம்மையே நமக்காக ஒப்புக்கொடுத்தார். அவர் நம்முடைய முரட்டாட்டம் பிடித்த அந்த கலகக்காரனோடு தம்மை அடையாளப்படுத்தினார். தேவனுக்கு விரோதமாய் முரட்டாட்டம் செய்த அந்த கலக்காரன் அனுபவிக்க வேண்டிய தண்டனையை இயேசு அனுபவித்தார். அவர் அதற்கான விலைக்கிரயத்தைச் செலுத்தினார். தேவனுடைய நியாயத்தீர்ப்பின் கீழ், நம்முடைய இடத்தில் அவருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டு, அது நிறைவேற்றப்பட்டது. இது ஒரு இட பரிமாற்றமாக இருந்தபடியால், பவுல் இதை இயேசு நம்மோடு அடையாளப்படுத்தின ஒன்றாக மட்டுமல்ல, இயேசுவோடு நாம் அடையாளப்படுத்தப்பட்ட ஒன்றாகவும் பார்க்கிறார். அவர் இதை பின்வரும் வார்த்தைகளில் இவ்வாறாக கூறுகிறார்:

கிறிஸ்துவுடனே கூடச் சிலுவையிலறையப்பட்டேன், ஆயினும்

பிழைத்திருக்கிறேன். இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார். நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ என்னில் அன்பு கூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக் கொடுத்த தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன்.

கலாத்தியர் 2:20

''கிறிஸ்து மரித்தபோது, நானும் மரித்து விட்டேன்,'' என்று பவுல் அறிவிக்கிறார். ''அது என்னுடைய மரணம்,'' என்று அவர் தீர்க்கமாகச் சொல்கிறார். ''இதன் விளைவாக, இப்பொழுது *நான்* வாழவில்லை,'' என்று பவுல் இங்கு தொடர்ந்து பேசுகிறார். இது உண்மையாக இருக்குமானால், அவர் எப்படி அன்று உயிரோடு வாழ்ந்திருப்பார்? இதற்கு பவுலின் பதில் மிகவும் எளிமையாகவும், நேரடியானதாகவும் இருக்கிறது: ''கிறிஸ்துவே எனக்குள் ஜீவிக்கிறார்.''

இங்கு பவுல் என்ன சொல்கிறாரோ, அதையே நாம் ஒவ்வொருவரும் சொல்ல முடியும்: ''இப்பொழுது கிறிஸ்துவே எனக்குள் ஜீவிக்கிறார். இனி என்னுடைய பழைய, விழுந்து போன, தேவனுக்கு விரோதமாக முரட்டாட்டம் செய்கிற அந்த சுபாவம் எனக்குள் கிரியை செய்ய முடியாது. அதற்குப் பதிலாக, இப்பொழுது எனக்குள் புதிய சுபாவம், கிறிஸ்துவின் தெய்வீக சுபாவம் கிரியை செய்து கொண்டிருக்கிறது. இந்தப் புதிய சுபாவம் எனக்குள் கிறிஸ்துவின் நீதியை செயல்படுத்தி, முற்றிலும் வேறு வகையான ஒரு புதிய வாழ்க்கையை நான் வாழும்படி எனக்கு உதவி செய்கிறது.''

கொலோசே பட்டணத்தில் வாழ்ந்து வந்த கிறிஸ்தவ விசுவாசிகளுக்கு பவுல் எழுதிய தன்னுடைய கடிதத்தில், இதே கோட்பாடை அவர் திரும்பவும் எழுதுகிறார்: ''ஏனென்றால், நீங்கள் மரித்தீர்கள். உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது. நம்முடைய ஜீவனாகிய கிறிஸ்து வெளிப்படும்போது நீங்களும் அவரோடேகூட மகிமையிலே வெளிப்படுவீர்கள்'' (கொலோசெயர் **3:3-4**). நாம் எப்பொழுது மரித்தோம்? இயேசு மரித்த பொழுது, நாமும் மரித்தோம். அதுதான் நம்முடைய மரணமாய் இருந்தது. இனி நம்முடைய வாழ்க்கை தனிப்பட்ட விதத்தில் நமக்குச் சொந்தமான ஒன்றாய் இருக்கப் போவதில்லை. கிறிஸ்துவுக்குள் மறைந்திருக்கிற, இரகசியமான ஒரு வாழ்க்கையை உடையவர்களாய் நாம்

இருக்கிறோம். ஐம்புலன் உணர்வுகளால் மட்டுமே கட்டுப்படுத்தப்படுகிற இந்த உலகத்தினால் நம்முடைய வாழ்க்கையின் மதிப்பை புரிந்து உணர்ந்து கொள்ள முடியாது.

மறுபடியும் நாம் பவுலுடன் சேர்ந்து இதைச் சொல்வோம்: “இனி *நான்* என்னில் வாழப் போவதில்லை. கிறிஸ்துவே எனக்குள் ஜீவிக்கிறார். இப்பொழுது இந்தக் காலத்தில், இந்த சரீரத்தில் நான் வாழும் வாழ்க்கையை, என் மீது அன்பு கூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக் கொடுத்த தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துவின் விசுவாசத்தினாலே வாழ்ந்து கொண்டிருக்கிறேன்.” இங்கே வேதவசனங்கள் அறிவிக்கும் ஆச்சரியமான சத்தியம் இதுதான்: நாம் மரணத்திலிருந்து, ஜீவனுக்குள் கடந்து வந்து விட்டோம்.

அடக்கம் பண்ணப்படுதலும், உயிர்த்தெழுதலும்

மரணத்திலிருந்து ஜீவனுக்கு நம்மை உயிர்த்தெழச் செய்திருக்கிற இந்த மகத்தான, நம்மை பிரமிக்கச் செய்யும் இந்த பரிமாற்றத்தின் காரணமாக, இன்னொரு பரிமாற்றமும் இங்கே நடக்கின்றது. இயேசுவினுடைய மரணத்தை தொடர்ந்து நடந்த எல்லாவற்றிலும், அவருடைய அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதலிலும் நாம் அடையாளம் காணப்பட்டிருக்கிறோம். சுவிசேஷத்தின் முழு சாராம்சத்தையும் தொகுத்து பவுல் கொரிந்தியருக்கு எழுதின முதல் நிருபத்தில் எழுதியிருக்கிறார். நாம் அதை கவனிக்கலாம்.

> *அன்றியும் சகோதரரே, நான் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தை மறுபடியும் உங்களுக்குத் தெரியப் -படுத்துகிறேன். நீங்களும் அதை ஏற்றுக்கொண்டு அதிலே நிலைத்திருக்கிறீர்கள். நான் உங்களுக்குப் பிரசங்கித்த பிரகாரமாய் நீங்கள் அதை கைக்கொண்டிருந்தால் அதினாலே நீங்கள் இரட்சிக்கப்படுவீர்கள். மற்றபடி உங்கள் விசுவாசம் விருதாவாயிருக்குமே. நான் அடைந்ததும், உங்களுக்குப் பிரதானமாக ஒப்புவித்ததும் என்னவென்றால், கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு வேதவாக்கியங்களின் படி, மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்து,*
> *1 கொரிந்தியர் 15:1-4*

பவுல் இங்கு சுவிசேஷத்தின் சாராம்சத்தை எடுத்துரைக்கிறார். அது கிறிஸ்துவை மையமாகக் கொண்டிருக்கிறது. சுவிசேஷ செய்தியில், மூன்று தொடர்ச்சியான உண்மைகள் அடங்கியிருக்கின்றன. முதலாவதாக, கிறிஸ்து மரித்தார் என்ற உண்மையும், இரண்டாவதாக, அவர் அடக்கம் பண்ணப்பட்டார் என்ற உண்மையும், மூன்றாவதாக, அவர் மூன்றாம் நாளில் உயிரோடெழுப்பப்பட்டார் என்ற உண்மையும் அதில் அடங்கியிருக்கின்றன. இதுவே சுவிசேஷத்தின் இருதயமாய், அதன் உயிர்நாடியாய் இருக்கின்றது. அது மட்டுமல்ல, சுவிசேஷ செய்தி மனிதனுடைய சார்பில் வேறு எந்த பங்களிப்பையும், அழகூட்டும் விஷயங்களையும், விறுவிறுப்பாக்கும் விஷயங்களையும் சார்ந்திருக்கவில்லை.

பவுலினுடைய காலக்கட்டம் மற்றும் அதன் சூழ்நிலையின் பின்னணியில் பார்க்கும்போது, "வேதவாக்கியங்களின் படியே" என்ற வார்த்தையின் அர்த்தம், *பழைய ஏற்பாட்டின்படியே* என்பதாகும். "மூன்றாம் நாளில் இயேசு உயிரோடெழுப்பப்படுவார் என்று பழைய ஏற்பாட்டில் எங்கு சொல்லப்பட்டிருக்கிறது?" என்று நீங்கள் ஒருவேளை கேட்கலாம். எப்பொழுதாவது இந்தக் கேள்வி உங்களுக்குள் எழும்பியிருக்கிறதா என்றால் அது சந்தேகம்தான்? ஆனால் பல ஆண்டுகளாக இந்தக் கேள்வி எனக்குள் ஒரு சவாலாகவே இருந்தது. முடிவில் தேவன் ஒரு நாள் இதற்கான பதிலை எனக்குக் காண்பித்தார் என்று நான் விசுவாசிக்கிறேன்.

முதலாவதாக, பழைய ஏற்பாட்டின் யோனாவைப்போல் நானும் இருப்பேன் என்று இயேசு தாமே சொல்லியிருக்கிறார். மீனின் வயிற்றில் மூன்று நாள் யோனா இருந்தான் என்பது நமக்குத் தெரியும். அதேபோல, நானும் இந்த பூமியின் வயிற்றில் மூன்று நாள் இருப்பேன் என்று இயேசு சொன்னார். இது ஒரு படவிளக்கமான சித்தரிப்பாய் இருக்கிறது. ஆனாலும் பழைய ஏற்பாட்டில், ஒரே ஒரு இடத்தில் மட்டும் இது மிகவும் குறிப்பாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அது ஓசியா தீர்க்கதரிசியின் புத்தகமாகும்:

> *கர்த்தரிடத்தில் திரும்புவோம் வாருங்கள்;நம்மைப் பீறினார்; அவரே நம்மைக் குணமாக்குவார், நம்மை அடித்தார்; அவரே நம்முடைய காயங்களைக் கட்டுவார். இரண்டு நாட்களுக்குப் பின்பு அவர் நம்மை உயிர்ப்பிப்பார்; மூன்றாம் நாளில் நம்மை*

எழுப்புவார்; அப்பொழுது நாம் அவருடைய சமுகத்தில் பிழைத்திருப்போம்.

ஓசியா 6:1-2

எது கொல்லப்பட்டதோ, அதுதான் உயிரோடெழுப்பப்படும். அது மறுபடியும் ஜீவனுக்குள் கொண்டு வரப்படும். இது இரண்டு நாட்களுக்குப் பிறகு, மூன்றாம் நாளிலே, நிகழும். ஆனால் இங்கு நாம் பார்க்க வேண்டிய மிகவும் முக்கியமான ஒரு விஷயம் என்னவென்றால், இது இயேசுவுக்கு மட்டுமல்ல, நம் எல்லோருக்கும் பொருந்தி வரக்கூடிய ஒரு சத்தியமாக இருக்கிறது. "தேவன் அவரை உயிர்ப்பிப்பார்" என்று இந்த வசனம் சொல்லவில்லை. மாறாக, "அவர் நம்மை உயிர்ப்பிப்பார்" என்றுதான் இந்த வசனம் சொல்கிறது.

நம்முடைய பாவத்தின் நிமித்தம், இயேசு தம்முடைய மரணத்தில் நம்மோடுகூட அடையாளப்படுத்தப்பட்டார். அந்த அடையாளத்தை நாம் ஏற்றுக் கொள்ளும்போது, நாம் அவருடைய மரணத்தில் நம்மையே அடையாளப்படுத்திக் கொள்கிறோம். பவுல் சொன்னது போல, "கிறிஸ்துவுடனே கூட நானும் சிலுவையில் அறையப்பட்டிருக்கிறேன்," என்று நாமும் சொல்கிறோம். அப்பொழுது அவருடைய மரணத்தைத் தொடர்ந்து நிகழ்ந்த அவருடைய அடக்கம், அவருடைய உயிர்த்தெழுதல் மற்றும் அவருடைய பரமேறுதல் என இவைகள் எல்லாவற்றிலும் இயேசுவோடுகூட நாம் நம்மையே அடையாளப்படுத்திக் கொள்ளும்படி ஒரு வழி நமக்குத் திறக்கப்படுகிறது.

அடுத்த வசனத்தில் தீர்க்கதரிசி தொடர்ந்து இவ்வாறு கூறுகிறார்:

அப்பொழுது நாம் அறிவடைந்து, கர்த்தரை அறியும்படி தொடர்ந்து போவோம். அவருடைய புறப்படுதல் அருணோதயம் போல ஆயத்தமாயிருக்கிறது. அவர் மழையைப் போலவும், பூமியின் மேல் பெய்யும் முன்மாரி பின்மாரியைப் போலவும் நம்மிடத்தில் வருவார்.

ஓசியா 6:3

இயேசுவின் உயிர்தெழுதலைக் குறித்த இன்னும் தொடர்ச்சியான ஒரு சித்திரத்தை, ''அவருடைய புறப்படுதல் அருணோதயம் போல

ஆயத்தமாயிருக்கிறது'' என்ற வார்த்தைகளில் நாம் காண்கிறோம். அவருடைய உயிர்த்தெழுதல் இருள் நிறைந்த ஒரு நீண்ட இரவுக்குப் பின் வருகின்ற விடியற்காலை வெளிச்சம் போல இருக்கிறது. அடுத்ததாக, ஓசியா இவ்வாறு சொல்கிறார், "அவர் மழையைப் போலவும், பூமியின் மேல் பெய்யும் முன்மாரி, பின்மாரியைப் போலவும் நம்மிடத்தில் வருவார்." பூமியின் மேல் பெய்யப் போகும் மழை, முன்மாரி, பின்மாரி என்ற வார்த்தைகள் அநேக முறை வேதாகமத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. இந்த வார்த்தைகள், இறங்கி வரும் பரிசுத்த ஆவியானவரின் வருகையை குறிக்கும் படவிளக்கமாக இருக்கின்றன.

ஆகையால், உயிர்த்தெழுதலைக் குறித்த ஒரு முன் காட்சியை மாத்திரமல்ல, உயிர்த்தெழுதல் நிகழ்ந்து ஐம்பது நாட்களுக்கு பிறகு நடந்த பரிசுத்த ஆவியானவரின் வருகையைக் குறித்த ஒரு முன் காட்சியையும் நாம் இங்கு பெறுகின்றோம். ஓசியா தீர்க்கதரிசி எழுதிய இந்த வசனம், இயேசு மரிக்க வேண்டும், அடக்கம் பண்ணப்பட வேண்டும், மூன்றாம் நாளில் உயிரோடெழுப்பப்பட வேண்டும் என்பதை நமக்குக் காண்பிக்கிறது. அதோடு இன்னொன்றையும் இந்த வசனம் நமக்குச் சொல்கிறது. நாம் அவரோடு அவருடைய மரணத்திலும், அவருடைய அடக்கம் பண்ணப்படுதலிலும், மரித்தோரிலிருந்து அவரோடு கூட உயிரோடு எழுப்பப்படுவதிலும் அடையாளம் காணப்பட வேண்டும் என்றும் இந்த வசனம் நமக்குச் சொல்கிறது. நாம் கர்த்தரை அறியும்படி தொடர்ந்து போவோமானால், சூரிய உதயம் போல வெளிப்பட்ட அவருடைய உயிர்த்தெழுதலை மட்டுமல்ல, மழையைப் போல வெளிப்படும் பரிசுத்த ஆவியானவரின் வருகையையும் நாம் அறிந்து கொள்வோம் என்பது தேவனால் நமக்குக் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தமாய் இருக்கிறது.

இயேசுவுடன் அவருடைய மரணம், அடக்கம் மற்றும் உயிர்தெழுதலோடு நாம் அடையாளம் காணப்படும்படி, ஒரு குறிப்பிட்ட செயல் விளக்கத்தை நமக்கென்று தேவன் நியமித்திருக்கிறார். இதுதான் தண்ணீர் முழுக்கு ஞானஸ்நானமாக இருக்கிறது. இது புறம்பாக நாம் செய்யும் ஒரு செயலாக இருக்கின்றது. தண்ணீர் முழுக்கு ஞானஸ்நானத்தில் பங்கெடுப்பதென்பது, கிறிஸ்துவுடன் அடக்கம் பண்ணப்படுதலுக்கு ஒப்பாயிருக்கிறது. அவருடைய மரணத்தில், நாம் அவரோடு ஒன்றிணைந்திருக்கிறோம் என்பதை இது

வெளிக்காண்பிக்கிறது. வேத வசனங்கள் நமக்கு இந்த உத்தரவாதத்தைக் கொடுக்கின்றன: அவருடன் அடக்கம் பண்ணப்படுவதில் நாம் ஒன்றிணைந்திருக்கிறோம் என்றால், அதைத் தொடர்ந்து அவருடைய உயிர்த்தெழுதலிலும் புதிய ஜீவனைப் பெற்றவர்களாய் நாம் அவரோடு ஒன்றாய் இணைந்திருப்போம் (ரோமர் 6:3-5; கொலோசெயர் 2:12-ஐ பார்க்கவும்).

ஒரு புதிய ஜீவ மார்க்கத்திற்குள் மறுபிறப்பு

இயற்கையாய் நடக்கின்ற ஒரு பிரசவத்தில், தலை தான் முதலாவதாக வெளியே வரும். அவ்வாறு தலை முதலில் வெளியே வரும்போது, பிறகு சரீரம் அதைப் பின் தொடர்ந்து வெளியே வரும் என்பதை நாம் அறிந்திருக்கிறோம். இதேபோலத்தான் ஆவிக்குரிய பிறப்பிலும் நடக்கின்றது. மரணத்திலிருந்து அவர் பிறந்தபோது, சரீரத்தின் தலையாகிய இயேசு முதலாவதாக வெளிப்பட்டார். இது நமக்கு என்ன சொல்கிறது? அவரை தலையாகக் கொண்டு அவரோடு ஒன்றிணைக்கப்பட்டிருக்கிற நாமும் அந்த பிறப்பில் அவரைப் பின்தொடர்ந்து சிருஷ்டிப்பின் புதிய ஒழுங்கிற்குள் பிரவேசிக்கிறோம். அவருடைய மரணம் மற்றும் மரணத்திலிருந்து அவருடைய உயிர்தெழுதலின் மூலம் அவர் பிரவேசித்த அந்த பரிபூரணத்துக்குள், நாமும் அவரைப் பின்தொடர்ந்து பிரவேசிப்போம்.

நம்முடைய தலையாகிய இயேசுவுடன், அவருடைய சரீரத்தின் அவயங்களாய் நாம் அவருடன் ஒன்றிணைக்கப்பட்டிருக்கிறோம். மறுபிறப்பில், நாம் அவரைப் பின்தொடர்ந்து வெளிப்படுகிறோம். மரணத்திலிருந்து முற்றிலும் ஒரு புதிய ஒழுங்கிற்குள், முற்றிலும் ஒரு புதிய வாழ்க்கைக்குள் நாம் அவரைப் பின்தொடர்ந்து வந்திருக்கிறோம். அதாவது அவர் எங்கு சென்றாலும், நம்மையும் அவருடன் அழைத்துச் செல்லக்கூடிய அளவிற்கு வலிமை வாய்ந்த ஒரு இணைப்பாய் இது இருக்கிறது. இயேசுவோடு உண்டாகியிருக்கும் இந்த இணைப்பு, நம்மை உயிர்த்தெழுதலுக்குள் மட்டுமல்ல, பரலோகத்தின் மகிமைக்குள்ளும் தேவனுடைய வலது பாரிசத்தில் இருக்கும் அதிகாரத்தின் இடத்திற்கும் நம்மை அழைத்துச் செல்கிறது. பேதுரு இதை எப்படி வருணிக்கிறார் என்பதைக் கவனியுங்கள்:

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக. அவர், இயேசுகிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்ததினாலே, அழியாததும் மாசற்றதும் வாடாததுமாகிய சுதந்திரத்திற் -கேதுவாக, ஜீவனுள்ள நம்பிக்கை உண்டாகும்படி, தமது மிகுந்த இரக்கத்தின்படியே, நம்மை மறுபடியும் ஜெநிப்பித்தார்.

1 பேதுரு 1:3-4

பழைய ஒழுங்கிலிருந்து ஒரு புதிய ஒழுங்கிற்குள், ஒரு புதிய வாழ்க்கைமுறைக்குள், புது வகையான ஜீவனை உடையவர்களாய் இது நம்மை பிறக்கச் செய்திருக்கிறது. பேதுருவின் நிருபத்திலிருந்து எடுக்கப்பட்ட மேற்காணும் வேதப்பகுதியில், மூன்று வார்த்தைகள் இந்தப் புதிய வாழ்க்கைமுறையை வருணித்துச் சொல்கின்றன. இந்த வருணனைகளெல்லாம், நமக்கு மிகவும் பழக்கப்பட்டுப் போன அந்தப் பழைய வாழ்க்கைமுறையைக் காட்டிலும் கற்பனைக்கெட்டாத அளவில் விஞ்சினதாய், மிஞ்சினதாய், உன்னதமானதாய், உயர் ரகமானதாய் இருக்கின்றன. இந்த சுதந்திரம் கெட்டழிந்து போக முடியாததாய், மாசற்றதாய், வாடாததாயிருக்கிறது. பாவத்தின் கறையினாலோ, அழிவினாலோ, சீர்கேட்டினாலோ இதன் தன்மையை பாதித்து விட முடியாது. இந்த சுதந்தரத்தை எவ்விதத்திலும் கறைப்படுத்தி விட முடியாது. இது ஒருபோதும் வாடி நலிவடைந்து போவதில்லை. இந்த சுதந்தரம், நமக்கு மிகவும் பழக்கப்பட்டிருக்கிற எல்லா வகையான தீமைகள் மற்றும் சீர்கேடுகளின் சக்திகளினுடைய கட்டுப்பாட்டின் கீழ் இல்லை.

இந்தப் புதிய சுதந்தரம், நம்மை கீழே விழத்தள்ளி, நம்மை தோற்கடித்துக் கொண்டிருந்த அந்தப் பழைய வாழ்க்கைமுறையோடு எவ்விதத்திலும் சம்பந்தப்பட்டதல்ல. இயேசுவில் அவரோடு நம்மை அடையாளப்படுத்திக் கொண்டதன் மூலம், நாம் அந்தப் பழைய தளத்திலிருந்து ஒரு புதிய தளத்திற்குள் நுழைந்து விட்டோம். ஒரு ஜீவனுள்ள நம்பிக்கையை உடையவர்களாய் நாம் மறுபடியும் பிறந்திருக்கிறோம்.

நாம் இயேசுவினுடைய ஜீவனுக்குள் முழுமையாக பிரவேசிக்கும்படி, அவர் நம்முடைய மரணத்தை ஏற்றுக் கொண்டு நமக்காக மரித்தார் என்ற இந்த மகிமையான சத்தியத்தை நாம் இன்னும் முழுமையாய், இன்னும் ஆழமாய்

புரிந்து கொள்ளும்போது, நாம் ஒரு புதிய ஜீவியத்திற்குள் நுழைகிறோம் என்பதை மட்டுமல்ல, முற்றிலும் வித்தியாசமான ஒரு வாழ்க்கைக்குள் நாம் நுழைகின்றோம் என்பதையும் நாம் கண்டுபிடிப்போம். நம்முடைய பழைய வாழ்க்கைமுறையில், நம்முடைய அழைப்புகள் அறியப்பட முடியாதவைகள் போல, எட்டி அடைந்து விட முடியாதவைகள் போல தெரிந்தன. ஆனால் இந்தப் புதிய வாழ்க்கைமுறையில், நாம் அந்தத் தோல்வியைத் தாண்டி கடந்து வந்து விட்டோம். இயேசுவோடு நமக்கிருக்கிற அடையாளத்தை நாம் புரிந்து கொள்கிறபடியால், தேவனுடைய ராஜ்யத்தில் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற பணிகளை நம்மால் கண்டறிந்து, அவைகளை நிறைவேற்றவும் முடியும். பவுல் சொல்வது போலவே நாமும் சொல்ல முடியும், "ஓ, நிர்ப்பந்தமான மனுஷன் நான்! இந்த மரண சரீரத்தினின்று, மிகவும் தரந்தாழ்ந்த சுபாவத்திற்கு அடிமைப்பட்டுக் கிடக்கிற இந்த நிலையிலிருந்து யார் என்னை விடுதலையாக்குவார்? நான் தேவனுக்கு நன்றி சொல்கிறேன்! நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் தேவன் இதைச் செய்திருக்கிறார். அவர் என்னை விடுதலையாக்கியிருக்கிறார்."

10

புதிய மனிதன்

நீங்கள் சென்றடைய வேண்டிய இடம்

அப்படியே நீங்களும், உங்களைப் பாவத்திற்கு மரித்தவர்களாகவும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குள் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர்களாகவும் எண்ணிக் கொள்ளுங்கள்.

ரோமர் 6:11

“அவர் பெருகவும், நான் சிறுகவும் வேண்டும்,” என்று யோவான் ஸ்நானகன் இயேசுவை குறித்துச் சொன்னான் (யோவான் 3:30). இது நாம் எல்லோரும் பின்பற்றி வாழ வேண்டிய ஒரு கோட்பாடாய் இருக்கிறது. அவர் அதாவது *இயேசு* என்ற புதிய மனிதன் எனக்குள் பெருக வேண்டும், ஆனால் *நான்* என்ற அந்தப் பழைய மனிதன் எனக்குள் சிறுக வேண்டும். எவ்வளவுக்கு எவ்வளவு விழுந்துபோன அந்தப் பழைய மனிதன் சிறுமைப்படுகிறானோ, அந்த அளவிற்கு மட்டுமே இப்பொழுது நமக்குள் பிறந்த அந்தப் புதிய மனிதன் பெருகி, மேன்மைப்பட முடியும். புதிய ஜீவனை உடையவர்களாய் விடுதலையாய் நடப்பதற்கு முன்னால், அங்கே ஒரு மரணம் நிகழ்ந்தாக வேண்டும்.

இருந்தாலும், அந்தப் பழைய மனிதன் ஒரு யுத்தமில்லாமல் அதை எளிதாக விட்டுக் கொடுத்து விடப் போவதில்லை. நாம் அவனை இரண்டு கட்டங்களில் எதிர்கொண்டாக வேண்டும். முதலாவதாக, அந்தப் பழைய மனிதனைக் குறித்து தேவன் என்ன சொல்கிறாரோ அதை நாம் விசுவாசத்தினால் ஏற்றுக் கொள்ள வேண்டும்: “நம்முடைய பழைய மனிதன்

அவருடனே கூட சிலுவையில் அறையப்பட்டான்" (ரோமர் **6:6**). இது தேவனுடைய வார்த்தையில் எழுதப்பட்டிருக்கிற வரலாற்று உண்மையாயிருக்கிறது. அதை நாம் விசுவாசத்தினால் ஏற்றுக் கொள்ள வேண்டும். இயேசு சிலுவையில் மரித்தபோது, இயேசுவில் அந்த மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது என்ற வேதவசனப்பதிவை நாம் ஏற்றுக் கொள்ளுகிறோம். தேவனுடைய வார்த்தையில் எழுதப்பட்ட வாக்கியங்களை நம்முடைய விசுவாசம் உறுதியாய் பற்றிப் பிடித்துக் கொள்ளும்போது, நாம் நம்மையே பாவத்திற்கு மரித்தவர்களாக எண்ணிக் கொள்ளுகிறோம். நம்முடைய விழுந்துபோன பழைய மனிதன் மரித்துப் போனான், அவனுக்கு மரணதண்டனை நிறைவேற்றப்பட்டாயிற்று என்று நாம் எண்ணிக் கொள்கிறோம். அதோடு கிறிஸ்து இயேசுவுக்குள் தேவனுக்கென்று ஜீவிக்கிறவர்களாய் நம்மையே நாம் எண்ணிக் கொள்கிறோம். புதிய மனிதனின் ஜீவனையும், செயல்பாட்டையும் நாம் உண்மையென ஏற்றுக் கொண்டு, அதை உறுதியாய் அங்கீகரித்து ஏற்றுக் கொள்கிறோம்.

இரண்டாவதாக, பவுல் இங்கு விவரமாக எடுத்துரைக்கும் காரியத்தை நாம் ஒரே சீராகவும், படிப்படியாகவும் செயல்படுத்த வேண்டும். நாம் இதை உண்மையென ஒருமுறை உறுதிபட ஏற்றுக் கொள்ளுகிறோம். ஆனால் பிறகு இதை நம்முடைய அன்றாட வாழ்க்கையில் நாம் செயல்படுத்த வேண்டும். பவுல் தொடர்ந்து இவ்வாறு கூறுகிறார்:

> *ஆகையால் நீங்கள் சரீர இச்சைகளின்படி பாவத்திற்குக் கீழ்ப்படியத்தக்கதாக, சாவுக்கேதுவான உங்கள் சரீரத்தில் பாவம் ஆளாதிருப்பதாக. நீங்கள் உங்கள் அவயவங்களை அநீதியின் ஆயுதங்களாகப் பாவத்திற்கு ஒப்புக்கொடாமல், உங்களை மரித்தோரிலிருந்து பிழைத்திருக்கிறவர்களாக தேவனுக்கு ஒப்புக்கொடுத்து, உங்கள் அவயவங்களை நீதிக்குரிய ஆயுதங்களாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுங்கள்.*
>
> *ரோமர் 6:12-13*

விழுந்துபோன அந்தப் பழைய மனிதன், இன்னும் தனக்கு உரிமைகள் உள்ளது போலவும், நாம் இன்னும் அவனுக்கு இணங்கி ஒப்புக் கொடுக்க வேண்டும் என்பது போலவும், அவன் தன் விருப்பம்போல செயல்படும்படி

நாம் அவனுக்கு இடம் கொடுக்க வேண்டும் என்பது போலவும் அவன் தொடர்ந்து முயற்சிப்பான். ஆனால் நாம் தொடர்ந்து அந்த பழைய மனிதனுடைய விருப்பங்களுக்கு மறுப்பு தெரிவித்துக் கொண்டே இருக்க வேண்டும். நம்முடைய சுயத்தை மறுதலிப்பதுதான் நாம் இயேசுவைப் பின்பற்றும்படி எடுத்து வைக்க வேண்டிய முதல் அடியாக இருக்கிறது. மறுதலிப்பது என்றால், “இல்லை” என்று சொல்லி மறுப்பு தெரிவிப்பதாகும். ஆகையால், ஒவ்வொரு முறையும் பழைய மனிதன் திரும்பி எழுந்து, செயல்பட்டு, கட்டுப்பாட்டை தன் கையில் உறுதியாய் எடுத்துக் கொள்ளும்படி முயற்சிக்கும்போது, நாம் எழுந்து, “இல்லை, இல்லை. நீ மரித்து விட்டாய். உனக்கு எந்த உரிமையும் இல்லை. நான் உனக்கு இணங்கி விட்டுக் கொடுக்க மாட்டேன்,” என்று அழுத்தந்திருத்தமாகச் சொல்கிறோம்.

இவ்வாறு ஆக்கப்பூர்வமான ஒன்றை நாம் செய்கின்றோம். அதாவது, நாம் நம்மையே பரிசுத்த ஆவியானவருக்கு இணங்கி ஒப்புக் கொடுக்கிறோம். நாம் நம்முடைய அவயவங்களை, நம்முடைய சரீரத்தின் ஒவ்வொரு உறுப்புகளை, நம்முடைய தனித்தன்மை மற்றும் குணாதிசியங்களை அவரிடத்தில் இணங்கி விட்டுக் கொடுக்கிறோம். பரிசுத்த ஆவியானவர் உள்ளே வந்து, நம்முடைய வாழ்க்கையின் கட்டுப்பாட்டை எடுத்துக் கொள்ளும்படி நாம் அவருக்கு அனுமதி கொடுக்க வேண்டும். நாம் அப்படிச் செய்யும்போது, அதின் விளைவாக, நாம் அவருக்குக் கீழ்ப்படிகிறோம். எல்லாவற்றிலும் இவ்வாறு இணங்கி, கீழ்ப்படிவதே புதிய மனிதனுடைய சுபாவமாக இருக்கின்றது. புதிய மனிதனுடைய சுபாவம், எதற்கும் இணங்காமல், கீழ்படியாமல் செயல்படுகிற முரட்டாட்டக்காரனுடைய சுபாவத்திற்கு நேரெதிரானதாய் இருக்கிறது.

பவுல் இவ்வாறு நமக்குச் சொல்கிறார், “உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியுள்ளவர்களாகி, மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாகச் சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக் கொள்ளுங்கள்” **(எபேசியர் 4:23-24).**

இதிலிருந்து நாம் பல விஷயங்களை கற்றுக் கொள்கிறோம். இது குறிப்பாக, நம்முடைய கீழ்ப்படிதலில் நம்மை முன்னேறச் செய்கிறது. முதலாவதாக, புதிய மனிதன் தேவனுடைய சிருஷ்டிக்கும் ஒரு செயலால் உண்டாக்கப்படுகிறான். மனிதன் தன்னுடைய சொந்த முயற்சிகளினாலோ

அல்லது ஒரு மதத்தினாலோ அல்லது நற்கிரியைகளினாலோ அல்லது மதநெறிமுறைகளை ஒழுங்காகக் கடைபிடிப்பதினாலோ இதை உருவாக்கி விட முடியாது. அடுத்ததாக, தேவனுடைய சிருஷ்டிப்பின் இந்தச் செயல், சத்தியத்திலிருந்து அதாவது தேவனுடைய வார்த்தையின் சத்தியத்திலிருந்து ஆரம்பித்து வெளிப்படுகிறது. இது அப்படியே சாத்தானுடைய பொய்யின் விளைவாக உண்டான பழைய மனிதனுடைய சுபாவத்திற்கு நேரெதிராய் முரண்பட்டிருக்கிறது. அதோடு கூட, புதிய மனிதனின் சுபாவத்தை வேதாகமம் இங்கு இரண்டு வார்த்தைகளில் விளக்கிச் சொல்கிறது: *நீதி* மற்றும் *பரிசுத்தம்.* முடிவில், இந்தப் புதிய மனிதனுடைய சுபாவத்தைக் குறித்து பவுல் சொல்லும்போது, அது தேவனுடைய சாயலில் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்கிறார். அல்லது அது தேவனுடைய நோக்கத்தின்படி உண்டாக்கப்பட்டிருக்கிறது என்று பெரும்பாலான வேதாகம மொழிபெயர்ப்புகளில் இவ்வசனத்திற்கு இதன் பக்க ஓரங்களில் விளக்கம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த இரண்டு விளக்கங்களும் இங்கு பொருத்தமானவைகளாகத்தான் இருக்கின்றன. பவுல் இந்த இரண்டு விளக்கங்களையும் இந்த வசனத்தில் உள்ளடக்கிச் சொல்கிறார் என்றுதான் நான் விசுவாசிக்கிறேன். மனிதனைக் குறித்து தேவன் ஆதியிலே வைத்திருந்த அந்த நோக்கத்தின்படி, இந்தப் புதிய மனிதனுடைய சுபாவம் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறது. இந்தப் புதிய மனிதனுடைய சுபாவத்தில், தேவனுடைய சாயல் திரும்பவும் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

கொலோசெயருக்கு எழுதிய நிருபத்தில் இன்னும் கூடுதலான விளக்கத்தை பவுல் நமக்குக் கொடுக்கிறார்:

> *ஒருவருக்கொருவர் பொய் சொல்லாதிருங்கள்; பழைய மனுஷனையும் அவன் செய்கைகளையும் களைந்து போட்டு, தன்னை சிருஷ்டித்தவருடைய சாயலுக்கொப்பாய், பூரண அறிவடையும்படி புதிதாக்கப்பட்ட புதிய மனுஷனை தரித்துக் கொண்டிருக்கிறீர்களே.*
>
> *கொலோசெயர் 3:9-10*

இங்கு ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்களையும் நாம் காண்கிறோம்: விழுந்து போன பழைய மனிதனைக் குறித்த தேவனுடைய செயல்திட்டம் மற்றும் புதிய மனிதனைக் குறித்த தேவனுடைய செயல்திட்டம். புதிய

மனிதனுடைய ஆரம்பம் அல்லது பிறப்பிடம், அவனுடைய சுபாவம், அவனைக் குறித்த நோக்கம் மற்றும் அவனுக்குரிய பொறுப்பு என்பதைப் புரிந்து கொண்டு நாம் செயல்பட நமக்கு உதவும்படி இந்த அத்தியாயத்தில் நான்கு கேள்விகளை நமக்கு முன்பாக வைப்போம். இந்த கேள்விகளுக்கான பதில்களை நாம் கருத்தாய் சிந்தித்துப் பார்ப்போம்.

புதிய மனிதன் எவ்வாறு சிருஷ்டிக்கப்படுகிறான்?

நமக்குள் புதிதாய் பிறந்த இந்தப் புதிய மனிதனை நாம் எவ்வாறு முதிர்ச்சியடைய செய்யப் போகிறோம்?

இந்தப் புதிய மனிதனைக் குறித்த தேவனுடைய செயல்திட்டம் என்ன?

நமக்கிருக்கும் அதிமுக்கியமான பொறுப்பு என்ன?

ஆரம்பிக்கும் இடம்

புதிய மனிதன் எவ்வாறு உருவாக்கப்படுகிறான்? யோவான் எழுதிய சுவிசேஷம், புதிய மனிதனின் பிறப்பிடத்தைக் குறித்து நமக்குச் சொல்கிறது:

> *அவருடைய (இயேசுவினுடைய) நாமத்தின் மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை (இயேசுவை) ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனை பேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தார். அவர்கள் இரத்தத்தினாலாவது மாம்ச சித்தத்தினாலாவது, புருஷனுடைய சித்தத்தினாலாவது பிறவாமல், தேவனாலே பிறந்தவர்கள்.*
>
> *யோவான் 1:12-13*

இந்தப் புதிய மனிதன் ஒரு பிறப்பினால் உண்டாகிறான். யோவான் **3:5**-ம் வசனத்தில், இந்தப் புதிய பிறப்பு, "ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறப்பதினால்" உண்டாகிறது என்று இயேசு விளக்கிச் சொல்கிறார். பேதுரு இதையே நமக்கு இவ்வாறு விளக்கிச் சொல்கிறார்: "அழிவுள்ள வித்தினாலே அல்ல, என்றென்றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்ளதுமான தேவவசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறீர்களே" **(1 பேதுரு 1:23).**

முதலில், இந்த அழிவில்லாத வித்து என்பது எழுதப்பட்ட தேவனுடைய

வார்த்தையாக இருக்கிறது. அது தெய்வீகத் தன்மையை உடையதாய், கறைபட்டு கெட்டு அழிந்து போக முடியாததாய் மற்றும் நித்தியத்தன்மையை உடையதாய் இருக்கிறது. வேறு வார்த்தைகளில் சொன்னால், எழுதப்பட்ட தேவனுடைய வார்த்தையை விசுவாசத்தினாலே பெற்று, அதற்கு நாம் கீழ்படியும்போது, தேவனுடைய ஆவியானவர், கறைபட்டு கெட்டு அழிந்து போக முடியாத, நித்தியமான தெய்வீகத் தன்மையை நமக்குள் கொண்டு வருகின்றார்.

இந்த அழிவில்லாத வித்து, மாம்சத்தில் வெளிப்பட்ட தேவனுடைய வார்த்தையாகிய இயேசுவையும் குறிக்கின்றது. தேவனுடைய "வார்த்தை" என்ற இந்த சிறப்புப் பெயர், யோவான் 1:1-ம் வசனத்தில் மாத்திரம் மூன்று முறை பயன்படுத்தப்பட்டிருக்கிறது: "ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது." இது ஏற்ற காலத்தில், மனிதனாய் மாம்சத்தில் வெளிப்பட்ட நசரேயனாகிய இயேசுவைக் குறிக்கின்றது. வெளிப்படுத்தின விசேஷத்தில், ஆளுகை செய்யும்படி மகிமையோடும் வல்லமையோடும் பூமிக்குத் திரும்பி வரப் போகின்ற இயேசுவை குறித்து நமக்கு ஒரு விவரம் தரப்பட்டுள்ளது: "(அவர்) இரத்தத்தில் தோய்க்கப்பட்ட வஸ்திரத்தைத் தரித்திருந்தார்; அவருடைய நாமம் தேவனுடைய வார்த்தை என்பதே" (வெளிப்படுத்தல் 19:13).

கிறிஸ்துவின் சுவிசேஷம் என்பது பிரசங்கிக்கப்படுகிற தேவனுடைய வார்த்தையாக இருக்கிறது. தேவனுடைய ஜீவனைத் தாங்கியிருக்கிற வார்த்தையாய் இயேசு இருக்கிறார். இவ்விரண்டிற்கும் இடையில் ஒரு நேரடி உறவு இருக்கிறது. பிரசங்கிக்கப்படுகிற தேவனுடைய வார்த்தையை விசுவாசித்து நாம் ஏற்றுக் கொள்ளும்போது, அது ஒரு விதையைப் போல வேலை செய்கிறது. இந்த விதைதான், நம்முடைய கீழ்ப்படிதலின் மூலம், பரிசுத்த ஆவியானவர் செய்கிற கிரியை வழியாக, நமக்குள் ஒரு புதிய சுபாவத்தை உருவாக்குகிறது. இந்த புதிய சுபாவம், தன்னை உருவாக்கின விதையைப்போல அப்படியே இருக்கிறது. இது தெய்வீக தன்மையை உடையதாய், கெட்டு அழிந்து போக முடியாததாய், நித்தியத்தன்மையை உடையதாய் இருக்கிறது. அடிப்படையில், பழைய மனிதனுடைய சுபாவம், கெட்டு அழிந்து போகும் தன்மையுள்ளதாய் இருக்கிறது. புதிய மனிதனுடைய சுபாவம் கெட்டு அழிந்து போக முடியாததாய் இருக்கிறது. இது நமக்குள்

தேவனுடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் சுபாவத்தையே உருவாக்குகிறது.

நம்முடைய மனதை சத்தியத்துக்கு திறந்து கொடுத்தல்

நம்முடைய வாழ்க்கையில் தேவனுடைய நோக்கங்களை நிறைவேற்றி முடிக்கக்கூடிய ஒரு முதிர்ச்சியின் நிலைக்கு இந்தப் புதிய மனிதனை நாம் எவ்வாறு கொண்டு வரப்போகிறோம்? திரும்பவும் ஒருமுறை எபேசியர் 4-ம் அதிகாரத்திற்குச் செல்வோம். "பழைய மனிதனை களைந்து போட்டு" என்று 22-ம் வசனத்தில் சொல்வதற்கும், "புதிய மனிதனை தரித்துக் கொள்ளுங்கள்" என்று 24-ம் வசனத்தில் சொல்வதற்கும் இடையில், நாம் செய்ய வேண்டிய மிக முக்கியமான ஒரு காரியத்தை பவுல் இங்கு சொல்கிறார். நம்முடைய "உள்ளத்திலே புதிதான ஆவியுள்ளவர்களாய்" நாம் உருமாற வேண்டும் என்று 23-ம் வசனத்தில் அவர் சொல்கிறார். நம்முடைய மனதில் இதுதான் நடந்தாக வேண்டும். அதாவது, நாம் சிந்திக்கிற விதத்தில் ஒரு முற்றிலுமான உருமாற்றம் நடந்தாக வேண்டும்.

இந்த உருமாற்றம், பரிசுத்த ஆவியானவர் மட்டுமே செய்யக்கூடிய ஒரு கிரியையாக இருக்கிறது. ஆகையால்தான் இங்கு *"ஆவி"* என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. முன்பு நம்முடைய மனம், சாத்தானுடைய பொய்களினாலும் வஞ்சகங்களினாலும் ஆட்கொள்ளப்பட்டு, கட்டுப்படுத்தப்பட்டிருந்தது. எனவே இப்பொழுது நாம் நம்முடைய மனதை தேவனுடைய சத்தியத்தின் ஆவியானவராகிய பரிசுத்த ஆவியானவருக்கு திறந்து விட வேண்டும். அவரே நம்மை தேவனுடைய வார்த்தையின் சகல சத்தியத்திற்குள்ளும் நடத்திச் செல்கிறார்.

> *நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல் தேவனுடைய நன்மையும், பிரியமும், பரிபூரணமுமான சித்தமும் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்.*
>
> *ரோமர் 12:2*

இந்த உலகத்திற்கு ஒத்த வேஷம் தரியாதிருங்கள் என்று பவுல் இங்கு நம்மை அறிவுறுத்துகிறார். அதாவது பழைய மனிதன் தன்னுடைய

இஷ்டம்போல நம்முடைய வாழ்க்கையில் செயல்படும்படி இடம் கொடுக்காதீர்கள் என்று அவர் சொல்கிறார். அதற்குப் பதிலாக, தேவனுடைய சித்தத்தை கண்டறியும்படி, நாம் மறுரூபமடைய வேண்டும். இதுதான் புதிய மனிதனுடைய வளர்ச்சியும், முதிர்ச்சியுமாயிருக்கிறது. எபேசியர் 4-ம் அதிகாரத்திலும், ரோமர் 12-ம் அதிகாரத்திலும், புதிய மனிதனுடைய சுபாவத்தைப் பண்படுத்தி, பேணி வளர்க்கும் வேலையில் நடக்க வேண்டிய இந்த ஒரு இன்றியமையாத, அத்தியாவசியமான கட்டத்தைக் குறித்து பவுல் உறுதியாக, அழுத்தந்திருத்தமாக எடுத்துரைக்கிறார். அதுதான் பரிசுத்த ஆவியானவரின் கிரியையாகிய, நம்முடைய மனதை புதுப்பிக்கிற வேலையாய் இருக்கிறது. எபேசுவிலுள்ள கிறிஸ்தவர்களுக்காக பவுல் ஜெபித்தபோது, அவர்களுக்குள் என்ன நடக்க வேண்டும் என்பதைக் குறித்து அவர் இன்னும் விவரமாக எழுதுகிறார்: "தாம் (அவர்) நம்மை அழைத்ததினாலே நமக்கு உண்டாயிருக்கிற நம்பிக்கை இன்னதென்றும்......... நீங்கள் அறியும்படிக்கு அவர் உங்களுக்கு பிரகாசமான மனக்கண்களை கொடுக்க வேண்டுமென்றும் வேண்டிக்கொள்கிறேன்" (எபேசியர் 1:18,19).

"அவருடைய அழைப்பினாலே உண்டாகிற நம்பிக்கையை" அறிந்து உள்வாங்கிக் கொள்வதுதான் புதிய மனிதனுடைய சுபாவத்தின் முழுமையான வளர்ச்சியாகும். ஆனால் நாம் அதை அறிந்து கொள்வதற்கு முன், நம்முடைய மனக்கண்கள் பரிசுத்த ஆவியானவரால் பிரகாசிப்பிக்கப்பட வேண்டும். காரணம், நம்முடைய இருதயங்கள் இருளிலும் அறியாமையிலும் மூழ்கிக் கிடந்தன. எனவே பரிசுத்த ஆவியானவர் சத்தியத்தின் ஒளி வெளிச்சத்தை நம்முடைய இருதயங்களில் வீசச் செய்ய வேண்டும். அந்த சத்தியத்தின் ஒளி வெளிச்சத்தினால் நம்முடைய மனக்கண்கள் பிரகாசிப்பிக்கப்படும்போது, புதிய மனிதனைக் குறித்து தேவன் வைத்திருக்கிற அழைப்பை நம்மால் தெளிவாகக் காண முடியும்.

வேதவசனத்தை ஒரு கண்ணாடியைப்போல் பயன்படுத்தி, இந்த விஷயத்தில் பரிசுத்த ஆவியானவர் நமக்கு உதவி செய்கிறார். சிலர் தேவனுடைய வார்த்தையாகிய கண்ணாடியில் தங்களை உற்று நோக்கிப் பார்த்து விட்டு, எந்த மாற்றமுமில்லாமல் அப்படியே வெளியே நடந்து செல்கிறார்கள் என்று யாக்கோபு கூறுகிறார். இப்படிப்பட்ட நபர்களுக்கு தேவனுடைய வார்த்தையை வாசிப்பதினால் எந்த வித நிரந்தரமான

நன்மையும் உண்டாகப் போவதில்லை. காரணம், அவர்கள் கண்ணாடியில் தங்களுடைய சாயலைக் கண்ட பிறகும், பின்திரும்பி வழி விலகிச் சென்று விடுகிறார்கள். கண்ணாடி அவர்களுக்கு என்ன காண்பித்தது என்பதை அவர்கள் மறந்து விடுகிறார்கள். அதற்கேற்ற சீர்திருத்த நடவடிக்கையையும் அவர்கள் எடுப்பதில்லை. இதற்கு மாற்று வழி என்ன என்பதை யாக்கோபு இவ்வாறு சொல்கிறார்: "சுயாதீனப் பிரமாணமாகிய பூரணப் பிரமாணத்தை உற்றுப்பார்த்து, அதிலே நிலைத்திருக்கிறவனே கேட்கிறதை மறக்கிறவனாயிராமல், அதற்கேற்ற கிரியை செய்கிறவனாயிருந்து தன் செய்கையில் பாக்கியவானாயிருப்பான்" (யாக்கோபு 1:25).

உண்மையில், அந்த கண்ணாடி, இரண்டு மனிதர்களுடைய சுபாவங்களையும் நமக்குக் காண்பிக்கிறது. அது முதலில் நம்முடைய பழைய விழுந்துபோன ஜென்ம சுபாவத்தைக் காண்பிக்கிறது. அதாவது சிலுவை மரண தண்டனைக்குத் தகுதியானவனான பரபாஸ் என்ற அந்தப் பழைய குற்றவாளி மனிதனுடைய சுபாவத்தை அது காண்பிக்கிறது. இப்பொழுது அந்தத் தண்டனைத் தீர்ப்பை நாம் ஏற்றுக் கொண்டு, அதே நேரத்தில் தேவனுடைய வாக்குத்தத்தத்தையும் நாம் விசுவாசிக்கிறோம் என்றால், பிறகு அந்தக் கண்ணாடி இன்னொன்றையும் நமக்குக் காண்பிக்கிறது. கிருபையினால் நாம் என்னவாக மாற முடியும், அதாவது புதிய மனிதனுடைய சுபாவத்தையும் அந்தக் கண்ணாடி இப்பொழுது நமக்கு காண்பிக்கிறது. இதைத்தான் பவுல் 2 கொரிந்தியர் 3:18-ல் அப்படியே கூறுகிறார்.

> *நாமெல்லாரும் திறந்த முகமாய்க் தேவனுடைய மகிமையைக் கண்ணாடியிலே காண்கிறது போலக் கண்டு ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்தச் சாயலாகத்தானே மகிமையின் மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிறோம்.*
>
> *2 கொரிந்தியர் 3:18*

மறுரூபப்படுகிறோம் என்ற வார்த்தையை மறுபடியும் கவனியுங்கள். நம்முடைய மனம் புதிதாகிறதினாலே நாம் மறுரூபமாக வேண்டும் என்று பவுல் சொன்னதை இங்கு நினைவுகூருங்கள். உண்மையில், தேவனுடைய வார்த்தையாகிய கண்ணாடியை நாம் உற்று நோக்கிப் பார்த்து, கர்த்தருடைய மகிமையை அதில் நாம் காணும்போது, நம்முடைய மனம் மறுரூபமாகிறது.

அந்த சாயலுக்கு நாம் உருமாற வேண்டும் என்றுதான் தேவன் விரும்புகிறார். புதிய மனிதனுடைய சுபாவத்தில் தேவனுடைய அந்தச் சாயல்தான் மீண்டும் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இன்னொன்றையும் நாம் இந்த வசனத்தில் பார்க்கின்றோம். நமக்குள் நடக்கும் இந்த மாற்றம், ஒரு தொடர்ச்சியான வெற்றியாக, வெற்றியின் மேல் வெற்றியாக ("மகிமையின் மேல் மகிமை") இருக்கிறது. பரிசுத்த ஆவியானவர்தான், இந்தத் தொடர்ச்சியான வெற்றியை நம்முடைய வாழ்க்கையில் செயல்படுத்துகிறவராய் இருக்கிறார். ஆனால் தேவனுடைய வார்த்தையாகிய கண்ணாடியை நாம் உற்று நோக்கிப் பார்த்துக் கொண்டிருக்கும்போது மட்டுமே, அவர் நமக்குள் இந்தக் கிரியையை செய்கிறார்!

நம்மைக் குறித்த தேவனுடைய திட்டம்

புதிய மனிதனைக் குறித்த தேவனுடைய திட்டம் என்ன? என்ன நோக்கத்திற்காக தேவன் புதிய மனிதனை சிருஷ்டித்தார்? இந்தக் கேள்விகளைப் புரிந்து கொண்டு, இவைகளுக்குப் பதில் அளிக்கும்படி, மனுக்குலத்தைக் குறித்து ஆரம்பத்திலே தேவன் வைத்திருந்த நோக்கத்திற்கு நாம் திரும்பிச் செல்ல வேண்டும். கிறிஸ்துவுக்குள் தேவனோடு நமக்கு உண்டாயிருக்கிற உறவு மற்றும் நம்முடைய ஸ்தானத்தைக் குறித்துப் பேசும்போது, பவுல் இவ்வாறு சொல்கிறார்:

> *தமது சித்தத்தின் ஆலோசனைக்குத் தக்கதாக எல்லாவற்றையும் நடப்பிக்கிற அவருடைய தீர்மானத்தின்படியே, நாங்கள் முன்குறிக்கப்பட்டு, கிறிஸ்துவுக்குள் அவருடைய சுதந்தரமாகும்படி தெரிந்துகொள்ளப்பட்டோம்.*
>
> *எபேசியர் 1:12*

இது ஒரு நல்ல செய்தியாகும். இந்த புத்தகத்தின் 2-ம் அத்தியாயத்தில், நம்முடைய அழைப்பின் ஒரு பகுதியாக, நாம் முன் அறியப்பட்டு, முன் குறிக்கப்பட்டு, தெரிந்துகொள்ளப்பட்டோம் என்பதைக் குறித்து நாம் பேசினோம். ஒன்றை நாம் இன்னும் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். தேவன் தம்முடைய நோக்கத்தை நிலைநாட்டும்போது, அவர் அதை ஒருபோதும் கைவிடுவதில்லை! தம்முடைய சித்தத்தின் நோக்கத்திற்கு

தக்கதாக சகலத்தையும் நடப்பிக்கிற தேவனுடைய திட்டத்தின் வரிசையில்தான் நாமும் இணைந்திருக்கிறோம். இதன் முடிவில், சகலமும் அவருடைய சித்தத்தோடுதான் இணையப் போகின்றன. மனிதனை சிருஷ்டித்தபோது ஆரம்பத்தில் தேவன் கொண்டிருந்த நோக்கத்திற்கும் இது பொருந்தும். பாவமும் சாத்தானும் இதைத் தாமதித்திருக்கலாம். ஆனால் அது நிகழ்வதை அவை ஒருபோதும் நிரந்தரமாகத் தடை செய்து விட முடியாது! காலத்தைக் குறித்து நாம் கவலைப்படுவதுபோல, தேவன் கவலைப்படுவதில்லை. உண்மையை சொல்லப் போனால், அவர் அளவு கடந்த பொறுமை உடையவர். பல ஆண்டுகள் ஆகலாம் அல்லது பல நூற்றாண்டுகளும் கடந்து போகலாம். ஒருவேளை பல யுகங்கள் கூட கடந்து போகலாம். ஆனால் இறுதியில், தேவன் தமது நோக்கத்தையும் திட்டத்தையும் நிச்சயம் செயல்படுத்தியே தீருவார்.

மனிதனை சிருஷ்டித்ததில் ஆரம்பத்தில் தேவனுக்கிருந்த நோக்கத்தைக் குறித்து வேதாகமத்தின் தொடக்கத்தில் கூறப்பட்டுள்ளது:

> *பின்பு தேவன்: நமது சாயலாகவும் நமது ரூபத்தின் படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக; அவர்கள் சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும், மிருக ஜீவன்களையும், பூமியனைத்தையும், பூமியின் மேல் ஊரும் சகலப் பிராணிகளையும் ஆளக்கடவர்கள் என்றார்.*
>
> *ஆதியாகமம் 1:26*

தேவன் *மனிதனை* குறித்து முதலில் ஒருமையிலும், பிறகு பன்மையிலும் பேசுவதை நாம் இங்கு கவனிக்க வேண்டும். ‘‘நாம் மனிதனை உருவாக்குவோம்,” என்று அவர் முதலில் சொல்கிறார். பிறகு அவர் இவ்வாறு சொல்கிறார், “அவர்கள் ஆளக்கடவர்கள்.” வேறு வார்த்தைகளில் சொன்னால், அவர் இங்கு ஒரு தனி மனிதனைக் குறித்துப் பேசவில்லை. முழு மனுகுலத்தைக் குறித்த தம்முடைய நோக்கத்தைப் பற்றித்தான் அவர் இங்கு பேசிக் கொண்டிருக்கிறார்.

தேவன் பேசின இந்த வார்த்தைகளில் பிரதானமாக இரண்டு முக்கிய நோக்கங்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றன. முதலாவதாக, மனிதன் தேவனுடைய சாயலை வெளிப்படுத்த வேண்டியவனாக இருக்கிறான்.

சிருஷ்டிப்பைக் குறித்து ஆதியாகமத்தின் ஆரம்ப அதிகாரங்களில் எழுதப்பட்டிருக்கிறபடி, தேவன் மனிதனை ஆறாவது நாளில் சிருஷ்டித்தார். பிறகு அவர் ஓய்வெடுத்தார். அவர் ஏழாவது நாளை தமது ஓய்வு நாளாக்கிக் கொண்டார். இது ஒரு உண்மையை வெளிக்கொண்டு வருகின்றது. தேவன் தம்முடைய சொந்த சாயலை வெளிக்கொண்டு வரும் வரை, அவர் ஓய்ந்திருக்க மாட்டார் என்பது இதிலிருந்து தெளிவாகிறது. சிருஷ்டிப்பின் மற்ற ஒவ்வொன்றும் இந்த ஒரே மேலான, முதன்மையான நோக்கத்திற்காகவே கட்டி எழுப்பப்பட்டன. அதாவது, தேவன் தம்முடைய சொந்த சாயலை மறுபடியும் வெளிக்கொண்டு வர வேண்டும். இது புது சிருஷ்டிப்பைக் குறித்தும் அப்படியே உண்மையானதாய் இருக்கிறது என்று நான் விசுவாசிக்கிறேன். தம்முடைய சொந்த சாயலை திரும்பவும் வெளிக்கொண்டு வரும் வரை தேவன் ஓய்ந்திருக்க மாட்டார்!

மனிதனைக் குறித்த இரண்டாவது நோக்கம் இதுதான்: தேவனுடைய சார்பில், தேவனுடைய அதிகாரத்தை மனிதன் பயன்படுத்த வேண்டும். "அவர்கள் ஆளக்கடவர்கள்" என்று அவர் மனிதனைக் குறித்து சொன்னார். பிறகு அவர் "பூமியனைத்தையும்" என்று இதையும் சேர்த்துச் சொன்னார். மனிதன் என்பவன் ஆளுகை செய்யும்படி தேவனால் நியமிக்கப்பட்டவனாக இருக்கிறான். தேவனுடைய அதிகாரத்தை அவருடைய சார்பில் பூமியனைத்தின் மீதும் செயல்படுத்த வேண்டியவனாய் மனிதன் இருக்கிறான்.

மனிதனைக் குறித்து தேவன் நினைத்திருந்த இந்த இரண்டு நோக்கங்களும் நிறைவேறி விடாதபடி மனிதனுடைய பாவம் தடுத்து விட்டது. முதலாவதாக, மனிதனுக்குள் இருந்த தேவனுடைய சாயல், பாவத்தினால் சீர்குலைந்து போனது. இரண்டாவதாக, ஆளுகை செய்கிறவனாக தேவனால் நியமிக்கப்பட்ட மனிதன், ஒரு அடிமையாகிப் போனான். அவன் பாவத்திற்கும் சாத்தானுக்கும் அடிமையானான்.

நம்முடைய பொறுப்பும், சென்றடையப் போகும் இடமும்

நம்முடைய பிரதானமான பொறுப்பு என்ன? தேவன் எப்பொழுதுமே தம்முடைய நோக்கத்தையும், திட்டத்தையும் நிறைவேற்றி முடிக்கும்படி வேலை செய்வார் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். ரோமர்

8:29-ம் வசனம் இந்தப் பார்வையை நமக்குக் கொடுக்கிறது: "தம்முடைய (தேவனுடைய) குமாரன் அநேக சகோதரருக்குள்ளே முதற்பேறானவராயிருக்கும் பொருட்டு, தேவன் எவர்களை முன்னறிந்தாரோ அவர்களைத் தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன்குறித்திருக்கிறார்."

புதிய மனிதனைக் குறித்த தேவனுடைய நோக்கமும், புதிய மனிதன் சென்றடையும்படி தேவன் நியமித்த இடமும் இதுதான்: முதலாவதாக, அவன் அநேக சகோதரருக்குள் முதற்பேறானவரான தேவனுடைய குமாரனின் சாயலுக்கு ஒப்பாக உருமாற வேண்டும். அநேகம் பிள்ளைகளை பெற்றெடுத்து, அவர்கள் எல்லோருமே தேவனுடைய மூத்த குமாரனாகிய, தேவனுடைய முதற்பேறானவராகிய, தேவனுடைய ஒரே பேறான குமாரனாகிய இயேசுவினுடைய சாயலை தங்களுடைய வாழ்க்கையில் வெளிப்படுத்த வேண்டும் என்பதுதான் தேவனுடைய திட்டமாக இருக்கிறது. இதுதான் புது சிருஷ்டியின், நமக்குள் வாழும் புதிய மனிதனின் முதல் பொறுப்பாய் இருக்கிறது.

கிறிஸ்துவின் சார்பாக, அவருடைய அதிகாரத்தை பயன்படுத்துவதே நம்முடைய இரண்டாவது பொறுப்பாய் இருக்கிறது. உயிர்த்தெழுதலுக்குப் பிறகு, இயேசு தம்முடைய சீஷர்களிடம் இவ்வாறு சொல்கிறார், "வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் நீங்கள் புறப்பட்டுப்போய் சகல ஜாதிகளையும் சீஷராக்குங்கள்" (மத்தேயு 28:18-19).

இங்கு இன்னுமொரு *ஆகையால்* என்ற வார்த்தையை நாம் காண்கிறோம். இயேசு இங்கு சொல்கிறார், "எனக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் நான் நியமித்த என்னுடைய பிரதிநிதிகளாக, என்னுடைய சார்பில் என்னுடைய அதிகாரத்தைப் பயன்படுத்தும்படி நான் உங்களை அனுப்புகிறேன்." கிறிஸ்துவினுடைய அதிகாரத்தை அவருடைய சார்பில் பயன்படுத்தி, எல்லா தேசங்களிலும் உள்ளவர்களை அவருடைய சீஷர்களாக உருமாற்றுவதே நம்முடைய பொறுப்பாய் இருக்கிறது.

நாம் செய்யும்படி இயேசு நம்மிடம் சொன்ன இரண்டு செயல்களில் இது வெளிப்படுகிறது. முதலாவதாக, நாம் அவர்களுக்கு பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவரின் பெயரால் ஞானஸ்நானம் கொடுக்கிறோம் (மத்தேயு 28:19-ம்

வசனத்தைப் பார்க்கவும்). வேறு வார்த்தைகளில் சொன்னால், திரியேக தேவனுடைய நாமத்தை நாம் பயன்படுத்தும்போது, நாம் செய்யும் எல்லா செயல்களின் பின்னணியிலும் திரியேக தேவனின் அதிகாரம் செயல்படுகிறது என்பதை இது காண்பிக்கிறது. அடுத்ததாக நாம் செய்ய வேண்டிய காரியம், இயேசு கட்டளையிட்ட எல்லாவற்றையும் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு கற்பிப்பதாகும் (20-ம் வசனத்தைக் காண்க). நம்முடைய போதனை, இயேசுகிறிஸ்து நம்மை நம்பி கொடுத்திருக்கும் அதிகாரத்தின் வரம்புக்குட்பட்டிருக்க வேண்டும். நமக்குப் பிரியமானதையெல்லாம் போதிக்கும்படி நாம் நியமிக்கப்படவில்லை. இயேசு முதன்முதலில் தம்முடைய சீஷர்களாய் இருந்தவர்களுக்கு எதையெல்லாம் கற்றுக் கொடுத்தாரோ, அதையெல்லாம் கற்றுக் கொடுக்கும்படியே நாம் நியமிக்கப்பட்டிருக்கிறோம். ''இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன்,'' என்று 20-ம் வசனத்தில் இயேசு சொல்லும்போது, அவர் குறிப்பிட்டதுபோல, இது இவ்வுலகத்தின் முடிவுபரியந்தம் தொடர்ந்து நடந்தாக வேண்டும்.

நாம் சிந்திக்க வேண்டிய இன்னொரு முக்கிய உண்மையும் இங்கு உண்டு. இதுதான் அது: புதிய மனிதனுக்குரிய இந்த நோக்கங்களை -யெல்லாம் எந்த ஒரு தனிப்பட்ட விசுவாசியினாலும் முழுமையாக நிறைவேற்றி விட முடியாது. மாறாக, அவைகளின் நிறைவேறுதல், கிறிஸ்துவினுடைய சரீரமாகிய சபையிலிருக்கும் ஒட்டு மொத்த புதிய மனிதர்களின் கூட்டு முயற்சியினால்தான் சாத்தியமாகிறது. பவுல் இங்கு கூறுகிறார்:

> *எப்படியெனில், அவரே (இயேசுவே) நம்முடைய சமாதான காரணராகி, இருதிறத்தாரையும் (யூதர் மற்றும் புறஜாதியார்) ஒன்றாக்கி, பகையாக நின்ற பிரிவினையாகிய நடுச்சுவரைத் தகர்த்து, சட்ட திட்டங்களாகிய நியாயப்பிரமாணத்தைத் தம்முடைய மாம்சத்தினாலே ஒழித்து, இருதிறத்தாரையும் தமக்குள்ளாக ஒரே புதிய மனுஷனாக சிருஷ்டித்து......*
>
> *எபேசியர் 2:14-15.*

இந்த ஒரே புதிய மனிதன், எல்லா தேவனுடைய ஜனங்களையும் உள்ளடக்கியவனாக இருக்கிறான். கிறிஸ்துவினுடைய ஒட்டுமொத்த,

ஒருங்கிணைந்த சரீரத்தின் மூலமாக இந்த ஒரே புதிய மனிதன் செயல்படுகிறான். பவுல் இதை இவ்வாறு விளக்கிச் சொல்கிறார், “அவராலே (இயேசுவாலே) சரீரம் முழுவதும், அதற்கு உதவியாயிருக்கிற சகல கணுக்களினாலும் இசைவாய் கூட்டி இணைக்கப்பட்டு, ஒவ்வொரு அவயவமும் தன்தன் அளவுக்குத்தக்கதாய் கிரியை செய்கிறபடியே, அது அன்பினாலே தனக்கு பக்திவிருத்தி உண்டாக்குகிறதற்கேதுவாகச் சரீரவளர்ச்சியை உண்டாக்குகிறது” (எபேசியர் 4:16).

ஒன்றிணைந்த ஒரே முழுமையான சரீரமாகிய நாம், ஒன்றிணைந்த ஒரே புதிய மனிதனை வெளிப்படுத்துகிறோம். இந்த புதிய மனிதன் கிறிஸ்துவினுடைய பூமிக்குரிய ஊழியத்தை திரும்பவும் இங்கு அப்படியே செயல்படுத்துகிறான். இவ்வாறாக அவன் இந்தப் பொறுப்பை நிறைவேற்றுகிறான்: நாம் இந்த உலகத்திற்கு தேவனைக் காண்பிக்கிறோம். நாம் தேவனுடைய சார்பில் அவருடைய அதிகாரத்தை இங்கு செயல்படுத்துகிறோம்.

தனிப்பட்ட விதத்திலும், ஒட்டு மொத்தமாக சபையாரோடும் ஒன்றிணைந்து புதிய மனிதனுக்குரிய விடுதலையில் நாம் நடக்காதவரை, நம்மால் நம்முடைய அழைப்பை நிறைவேற்ற முடியாது, தேவனுடைய ராஜ்யத்தை நம்மால் விஸ்தரிக்க முடியாது, நம்முடைய முழு ஆற்றலையும் நம்மால் அடைய முடியாது, சரியான அதிகாரத்தில் நம்மால் செயல்பட முடியாது. அடுத்ததாக, கிறிஸ்துவினுடைய சரீரமாகிய சபையின் ஒட்டு மொத்த ஒரே புதிய மனிதனுடைய சுதந்தரம் என்பது எதைக் குறிக்கிறது என்று நாம் தொடர்ந்து பார்ப்போம்.

11

உங்களுக்கு அளிக்கப்பட்ட பணியை எவ்வாறு நிறைவு செய்வது?

ஆவியும் மணவாட்டியும், "வா!" என்கிறார்கள்.
வெளிப்படுத்தின விசேஷம் 22:17

மிகவும் எளிமையான வார்த்தைகளில் சொன்னால், கிறிஸ்துவின் சரீரமாகிய சபைதான் மணவாட்டி என்று அழைக்கப்படுகிறாள். ஆவியானவர் என்ன சொல்லுகிறாரோ, அதை நாம் எடுத்துக் கொண்டு செயல்படும்போது, நாம் நம்முடைய அழைப்பிற்கு கீழ்படிந்து நடக்கிறோம். "வா" என்று ஆவியானவர் சொல்கிறதினாலோ அல்லது "வா" என்று பிரசங்கியார் சொல்கிறதினாலோ, தேவனுடைய நோக்கம் நிறைவேறி விடப் போவதில்லை. சபையாகிய கிறிஸ்துவினுடைய முழு சரீரமும் "வா" என்று சொல்லும்படி, தேவன் காத்திருக்கிறார். அது எப்பொழுது நிகழும்? மணவாட்டியாகிய சபை, ஆவியானவரின் வழிநடத்துதலுக்கு முழுமையாய் கீழ்ப்படிந்து நடக்கும்போது மட்டுமே அது நிகழும்.

மெய்யாகவே, மணவாட்டி அல்லது மணப்பெண் பின்பற்றி வாழும் அடிப்படை கோட்பாடு, மனித வரலாற்றின் உச்சக்கட்ட காட்சியாயிருக்கிறது. இந்த உச்சகட்ட காட்சியை நோக்கியே வரலாறு முழுவதும் கட்டியெழுப்பப்பட்டு வருகிறது. ஒரு திருமண நிகழ்வை நோக்கியே முழு வரலாற்றின் மற்ற எல்லா நிகழ்வுகளும் கட்டியெழுப்பப்படுகிறது என்பதை சிந்திக்கும்போதே உற்சாகமாக இருக்கிறது. தேவனுடைய பார்வையில் ஒரு

திருமண நிகழ்வு எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை வெகு சில கிறிஸ்தவர்களே உணர்ந்திருக்கிறார்கள். நாம் திருமண உறவை கனம் பண்ணுகிறோம். திருமண உறவில் உண்மையாயிருக்க வேண்டும் என்பதை நாம் நம்புகிறோம். ஆனால் ஒரு திருமணத்தைக் குறித்து போதுமான அளவு நாம் பரவசமும், உற்சாகமும் அடைகிறோம் என்று நான் நினைக்கவில்லை.

நானும் என் மனைவி ரூத்தும் சேர்ந்து, "தேவன் திருமண உறவில் இணைப்பவர்" என்ற அர்த்தத்தில் வரும் *God is a Matchmaker (1986*-ம் வருடம்*)* என்ற தலைப்பில் ஒரு புத்தகத்தை எழுதினோம். இதில் உங்களுடைய திருமணத்தைக் குறித்த தேவனுடைய திட்டத்தை நீங்கள் எவ்வாறு கண்டுபிடிக்க முடியும் என்பதை இந்தப் புத்தகத்தில் விவரமாக எழுதியிருக்கிறோம். உங்களுக்கு திருமணமான பிறகு நீங்கள் எப்படி வாழ வேண்டும் என்பதைக் குறித்து இந்தப் புத்தகத்தில் நாங்கள் எழுதவில்லை. மாறாக, உங்களுக்கென்று தேவன் நியமித்திருக்கிற வாழ்க்கைத்துணையை நீங்கள் திருமணம் செய்யும்படி, அதற்கேற்ற வாழ்க்கையை நீங்கள் எவ்வாறு வாழ வேண்டும் என்பதைக் குறித்துத்தான் இந்தப் புத்தகத்தில் எழுதியிருக்கிறோம். திருமணம் செய்யப் போகும் ஒவ்வொருவருக்கும் தேவன் ஒரு வாழ்க்கைத்துணையை நியமித்திருக்கிறார் என்றுதான் நான் விசுவாசிக்கிறேன். "நான் வசிக்க வேண்டிய வீட்டை தேவன் எனக்குக் காட்டினார். நான் வாங்க வேண்டிய கார், நான் அணிய வேண்டிய ஆடையை தேவன் எனக்குக் காண்பித்தார்," என்று அநேக கிறிஸ்தவர்கள் சொல்வதை நான் கேட்டிருக்கிறேன். தேவன் அதையெல்லாம் காண்பிப்பார் என்றால், நீங்கள் யாரை திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று தேவன் காண்பிப்பதென்பது மற்ற எல்லாவற்றையும் விட மிக மிக அதிகமான முக்கியத்துவம் வாய்ந்தது என்பது நிச்சயம்.

என்னுடைய முதல் மனைவி இறந்த பிறகு, நான் இரண்டாவது முறை திருமணம் செய்து கொண்டேன். என்னுடைய இரண்டு திருமணங்களிலும், நான் யாரை திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்பதை தேவன் எனக்கு தமது இறையாண்மையிலும், இயற்கைக்கு அப்பாற்பட்ட விதத்திலும் வெளிப்படுத்திக் காண்பித்தார். குணாதிசயங்களை நிதானிப்பதில் நான் தேர்ந்தவனல்ல என்பதை தேவன் அறிந்திருக்கிறார். (சில வகையான

ஆட்கள் என்னை எளிதில் ஏமாற்றி விடுவார்கள்). ஆகையால் என்னுடைய வாழ்க்கைத்துணையை நானே தேர்ந்தெடுக்குமளவிற்கு தேவன் என்னை நம்பவில்லை. நான் யாரைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதை தேவன் எனக்கு மிகவும் தெளிவாகக் காண்பித்தார். இரண்டு முறையும், நான் சரியான தெரிந்து கொள்ளுதலைத்தான் செய்தேன் என்பதைக் குறித்து நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

மணவாட்டியின் வஸ்திரம்

மனித வரலாறு ஒரு திருமணத்திலிருந்து ஆரம்பிக்கிறது. மனித வரலாறு ஒரு திருமணத்தோடு நிறைவடைகிறது. ஆட்டுக் குட்டியானவரின் கல்யாண விருந்து, தேவன் தம்முடைய ஜனங்களுக்கென்று வைத்திருக்கின்ற நோக்கம் முழுவதையும் நிறைவடையச் செய்கிறது. திருமணத்தைக் குறித்து நினைக்கும்போது நீங்கள் உற்சாகம் அடையவில்லை என்றால், நீங்கள் இன்னும் தேவனுடைய நோக்கங்களோடு ஒருமனப்பட்டிருக்கவில்லை என்று அர்த்தம். இந்தப் பிரபஞ்சம் முழுவதுமே அதைக் குறித்து உற்சாகமடைய போகிறது. அந்த வைபவத்தில் நாம் கேட்கப் போகிற துதியின் சத்தம், இந்தப் பிரபஞ்சம் முழுவதிலும் முன் ஒருபோதும் இதுவரை எதிரொலிக்காத அளவிற்கு இருக்கப் போகிறது.

> *"நாம் சந்தோஷப்பட்டுக் களிகூர்ந்து அவருக்குத் துதி செலுத்தக் கடவோம். ஆட்டுக் குட்டியானவருடைய கலியாணம் வந்தது. அவருடைய மனைவி தன்னை ஆயத்தம் பண்ணினாள்," என்று சொல்லக் கேட்டேன். சுத்தமும் பிரகாசமுமான மெல்லிய வஸ்திரம் தரித்துக் கொள்ளும் படி அவளுக்கு அளிக்கப்பட்டது. அந்த மெல்லிய வஸ்திரம் பரிசுத்தவான்களுடைய நீதிகளே.*
>
> *வெளிப்படுத்தின விசேஷம் 19:7-8*

பொதுவாக, ஒரு பெண்ணுக்கு திருமணமாகும்போது, அவள் தன்னுடைய திருமண வைபவத்தில் என்ன ஆடையை அணிந்து கொள்ளப் போகிறாள் என்பதைக் குறித்து வழக்கமாக அதிக அக்கறை கொள்வாள். நான் சென்று வந்த அநேக நாடுகளிலும், நான் சந்தித்த பல்வேறு கலாச்சார பின்னணியை உடைய ஜனங்களின் மத்தியிலும் இது உண்மையாயிருப்பதை நான்

எப்பொழுதும் கண்டிருக்கிறேன். இதை உலகப்பிரகாரமான ஒரு உணர்வாகவோ அல்லது தற்பெருமையின் உணர்வாகவோ நான் பார்க்கவில்லை. உண்மையில், இது தேவனைப் பிரியப்படுத்துகிறது என்றுதான் நான் விசுவாசிக்கிறேன்.

தன்னுடைய திருமண உடையைக் குறித்து மணப்பெண்ணுக்கு இருக்கும் அக்கறை, கிறிஸ்துவினுடைய மணவாட்டியாகிய சபைக்கும் இருக்கிறது. ''மென்மையானதும், சுத்தமும், பிரகாசமுமான'' விசேஷமான ஒரு உடையினால் அவள் அலங்கரிக்கப்படப் போகிறாள். அது பிரகாசமாய் ஜொலிக்கின்ற ஒரு வஸ்திரமாய் இருக்கப் போகின்றது. "பரிசுத்தவான்களின் நீதியான கிரியைகளினால்" அந்த ஆடை நெய்யப்பட்டிருக்கும் என்று வெளிப்படுத்தின விசேஷம் நமக்குச் சொல்கிறது. இதிலிருந்து ஒன்றை நான் மிகவும் தெளிவாகப் புரிந்து கொள்கிறேன். தேவனுடைய எதிர்பார்ப்புக்கேற்ப தகுதியான, பொருத்தமான ஒரு உடையை கிறிஸ்துவின் மணவாட்டியாகிய சபை உடுத்தியிருக்க வேண்டுமென்றால், சபையாகிய மணவாட்டி என்னவெல்லாம் செய்ய வேண்டும் என்று தேவன் நியமித்திருக்கிறாரோ, அதையெல்லாம் சபை செய்தாக வேண்டும். இல்லையெனில், அவள் உடுத்த வேண்டிய தகுதியான ஆடையை அவள் உடுத்தாமல் நிற்பாள். திருமணத்திற்காக நாம் ஆயத்தமாவதற்கு முன், தேவன் நம்மிடத்தில் எதிர்பார்க்கிற ஒவ்வொரு நீதியின் கிரியையையும், தனிப்பட்ட நபர்களாய் மாத்திரமல்ல, கிறிஸ்துவினுடைய சரீரமாகிய சபையாகிய நாம் கூட்டாகவும் நிறைவேற்ற வேண்டும்.

இயேசுகிறிஸ்துவின் மீது வைக்கும் விசுவாசத்தின் மூலம் நாம் இரட்சிக்கப்படும்போது, நாம் நீதியென்னும் ஈவைப் பெறுகிறோமென்று இந்தப் புத்தகத்தின் 4-ம் அத்தியாயத்தில் கற்றுக் கொண்டோம். அதற்காக நாம் பிரயாசப்பட வேண்டியதில்லை. அது நமக்கு ஒரு ஈவாகக் கொடுக்கப்படுகிறது. கிறிஸ்துவினுடைய நீதியென்னும் வஸ்திரத்தினால் நாம் உடுத்துவிக்கப்படுகிறோம். இது ஆச்சரியமான ஒரு விஷயமாகும். ஆனால் வெளிப்படுத்தின விசேஷத்தில் எழுதப்பட்ட இவ்வசனம், விசுவாசத்தின் அடிப்படையில் நமக்கு ஒரு ஈவாக *அருளப்பட்ட* நீதியைக் குறித்துப் பேசவில்லை. *செயலில் காண்பிக்கப்பட்ட* நீதியைக் குறித்து இவ்வசனம் பேசுகிறது. இது தனிநபர்களாய் நம்முடைய நடத்தைகள் மற்றும்

சூழ்நிலைகளை நாம் எதிர்கொள்ளும் விதத்தின் அடிப்படையில் வெளிப்படும் நீதியின் கிரியைகளைக் குறிக்கிறது. இந்த நீதியின் செயல்கள்தான் நித்தியத்தில் நாம் அணியப்போகும் ஆடையாகும்.

என்னுடைய அழைப்பில் நான் தொடர்ந்து தரித்து நிலைத்திருக்கும்படி இது எனக்கு மிகுந்த ஊக்கமளிக்கிறது. என்னுடைய ஊழியத்தில், நான் செய்யும்படி தேவன் நியமித்திருக்கிற நீதியின் கிரியைகளில் ஒன்றையும் செய்யாமல் விட்டு விடக் கூடாது என்பதில் நான் மிகவும் கவனமாயிருக்கிறேன். ஆனால் இது தனிப்பட்ட விதத்தில் நம் ஒவ்வொருவரையும் தாண்டிய ஒரு பொறுப்பாயிருக்கிறது. இது கிறிஸ்துவின் சரீரமாகிய சபை முழுவதற்கும் உரிய பொறுப்பாயிருக்கிறது. ஆட்டுக்குட்டியானவரின் கல்யாண விருந்திற்கு நாம் ஆயத்தமாவதற்கு முன், நமக்குக் கொடுக்கப்பட்ட பணிகளையும், ஒவ்வொரு நீதியின் கிரியையையும் சபையோராய் கூட்டாக நிறைவேற்ற வேண்டியவர்களாய் நாம் இருக்கிறோம். இந்த வார்த்தைகளை இன்னும் ஒரு முறை வாசிப்போம்: "சுத்தமும் பிரகாசமுமான மெல்லிய வஸ்திரம் தரித்துக் கொள்ளும்படி அவளுக்கு அளிக்கப்பட்டது (உடுத்துவிக்கப்பட்டது); அந்த மெல்லிய வஸ்திரம் பரிசுத்தவான்களுடைய நீதிகளே."

கீழ்ப்படிதலும், விசுவாசத்தில் செய்யப்பட்ட ஒவ்வொரு நீதியின் கிரியையுமே இந்த மெல்லிய ஆடையின் நூலிழைகளாய் இருக்கின்றன. நம்மில் சில கிறிஸ்தவர்கள் தங்களுடைய வழிகளை மாற்றிக் கொள்ளா விட்டால், அளவில் குறைவான திருமண உடைகளைத்தான் அணிந்திருப்பார்களோ என்று நான் நினைத்துப் பார்க்கிறேன். இது சீர் தூக்கிப் பார்க்க வேண்டிய ஒரு சிந்தனையாய் இருக்கிறது. இதன் மீது கவனத்தைப் பதித்தால் அது நம் ஒவ்வொருவருக்குமே நல்லது. சபையாகிய மணவாட்டி ஆயத்தமாவதற்கு முன், சபையோராகிய நமக்கு நியமிக்கப்பட்ட எல்லா நீதியின் கிரியைகளையும் நாம் நிறைவேற்றி முடிக்க வேண்டும்.

ராஜ்யத்தின் பணிகள்

ஆட்டுக்குட்டியானவரின் கல்யாண விருந்துக்கு நம்மை ஆயத்தப்படுத்திக் கொள்ளும்படி, சபையோராகிய நம்மிடத்தில் எப்படிப்பட்ட அடிப்படை குணாதிசயம் இருக்க வேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கிறார் என்பதை

நாம் புரிந்து கொள்ள வேண்டியது அவசியமாயிருக்கிறது. சபையோராகிய நமக்கிருக்கும் பொறுப்பு, தேவனுடைய ராஜ்யத்தில் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற பல்வேறு பணிகளோடு தொடர்புடையதாயிருக்கிறது.

புதிய ஏற்பாடு, சுவிசேஷத்தைப் பற்றி பேசும்போது, கிட்டத்தட்ட எல்லா இடங்களிலும் அதை "ராஜ்யத்தின் சுவிசேஷம்" என்றே அழைக்கிறது. சுவிசேஷம் என்பது, தேவன் தம்முடைய ராஜ்யத்தை பூமியில் ஸ்தாபிக்கப் போகிறார் என்ற நற்செய்தியாய் இருக்கிறது. இந்த நற்செய்தியோடு உள்ள தொடர்பில், நமக்கு மூன்று மிக முக்கியமான, பிரதானமான பொறுப்புகள் இருக்கின்றன. முதலாவதாக, நாம் ராஜ்யத்தின் நற்செய்தியை அறிவிக்க வேண்டும். இரண்டாவதாக, சபையோராகிய நாம், தேவனுடைய ராஜ்யத்தின் தன்மையை நம்முடைய வாழ்க்கையில் கூட்டாக வெளிப்படுத்திக் காண்பிக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம். இதற்கு அர்த்தம் என்னவென்றால், நாம் வாழ்கின்ற விதத்தின் மூலமாகவும், ஒருவர் ஒருவரோடு எவ்வாறு ஐக்கிய உறவு கொண்டிருக்கிறோம் என்பதன் மூலமாகவும் தேவனுடைய ராஜ்யம் எப்படிப்பட்டதாயிருக்கிறது என்பதை நம்மைச் சுற்றியிருப்பவர்களுக்கு நாம் வெளிப்படுத்திக் காண்பிக்க வேண்டும். காரணம், தேவனுடைய ராஜ்யம் ஏற்கனவே நமக்குள் இருக்கிறது. "தேவனுடைய ராஜ்யம் புசிப்பும் குடிப்புமல்ல, அது நீதியும், சமாதானமும், பரிசுத்த ஆவியினாலுண்டாகும் சந்தோஷமுமாயிருக்கிறது" (ரோமர் 14:17).

பரிசுத்த ஆவியானவருடைய உதவியும் வழிகாட்டுதலும் இல்லாமல் தேவனுடைய ராஜ்யத்தை நம்முடைய வாழ்க்கையில் செயல்படுத்தி வெளிப்படுத்திக் காண்பிக்க முடியாது. அது சாத்தியமில்லை. நம்முடைய தனிப்பட்ட வாழ்க்கையில் மட்டுமல்ல, இன்னும் அதிகமாய் சபையோராய் கூட்டாகவும் நம்முடைய வாழ்க்கையின் மூலம் இந்த முழு உலகத்துக்கும் தேவனுடைய ராஜ்யத்தின் தன்மையை வெளியரங்கமாய் வெளிப்படுத்திக் காட்ட வேண்டியவர்களாய் நாம் இருக்கிறோம். அதாவது பரிசுத்த ஆவியானவருக்குள் நீதியின் கிரியைகள், சமாதானம் மற்றும் சந்தோஷத்தினால் நிறைந்த ஒரு வாழ்க்கையை வாழ்வதன் மூலம் நாம் அதைச் செய்தாக வேண்டும்.

தேவனுடைய ராஜ்யம் இந்த பூமியில் நிறுவப்படும்படி வழியை ஆயத்தம் செய்வதே நம்முடைய மூன்றாவது பொறுப்பாய் இருக்கிறது. இதைக்

குறித்துத்தான் இந்த அத்தியாயத்தின் மீதிப் பகுதியில் நான் எழுத விரும்புகிறேன். காரணம், தேவன் நமக்குத் தந்திருக்கிற உயரிய அழைப்பானது, தேவனுடைய பிரதிநிதிகளாய் இங்கே வாழ்ந்து, அவருடைய நோக்கங்களோடு நம்மை இணைத்துக் கொள்வதே ஆகும். தேவனுடைய ராஜ்யம் இந்த பூமியில் ஸ்தாபிக்கப்படும்படி வழியை நாம் எவ்வாறு ஆயத்தம் செய்ய வேண்டும்?

வழியை எவ்வாறு ஆயத்தம் செய்ய வேண்டும்?

இந்தக் கேள்விக்கு பதிலளிக்கும்படி, மத்தேயு சுவிசேஷத்திலிருந்து தொடர்ச்சியாக சில வசனங்களை நாம் பார்க்கபோகிறோம்.

மனந்திரும்பி, ஒருங்கிணைதல்

முதலாவது, நாம் முரட்டாட்டத்தினின்று மனந்திரும்பி, தேவனுடைய நோக்கத்துடன் நம்மை ஒருங்கிணைத்துக் கொள்ள வேண்டும். "அதுமுதல் இயேசு: மனந்திரும்புங்கள், பரலோக(தேவனுடைய) ராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கிக்கத் தொடங்கினார்" (மத்தேயு 4:17).

இதுதான் இயேசு பிரசங்கித்த முதல் செய்தியாய் இருக்கிறது. "தேவனுடைய ராஜ்யம் சமீபித்திருக்கிறது. மனந்திரும்புங்கள். உங்களுடைய முரட்டாட்டத்தை, உங்களுடைய சுயத்தைப் பிரியப்படுத்தும் விருப்பங்களை, உங்களுடைய சுய புத்தியின் ஆலோசனைகளை உதறித் தள்ளுங்கள். ராஜாவுக்கு உங்களையே அர்ப்பணிக்கும்படி ஆயத்தப்படுங்கள்," என்பதே சுவிசேஷத்தின் அவருடைய முதல் பிரசங்கமாயிருந்தது. இதுவே சுவிசேஷத்தின் ஒரே முதன்மைக்கூறாக இருக்கிறது.

மேலும் நாம் தொடர்ந்து வாசிக்கின்றோம்:

> *பின்பு, இயேசு கலிலேயா எங்கும் சுற்றி நடந்து, அவர்களுடைய ஜெப ஆலயங்களில் உபதேசித்து, ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, ஜனங்களுக்கு உண்டாயிருந்த சகல வியாதிகளையும், சகல நோய்களையும் நீக்கி சொஸ்தமாக்கினார். அவருடைய கீர்த்தி சீரியா எங்கும் பிரசித்தமாயிற்று. அப்பொழுது பலவித வியாதிகளையும், வேதனைகளையும் அடைந்திருந்த சகல பிணியாளிகளையும்,*

பிசாசு பிடித்தவர்களையும், சந்திரரோகிகளையும், திமிர்வாதக்காரரையும் அவரிடத்தில் கொண்டு வந்தார்கள். அவர் அவர்களை சொஸ்தமாக்கினார்.

மத்தேயு 4:23-24

தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்த தம்முடைய நோக்கங்களை, நாம் நிறைவேற்ற வேண்டுமென்று தேவன் விரும்புகிறார். தேவனுடைய ராஜ்யத்தின் சுவிசேஷம் எங்கெல்லாம் பிரசங்கிக்கப்பட்டதோ, அங்கெல்லாம் அந்த நற்செய்தியின் உண்மைத்தன்மை, ஒரு உதாரணத்திற்கு, வியாதிப்பட்டவர்களை சுகமாக்கினதன் மூலம் உறுதிப்படுத்தப்பட்டது. உண்மையில், தேவனுடைய ராஜ்யமும், வியாதிகளும் ஒன்றுக்கொன்று ஒத்திசைந்து செல்லாதவை. அவை ஒன்றாக சேர்ந்து ஒரே இடத்தில் இருக்க முடியாது. தேவனுடைய ராஜ்யம் யாருக்குள், எங்கே நுழைந்தாலும், அது ஒரு தனிப்பட்ட நபராக இருந்தாலும் அல்லது அது ஒரு சபையாக இருந்தாலும், அங்கேயிருந்து வியாதி உடனடியாக வெளியேறியாக வேண்டும்.

சரியானவைகளுக்கு முதலிடம் கொடுங்கள்

தேவனுடைய ராஜ்யத்துக்கு வழியை ஆயத்தம் பண்ணும்படி, எப்படிப்பட்ட சரியான முன்னுரிமைகளை உடையவர்களாய் நாம் இருக்க வேண்டும்? முதலாவதாக, நாம் எப்பொழுதும் சரியான முறையில் தேவனை அணுக வேண்டும். இயேசு நமக்குக் கற்பித்த ஜெபத்தை நினைவுகூர்ந்து பாருங்கள்: ''பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக. உம்முடைய ராஜ்யம் வருவதாக. உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல பூமியிலேயும் செய்யப்படுவதாக" (மத்தேயு **6:9**-10).

தேவனை அணுகிய உடன், நாம் செய்யும் முதல் விண்ணப்பம் என்ன? "உம்முடைய ராஜ்யம் வருவதாக." முதலில், "எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும்," என்று சொல்லவில்லை. ''எங்களுடைய மீறுதல்களை எங்களுக்கு மன்னியும்,'' என்றும் சொல்லவில்லை. "தீமையினின்று எங்களை இரட்சித்துக் கொள்ளும்," என்றும் இங்கு சொல்லவில்லை. இவையெல்லாம் நியாயமான ஜெப விண்ணப்பங்கள்தான். ஆனால் இங்கு பிரதானமான ஜெப விண்ணப்பம்,

தேவனுடைய நோக்கங்களோடு நம்மை ஒன்றிணைத்துக் கொள்வதைக் குறித்ததாகும். ''உம்முடைய ராஜ்யம் வருவதாக. உம்முடைய சித்தம் செய்யப்படுவதாக,'' என்பதுதான் அந்தப் பிரதானமான விண்ணப்பமாயிருக்கிறது. தேவனுடைய நோக்கங்களோடு நம்மை ஒன்றாக இணைத்துக் கொள்ளும்போதுதான், நம்முடைய தனிப்பட்ட விண்ணப்பங்களைச் செய்வதற்கு தகுதியுடையவர்களாய் நாம் மாறுகிறோம். காரணம், அதைச் செய்யாத வரையில், நாம் முரட்டாட்டம் செய்கிறவர்களாகவே இருக்கிறோம். ''முதலாவது, தேவனுடைய ராஜ்யத்தையும், அவருடைய நீதியையும் தேடுங்கள். அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்'' (மத்தேயு 6:33). தேவனுடைய ராஜ்யத்தை தவிர்த்து விட்டு, அதற்கு வெளியே எந்த நீதியுமில்லை என்பதை நாம் கவனிக்க வேண்டும். நீங்கள் தேவனுடைய ராஜ்யத்தின் ஆளுகைக்கு கீழே இல்லாவிட்டால், நீங்கள் தேவனுக்கு விரோதமாக முரட்டாட்டம் செய்கிறவராக இருக்கிறீர்கள். முரட்டாட்டம் செய்கிற எவனும் நீதிமானாய் இருக்க முடியாது.

உங்களுடைய முன்னுரிமைகளை சரியான வரிசையில் வைத்திருக்கிறீர்களா? நீங்கள் முதலாவதாக தேவனுடைய ராஜ்யத்தைத் தேடுகிறீர்களா? அல்லது அது உங்கள் பட்டியலில் எங்கோ கடைசியிலிருக்கிறதா? தேவனுடைய ராஜ்யத்தோடு சம்பந்தப்பட்ட காரியங்களைக் காட்டிலும், உங்களுடைய தனிப்பட்ட தேவைகள் மற்றும் விருப்பங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கிறீர்களா?

பிசாசினுடைய பிடியின் கீழ் இருப்பவர்களிடம் குறிப்பாக ஒரு விஷயத்தை நான் கவனித்திருக்கிறேன் (அப்படிப்பட்ட நூற்றுக்கணக்கானவர்களோடு நான் பேசியிருக்கிறேன்). அவர்கள் எல்லோரிடமும் பொதுவாக ஒரு பிரச்சினை காணப்படுகிறது. அவர்களே அவர்களுடைய வாழ்க்கையின் மையமாக இருக்கிறார்கள். பிசாசு அவர்களை அந்தச் சிறைச்சாலைக்குள்தான் அடைத்து வைத்திருக்கிறான். நான், என்னுடைய சிறு சிறு பிரச்சனைகள், என்னுடைய தேவைகள், என்னுடைய காரியங்கள் என்ற சிறைச்சாலைக்குள் அவர்கள் அடைபட்டுக் கிடக்கிறார்கள். உங்களுடைய தேவைகளுக்குள் நீங்கள் வாழ்கின்றவரை, நீங்கள் இன்னும் தேவனுடைய ராஜ்யத்தில் வாழவில்லை என்று அர்த்தம். முதலாவதாக,

தேவனுடைய ராஜ்யத்தைத் தேடுங்கள்; அப்பொழுது உங்களுடைய இவ்வுலக வாழ்க்கைக்கான தேவைகள் "அனைத்தும்" சந்திக்கப்படும் என்று இயேசு சொன்னார்.

இதை நீங்கள் நம்புகிறீர்களா? தேவன் கஞ்சத்தனமுள்ளவரல்ல என்பதை நான் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். சில நேரங்களில், சபை நிர்வாகம் கஞ்சத்தனம் பிடித்ததாக நடந்து கொள்ளலாம். மிஷனரி அமைப்புகள் கஞ்சத்தனமாக செயல்படலாம். ஆனால் தேவன் கஞ்சத்தனமானவரல்ல. நீங்கள் பணிபுரிகின்ற ஸ்தாபனம் உங்களை உதாசீனப்படுத்தி ஒதுக்கி வைத்து விட்டால் அல்லது வேலையிலிருந்து தூக்கி வெளியே எறிந்து விட்டால், தேவனுடைய கரங்களுக்குள் உங்களை அர்ப்பணித்து அடங்கியிருங்கள். பெரும்பாலான சபை நிறுவனங்களைக் காட்டிலும் மேலான விதத்தில் தேவன் உங்களை அக்கறையாய் கவனித்துப் பராமரித்துக் கொள்வார்.

ராஜ்யத்தின் தன்மையை வெளிப்படுத்திக் காண்பியுங்கள்

அடுத்ததாக, நம்முடைய அன்றாட வாழ்க்கையில் தேவனுடைய ராஜ்யத்தை வெளிப்படுத்திக் காண்பிப்பதன் மூலம் நாம் வழியை ஆயத்தப்படுத்தப் போகிறோம். முதன்முதலில் இயேசு தம்முடைய அப்போஸ்தலர்களை அனுப்பினபோது, "போகையில், பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கியுங்கள்," என்று சொன்னார். அவ்வாறு பரலோக ராஜ்யம் சமீபமாயிருக்கிறது என்றால், நாம் செய்ய வேண்டிய முதல் காரியம் என்ன? "வியாதியுள்ளவர்களை சுகமாக்குங்கள். குஷ்டரோகிகளை சுகமாக்குங்கள். மரித்தோரை எழுப்புங்கள். பிசாசுகளைத் துரத்துங்கள்" (மத்தேயு 10:7-8). சாத்தான் இந்த ஊழியங்களை வெறுக்கிறான். காரணம், தேவனுடைய ராஜ்யம் வந்து விட்டது என்பதற்கான வெளியரங்கமான அடையாளங்களாய் இந்த ஊழியங்கள் இருக்கின்றன.

எதிரியை அறியுங்கள்

சாத்தானுக்கும் ஒரு ராஜ்யம் உண்டென்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.

இயேசு அவர்கள் சிந்தனைகளை அறிந்து, அவர்களை நோக்கி: "தனக்குத் தானே, விரோதமாய் பிரிந்திருக்கிற எந்த ராஜ்யமும் பாழாய்ப்போம்; தனக்குத் தானே விரோதமாய் பிரிந்திருக்கிற எந்தப் பட்டணமும் எந்த வீடும் நிலைநிற்க மாட்டாது. சாத்தானை சாத்தான் துரத்தினால் தனக்கு விரோதமாகத் தானே பிரிவினை செய்கிறதாயிருக்குமே; அப்படிச் செய்தால் அவன் ராஜ்யம் எப்படி நிலைநிற்கும்?.................நான் தேவனுடைய ஆவியினாலே பிசாசுகளைத் துரத்துகிறபடியால், தேவனுடைய ராஜ்யம் உங்களிடத்தில் வந்திருக்கிறதே."

மத்தேயு 12:25-26, 28

மணவாட்டியாகிய சபையானவள் தனக்குக் கொடுக்கப்பட்ட வேலையை செய்து முடிக்காதவரை, சாத்தானுடைய ராஜ்யத்தை அழிக்க முடியாது, தேவனுடைய ராஜ்யத்தை இந்த பூமியில் ஸ்தாபிக்கவும் முடியாது. ஆகையால் சாத்தான் தன்னுடைய ராஜ்யத்தை எப்படியாவது தக்க வைத்துக் கொள்ள வேண்டும் என்பதையே தனது பிரதானமான குறிக்கோளாக கொண்டிருக்கிறான். எனவே அவன் தன்னால் இயன்ற மட்டும் முயற்சியெடுத்து சபையை வஞ்சித்து, குருடாக்குகிறான். அவன் இதைச் செய்வதன் மூலம், சபையானவள் தனக்கிருக்கும் மிகவும் முக்கியமான, பிரதானமான பொறுப்புகளை நிறைவேற்றாதபடி தடுக்கிறான். காரணம், அவள் தன்னுடைய பொறுப்புகளை நிறைவேற்றி விட்டாள் என்றால், அவனுடைய ராஜ்யம் ஒரு முடிவுக்கு வந்து விடுமென்பது அவனுக்குத் தெரியும்.

தனிப்பட்ட நபர்களுடைய ஆத்துமாக்கள் இரட்சிக்கப்படுவதைக் குறித்து சாத்தான் அவ்வளவாக எரிச்சலடைவதில்லை என்பதுதான் உண்மை. புதுப் புது சபைகள் ஆரம்பிக்கப்படுவதைக் குறித்தும் அவன் அவ்வளவாக எரிச்சலடைவதில்லை. அது அவனுக்கு பிரியமாக இருக்காது என்றாலும், அது அவனை அவனுடைய ராஜ்யத்தை இழக்கும்படி செய்யப் போவதில்லை. இரண்டு காரியங்கள் சாத்தானை அவனுடைய ராஜ்யத்தை இழக்கும்படி செய்யப் போகின்றன. அதே நேரத்தில், அவைதான் சபையாகிய மணவாட்டிக்கு அதிகாரப்பூர்வமாக கொடுக்கப்பட்டிருக்கிற பணியின் ஒரு பகுதியாக இருக்கின்றன.

முடிவுக்காக ஆயத்தப்படுங்கள்

பின்வரும் இரண்டு வசனங்கள், இந்த உலகத்தின் முடிவுக்கு முன்னும், சாத்தானுடைய ராஜ்யத்தின் முடிவுக்கு முன்னும் என்ன நடந்திருக்க வேண்டும் என்று நமக்குச் சொல்கின்றன:

> *ராஜ்யத்தினுடைய இந்த சுவிசேஷம் பூலோகமெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும். அப்போது முடிவு வரும்.*
>
> *மத்தேயு 24:14*

> *மேலும், சகோதரரே, நீங்கள் உங்களையே புத்திமான்களென்று எண்ணாதபடிக்கு ஒரு இரகசியத்தை நீங்கள் அறிய வேண்டு -மென்றிருக்கிறேன்; அதென்னவெனில், புற ஜாதியாருடைய நிறைவு [முழு எண்ணிக்கையில்] உண்டாகும் வரைக்கும் இஸ்ரவேலரில் ஒரு பங்குக்கு கடினமான மனதுண்டாயிருக்கும். இந்தப்பிரகாரம் இஸ்ரவேலரெல்லாரும் இரட்சிக்கப்படுவார்கள். "மீட்கிறவர் [மெசியா] சீயோனிலிருந்து வந்து, அவ பக்தியை யாக்கோபை விட்டு, விலக்குவார்," என்றும்.......... என்றும் எழுதப்பட்டிருக்கிறது.*
>
> *ரோமர் 11:25-27*

தேவனுடைய திட்டத்தில், இரண்டு காரியங்கள் நிறைவேறாதவரை, இயேசு வந்து, தம்முடைய ராஜ்யத்தை ஸ்தாபித்து விட முடியாது. முதலாவதாக, சபையானது தேவனுடைய ராஜ்யத்தின் சுவிசேஷத்தை உலகமெங்குமுள்ள ஜனத்தார் எல்லோருக்கும் பிரசங்கித்தாக வேண்டும். இரண்டாவதாக, புறஜாதியார் முழு எண்ணிக்கையில் உள்ளே வர வேண்டும், இஸ்ரவேலர் மேசியா மூலம் தங்களுடைய தேவனோடு ஒப்புரவாக்கப்பட வேண்டும். இவ்விரண்டு காரியங்களையும்தான் சாத்தான் தனது முழு வல்லமையோடும், வன்மத்தோடும், தந்திரங்களோடும் எதிர்த்து நிற்கிறான். நாம் பங்கேற்கும் சபை நடவடிக்கைகளில் பெரும்பாலானவை அவனை துளியளவும் கவலைப்படுத்துவதில்லை. அவன் முழு திருப்தியோடுதான் இருக்கிறான். பெரும்பாலான சபை நிகழ்ச்சிகளை அவனுடைய ராஜ்யமும் இணைந்துதான் நடத்துகின்றது. ஆனாலும் இந்த இரண்டு காரியங்களைக்

கண்டால், அவன் பயப்படுகிறான், அவைகளை அவன் எதிர்த்துப் போராடுகிறான். இவ்வுலகத்தின் சகல தேசத்தாருக்கும் தேவனுடைய ராஜ்யத்தின் சுவிசேஷம் அறிவிக்கப்படுவதையும், தேவனோடு இஸ்ரேல் ஒப்புரவாகுவதையும் கண்டு அவன் பயப்படுகிறான், அவன் அதை எதிர்க்கிறான்.

நீங்கள் மத்திய கிழக்கு நாடுகளில் வாழ்கிறீர்கள் என்றால், நீங்கள் ஒரு சூளை அடுப்பிற்குள் வாழ்கிறீர்கள் என்று அர்த்தம். காரணம், இந்த யுகத்தின் முடிவு அங்குதான் நடக்கப் போகிறது. மத்திய தரைக்கடலின் கிழக்கு ஓரத்திலுள்ள அந்த மிகச் சிறிய எல்லைக்குள், தீமையின் எல்லா சக்திகளும் ஒன்று சேர்ந்து கொண்டிருக்கின்றன. காரணம், இஸ்ரவேலின் மீது தன்னுடைய பிடியை உறுதியாய் இறுக்கிப் பிடித்திருக்கும் வரைக்கும், அவனுடைய ராஜ்யம் பாதுகாப்பாக இருக்குமென்பதை சாத்தான் நன்கு அறிந்து வைத்திருக்கிறான்.

சபையாகிய மணவாட்டிக்கு அதிகாரப்பூர்வமாகக் கொடுக்கப்பட்டிருக்கிற பொறுப்பையும், பணியையும் நாம் ஒவ்வொருவரும் தனிப்பட்ட விதத்திலும், சபையோராய் கூட்டாகவும், உள்ளார்ந்த அக்கறையோடு கருத்தூன்றி கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். தனிப்பட்ட விதத்திலும், சபையோராய் கூட்டாகவும் நம்முடைய வாழ்க்கைக்கான தேவனுடைய அழைப்பை நாம் கண்டுபிடிக்கும்போது, அந்த அழைப்பை நிறைவேற்றும்படி நாம் வாழும்போது, இந்த பூமியில் தேவனுடைய ராஜ்யம் நிறுவப்படுவதற்கான வழியை நாம் ஆயத்தம் செய்வோம். “உம்முடைய ராஜ்யம் வருவதாக,” என்று இயேசு நமக்குக் கற்றுக் கொடுத்த ஜெபத்தின் நிறைவேறுதலில் நமக்குரிய பங்கை நாம் நிறைவேற்றுவோம். அது நம்முடைய ராஜாவை அழைத்து வரும்! நம்முடைய அடுத்த அத்தியாயத்தின் கருப்பொருள், இயேசுகிறிஸ்துவினுடைய இரண்டாம் வருகையை குறித்ததாகும்.

12
உங்கள் அழைப்பின் நம்பிக்கை

கர்த்தரின் மகிமை வெளியரங்கமாகும், மாம்சமான யாவும் அதை ஏகமாய்க் காணும், கர்த்தரின் வாக்கு அதை உரைத்தது என்றும் வனாந்தரத்திலே கூப்பிடுகிற சத்தம் உண்டாயிற்று.
ஏசாயா 40:5

எஸ்கட்டாலஜி (Eschatology) என்பது அநேக கிறிஸ்தவர்களுடைய மனதில் ஒரு முக்கியமான விவாதப் பொருளாகவே இருக்கிறது. இந்த அத்தியாயத்தில், கர்த்தருடைய இரண்டாம் வருகையைக் குறித்து நம்முடைய மனநிலை என்னவாக இருக்க வேண்டும் என்பதைக் குறித்து கற்றுக் கொள்வோம். காரணம், கிறிஸ்துவுக்குள் நமக்கு விடுக்கப்பட்டிருக்கிற அழைப்பு இதோடு தொடர்புடையதாயிருக்கிறது.

எஸ்கட்டாலஜி (Eschatology) என்னும் ஆங்கில வார்த்தையின் அர்த்தத்தை அநேகமாக நீங்கள் அறிந்திருப்பீர்கள் என்று நான் நினைக்கிறேன். இந்த வார்த்தையின் அர்த்தம், "இந்தக் காலத்தின் முடிவில் என்ன சம்பவிக்கப் போகிறது என்பதைக் குறித்த ஒரு ஆராய்ச்சி" என்பதாகும். இந்தக் காலத்தின் முடிவில் அநேக சம்பவங்கள் நடக்கப் போகின்றன. அவைகள் எல்லாவற்றையும் குறித்து எனக்கு ஒன்றும் தெரியாது என்பதை நான் எந்த ஒளிவுமறைவும் இல்லாமல் நேரடியாகவே சொல்லி விடுகிறேன். இக்காலத்தின் முடிவில் என்ன நடக்கப் போகின்றன என்பதைக் குறித்து எனக்கிருக்கும் அறிவில் (my Eschatology-ல்) சில விரிசல்கள் இருக்கின்றன. ஆனால் அவை என்னைச் சுற்றி நிகழும் உண்மை நிகழ்வுகளை நான் எதிர்கொள்வதிலிருந்து என்னை தடுத்து விட முடியாது. வார்த்தைகளின் அர்த்தத்தை அலசி ஆராயும்படி நான்

பயிற்றுவிக்கப்பட்டிருக்கிறேன். ஒரு விஷயத்தைக் குறித்து பல விதமான கற்பனை எண்ணங்களை உடையவனாக நான் இருந்தாலும், அந்த விஷயத்தைக் குறித்து மெய்யாகவே வேதாகமம் என்ன சொல்கிறது என்பதை கண்டுபிடிக்கும்படி நான் முயற்சி எடுத்தேன். வழக்கமாக, வேதாகமம் என்ன சொல்ல வேண்டும் என்று நான் எதிர்பார்க்கிறேனோ, அதிலிருந்து முற்றிலும் வித்தியாசமாகத்தான் அது சொல்கிறது.

ஆதி திருச்சபை: விழித்திருத்தலும் மற்றும் காத்திருத்தலும்

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய இரண்டாம் வருகையைக் குறித்து, ஆதித் திருச்சபையிலிருந்த கிறிஸ்தவர்களிடத்தில் என்ன மனநிலை இருந்தது என்பதைப்பற்றி நாம் பேச ஆரம்பிப்போம். காலத்தின் முடிவில் என்ன நிகழும் (Eschatology) என்பதைக் குறித்து அவர்கள் எவ்வளவு அறிந்து வைத்திருந்தார்கள் என்பதெல்லாம் எனக்கு நிச்சயமாகத் தெரியாது. ஆனால் புதிய ஏற்பாட்டு வசனங்களில் அவர்கள் என்ன சொன்னார்கள் என்பதை நாம் கருத்தில் எடுத்துக் கொண்டோம் என்றால், ஆதித் திருச்சபையானது கர்த்தருடைய இரண்டாம் வருகைக்காக மிகவும் ஆவலோடு உற்சாகமாக அதற்கேற்ற ஆயத்தத்தோடு எதிர்பார்த்து, காத்திருந்தது நமக்குத் தெரிய வரும்.

புதிய ஏற்பாட்டின் பெரிய நிருபங்களிலிருந்து பல வேதப் பகுதிகளை நாம் பார்க்கப் போகிறோம். இவைகளின் எண்ணிக்கையை எளிதாக என்னால் இரட்டிப்பாக்க முடியும். ஆனால் நீங்கள் ஒரு படத்தை பெற்றுக் கொள்வீர்கள் என்றே நான் நினைக்கிறேன். கொரிந்தியருக்கு பவுல் எழுதின நிருபத்திலிருந்து நாம் துவங்குவோம்:

> *அப்படியே, நீங்கள் யாதொரு வரத்திலும் குறைவில்லாத -வர்களாய், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வெளிப்படுவதற்குக் காத்திருக்கிறீர்கள். நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாளிலே நீங்கள் குற்றஞ்சாட்டப்படாதவர்களாயிருக்கும்படி, முடிவுபரியந்தம் அவர் உங்களை ஸ்திரப்படுத்துவார்.*
>
> *1 கொரிந்தியர் 1:7-8*

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வெளிப்படும்படி, கொரிந்து பட்டணத்துச் சபையார் மிகவும் ஆவலோடு எதிர்பார்த்து காத்திருந்தார்கள். அந்த நாள் வரும்வரை, இயேசு அவர்களைத் தொடர்ந்து ஸ்திரப்படுத்துவார் என்று பவுல் அவர்களுக்கு வாக்குக் கொடுத்தார். அவர்கள் அந்த நாளை எதிர்நோக்கி ஆவலோடு காத்திருந்தார்கள் என்பதைக் குறித்து என்னுடைய மனதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

1 கொரிந்தியர் **11**-ம் அதிகாரத்தில், கர்த்தருடைய இராப்போஜனம் அனுசரிக்கப்பட வேண்டிய விதத்தைக் குறித்து ஒரு கட்டளையாக எழுதப்பட்டிருக்கிறது. இதில் ஒரே ஒரு வசனத்தை மட்டும் நாம் பார்க்கலாம். "ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணும் போதெல்லாம், கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்" **(1 கொரிந்தியர் 11:26).**

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவிடமிருந்து நேரடி வெளிப்பாட்டின் மூலம் தனக்குக் கொடுக்கப்பட்டதாக பவுல் சொல்லும் அந்தக் கட்டளையின்படி, ஒவ்வொரு முறையும் கர்த்தருடைய இராப்போஜனத்தில் (பரிசுத்த திருப்பந்தியில் அல்லது கர்த்தருடைய திருவிருந்தில்) நாம் பங்கெடுக்கும்போது, அவருடைய இரண்டாம் வருகையை நாம் எதிர்நோக்கிப் பார்க்கிறோம். ஒருமுறை இந்த வசனத்தைக் குறித்த ஒரு அழகான விளக்கத்தை நான் வாசித்தேன். அது இவ்வாறு சொல்கிறது, நாம் கர்த்தருடைய திருவிருந்தில் பங்கெடுக்கும்போது, இரண்டாந்தர முக்கியத்துவம் வாய்ந்த மற்ற எல்லா விஷயங்களும் நம்முடைய பார்வையிலிருந்து விலகி விடுகிறது. சிலுவையைத் தவிர வேறு எந்த கடந்த காலமுமில்லை, கிறிஸ்துவினுடைய இரண்டாம் வருகையைத் தவிர வேறு எந்த எதிர்காலமுமில்லை. கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தை நாம் அறிக்கை செய்கிறோம். இதுதான் சரியான ஒரு நிலைப்பாடு என்று நான் விசுவாசிக்கிறேன். கர்த்தருடைய திருப்பந்தியில் பங்கெடுப்பதால் உண்டாகும் பலன்களில் ஒன்று, கர்த்தருடைய இரண்டாம் வருகையைக் குறித்த சரியான எதிர்பார்ப்பையும், ஆயத்தத்தையும் அது நமக்கு எப்பொழுதும் நினைவுபடுத்தி, புதுப்பித்துக் கொண்டே இருக்கிறது.

தெசலோனிக்கேயருக்கு பவுல் எழுதின நிருபத்திலிருந்து ஒரு சில வசனங்களை இப்பொழுது நாம் கவனிப்போம்:

இவ்விதமாய் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தமது பரிசுத்தவான்கள் அனைவரோடுங்கூட வரும்போது, நீங்கள் நம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாகப் பிழையற்ற பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கும்படி உங்கள் இருதயங்களை ஸ்திரப்படுத்துவாராக.

1 தெசலோனிக்கெயர் 3:13

தெசலோனிக்கே பட்டணத்தில் வாழ்ந்த இந்தக் கிறிஸ்தவர்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய இரண்டாம் வருகையை எதிர்நோக்கிக் காத்திருந்தார்கள். அவருடைய இரண்டாம் வருகையில் தாங்கள் பிழையற்றவர்களும், பரிசுத்தமுள்ளவர்களுமாய் காணப்படும்படி அவர்கள் தங்களையே ஆயத்தப்படுத்திக் கொண்டிருந்தார்கள். மேலும் இதே நிருபத்தில் நாம் தொடர்ந்து இவ்வாறு வாசிக்கிறோம்:

கர்த்தருடைய வார்த்தையை முன்னிட்டு நாங்கள் உங்களுக்குச் சொல்லுகிறதாவது: கர்த்தருடைய வருகை மட்டும் உயிரோடிருக்கும் நாம் நித்திரையடைந்தவர்களுக்கு முந்திக் கொள்வதில்லை.

1 தெசலோனிக்கெயர் 4:15

திரும்பவும் இங்கு, கர்த்தருடைய இரண்டாம் வருகைதான் மிகவும் ஆவலோடும், ஆயத்தத்தோடும் எதிர்பார்க்கப்பட்ட ஒரு சம்பவம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதே நிருபத்தில் இன்னும் கொஞ்சம் பின்னே சென்று அடுத்த அதிகாரத்தை வாசித்தீர்கள் என்றால், நீங்கள் இந்த வார்த்தைகளை வாசிக்க முடியும்.

சமாதானத்தின் தேவன் தாமே உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக. உங்கள் ஆவி ஆத்மா சரீரம் முழுவதும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது, குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக.

1 தெசலோனிக்கெயர் 5:23

தனிப்பட்ட வாழ்க்கையில் பரிசுத்தமாய் வாழ வேண்டியதன் அவசியத்திற்கும், கர்த்தருடைய இரண்டாம் வருகையை ஆவலோடு

எதிர்நோக்கியிருப்பதற்கும் இடையே ஒரு நேரடி தொடர்பு இருப்பதை நம்மால் இங்கு பார்க்க முடிகின்றது.

அடுத்ததாக, தீமோத்தேயுவுக்கு பவுல் எழுதின கடிதங்களிலிருந்து சில வசனங்களை நாம் பார்ப்போம்:

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து பிரசன்னமாகும் வரைக்கும், நீ இந்தக் கற்பனையை மாசில்லாமலும், குற்றமில்லாமலும் கைக்கொள்ளும்படிக்கு, எல்லாவற்றையும் உயிரோடிருக்கச் செய்கிற தேவனுடைய சந்நிதானத்திலேயும், பொந்தியுபிலாத்துவின் முன்னின்று நல்ல அறிக்கையைச் சாட்சியாக விளங்கப் பண்ணின கிறிஸ்து இயேசுவினுடைய சந்நிதானத்திலேயும் உனக்குக் கட்டளையிடுகிறேன்.

1 தீமோத்தேயு 6:13-14

திரும்பவும் இங்கு, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய இரண்டாம் வருகைதான், அவர்கள் எதிர்நோக்கிப் பார்த்திருந்த முடிவிடமாக, அவர்களுடைய உண்மைக்கான சவாலாக சொல்லப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு, நம்மில் போதகர்களாய் இருக்கிறவர்களுக்கு இதே போன்றதொரு சவாலை, இன்னும் உறுதியான ஒன்றை நாம் பார்க்கிறோம்:

நான் தேவனுக்கு முன்பாகவும், உயிரோடிருக்கிறவர்களையும் மரித்தவர்களையும் நியாயந்தீர்க்கப்போகிற கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு முன்பாகவும், அவருடைய பிரசன்னமாகு -தலையும், அவருடைய ராஜ்யத்தையும் சாட்சியாக வைத்துக் கட்டளையிடுகிறதாவது: சமயம் வாய்த்தாலும் வாய்க்கா -விட்டாலும் ஜாக்கிரதையாய்த் திருவசனத்தைப் பிரசங்கம் பண்ணு.

2 தீமோத்தேயு 4:1-2

இதே நிருபத்தின் இதே அதிகாரத்தில் பவுல் இவ்வாறு எழுதுகிறார்:

இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது. நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார். எனக்கு மாத்திரமல்ல, அவர்

பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார்.

2 தீமோத்தேயு 4:8

நீதியின் கிரீடத்தைப் பெறுவதற்கான ஒரு அத்தியாவசியமான தகுதி, நாம் அவருடைய வருகைக்காக எதிர்நோக்கி காத்திருப்பதே ஆகும்.

பவுல், தீத்துவுக்கு இப்படியாக எழுதுகிறார்:

ஏனெனில் எல்லா மனுஷருக்கும் இரட்சிப்பை அளிக்கத்தக்க தேவகிருபையானது பிரசன்னமாகி, நாம் அவபக்தியையும் லௌகீக இச்சைகளையும் வெறுத்து (அவைகளுக்கு மறுப்பு தெரிவித்து), தெளிந்த புத்தியும் (சுயக்கட்டுப்பாடும்) நீதியும் தேவபக்தியும் உள்ளவர்களாய் ஜீவனம் பண்ணி, நாம் நம்பியிருக்கிற ஆனந்த பாக்கியத்துக்கும், மகா தேவனும் நமது இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவினுடைய மகிமையின் பிரசன்னமாகுதலுக்கும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும்படி நமக்குப் போதிக்கிறது.

தீத்து 2:11-13

திரும்பவும் இங்கு, பரிசுத்தத்துக்கும், கர்த்தருடைய இரண்டாம் வருகைக்காக ஆவலோடும் ஆயத்தத்தோடும் காத்திருப்பதற்கும் இடையே நெருங்கிய தொடர்பு இருப்பதை நாம் பார்க்கிறோம். இதிலிருந்து ஒரு முடிவுக்கு இங்கு நம்மால் வர முடியும். இயேசுகிறிஸ்துவின் "மகிமையான பிரசன்னமாகுதல்தான் (இரண்டாம் வருகை)," அவர்கள் தேவபக்தியுள்ளவர்களாய் வாழ்ந்ததற்கு பிரதானமான ஒரு உந்துசக்தியாய் இருந்தது.

அடுத்ததாக, யாக்கோபு தன்னுடைய நிருபத்தில் கூறுவது என்ன என்பதை நாம் காண்போம்:

இப்படியிருக்க, சகோதரரே, கர்த்தர் வருமளவும் நீடிய பொறுமையாயிருங்கள். இதோ, பயிரிடுகிறவன் பூமியின் நற்பலனை அடைய வேண்டுமென்று, முன்மாரியும், பின்மாரியும் வருமளவும், நீடிய பொறுமையோடே காத்திருக்கிறான். நீங்களும் நீடிய பொறுமையோடிருந்து,

உங்கள் இருதயங்களை ஸ்திரப்படுத்துங்கள். கர்த்தரின் வருகை சமீபமாயிருக்கிறதே.

யாக்கோபு 5:7-8

நீடிய பொறுமைக்கும், ஸ்திரப்படுதலுக்கும் கூட கர்த்தருடைய வருகைதான் உந்துதலாயிருக்கிறது.

அப்போஸ்தலனாகிய பேதுரு, கிறிஸ்தவர்களாகிய நம்மைக் குறித்து இவ்வாறு பேசுகிறார்:

கடைசிக் காலத்திலே வெளிப்பட ஆயத்தமாக்கப்பட்டிருக்கிற இரட்சிப்புக்கு ஏதுவாக விசுவாசத்தைக் கொண்டு தேவனுடைய பலத்தினாலே காக்கப்பட்டிருக்கிற உங்களுக்கு அந்தச் சுதந்திரம் பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. இதிலே நீங்கள் மிகவும் சந்தோசப்படுகிறீர்கள்; என்றாலும், துன்பப்பட வேண்டியது அவசியமானதால், இப்பொழுது கொஞ்சகாலம் பலவிதமான சோதனைகளினாலே துக்கப்படுகிறீர்கள். அழிந்து போகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும்; அதைப் பார்க்கிலும் அதிக விலையேறப் பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு, இயேசுகிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்கு புகழ்ச்சியும், கனமும், மகிமையும் உண்டாகக் காணப்படும்.........ஆகையால், நீங்கள் உங்கள் மனதின் அரையைக் கட்டிக்கொண்டு, தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருந்து இயேசுகிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்கு அளிக்கப்படும் கிருபையின் மேல் பூரண நம்பிக்கையுள்ளவர்களாயிருங்கள்.

1 பேதுரு 1:5-7, 13

திரும்பவும் இங்கு, என்னுடைய மனதில் ஆழமாகப் பதிகின்ற விஷயம் இதுதான். நீதியான வாழ்க்கைக்கு கிறிஸ்துவினுடைய வருகைதான் தூண்டுகோலாக இருக்கின்றது.

இறுதியாக, நாம் யோவான் எழுதிய முதல் நிருபத்தைப் பார்ப்போம். "இப்படியிருக்க, பிள்ளைகளே, அவர் வெளிப்படும்போது நாம் அவர் வருகையில் அவருக்கு முன்பாக வெட்கப்பட்டுப் போகாமல்

தைரியமுள்ளவர்களாயிருக்கும்படிக்கு அவரில் நிலைத்திருங்கள்" (1 யோவான் 2:28).

பல மொழிகளை கற்றுக் கொண்ட ஒரு மாணவனாய், இதை நான் எளிமையாகச் சொல்லியாக வேண்டும். காலத்தின் முடிவில் என்ன நடக்கும் (Eschatology) என்பதைக் குறித்த என்னுடைய பார்வை என்னவாயிருந்தாலும், ஒரு உண்மையை நான் தெளிவாக அறிந்து கொண்டேன். புதிய ஏற்பாட்டின் நிருபங்களை எழுதிய பெரும்பாலான ஆசிரியர்கள் எல்லோரும் இந்த உண்மைக்கு சாட்சி பகருகின்றனர். அந்த உண்மை இதுதான்: புதிய ஏற்பாட்டின் ஆதித் திருச்சபையிலிருந்த கிறிஸ்தவர்களின் பிரதானமான, மற்ற எல்லாவற்றையும் விஞ்சிய எதிர்பார்ப்பு, கர்த்தருடைய இரண்டாம் வருகையைக் குறித்ததாய் மட்டுமே இருந்தது. அது அவர்களை குற்றமற்றவர்களாகவும் பரிசுத்தமானவர்களாகவும் வாழும்படி உற்சாகப்படுத்தி ஊக்குவித்தது. நீதியின் கிரீடத்தை பெறுவதற்கு அது பிரதானமான ஒரு தகுதியாயிருந்தது. அது அவர்கள் நீடிய பொறுமையோடு வாழ்வதற்கு உதவியது. நீதியான வாழ்க்கை வாழ்வதற்கு ஒரு உந்து சக்தியாய் அது அவர்களுக்கு இருந்தது. அவர்கள் அந்த நிகழ்விற்கு நேராக தங்களுடைய கண்களை திருப்பினவர்களாக வாழ்ந்தார்கள்.

ஒருமுறை ஒரு பொதுக்கூட்டத்தில் கொடுக்கப்பட்ட செய்திக்கான வியாக்கியானத்தை கர்த்தர் எனக்குக் கொடுத்தார். அதில் அவர் சொன்ன ஒரு விஷயம் இதுதான்: *கர்த்தரின் வருகை எவ்வளவு சமீபமாயிருக்கிறது என்பதை ஜென்ம சுபாவமுள்ள மனிதனுடைய மனதினால் எவ்விதத்திலும் கணக்கிடவே முடியாது.* என்னைப் பொறுத்தமட்டில், இது முழுக்க முழுக்க சரியான ஒரு விஷயமாகும். அதைக் கணக்கிடுவதற்கு நம்மிடம் ஒரு வழி இருக்கிறது என்பதை நான் நம்ப மாட்டேன். ஆனால் புதிய ஏற்பாட்டின் ஆதித் திருச்சபைக்கு இருந்த அதே ஆவலும், எதிர்பார்ப்பும், ஆயத்தமும் நம் ஒவ்வொருவருக்கும் இருக்க வேண்டும் என்று நான் விசுவாசிக்கிறேன்.

சில சமயங்களில் நம்முடைய ஊகங்களின் அடிப்படையிலான கோட்பாடுகள் உண்மைகளை அறியும் வழியில் ஒரு தடையாய் நிற்கின்றன. ஒருவேளை உங்களுடைய சரீரத்தில் ஒரு வலி இருந்து, அதற்கான காரணத்தை எந்த ஒரு மருத்துவராலும் கண்டுபிடிக்க முடியாமல், அதை சுகமாக்க முடியாமல் போன ஒரு அனுபவம் உங்களுக்கு இல்லாமலிருக்கலாம்.

ஆனால் பிரிட்டிஷ் ராணுவத்தில் நான் இருந்த காலத்தில், என்னுடைய விலா எலும்பு பகுதியில் ஆறு வாரங்களாக பயங்கரமான வலி வேதனை இருந்தது. அந்த நேரத்தில் நான் காலாட்படையில் இருந்தபடியால், வேலைச்சுமை அங்கு மிகவும் அதிகமாய் இருந்தது. எனவே அந்த வலியோடு நான் செய்ய வேண்டிய வேலைகளை செய்வதென்பது எனக்கு மிகுதியான மனஉளைச்சலைக் கொடுத்தது. நான் மருத்துவரிடம் சென்று, என்னுடைய வலியைக் குறித்து அவரிடம் சொன்னேன். அவர் தன்னுடைய ஸ்டெதஸ்கோப்பை என் மேல் வைத்து சோதித்துப் பார்த்தார். ஆனால் அவருக்கு ஒன்றும் கேட்கவில்லை. அந்த நேரத்தில் என்ன என்ன மருத்துவ சோதனைகளெல்லாம் இருந்ததோ, அதையெல்லாம் எனக்குச் செய்தார்கள். பிறகு அவர்கள் ஒரு முடிவுக்கு வந்தார்கள். என்னுடைய வலிக்கு எந்தக் காரணமும் இல்லை என்பதுதான் அவர்களுடைய முடிவு. "உண்மையில் உனக்கு எந்த வலியும் இல்லை!" என்று அவர்கள் மறைமுகமாக சொல்லி விட்டார்கள். ஆனால் அவர்களால் அதைக் கண்டறிய முடிகிறதோ, இல்லையோ, எனக்கு வலி இருக்கிறது என்பது எனக்குத்தான் தெரியும். காரணம், அந்த வலியினால் அவதிப்படுபவன் நான்தானே!

இதை ஒரு உதாரணமாக வைத்து, நம்முடைய கூற்றை நாம் மறுபடியும் சொல்வோம். காலத்தின் முடிவில் என்ன நிகழும் என்பதைக் குறித்த நம்முடைய அறிவு (Eschatology) இதற்கு இடமளிக்கிறதோ, இல்லையோ, புதிய ஏற்பாட்டு ஆதித் திருச்சபை கர்த்தரின் வருகையை மிகவும் ஆவலோடும், ஆயத்தத்தோடும் எதிர்நோக்கி காத்திருந்தது என்பதுதான் உண்மை. என்னைப் பொறுத்தவரையில், இது எனக்கு பொருந்துகிறதோ, இல்லையோ, இதுதான் ஒரு உண்மையாய் இருக்கிறது.

புதியதொரு வாழ்க்கைமுறை

அதுதான் ஆதித் திருச்சபை கிறிஸ்தவர்களுடைய எதிர்பார்ப்பாக இருந்ததென்றால், அதுவே இப்பொழுது நம்முடைய பிரதான எதிர்பார்ப்பாகவும் இருக்க வேண்டுமல்லவா? இது ஒரு வாழ்க்கைமுறை. இது எனக்கு ஒரு சிற்றனுபவமாக இருந்தது. சில நேரங்களில் இதை நான் ருசி பார்த்திருக்கிறேன். மெய்யாகவே இவ்விதத்தில் வாழ்வதென்பது முழுமையாக சாத்தியமானதுதான் என்று நான் சொல்ல மாட்டேன். ஆனால் அதை

நோக்கித்தான் நாம் செல்ல வேண்டும் என்று நான் உணருகிறேன்.

இவ்விதமான வாழ்க்கைமுறைக்கு இரண்டு அம்சங்கள் உண்டு. இவ்விரண்டும், தேவன் உங்களுடைய வாழ்க்கைக்கென்று வைத்திருக்கிற விசேஷமான அழைப்பு எதுவாயிருந்தாலும் அதன் ஒரு பகுதியாய் இருக்கின்றன. முதலாவதாக, சுவிசேஷத்தை இவ்வுலகத்தின் மூலைமுடுக்குக்கெல்லாம் கொண்டு செல்வதென்பது உங்களுடைய வாழ்க்கைமுறை மற்றும் அழைப்பின் பிரதானமான நோக்கமாயிருக்க வேண்டும். அது நிறைவேறும்வரை நான் திருப்தியடைய மாட்டேன் என்று என்னால் உண்மையாக சொல்ல முடியும் என்று நான் விசுவாசிக்கிறேன். அதில் தேவன் எனக்களித்த பங்கு எதுவாயிருந்தாலும், அது இரண்டாம்பட்சம்தான். ஆனால் அதுதான் ஒரே சரியான உந்துசக்தியாய் இருக்கிறது. இரண்டாவதாக, உங்களுடைய வாழ்க்கைமுறை மற்றும் அழைப்பின் பிரதான எதிர்பார்ப்பு, கிறிஸ்துவின் வருகையை எதிர்நோக்கியதாயிருக்க வேண்டும்.

அப்படிப்பட்ட ஒரு நபராக உங்களால் வாழ முடியுமா? சுவிசேஷத்தை இவ்வுலகத்தின் மூலைமுடுக்குகளுக்கெல்லாம் எடுத்துச் செல்வதையே தன்னுடைய பிரதானமான நோக்கமாகக் கொண்டு வாழ்கிறவன்தான் அந்த மனிதன். கர்த்தருடைய வருகையையே தன்னுடைய ஒரே பிரதானமான எதிர்பார்ப்பாகக் கொண்டு அந்த மனிதன் வாழ்வான். இப்படிப்பட்டவர்களுடைய வாழ்க்கைமுறை தனிச்சிறப்பு வாய்ந்ததாக இருக்கிறது. இவர்கள் வித்தியாசமானவர்கள். நான் அவர்கள் மத்தியில் இருந்திருக்கிறேன். உண்மையில், சில நேரங்களில், நான் அந்த உன்னதமான நிலையிலும் இருந்திருக்கிறேன். நீங்கள் அதை ஒருமுறை ருசி பார்த்து விட்டீர்கள் என்றால், பிறகு அதற்கு குறைவான எதினாலும் நீங்கள் திருப்தியடைய மாட்டீர்கள்.

இவ்விதமான புதிய வாழ்க்கைமுறை, இவ்வுலகத்தாருக்கும் மற்ற மதவாதிகளுக்கும் முட்டாள்தனமாகத் தெரியும். இஸ்ரவேல் தேசத்தினுடைய எழுச்சியின் பிண்ணனி மற்றும் அதன் வரலாற்றை நான் படித்தபோது, அது எனக்கு மிகப்பெரிய ஒரு சவாலாக இருந்தது. ஆனாலும் என்னுடைய அழைப்பின் நிமித்தம் நான் இதைப் படித்தே ஆக வேண்டும் என்று நான் உணர்ந்தேன். டேவிட் பென்-குரியன் என்பவர் சீயோன் மார்க்கத்தை

ஆரம்பத்தில் பின்பற்றினவர்களில் ஒருவராவார். அவர்தான் இஸ்ரவேல் தேசத்தின் முதல் பிரதமர். அந்த நாட்களில், ஒரு சிலரால் மாத்திரமே பின்பற்றப்பட்ட சீயோன் மார்க்கம், சீக்கிரத்திலேயே அழிந்து போகக்கூடிய முட்டாள்தனமான ஒரு மார்க்கமாக கருதப்பட்டது. பெரும்பாலான யூதர்களாலேயே அது கேலி செய்யப்பட்டு, நிராகரிக்கப்பட்டது. உலகமும் அதை முட்டாள்தனமான ஒன்றாகவும், பின்பற்றுவதற்கு சாத்தியமில்லாத ஒன்றாகவும் சொல்லி, புறந்தள்ளி விட்டது. பென்-குரியனே ஒருமுறை இவ்வாறு சொன்னார், ''சீயோன் மார்க்கத்தை ஒருவர் பின்பற்ற வேண்டுமென்றால், அவர் ஒரு பைத்தியக்காரனாகத்தான் இருக்க வேண்டும்."

நான் இங்கு அப்படிப்பட்ட ஒரு வாழ்க்கைமுறையைக் குறித்துத்தான் பேசிக் கொண்டிருக்கிறேன். நீங்கள் அப்படியொரு வாழ்க்கையை வாழ வேண்டுமென்றால், நீங்கள் ஒரு பைத்தியக்காரராய் இருக்க வேண்டும். இஸ்ரவேல் தேசத்தை நான் திரும்பிப் பார்க்கும்போது, அவர்களுடைய பைத்தியக்காரத்தனமான வாழ்க்கைமுறைக்கு பலன் கிடைத்துள்ளதை நான் பார்க்கிறேன். முதல் உலக யுத்தத்திற்கும் மற்றும் இரண்டாம் உலக யுத்தத்திற்கும் இடைப்பட்ட அந்த நாட்களில் எழுதப்பட்ட புத்தகங்களை நீங்கள் வாசிக்கவில்லை என்றால், உங்களால் இதைக் குறித்துப் புரிந்து கொள்ள முடியாது. அந்த நாட்களில் வாழ்ந்த பல நிபுணர்கள், இஸ்ரவேல் ஒரு தேசமாக எழுச்சியடைவதற்குரிய சாத்தியக்கூறுகளே இல்லை என்று சொல்லி, அதை ஒரு பொருட்டாகவே எண்ணாமல் ஒதுக்கி, ஓரந்தள்ளி வைத்தார்கள். *என்சைக்ளோபீடியா பிரிட்டானிக்கா* என்ற புத்தகத்தில், நம்முடைய கலாச்சாரத்தைக் குறித்த மிகவும் ஆழமான ஆராய்ச்சிக் கட்டுரைகளெல்லாம் எழுதப்பட்டிருக்கின்றன. இந்தப் புத்தகத்தின் 1911-ம் வருட பதிப்பில், ஒரு குறிப்பிட்ட ஜெர்மன் பேராசிரியர், பழங்காலத்து எபிரேய மொழியின் அதே உச்சரிப்பு துல்லியமாக மீண்டெழுந்து வருவதன் சாத்தியக்கூறைக் குறித்து எழுதியிருந்தார். அதில் அவர் இவ்வாறு சொன்னார், ''மத்திய கிழக்குப் பகுதியில் யூத சாம்ராஜ்யம் எழும்பி, நிலைநாட்டப்படுவது எவ்வளவு சாத்தியமற்ற ஒரு விஷயமோ, அவ்வளவு சாத்தியமற்ற ஒரு விஷயமாய், பழங்கால எபிரேய மொழியின் அதே உச்சரிப்பு மீண்டெழுந்து வருவதும் இருக்கிறது." இது அந்த நிபுணர்களால் 1911-ம் வருடம் வெளியிடப்பட்டது. ஆனால் 37 ஆண்டுகளுக்கு பிறகு நடந்ததைப்

பார்க்கும்போது, அந்த நிபுணர்கள்தான் பைத்தியக்காரர்களாகத் தெரிந்தார்கள்.

நான் மேலே விளக்கிச் சொன்ன விதத்தில் நாம் வாழப் போகிறோம் என்றால், இவ்வுலகப் பிரகாரமான அறிவிலும் மத அறிவிலும் நிபுணர்களாய் இருக்கின்றவர்களுடைய இலக்காக நாம் மாறி விடுவோம். அந்த நேரத்தில் சீயான் மார்க்கத்தார் கையிலெடுத்து செய்த காரியம் என்னை ஆச்சரியப்படுத்துகிறது. காரணம், அப்பொழுது ஆங்கிலேயர்கள்தான் பாலஸ்தீனத்தை (இப்போழுது இஸ்ரலோக இருக்கிறது) தங்களுடைய ஆளுகையின் கீழ் ஆட்சி செய்து வந்தார்கள். அப்பொழுது அவர்களுடைய ராஜ்யம்தான் இந்த உலகத்திலேயே மிகவும் பெரிய, மிகவும் வலிமையான ஒரு ராஜ்யமாக இருந்தது. இதில் எந்த சந்தேகமும் இல்லை. ஆனால் சீயோன் மார்க்கத்தார் ஒரு சிறு கூட்டமாக இருந்தார்கள். பலதரப்பட்ட பின்னணியிலிருந்து வந்த இவர்கள் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்கு முன்னால் ஒன்றுமேயில்லை. ஆனாலும் இவர்கள் ஆங்கிலேயர்களுக்கு எதிராக சவால் விட்டனர். சவால் விட்டது மட்டுமல்ல, இவர்கள் அதில் வெற்றியும் பெற்றார்கள்! இஸ்ரேல் தேசத்தைக் குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்பது எனக்குத் தெரியாது. ஆனால் இது என்னை உற்சாகப்படுத்தும் ஒரு அழகான வார்த்தையாக இருக்கிறது. நான் இங்கு சொல்ல வருகிற விஷயம் இதுதான்: நாம் கொஞ்சம் பைத்தியக்காரர்களாகவே நடந்து கொள்வோம்.

என்னால் இதை தைரியமாகவே சொல்ல முடியும் என்று நான் விசுவாசிக்கிறேன். என்னுடைய கால்கள் இரண்டும் தரையில்தான் இருக்கின்றன என்பது உங்களுக்குத் தெரியும் என்று நான் நம்புகிறேன். நான் ஒன்றும் மதவெறி பிடித்தவன் அல்ல. நான் ரொம்பவும் உணர்ச்சிவசப்பட்டு இதை எழுதவில்லை. என்னுடைய உணர்ச்சிகளை நான் சமநிலையில் வைத்துக் கொள்வேன். இதை நிரூபிப்பதற்கு என்னிடம் கனி இருக்கிறது என்று எனக்கு மிகவும் நெருக்கமான நண்பர்கள் மிகவும் கனிவாகச் சொல்வார்கள். ஆனால் என்னைக் குறித்து எனக்குத் திருப்தியில்லை. நான் இதை வேறு வழியில் சொல்கிறேன். மிகவும் மரியாதைக்குரியவனாக நான் மாறிக் கொண்டிருப்பதைக் குறித்து சில நேரங்களில் எனக்கு பயமாக இருக்கும் (ஆனால் என்னை அறிந்தவர்கள்

அதில் எந்த ஆபத்தையும் பார்ப்பதில்லை!). நான் தீவிரமாய் செயல்பட விரும்புகிறேன். நான் வெளியே புறப்பட்டுச் சென்று, கோலியாத்திற்கு சவால் விட விரும்புகிறேன். என்னுடைய பையில் ஐந்தே ஐந்து கூழாங்கற்கள்தான் இருக்கின்றன. இருந்தாலும், நான் அவனை எதிர்கொண்டு யுத்தம் செய்யத் தயாராகி விட்டேன்! நான் என்ன விசுவாசிக்கிறேன் என்று உங்களுக்குத் தெரியுமா? நாம் ஜெயிக்கப் போகிறோம். அதைத்தான் நான் விசுவாசிக்கிறேன்.

உண்மையில், நான் வேதாகம புத்தகத்தின் முடிவை பார்த்திருக்கிறேன். நாம் *ஜெயிக்கப் போகிறோம்.*

13
ஆசாரியர்களின் ராஜ்யம்

இப்படியிருக்க, பரம அழைப்புக்குப் பங்குள்ளவர்களாகிய பரிசுத்த சகோதரரே, நாம் அறிக்கை பண்ணுகிற அப்போஸ்தலரும், பிரதான ஆசாரியருமாயிருக்கிற கிறிஸ்து இயேசுவைக் கவனித்துப் பாருங்கள். மோசே தேவனுடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ளவனாயிருந்ததுபோல, இவரும் தம்மை ஏற்படுத்தினவருக்கு உண்மையுள்ளவராய் இருக்கிறார்.
எபிரெயர் 3:1-2

இயேசுவை விசுவாசிக்கிறவர்களாய் அல்லது அவருடைய சீஷர்களாய் நம்முடைய அடையாளத்தை நம்முடைய அன்றாட வாழ்க்கையில் எவ்வாறு வெளிப்படுத்திக் காண்பிக்க வேண்டும்? அது நாம் வாழ்கின்ற விதத்தை எவ்வாறு பாதிக்கிறது? நாம் எப்படிப்பட்டவர்களாக வாழ வேண்டும்?

கீழ் காணும் வசனத்தை மிகவும் உற்சாகமூட்டக்கூடிய வசனங்களில் ஒன்றாக மாத்திரம் நான் பார்க்கவில்லை. புதிய ஏற்பாட்டில் நமக்கு சவால் விடும்படி எழுதப்பட்டிருக்கிற மிக முக்கியமான வசனங்களில் ஒன்றாகவும் இதை நான் கருதுகிறேன். இந்த வசனம் யோவான் எழுதிய சுவிசேஷத்தில் காணப்படுகிறது. இயேசு தம்முடைய உயிர்த்தெழுதலுக்குப் பிறகு, தம்முடைய சீஷர்கள் ஒன்றாகக் கூடியிருந்த இடத்தில் அவர்களுக்கு முதன்முதலாக காட்சி தந்த சம்பவத்தை இந்த வேதப்பகுதி விவரமாகச் சொல்கிறது. இந்த சம்பவம் இயேசு உயிர்த்தெழுந்த ஞாயிறன்று மாலையில் நிகழ்ந்தது. யூதர்களுக்குப் பயந்து சீஷர்கள் தங்களை ஒரு பூட்டப்பட்ட அறையில்

அடைத்துக் கொண்டார்கள். அப்பொழுது திடீரென்று இயேசு அவர்கள் மத்தியில் தோன்றினார். அங்கு நடந்தது இதுதான்:

> *வாரத்தின் முதல் நாளாகிய அன்றைய தினம் சாயங்கால வேளையிலே, சீஷர்கள் கூடியிருந்த இடத்தில், யூதர்களுக்குப் பயந்ததினால் கதவுகள் பூட்டியிருக்கையில், இயேசு வந்து நடுவே நின்று, "உங்களுக்கு சமாதானம்," என்றார். அவர் இப்படிச் சொல்லி தம்முடைய கைகளையும் விலாவையும் அவர்களுக்குக் காண்பித்தார். சீஷர்கள் கர்த்தரைக் கண்டு சந்தோஷப்பட்டார்கள். இயேசு மறுபடியும் அவர்களை நோக்கி, "உங்களுக்குச் சமாதானமுண்டாவதாக; பிதா என்னை அனுப்பினதுபோல நானும் உங்களை அனுப்புகிறேன்," என்று சொல்லி, அவர்கள் மேல் ஊதி, "பரிசுத்த ஆவியை பெற்றுக் கொள்ளுங்கள்," என்றார்.*
>
> *யோவான் 20:19-22*

சந்தேகமே இல்லை, அந்த நேரத்தில் சீஷர்களுடைய இருதயங்கள் என்ன நடக்குமோ என்ற பயத்தில் வேகமாக அடித்துக் கொண்டிருந்தன. எனவே அவர்களுக்கு சமாதானத்தின் செய்தி இரண்டு முறை தேவையாயிருந்தது என்பதை என்னால் நிச்சயமாகச் சொல்ல முடியும். (இன்றைக்கும் மத்திய கிழக்கு தேசங்களில் சமாதான வாழ்த்து இவ்விதத்தில்தான் சொல்லப்படுகிறது). அவர்களை பாதி பயமும், பாதி கவலையும் ஆட்கொண்டிருந்தது. அங்கு நடந்து கொண்டிருப்பதை அவர்களால் நம்ப முடியவில்லை. அடுத்தபடியாக இயேசு சொன்ன வார்த்தைகளின் மேல் நான் கவனம் செலுத்த விரும்புகிறேன்: "பிதா என்னை அனுப்பினதுபோல நானும் உங்களை அனுப்புகிறேன்." பிறகு உயிர்த்தெழுந்த கிறிஸ்து தம்முடைய சுவாசத்தை அவர்கள் மேல் ஊதினார். அப்பொழுது பரிசுத்தஆவியானவர் முற்றிலும் புதிதான விதத்தில் அந்த சீஷர்கள் ஒவ்வொருவருக்குள்ளும் பிரவேசித்தார். பரிசுத்த ஆவியானவர் மூலம், இயேசுவுக்குள் இருந்த அதே ஜீவனும் சுபாவமும் அவர்களுக்கு அருளப்பட்டது. அவருடைய ஜீவனும், சுபாவமும் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டதன் அடிப்படையில், இயேசுவால் அந்த ஆச்சரியமான

வார்த்தைகளை அவர்களிடத்தில் சொல்ல முடிந்தது. அதாவது, "நான் உங்களை அனுப்புகிறேன்," என்று இயேசு அவர்களிடம் சொன்னார்.

வேறொருவராலும் நிறைவேற்ற முடியாத தனித்தன்மை வாய்ந்த ஒரு வேலையை நிறைவேற்றி முடிக்கும்படி பிதா தன் குமாரன் இயேசுவை இவ்வுலகத்திற்கு அனுப்பினார். அவர் பிதாவிடம் திரும்பிச் செல்லும் நேரம் வந்தது. அவர் இந்த பூமியில் தமக்கென்று பிரதிநிதிகளை விட்டு வைக்காமல் செல்லவில்லை. ஆனாலும் அவர் தம்முடைய சீஷர்களிடம், "ஒரு விசேஷமான பணியை நிறைவேற்றி முடிக்கும்படி பிதாவாகிய தேவன் என்னை அனுப்பினதுபோல, இப்பொழுது நான் என்னுடைய சீஷர்களாகிய உங்களை ஒரு விசேஷமான பணியை நிறைவேற்றி முடிக்கும்படி அனுப்புகிறேன். நான் பிதாவிடம் திரும்பிச் செல்கிறேன். ஆனால் நான் உங்களை என்னுடைய பிரதிநிதிகளாக இந்த பூமியில் விட்டுச் செல்கிறேன்," என்று சொன்னார்.

"பிதா என்னை அனுப்பினதுபோல" என்ற வார்த்தைகளில் என்ன உள்ளடங்கியிருக்கிறது ? இந்தக் கேள்விக்கான பதிலைக் கண்டுபிடிக்கும்படி, யோவான் சுவிசேஷத்தில் இதற்கு முந்தின ஒரு வேதப்பகுதிக்கு நாம் செல்வோம். யோவான் 14-ம் அதிகாரத்தில், இயேசு பிலிப்புவுடன் பேசிக் கொண்டிருக்கிறார்:

> *பிலிப்பு அவரை நோக்கி, "ஆண்டவரே, பிதாவை எங்களுக்குக் காண்பியும். அது எங்களுக்குப் போதும்," என்றான். அதற்கு இயேசு, "பிலிப்புவே, இவ்வளவு காலம் நான் உங்களுடனேகூட இருந்தும் நீ என்னை அறியவில்லையா? என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான். அப்படியிருக்க, பிதாவை எங்களுக்குக் காண்பியும் என்று நீ எப்படிச் சொல்லுகிறாய்? நான் பிதாவிலும், பிதா என்னிலும் இருக்கிறதை நீ விசுவாசிக்கிறதில்லையா? நான் உங்களுடனே சொல்லுகிற வசனங்களை என் சுயமாய்ச் சொல்லவில்லை. என்னிடத்தில் வாசமாயிருக்கிற பிதாவானவரே இந்தக் கிரியைகளைச் செய்து வருகிறார்," என்று சொன்னார்.*
>
> *யோவான் 14:8-10*

பிலிப்புவுக்கு இயேசு சொன்ன இந்த பதிலில், பிதாவுக்கும், இயேசுவுக்கும்

இடையே உள்ள உறவின் மூன்று அம்சங்கள் முன் வைக்கப்பட்டிருக்கின்றன. முதலாவதாக, இயேசு தன்னுடைய சொந்த வார்த்தைகளைப் பேசவில்லை என்பது தெரிகிறது. தன்னை அனுப்பின பிதாவானவர், பேசும்படி தமக்குக் கொடுத்த வார்த்தைகளையே இயேசு பேசினார். இரண்டாவதாக, இயேசு செய்த அற்புத ஊழியங்களில் ஒன்றையும் அவர் தம்முடைய சொந்த பெலத்தினாலோ அல்லது திராணியினாலோ செய்யவில்லை. இயேசு இவ்வாறு சொன்னார், "மெய்யாகவே, நான் இதைச் செய்யவில்லை. பிதாவானவரே என் மூலமாக தம்முடைய கிரியைகளை நடப்பிக்கிறார்." மூன்றாவது அம்சம் இன்னும் ஆச்சரியத்தைக் கொடுக்கின்ற ஒன்றாக இருக்கிறது. இயேசுவைப் பார்ப்பதென்பது, பிதாவையே பார்ப்பதற்குச் சமமாயிருக்கிறது. இயேசு சொல்கிறார், "நீங்கள் பிதாவைப் பார்க்க வேண்டியதில்லை. நீங்கள் என்னைப் பார்க்கிறீர்கள். நீங்கள் என்னைப் பார்க்கிறீர்கள் என்றால், நீங்கள் பிதாவானவரையே பார்க்கிறீர்கள் என்று அர்த்தம்."

இதை நான் தொகுத்துச் சொல்கிறேன். முதலாவதாக, பிதாவிடமிருந்து வந்த வார்த்தைகளையே இயேசு பேசினார். இரண்டாவதாக, பிதா தம் கிரியைகளை இயேசுவின் மூலமாகச் செய்தார். மூன்றாவதாக, இயேசுவைப் பார்ப்பதென்பது, பிதாவைப் பார்ப்பது போலாகும்.

இதன் நடைமுறைப் பயன்பாடு இதோ: இயேசு சொன்னார், "பிதா என்னை அனுப்பினதுபோல, நானும் உங்களை அனுப்புகிறேன்." இதையே வேறு வார்த்தைகளில் இவ்வாறு சொல்லலாம், "என்னுடைய சீஷர்களே, எனக்கும் பிதாவுக்கும் இடையே இருக்கிற அதே உறவுதான் உங்களுக்கும் எனக்குமிடையே இருக்கிறது."

இதற்கு அர்த்தம் என்ன? இயேசுவுக்கும் பிதாவுக்கும் இடையே இருந்த உறவில் என்ன அம்சங்களெல்லாம் உண்மையாக இருக்கிறதோ, அதெல்லாம் இயேசுவுக்கும், நமக்கும் இடையே உள்ள உறவிலும் உண்மையானதாக இருக்க வேண்டும். முதலாவதாக, நாம் நம்முடைய சொந்த வார்த்தைகளை பேசக் கூடாது. இயேசுவிடமிருந்து புறப்பட்டு வரும் வார்த்தைகளையே நாம் பேச வேண்டும். இரண்டாவதாக, நாம் நம்முடைய சொந்த கிரியைகளைச் செய்யக் கூடாது. பிதாவானவர் குமாரனாகிய இயேசுவின் மூலம் தம்முடைய கிரியைகளைச் செய்ததுபோல, இயேசு

தம்முடைய கிரியைகளை நம் மூலமாய் செய்யும்படி நாம் இடம் கொடுக்க வேண்டும். மூன்றாவதாக, நம்மைப் பார்க்கிறவர்கள் இயேசுவையே பார்க்க வேண்டும். இது ஒரு பெரிய சவால் அல்லவா? இது நமக்குக் கொடுக்கப்பட்ட ஒரு பொறுப்பல்லவா?

நாம் இந்த பூமியில் கிறிஸ்துவினுடைய அதிகாரப்பூர்வமான பிரதிநிதிகளாய் இருக்கிறோம். நம் ஒவ்வொருவருக்கும் ஒரு குறிப்பிட்ட வேலையை நிறைவேற்றி முடிக்கும்படியான ஒரு பொறுப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. இதே சத்தியம் அழகாக பவுல் கொரிந்தியருக்கு எழுதிய இரண்டாம் நிருபத்தில் எழுதப்பட்டிருக்கிறது:

> *இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாக இருக்கிறான். பழையவைகள் ஒழிந்து போயின. எல்லாம் புதிதாயின. இவையெல்லாம் தேவனாலே உண்டாயிருக்கிறது. அவர் இயேசுகிறிஸ்துவைக் கொண்டு நம்மை தம்மோடே ஒப்புரவாக்கி, ஒப்புரவாக்குதலின் ஊழியத்தை எங்களுக்கு ஒப்புவித்தார். அதென்னவெனில், தேவன் உலகத்தாருடைய பாவங்களை எண்ணாமல், கிறிஸ்துவுக்குள் அவர்களைத் தமக்கு ஒப்புரவாக்கி, ஒப்புரவாக்குதலின் உபதேசத்தை எங்களிடத்தில் ஒப்புவித்தார். ஆனபடியினாலே, தேவனானவர் எங்களைக் கொண்டு புத்தி சொல்கிறதுபோல, நாங்கள் கிறிஸ்துவுக்காக ஸ்தானாபதிகளாயிருந்து, தேவனோடே ஒப்புரவாகுங்கள் என்று கிறிஸ்துவின் நிமித்தம் உங்களை வேண்டிக் கொள்கிறோம். நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும் படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்.*
>
> *2 கொரிந்தியர் 5:17-21*

இந்த செயல்தொடர், ஒரு புது சிருஷ்டியிலிருந்து ஆரம்பிக்கிறது. இது மரணத்திலிருந்து ஒரு புதிய ஜீவனுக்குள் கடந்து செல்வதன் உச்சகட்டமாக இருக்கிறது. இப்பொழுது இந்த புது சிருஷ்டியில் தேவன் மற்றும் கிறிஸ்துவினுடைய அதிகாரப்பூர்வமான பிரதிநிதிகளாய் இந்த பூமியில் நாம் மாறுகிறோம். கிறிஸ்துவுக்குள் தேவன் இந்த உலகத்தை தம்மோடு ஒப்புரவாக்கிக் கொண்டதுபோல, இப்பொழுது கிறிஸ்து நமக்குள் இந்த

உலகத்தை தேவனோடு ஒப்புரவாக்கிக் கொண்டிருக்கிறார். நாம் இப்பொழுது கிறிஸ்துவின் ஸ்தானாபதிகளாய் இருக்கிறோம். இது எப்படி இருக்கிறதென்றால், தம்மோடு ஒப்புரவாகும்படி தேவன் நம் மூலமாய் இவ்வுலகத்திற்கு அழைப்பு விடுக்கிறது போல இருக்கிறது என்று பவுல் இங்கு எழுதுகிறார். எனவே இயேசுவோடு நம்மை முழுமையாக அடையாளப்படுத்திக் கொள்வதுதான், தேவனோடு ஒப்புரவாவதற்கு ஒரே அடிப்படையாய் இருக்கிறது. ஆகையால் அந்த கடைசி வசனம் கூறுகிறது: “நாம் அவருக்குள் (இயேசுவுக்குள்) தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை (இயேசுவை) நமக்காக பாவமாக்கினார்” (வசனம் 21).

இங்கு மிகவும் முக்கியமான இரண்டு குறிப்புகளை நாம் கவனிக்க வேண்டும். முதலாவதாக, நம்மையே நாம் முதலில் உருமாற்றப்படும்படி இடம் கொடுக்காமல், நம்மால் கிறிஸ்துவினுடைய பிரதிநிதிகளாக மாற முடியாது. நாம் முதலில் மறுபடியும் பிறந்து புதிய சிருஷ்டிகளாக மாற வேண்டும். நாம் புதிதான ஜீவனுள்ளவர்களாய் சிருஷ்டிக்கப்பட வேண்டும். காரணம், இன்னும் இங்கு இரட்சிக்கப்படாத பழைய சிருஷ்டிகளுக்கு எந்த செய்தியுமில்லை.

இரண்டாவதாக, நம்முடைய செய்தி, சிலுவையில் நடந்த தெய்வீகப் பரிமாற்றத்தின் அடிப்படையில் அமைந்திருக்கிறது என்பதை நான் இங்கு திரும்பவும் வலியுறுத்திச் சொல்கிறேன். கல்வாரியில் தேவன் பாவமே அறியாத இயேசுவை நமக்காக பாவமாக்கினார். அதினால் நாம் அவருக்குள் தேவனுடைய நீதியானோம். இப்பொழுது நீங்கள் உங்களையே தேவனோடு ஒப்புரவாக்கப்பட்ட, ஒப்புரவாக்குகிறவராக பாருங்கள். முதலாவதாக, நீங்கள் கிறிஸ்துவின் மூலம் தேவனோடு ஒப்புரவாக வேண்டும். அப்பொழுது நீங்கள் தேவனுடைய பிரதிநிதியாக மாறுகிறீர்கள். கிறிஸ்துவின் மூலம் இவ்வுலகத்தை தேவனோடு ஒப்புரவாக்குகிற செய்தியை சுமந்து செல்கிற ஒரு தூதுவராகவும் நீங்கள் மாறுகிறீர்கள்.

ராஜாக்களும், ஆசாரியர்களும்

இப்போது இந்த செயல்தொடரை இன்னும் ஒரு படி முன்னே கொண்டு செல்வோம். நாம் இயேசுவினுடைய உயிர்த்தெழுதலோடும், அவருடைய ஊழியத்தோடும் மட்டுமல்ல, பரமேறிச் சென்ற அவருடைய அனுபவத்தோடும், பரலோகத்தில் அவர் செய்கிற ஊழியத்தோடும்கூட நாம் அடையாளம்

காணப்படுகிறோம். இயேசு பரமேறி பரலோகம் சென்று, பிதாவினுடைய வலதுபாரிசத்திலிருந்த சிங்காசனத்தில் அவர் உட்கார்ந்தபோது, அவர் தம்முடைய இரண்டு உன்னதமான, தனிச்சிறப்பு வாய்ந்த கடைசி ஊழியங்களுக்குள் பிரவேசித்தார். அவர் ராஜாவாகவும், ஆசாரியனாகவும் மாறினார். இதிலும்கூட நாம் இயேசுவோடு அடையாளம் காணப்படும்படி அழைக்கப்படுகிறோம்.

வெளிப்படுத்தின விசேஷத்தில் எழுதப்பட்டிருக்கிற பல வேதப்பகுதிகள் இந்த சத்தியத்தை நமக்கு நன்றாக விளக்கிக் காண்பிக்கின்றன:

> *நம்மிடத்தில் அன்புகூர்ந்து, தமது இரத்தத்தினாலே நம்முடைய பாவங்களற நம்மைக் கழுவி, தம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாக நம்மை ராஜாக்களும், ஆசாரியர்களுமாக்கின அவருக்கு மகிமையும் வல்லமையும் என்றென்றைக்கும் உண்டாயிருப்பதாக. ஆமென்.*
>
> *வெளிப்படுத்தின விசேஷம் 1:6*

இயேசு தம்முடைய சொந்த இரத்தத்தினாலே நம்மை பாவத்திலிருந்து விடுதலையாக்கினபோது, அதே இரத்தத்தினாலே அவர் நம்மை பிதாவாகிய தேவனுக்கு ஊழியம் செய்கிற ராஜாக்களும், ஆசாரியர்களுமாக ஆக்கினார் (ஆசாரியர்களின் ராஜ்யமாக்கினார்). இதை நாம் இங்கு கவனிக்க வேண்டும்.

இதே சத்தியம் வெளிப்படுத்தின விசேஷம் 5-ம் அதிகாரத்தில் மீண்டும் எழுதப்பட்டிருக்கிறது:

> *"தேவரீர் புஸ்தகத்தை வாங்கவும் அதின் முத்திரைகளை உடைக்கவும் பாத்திரராயிருக்கிறீர்; ஏனெனில், நீர் அடிக்கப்பட்டு, சகல கோத்திரங்களிலும் பாஷைக்காரரிலும் ஜனங்களிலும் ஜாதிகளிலுமிருந்து எங்களை தேவனுக்கென்று உம்முடைய இரத்தத்தினாலே மீட்டுக்கொண்டு, எங்கள் தேவனுக்கு முன்பாக எங்களை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கினீர்; நாங்கள் பூமியிலே அரசாளுவோம்," என்று புதிய பாட்டைப் பாடினார்கள்.*
>
> *வெளிப்படுத்தின விசேஷம் 5:9-10*

இயேசுவின் இரத்தத்தாலே நாம் விலைக்கிரயம் கொடுத்து

வாங்கப்பட்டபோது அல்லது மீட்கப்பட்டபோது, அதே விலைக்கிரயத்தினால் நாம் தேவனுக்கு முன்பாக ராஜாக்களும், ஆசாரியர்களுமாக ஆக்கப்பட்டிருக்கிறோம் என்பதை நாம் கவனிக்க வேண்டும்.

விசுவாசிகளுக்கு தமது முதல் நிருபத்தை எழுதும்போது, பேதுருவும் இதையே கூறுகிறார்: "நீங்களோ............தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாகவும், ராஜரீகமான ஆசாரியக் கூட்டமாயும்................இருக்கிறீர்கள்" (1 பேதுரு 2:9). ராஜாக்கள், ஆசாரியர்களுடைய விசேஷமான, தனித்தன்மை வாய்ந்த பொறுப்புகள் யாவை? ஒரு ராஜாவின் வேலை அல்லது பொறுப்பு, ஆளுகை செய்வதாகும். இது நமக்குத் தெளிவாகத் தெரிந்த ஒரு விஷயம்தான். ஆனால் பலர் ஒரு ஆசாரியனுடைய பொறுப்பை அவ்வளவு தெளிவாக அறிந்து வைத்திருப்பதில்லை. ஆனால் வேதவசனம் அதை நமக்கு தெளிவுபடுத்துகிறது. ஆசாரியர்களின் பொறுப்பு, பலிகளை செலுத்துவதாகும். தேவன் நியமித்த ஒழுங்கில், ஆசாரியர்கள் மட்டுமே பலி செலுத்த வேண்டும். ஆகையால் நாம் ஆளுகை செய்யும்படி ராஜாக்களாகவும், பலி செலுத்தும்படி ஆசாரியர்களாகவும் ஆக்கப்பட்டிருக்கிறோம்.

ஆசாரியர்களாக நாம் பலிகளை செலுத்துவதைக் குறித்து, 1 பேதுருவில் எழுதப்பட்ட இன்னொரு வசனத்தை நான் இங்கு குறிப்பிடுகிறேன். "ஜீவனுள்ள கற்களைப்போல ஆவிக்கேற்ற மாளிகையாகவும், இயேசுகிறிஸ்து மூலமாய் தேவனுக்குப் பிரியமான ஆவிக்கேற்ற பலிகளைச் செலுத்தும்படிக்கு பரிசுத்த ஆசாரியக் கூட்டமாகவும் கட்டப்பட்டு வருகிறீர்கள்" (1 பேதுரு 2:5).

பரிசுத்த ஆசாரியக் கூட்டமாய் நாம் அழைக்கப்பட்ட உடனே அந்தக் கணத்தைத் தொடர்ந்து நாம் தேவனுக்கு பலிகளை செலுத்த வேண்டியவர்களாய் இருக்கிறோம். இந்த பலிகளை பேதுரு "ஆவிக்கேற்ற பலிகள்" என்று அழைக்கிறார். இதை வேறு வார்த்தைகளில் சொன்னால், இவை மோசேயின் நியாயப்பிரமாணத்தில் குறிப்பிடப்பட்ட பலிகளைப் போல் அல்ல. இதில் நாம் மிருகங்களை பலிகளாக செலுத்தப் போவதில்லை. இதில் நாம் மிகவும் குறிப்பாக இயேசுவினுடைய எடுத்துக்காட்டை பின்பற்றப் போகிறோம். இயேசு பரலோகத்தில் நம்முடைய சார்பில் நமக்காக தம்முடைய பரிந்து பேசி மன்றாடும் ஜெபங்களையும், விண்ணப்பங்களையும் ஆவிக்குரிய பலிகளாக தேவனுக்கு முன்பாக செலுத்திக் கொண்டிருக்கிறார். இதை

வேதவசனம் தெளிவாக நமக்குச் சொல்கிறது, ''தமது மூலமாய்த் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல் செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறவராகையால் அவர்களை முற்றுமுடிய இரட்சிக்க வல்லவராயுமிருக்கிறார்" (எபிரெயர் 7:25).

பூமியில் இயேசு செய்த ஊழியம் மூன்றரை ஆண்டுகள் மட்டுமே நீடித்தது. ஆனால் ஒரு ராஜாவாகவும், ஒரு ஆசாரியனாகவும் பரலோகத்தில் அவர் செய்கிற ஊழியம் 2000 ஆண்டுகளுக்கும் மேலாக நீடித்துக் கொண்டே இருக்கிறது. இயேசுவினுடைய இந்த ஊழியம் நித்தியத்திற்கும் தொடர்ந்து நடக்கப் போகிற ஒரு ஊழியமாக இருக்கிறது. பூமியில் இயேசு செய்த ஊழியத்திலே பங்கெடுக்கும்படி மாத்திரம் நாம் அழைக்கப்படவில்லை. அவரோடு நமக்குண்டாயிருக்கிற அடையாளத்தின் மூலம், அவருடைய நித்திய, பரலோக ஊழியத்தில் ராஜாக்களாக, ஆசாரியர்களாக பிரவேசிக்கும்படியும் நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம். இயேசுவோடு நமக்கிருக்கிற அடையாளம் ஆவிக்குரிய விதத்தில் ஏற்கனவே நம்மை பரலோக சீயோனின் குடிமக்களாய் மாற்றியிருக்கிறது. இது இனிமேல் நடக்கப் போகிற ஒரு விஷயமல்ல. இயேசுவோடு நமக்குண்டாயிருக்கிற அடையாளத்தின் மூலம் இது ஏற்கனவே நடந்துவிட்டது.

இப்பொழுது நீங்கள் எந்த இடத்தில் வேண்டுமானாலும் இருக்கலாம். இப்பொழுது நீங்கள் சமையலறையில் இருக்கலாம், உங்களுக்கு மிகவும் சௌகரியமாக இருக்கிற ஒரு சாய்வு நாற்காலியில் உட்கார்ந்திருக்கலாம், உங்களுடைய வீட்டின் ஒரு அறையில் நீங்கள் இருக்கலாம், உங்களுடைய மேஜையில் நீங்கள் உட்கார்ந்திருக்கலாம். இதுதான் இப்பொழுது இந்த பூமியில் நீங்கள் இருக்கும் இடமாக இருக்கிறது. இதுதான் இப்பொழுது உங்களுடைய சரீரம் இருக்கும் இடமாக இருக்கிறது. ஆனால் உங்களுடைய ஆவிக்கு வேறொரு இடம் உண்டு. உங்களுடைய ஆவி இப்பொழுது இயேசுவோடுகூட இருக்கிறது. ஒருவேளை நீங்கள் இதை உணராதிருக்கலாம். ஆனால் இதுதான் வேதாகமத்தின் உண்மையாயிருக்கிறது. உங்களுடைய ஆவி அவரோடுகூட சிங்காசனத்தில் உட்கார்ந்திருக்கிறது. நீங்கள் ஏற்கனவே சீயோன் மலையினிடத்திற்கு அதாவது பரலோக சீயோனுக்கு வந்துவிட்டீர்கள்.

இது எபிரெயர் 12-ம் அதிகாரத்தில் மிகவும்

அழகாகச் சொல்லப்பட்டுள்ளது. இந்த முக்கியமான வேதப்பகுதியில் எழுதப்பட்டிருக்கிற இலக்கணத்தின் காலங்களை கவனிக்கவும்:

> *நீங்களோ சீயோன் மலையினிடத்திற்கும், ஜீவனுள்ள தேவனுடைய நகரமாகிய பரம எருசலேமினிடத்திற்கும், ஆயிரம் பதினாயிரமான தேவதூதர்களினிடத்திற்கும், பரலோகத்தில் பேரெழுதியிருக்கிற முதற்பேறானவர்களின் சர்வசங்கமாகிய சபையினிடத்திற்கும், யாவருக்கும் நியாயாதிபதியாகிய தேவனிடத்திற்கும், பூரணராக்கப்பட்ட நீதிமான்களுடைய ஆவிகளினிடத்திற்கும், புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராகிய இயேசுவினிடத்திற்கும், ஆபேலினுடைய இரத்தம் பேசினதைப் பார்க்கிலும் நன்மையானவைகளைப் பேசுகிற இரத்தமாகிய தெளிக்கப்படும் இரத்தத்தினிடத்திற்கும் வந்து சேர்ந்தீர்கள்.*
>
> *எபிரெயர் 12:22-24*

இது இந்த பூமியிலே வாழ்கின்ற விசுவாசிகளுக்கு எழுதப்பட்டது. "நீங்கள் இங்கு வரப் போகிறீர்கள்," என்று இந்த வசனம் சொல்லவில்லை. மாறாக, "நீங்கள் சீயோன் மலையினிடத்திற்கு *வந்து சேர்ந்தீர்கள்*" என்று சொல்கிறது. இந்த வேதப்பகுதி நம்முடைய ஆவிக்குரிய இருப்பிடத்தை வருணித்துச் சொல்கிறது. ஆயிரம் பதினாயிரமான தேவதூதர்களின் பெரிய கூட்டம் மாத்திரம் அங்கு இல்லை. அங்கு உண்மையான சபையும் ஆவியில் இருக்கிறது. அதாவது முதற்பேறானவர்களின் சர்வ சங்கமாகிய சபை (இயேசுகிறிஸ்துவின் மீது வைத்த விசுவாசத்தின் மூலம் மரணத்திலிருந்து புது சிருஷ்டியாய் மறுபடியும் பிறந்தவர்களின் சபை) அங்கிருக்கிறது. அந்த மகிமை நிறைந்த சபையின் கூட்டத்தில் நாம் ஏற்கனவே இருக்கிறோம். பரலோக சீயோனிலிருந்து, இயேசுவோடு நமக்குண்டாயிருக்கிற அடையாளத்தின் மூலம், நம்முடைய ஜெபங்களின் வழியாக தேவனுடைய சார்பில் நாம் ஆளுகை செய்கிறோம். நாம் ஆசாரியர்களின் ராஜ்யமாகவும் இருக்கிறோம். நாம் ஜெபத்தின் முலம் ஆளுகை செய்கிறோம். இது சங்கீதம் 110-ம் அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது:

> *கர்த்தர் என் ஆண்டவரை நோக்கி, "நான் உம்முடைய சத்துருக்களை உமக்குப் பாதபடியாக்கிப் போடும் வரைக்கும்,*

நீர் என்னுடைய வலதுபாரிசத்தில் உட்காரும்," என்றார். கர்த்தர் சீயோனிலிருந்து உமது வல்லமையின் செங்கோலை அனுப்புவார்; நீர் உம்முடைய சத்துருக்களின் நடுவே ஆளுகை செய்யும்.

சங்கீதம் 110:1-2

இயேசுவினுடைய எதிரிகள் இங்கே இன்னும் இருந்தாலும், அவர் ஏற்கனவே ஆளுகை செய்து கொண்டுதான் இருக்கிறார். தேவனுடைய ஜனங்கள் தங்களுக்குரிய இடத்தை சீயோனில் எடுத்துக் கொள்ளும்போது, அவர்களுடைய கரங்களில் ஆளுகை அதிகாரத்தின் செங்கோல் கொடுக்கப்படுகிறது. சீயோனிலிருந்து அந்த அதிகாரத்தின் செங்கோல் பூமியின் தேசங்களுக்கெல்லாம் புறப்பட்டுச் செல்கிறது. இவ்விதத்தில் இப்பொழுதும் கூட, நாம் இயேசுவோடு அவருடைய மகத்தான இரண்டு கடைசி ஊழியங்களாகிய ராஜரீகம், ஆசாரியத்துவம் என்பவைகளில் அடையாளம் காணப்படுகிறோம். இதுவே கிறிஸ்து இயேசுவுக்குள் நமக்கு விடுக்கப்பட்டிருக்கிற அழைப்பின் எல்லா அம்சங்களுடைய ஆச்சரியமான முடிவடைதலாகும்.

நீங்கள் உங்களையே ஒப்புக் கொடுப்பீர்களா?

இயேசு கிறிஸ்து நமக்கென்று வைத்திருக்கும் நோக்கங்களில், தம்மை சேவிக்கும்படி நம் ஒவ்வொருவரையும் அவர் எவ்வாறு அழைக்கிறார் என்பதைக் குறித்த அடிப்படை கோட்பாடுகளோடு, *ஜெயம்கொள்ள அழைக்கப்பட்டவர்கள்* என்ற இப்புத்தகத்தை நாம் ஆரம்பித்தோம். தேவனுடைய உண்மையான அழைப்பின் தன்மைகளையும், அது நம்முடைய வாழ்க்கைக்கு எவ்வளவு அர்த்தமுள்ளதாய் இருக்கிறது என்பதையும் நாம் கற்றுக் கொண்டோம். இந்தக் கடைசி அத்தியாயத்தில், ராஜாவாய் ஆசாரியனாய் இயேசுகிறிஸ்துவினுடைய ஊழியத்தோடு நம்மை அடையாளம் காண்பதே நம்முடைய அழைப்பின் உச்சகட்ட இலக்காகவும், இறுதி முடிவாகவும் இருக்கிறது என்பதை நாம் கற்றுக் கொண்டோம். நாம் அவரோடு சேர்ந்து ஆளுகை செய்ய வேண்டும். நாம் அவரோடு சேர்ந்து பரிந்து மன்றாடி ஜெபிக்க வேண்டும். மெய்யாகவே, நாம் ஜெயங்கொள்ளும்படி அழைக்கப்பட்டிருக்கிறோம். இயேசுகிறிஸ்து திரும்பி வரும் வரை, அவருக்கு

வெற்றிகரமான ஒரு ஊழியத்தைச் செய்வதன் மூலம், நாம் ஜெயங்கொள்கிறோம்.

நாம் இப்பொழுது ஒப்புக்கொடுக்கும் ஒரு இடத்துக்கு வந்திருக்கிறோம். இயேசுகிறிஸ்துவுக்கு உங்களையே முழுமையாய் ஒப்புக்கொடுக்கும்படி நீங்கள் ஆயத்தமாயிருக்கிறீர்களா ? உங்களுக்கென்று அவர் வைத்திருக்கிற அழைப்புக்கு உங்களை ஒப்புக் கொடுப்பீர்களா ?

சில வருடங்களுக்கு முன்னால், ஆண்டவராகிய இயேசுவினிடத்தில் நான் ஒரு உறுதியளித்தேன். நான் சொன்னேன், "தேவனே, உம்முடைய உதவியோடு, மதப்பிரசங்கங்கள் செய்வதை நான் நிறுத்தி விடுகிறேன். ஒரு குறிப்பிட்ட தலைப்பிலே நான் பிரசங்கிக்கும்போதோ அல்லது எழுதும் போதோ, நான் என்ன பிரசங்கித்தேனோ அல்லது எழுதினேனோ அதை நடைமுறையில் அனுபவிக்கக்கூடிய ஒரு சந்தர்ப்பத்தை ஜனங்களுக்கு நான் கொடுப்பேன்." நீங்கள் இந்த கடைசி அத்தியாயத்தை முடிக்கின்ற இந்த நேரத்தில், இப்பொழுதே நான் உங்களுக்கு அந்த சந்தர்ப்பத்தைக் கொடுக்கப் போகிறேன்.

திறவுகோல் போன்றதொரு மிகவும் முக்கியமான கேள்வி இதோ: உங்களுடைய வாழ்க்கையில் இயேசு கிறிஸ்துவுக்கு நீங்கள் எந்த இடத்தைக் கொடுத்திருக்கிறீர்கள் ? சபைக்கு ஒரே ஒரு கர்த்தர்தான் உண்டு. அவர் இயேசு மாத்திரமே. சபையாகிய சரீரத்திற்கு ஒரே ஒரு தலை உண்டு. இயேசுவே அந்த தலையாயிருக்கிறார். என்னைப் பொறுத்தவரை, இப்பொழுதும் நித்தியத்திற்கும் என்னுடைய ஆவி, ஆத்மா, சரீரம் முழுவதும் என் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கே சொந்தம். சிலுவையில் அவர் மரித்தபோது, அவர் தம்முடைய இரத்தத்தினால் என்னை மீட்டுக் கொண்டார். நான் என்னையே அவருக்கு தந்து விட்டேன்.

நீங்களும் இதையே சொல்ல முடியுமா ? இல்லையென்றால், இன்று நீங்கள் அந்த தீர்மானத்தை எடுப்பீர்களா ? உங்களுக்குரிய தேவனுடைய அழைப்பு உங்களுக்கு முன்னால் தான் இருக்கிறது. நீங்கள் அதில் அடியெடுத்து வைப்பீர்களா ?

இதுதான் சரியான நேரம்

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கு உங்களுடைய வாழ்க்கையை

முற்றிலுமாக ஒப்புக்கொடுக்கும் ஒரு வாய்ப்பை உங்களுக்குக் கொடுத்து இந்த புத்தகத்தை நாம் முடிக்க வேண்டும் என்று நான் விசுவாசிக்கிறேன். அதற்காக இனிமேல் நீங்கள் பாவமே செய்ய மாட்டீர்கள் என்று அர்த்தமல்ல அல்லது இனிமேல் உங்களுக்கு எந்தப் பிரச்சனையும் வராது என்றும் அர்த்தமல்ல அல்லது உங்களுக்கு ஒருபோதும் தோல்வியே நேரிடாது என்றும் அர்த்தமல்ல. செயற்கையாக அல்லாமல், உங்களுடைய உள்ளத்தின் ஆழத்தில் ஒரு ஒப்புக்கொடுத்தலை இயேசுகிறிஸ்துவுக்கு நீங்கள் செய்கிறீர்கள் என்பதுதான் இதற்கு எளிமையான ஒரு அர்த்தமாக இருக்கிறது. அது மட்டுமல்ல, அறுவடையின் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவினிடத்தில் அறுவடையின் வேலையை செய்யக்கூடிய ஒரு ஊழியனாக உங்களை நீங்கள் ஒப்புக் கொடுக்கிறீர்கள். அதற்காக நாளைக்கே நீங்கள் உங்களுடைய வேலையை ராஜினாமா செய்ய வேண்டிய அவசியமில்லை. உங்களுடைய வீட்டையோ அல்லது மற்ற சொத்துக்களையோ விற்க வேண்டிய அவசியமுமில்லை. நீங்கள் உங்களையே இயேசுகிறிஸ்துவினிடத்தில் ஒப்புக்கொடுக்கும்போது, நீங்கள் அடுத்து என்ன செய்ய வேண்டும் என்பதை அவரே உங்களுக்குச் சொல்வார். ஆனால் நீங்கள் இயேசு கிறிஸ்துவினுடைய அழைப்பை ஏற்று, அதற்காகவே வாழும்போது, உங்களுடைய வாழ்க்கை எல்லா நன்மைகளாலும் பரிபூரணமாக நிறைந்திருக்கும். அது மிகவும் உற்சாகமூட்டக்கூடியதாய், ஆச்சரியங்கள் நிறைந்ததாய் இருக்கும்.

ஒருவேளை இந்த புத்தகத்தை வாசித்து முடிக்கின்ற இந்த நேரத்திலும், நீங்கள் குழம்பிப் போனவராய், இதையெல்லாம் புரிந்து கொள்ள முடியாதவராய், நிச்சயமற்ற தன்மையோடு இருக்கலாம். உங்களுடைய கிறிஸ்தவ வாழ்க்கையில், ஆழமாய் அமர்ந்திருக்கிற சமாதானமும், ஸ்திரத்தன்மையும் உங்களுக்குள் இல்லாமல் இருக்கலாம். அதற்குக் காரணம், முழுமையான அர்ப்பணிப்பு உங்களிடத்தில் இல்லாமல் இருப்பதே ஆகும்.

ஒரு முழுமையான, உறுதியான அர்ப்பணிப்பை இயேசு கிறிஸ்துவுக்குச் செய்ய நீங்கள் ஆயத்தமாயிருக்கிறீர்களா? இப்பொழுது இந்தக் காலத்திலும், நித்தியத்திலும் அவரை பின்பற்ற நீங்கள் ஆயத்தமா? உங்களுடைய வாழ்க்கையை அவருடைய விருப்பத்திற்கென்று பயன்படுத்தும்படி விட்டுவிட நீங்கள் ஆயத்தமா? அதாவது, அவர் விரும்புகிற விதத்திலெல்லாம் உங்களை

அவர் தம்முடைய மகிமைக்காக பயன்படுத்தும்படி விட்டு விடுவீர்களா? இது உங்களுடைய விருப்பமாக இருந்தால், அதை அப்படியே இயேசுவிடம் இப்பொழுதே சொல்லுங்கள்: “கர்த்தாவே, என்னை முழுவதுமாய் உம்முடைய கரத்தில் நான் ஒப்புக்கொடுக்கிறேன்.”

ஒப்புக்கொடுத்தலின் ஜெபம்

நீங்கள் அந்த வார்த்தைகளை இயேசுவிடம் சொல்லி விட்டீர்கள் என்றால், பின் வரும் ஜெபத்தைச் சொல்லும்படி நீங்கள் ஆயத்தமாகி விட்டீர்கள் என்று அர்த்தம். முதலில், தேவனுடைய பிரசன்னத்தில் ஒரு கணம் அமர்ந்திருங்கள். நீங்கள் ஜெபித்து முடிக்கின்றபோது, உங்களை தளர்த்தி, அப்படியே ஆண்டவரிடம் விட்டுக் கொடுங்கள். அவரை ஆராதியுங்கள். அவரை துதியுங்கள். அவருக்கு நன்றி கூறுங்கள்.

தயவுசெய்து இப்பொழுது இந்த ஜெபத்தை ஜெபியுங்கள்:

பிதாவே! இயேசுவின் நாமத்தில் உம்மிடம் வருகிறேன். நான் உம்மை நேசிக்கிறேன். என்னுடைய வாழ்க்கையை முழுவதுமாக இயேசு கிறிஸ்துவிடம் அர்ப்பணிக்கும்படி நீர் தந்த இந்த வாய்ப்புக்காக உமக்கு நன்றி.

கர்த்தாவே, இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கும் ஒரு விசுவாசி என்ற அதிகாரத்தில் நான் இங்கு நிற்கிறேன். என்னை முற்றிலும் அர்ப்பணிக்கத் தடையாக இருக்கும் கட்டுக்கள், அடிமைத்தளைகள் இன்னும் மற்ற எல்லாவற்றிலிருந்தும் என்னை நான் விடுவித்துக் கொள்கிறேன். இயேசுவின் நாமத்தில் விடுவிக்கப்பட்டவனாக என்னையே நான் அறிவித்துக் கொள்கிறேன். என்னை உம்முடைய கரங்களில் ஒப்புக் கொடுக்கிறேன். கர்த்தாவே, உம்முடைய விருப்பத்திற்கேற்ப என்னை பயன்படுத்திக் கொள்ளும்படி நான் என்னை அர்ப்பணிக்கிறேன். உம்முடைய சரீரமாகிய சபையின் சகலத்திற்கும் நீரே தலையாயிருக்கிறீர். நான் அந்த

சரீரத்தின் ஒரு உறுப்பாயிருக்கிறேன்.

கர்த்தாவே, இந்த விநாடி முதற்கொண்டு, நான் என்னை உம்முடைய கட்டுப்பாட்டின் கீழ் விட்டு விடுகிறேன். நான் என்னையே உம்மிடத்தில் ஒப்புக்கொடுத்து, என்னுடைய வாழ்க்கைக்கான உம்முடைய அழைப்பை நிறைவேற்றும்படி முயற்சி எடுக்கும் போது, நீர் என்னை ஆசீர்வதிப்பீர், நீர் என்னை பெலப்படுத்துவீர், நீர் என்னை பயன்படுத்துவீர் என்று நான் விசுவாசிக்கிறேன்.

கர்த்தாவே! அறுவடைக்காக நான் ஜெபிக்கிறேன். உம்முடைய அறுவடைக்கு வேலையாட்களை அனுப்பும்படி அறுவடையின் கர்த்தரிடம் ஜெபிக்கும்படி நீர் எங்களுக்குக் கட்டளையிட்டிருக்கிறீர். கர்த்தாவே, நானும் அந்த வேலையாட்களில் ஒருவனாக என்னை அர்ப்பணிக்கிறேன். என்னைக் குறித்த உம்முடைய சித்தத்தின்படி, என்னைச் சுற்றி நடக்கின்றவைகளோடும் என்னுடைய சூழ்நிலைகளோடும், என்னுடைய வரங்களோடும் பொருந்திப் போகிறவைகளாக நீர் எதைக் காண்கிறீரோ, அதற்கேற்ப உம்முடைய அறுவடையில் என்னையும் ஒரு ஊழியனாக பயன்படுத்தும், கர்த்தாவே.

என்னுடைய வாழ்க்கையைக் குறித்த உம்முடைய அழைப்பிற்கு முழு இருதயத்தோடு என்னை ஒப்புக்கொடுக்கிறேன். அந்த அழைப்பிற்கு என்னையே முழுவதுமாய் நான் விட்டுக் கொடுக்கிறேன். உம்மிடத்தில் என்னை அர்ப்பணிக்கிறேன், ஏற்றுக்கொள்ளும். இயேசுவின் நாமத்தில், ஆமென்.

நீங்கள் இந்த ஜெபத்தை ஜெபித்து விட்டீர்கள் என்றால், கர்த்தர் உங்களுடைய ஜெபத்திற்கு செவிகொடுத்திருக்கிறார் என்பதை அறிந்தவர்களாய், மகிழ்ந்து களிகூருங்கள். நீங்கள் கொடுத்த

உறுதிமொழியை அவர் ஏற்றுக் கொண்டார். அவர் உங்களை தம்முடைய ஊழியத்தில் சேர்த்துக் கொண்டார்.

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக! நீங்கள் ஜெயங்கொள்ளும்படி அழைக்கப்பட்டிருக்கிறீர்கள் என்பதை உங்களுடைய முழு இருதயத்தோடு அறிந்தவர்களாய், இந்த வினாடி முதல் நீங்கள் அவருக்கு செய்யும் ஊழியத்தை அவரே நிறைவுபெறச் செய்வாராக! உங்களுடைய வாழ்க்கை இனி ஒருபோதும் முன்பு போல் இருக்காது!!

ஆசிரியரைப்பற்றி. . .

டெரிக் பிரின்ஸ் (1915-2003) இந்தியாவில் உள்ள பெங்களூர் பட்டணத்தில், ஒரு பிரிட்டிஷ் தம்பதியினருக்கு பிறந்தார். இவர் இங்கிலாந்திலுள்ள பிரசித்தி பெற்ற கல்வி நிறுவனங்களான ஈட்டன் கல்லூரி மற்றும் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் படித்து கிரேக்கம் மற்றும் இலத்தீன் மொழிகளில் புலமை பெற்றார். கிங்ஸ் கல்லூரியில், புராதன மற்றும் நவீன தத்துவம் என்ற துறையில் இவர் பேராசியராக இருந்தார். இவர் எபிரேயம் மற்றும் அரமாயிக் உள்பட பல்வேறு தற்கால மொழிகளை கேம்பிரிட்ஜ் பல்கலைகழகத்திலும், எருசலேமிலிருந்த எபிரேய பல்கலைகழகத்திலும் கற்று அறிந்திருக்கிறார்.

இரண்டாம் உலக மகா யுத்தத்தின்போது, இவர் பிரிட்டிஷ் இராணுவத்தில் பணியாற்றிக் கொண்டிருந்தார். அப்பொழுது இவர் வேதாகமத்தை வாசிக்க ஆரம்பித்தார். அப்பொழுது இவருடைய வாழ்க்கையையே மாற்றியமைத்த ஒரு நேரடி சந்திப்பு இயேசுகிறிஸ்துவோடு இவருக்கு உண்டானது. இந்த சந்திப்பின் மூலம், இவர் இரண்டு முடிவுகளுக்கு வந்தார்: முதலாவதாக, இயேசுகிறிஸ்து இன்றும் ஜீவிக்கிறார். இரண்டாவதாக, வேதாகமம் மெய்யாகவே இன்றைக்கும் நம்முடைய வாழ்க்கையோடு தொடர்புடைய ஒரு புத்தகமாக இருக்கிறது. இந்த இரண்டு முடிவுகளும் இவருடைய வாழ்க்கையின் போக்கையே முழுவதுமாய் மாற்றியமைத்தது. பிறகு இவர் வேதாகமத்தை கற்று, அதை மற்றவர்களுக்கு போதிக்கும்படி தன்னுடைய வாழ்க்கையை அர்ப்பணித்தார்.

வேதாகமத்தை எளிமையாகவும், தெளிவாகவும் விளக்கிச் சொல்வதே இவரிடமிருந்த மிக முக்கியமான ஒரு வரமாகும். இது லட்சக்கணக்கானோருடைய வாழ்க்கையில் விசுவாசத்தின் அஸ்திபாரத்தைக்

கட்டியெழுப்புவதற்கு உதவியது. இவர் எந்த குறிப்பிட்ட சபைப்பிரிவையும் சாராதவர். இவர் தனிப்பட்ட விதத்தில் வேறு எந்த கூட்டத்தையும் சாராதவர். இவருடைய இந்த அணுகுமுறை, பல்வேறுபட்ட மத, இனப் பிண்ணனியிலிருந்து வருகின்ற ஜனங்களுக்கு உதவி செய்து விடுதலையாக்கக்கூடியதாய் இவருடைய போதனையை ஆக்கியது.

இவர் 50-க்கும் அதிகமான புத்தகங்களை எழுதியிருக்கிறார். 600 ஆடியோ மற்றும் 100 வீடியோ போதனைகளை இவர் போதித்திருக்கிறார். இதில் பல போதனைகள் 100-க்கும் அதிகமான மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு, அச்சிடப்பட்டு, வெளியிடப்பட்டிருக்கின்றன. இவருடைய அன்றாட ரேடியோ போதனை ஒலிபரப்பு, அராபிக், சீன (அமாய், கேண்டோனெஸ், மாண்டரின், ஷாங்காய்ஸி, ஸ்வாடொ), குரோஷிய, ஜெர்மன், மலாக்ஸி, மங்கோலியன், ரஷ்யன், சமோவன், ஸ்பானிஷ், பஹாசா, இந்தோனேஷிய, டோங்கன் என்ற மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு ஒலிபரப்பப்படுகிறது. இந்த ரேடியோ நிகழ்ச்சி இவ்வுலகத்தில் வாழும் கோடிக்கணக்கானோரை சென்றடைகிறது.

டெரிக் பிரின்ஸ் ஊழியங்கள் தொடர்ந்து தேவனுடைய ஊழியத்தை 140-க்கும் அதிகமான தேசங்களில் வாழும் விசுவாசிகளுக்கு செய்து கொண்டிருக்கிறது. “இயேசு திரும்பி வரும் வரை” தொடர்ந்து செய்ய வேண்டும் என்ற கட்டளையை நிறைவேற்றும்படி, டெரிக்கின் போதனைகளைக் கொண்டு இந்த ஊழியம் செய்யப்பட்டு வருகிறது. ஆஸ்திரேலியா, கனடா, சீனா, பிரான்ஸ், ஜெர்மனி, இந்தியா, இந்தோனேஷியா, மலேஷியா, மியான்மர், நேபாளம், நெதர்லாந்து, நியுசிலாந்து, நார்வே, பாகிஸ்தான், ரஷ்யா, தென் ஆப்பிரிக்கா, சுவிட்சர்லாந்து, அமெரிக்க ஐக்கிய நாடுகள், பிரிட்டன், பசிபிக் தீவுகள் உள்பட உலகமெங்கும் 30-க்கும் அதிகமான தேசங்களிலுள்ள டெரிக் பிரின்ஸ் அலுவகங்கள் மூலமாக தேவனுடைய ஊழியம் விரிவடையச் செய்யப்படுகிறது. இதைக் குறித்த தற்போதைய தகவல்களுக்கும், இன்னும் மற்ற உலகளாவிய இடங்களில் உள்ள அலுவலகங்களைக் குறித்த தகவல்களுக்கும் இணையதளத்திற்கு வருகை புரியுங்கள். www.derekprince.com